# அபத்தம்

பங்குனி 2024 15

எள்ளல்

ஏளனம்

கிண்டல்

கேலி

நளினம்

நக்கல்

நையாண்டி

## தர்க்கம் தவிர்த்த மொழி

# ஏடு இட்டோர் இயல்

## எள்ளல் ஏளனம் கிண்டல் கேலி நக்கல் நளினம் நையாண்டி

# தர்க்கம் தவிர்க்கும் மொழி

கை தேர்ந்த கலைஞர் ஒருவர் ஒரு மலிவான, மோசமான இசைக்கருவியில் கூட உன்னதமான இசையை இசைத்து விட முடியும். உலகில் சிறந்த வயலின் இசைக்கருவிகளை உருவாக்கிய Antonio Stradivari உருவாக்கிய, உலகில் அதிகம் பெறுமதியான, 20 மில்லியன் டொலர் பெறுமதியான, Messiah வயலின் கையில் கிடைத்தது என்பதற்காக இசை பற்றிய பரிச்சயம் இல்லாத எவரும் அதில் இசை எழுப்ப முடியாது. வெறும் சத்தத்தை மட்டுமே உருவாக்க முடியும்.

மொழி கூட அவ்வாறானதொன்று தான். மொழி கருத்துப் பரிமாற்றத்திற்கான வெறும் கருவி மட்டுமே. அந்தக் கருவியினால் உருவாக்கப்படுகின்ற படைப்பு அதைப் பயன்படுத்துகிறவரின் திறமையிலேயே தங்கியிருக்கிறது. மொழிப்புலமை மட்டுமே கருத்துப் பரிமாற்றத்திற்கான திறமையை உறுதி செய்வதுமில்லை.

கருத்துப் பரிமாற்றத்திற்கு மொழியை விட, திறந்த மனது தேவை.

மேலிருந்தபடி உபதேசிக்கப்படும் போதனைகள் சிந்தனையில் மாற்றங்களை ஏற்படுத்த முடிவதில்லை. காரணம், அவை ஒருதலைப்பட்சமானவை. வெறும் ஒரு வழிப்பாதை மட்டுமே. போதனைகள் பெரும்பாலும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட முடிவுகளை திணிப்பதற்கானவையே. அவை பெரும்பாலும் பழமைகளை கட்டிப் பிடித்துக் கொண்டிருப்பதாகவோ, பிற்போக்குத் தனமான சிந்தனையை பரப்புவதானதாகவே இருக்கும். பழமைகளைக் கட்டிக் கொண்டிருப்பதாயினும், அவை குறித்துப் பெருமை கொள்வதாயினும் அவற்றுக்கு உணர்வுகளும் வெறும் நம்பிக்கைகளும் போதுமானவை. அந்த உணர்வுகளைத் தூண்டக் கூடிய சொல்லாடல்கள் மட்டுமன்றி, ஓசையின் ஏற்ற இறக்கங்களும் அந்த உசுப்பேத்தல்களுக்கு அவசியமானவை.

இதனால் தான் போதனைகள் கேள்விகளை விரும்புவதில்லை.

கருத்துப் பரிமாற்றத்தில் பயன்படுத்தப்படும் மொழி கூட ஒரே சொற்களுக்கு வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு தாற்பரியங்களை ஏற்படுத்தக் கூடும். அன்பான வேண்டுகோள்களுக்கும் கட்டளைகளுக்கும் பயன்படுத்தும் மொழி ஒன்றாக இருந்தாலும், அவை வெளிப்படுத்தும் உணர்வுகள் வேறானவை.

எழுபதுகளில் யாழ்ப்பாணத் தமிழ்த் தேசிய எழுச்சிக்குள் இதையெல்லாம் நான் கண்டு வளர்ந்திருக்கிறேன். வெறும் கைதட்டல்கள் மட்டுமன்றி,

**ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்**

> **பெரியாரின் போதனைகள் எல்லாம், 'நான் சொல்கிறேன் என்பதற்காக நீ நம்பாதே. உன்னுடைய பகுத்தறிவின்படி முடிவு செய்து கொள்' என்பதாகத் தான் இருந்தது.**
>
> **பெரியாரின் கருத்துக்கள் சிந்தனையைத் தூண்டி சுயமாக முடிவு எடுக்க வேண்டும் என்பதற்காகத் தான் இருந்தது. அவரது போதனைகள் அரசியல் அதிகாரத்தை நோக்கியதாக இல்லாமல் இருந்ததும்**
>
> **அதனால் தான். ஆட்சியைக் கைப்பற்றி சட்டபூர்வமாக கோயில்களை இடிக்கலாம். ஆனால், மனித மனங்களில் இருந்து கடவுள் நம்பிக்கையை ஒழிக்க முடியாது.**
>
> **அந்த மனித மனங்களில் சிந்தனை மாற்றம் மட்டுமே இறுதி வரைக்கும் பெரியார் வேண்டிக் கொண்டது.**



**facebook: George RC**

கைகளை வெட்டி இரத்தத் திலகம் இடுவது வரைக்கும் கொண்டு சென்ற அந்தப் போதனைகள் எல்லாம் உணர்வுகளைத் தான் தூண்டினவே அன்றி, சிந்தனைகளைத் தூண்டவில்லை. உணர்வுகளைத் தூண்டிய அந்த எழுச்சி எங்கே போய் முடிந்தது என்பதை எல்லாரும் கண் முன்னால் கண்டிருக்கிறோம். அதன் பாதிப்பு இன்று வரைக்கும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. அன்று மழுங்கடிக்கப்பட்ட அந்தச் சிந்தனைக்குள் இருந்து இன்னமும் யாழ்ப்பாணிகள் வெளியே வரவேயில்லை.

அதனால் தான், 'கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரித்து அறிந்து உண்மையைச் சொல்கிறவர்களும் துரோகிகள்' என்ற சிந்தனைக்குள் இன்றும் யாழ்ப்பாணிச் சிந்தனை இருக்கிறது.

போதனைகள் முன்னேற்றம் கருதியதாக இருந்தால், அறிவு வளர்ச்சிக்கானதாக இருந்தால், அந்தப் போதனைகள் சிந்தனையைத் தூண்ட வேண்டும். புதுமைகளை ஏற்படுத்த வேண்டும் என்றால், அதற்கு கேட்கிற தரப்பில் பகுத்தறிவு நிறைந்த சிந்தனை அவசியமானது. சொல்லப்படுகிற போதனைகள் குறித்து கேள்வி கேட்கக் கூடிய அளவுக்கு பகுத்தறிவு வேண்டும்.

பெரியாரின் போதனைகள் எல்லாம், 'நான் சொல்கிறேன் என்பதற்காக நீ நம்பாதே. உன்னுடைய பகுத்தறிவின்படி முடிவு செய்து கொள்' என்பதாகத் தான் இருந்தது. பெரியாரின் கருத்துக்கள் சிந்தனையைத் தூண்டி சுயமாக முடிவு எடுக்க வேண்டும் என்பதற்காகத் தான் இருந்தது. அவரது போதனைகள் அரசியல் அதிகாரத்தை நோக்கியதாக இல்லாமல் இருந்ததும் அதனால் தான். ஆட்சியைக் கைப்பற்றி சட்டபூர்வமாக கோயில்களை இடிக்கலாம். ஆனால், மனித மனங்களில் இருந்து கடவுள் நம்பிக்கையை ஒழிக்க முடியாது.

அந்த மனித மனங்களில் சிந்தனை மாற்றம் மட்டுமே இறுதி வரைக்கும் பெரியார் வேண்டிக் கொண்டது.

போதனைகளைக் கடந்த கருத்துப் பரிமாற்றம் என்பது திறந்த மனதுகளுக்கு இடையானதாக இருக்கும். பரஸ்பர மரியாதைகளுடனான உரையாடலாக இருக்கும்.

ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட முடிவுகளோடு வாழ்கிறவர்களுக்கும், தங்களைப் பற்றிய அதீதமான மதிப்பீடுகளோடு இருப்பவர்களுக்கும் கருத்துப் பரிமாற்றமும், உரையாடலும் அந்நியமானவை. அவர்களுக்கு எதிராளி குறித்த எந்த மரியாதையும் இருப்பதில்லை. எதிராளிகளுக்கு தன்னை விட அறிவு அதிகமாக இருக்கக் கூடும் என்ற எண்ணம் கூட வருவதேயில்லை.

கேட்கிறவர்களைக் கேனயர்கள் என்று நினைத்துக் கொண்டு கதை சொல்கிற எத்தனை பேரை நாங்கள் கண்டபடி இருக்கிறோம்? தங்களை மேலானவர்களாகவும், மற்றவர்களை சாமானியர்கள், Common man (காமன் மேன்), சராசரி மனிதர்கள், அற்பர்கள் என்றெல்லாம் நினைத்துக் கொண்டு கதை சொல்கிற இலக்கிய உலகின் பெரிய நெனப்புப் பேராண்டிகள் எத்தனை பேரைக் கண்டிருப்போம்?

மொழியின் பாசாங்குச் சொல்லாடல்களை வைத்து உருட்டி விளையாடிக் கொண்டு, தங்களை மேலானவர்கள் என்று காட்டிக் கொள்ள முனைகிற self-proclaimed புத்திஜீவிகள், தமிழுக்கு அன்னியமான தத்துவங்களைப் பற்றி நுனிப்புல் மேய்ந்து விட்டு, தங்களை உலகஇலக்கியரேஞ்சில்கதைவிட்டுக் கொண்டிருக்கிற self-entitlement பேர்வழிகள் என எத்தனை பேரைக்

கண்டிருக்கிறோம்?

இவர்கள் எல்லாருக்கும், சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவள் என்பது போல, தங்கள் கருத்துக்களுக்கும் கேள்விகளுக்கு அப்பாற்பட்டவை.

இதெல்லாம் உரையாடல்களுக்கும் கருத்துப் பரிமாற்றங்களுக்கும் அறிவு வளர்ச்சிக்குமான சிந்தனையாக இல்லாமல், தங்களை உயர்ந்தவர்களாக நிலைநிறுத்த எடுக்கும் பகீரதப் பிரயத்தனங்கள். வெறும் வார்த்தை ஜாலங்கள் மூலம் தங்களை மேலானவர்களாகக் காட்டிக் கொள்ள முயலும் மலிவான உத்திகள்.

தங்களைப் பற்றித் தாங்கள் கொண்டிருக்கும் அதீதமான மதிப்பீடுகளால் ஏற்படுகின்ற விளைவு இது.

வெறும் பெரிய நெனப்புப் பேராண்டிகள் இவர்கள்.

முப்பத்தைந்து வருடங்களாக எழுதிக் கொண்டிருக்கிறேன். எப்போதுமே என்னை வாசிக்கிறவர்கள் என்னை விடப் புத்திசாலிகளாக இருப்பார்களோ என்ற பயம் எனக்கு எப்போதுமே இருந்து கொண்டிருக்கும். அதனால் தான் அகழ் மின்னிதழுக்கான பேட்டியில், 'முட்டாள்களுக்குத் தலைவனாக இருப்பதை விட, புத்திசாலிகளுக்கு எதிரியாக இருக்கவே விரும்புகிறேன்' என்று சொல்லியிருந்தேன்.

எதைச் சொன்னாலும் தர்க்கரீதியாகவும், தரவுகளாக இருந்தால் அதை உறுதிப்படுத்திக் கொண்டும், முடிந்தவரைக்கும் நான் எழுதுகிறதற்கு உண்மையானவனாக வாழ்ந்து கொண்டும் தான் இருக்கிறேன்.

ஏனென்றால், என் எழுத்துக்களுக்குப் பயந்து பம்மிக் கொண்டிருக்கிற அத்தனை பிரகிருதிகளும் எங்கே நான் சறுக்கி விடுவேன் என்று தருணம் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அது வரைக்கும் வாயை மூடி, வாலைச் சுருட்டிக் கொண்டிருக்கும் அவர்கள் அந்த நேரமாகப் பார்த்துத் தான் அறச்சீற்றத்தோடு, கும்பல் அடி போடக் கிளம்புவார்கள் என்பது எனக்குத் தெரியும்.

இரகசியமாக ஒன்று கூடிச் சதித்திட்டம் தீட்டவும், விழுந்தவனை ஏறி மிதிக்கவும், பின்னால் இருந்து குத்தவும் தான் இவர்களுக்குத் தெரியுமே தவிர, நேருக்கு நேர் மோதுவதற்குத் தயாரில்லாதவர்கள் இவர்கள்.

நான் தனிமனிதன் தான், தவறுகளுக்கு அப்பாற்பட்ட புனிதனும் இல்லை, விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட மனிதனும் இல்லை. ஆனால், தவறுகளைச்

**இந்தச் சமூகம் உரையாடலுக்குத் தயாரான சமூகமா? என்பது பெரிய கேள்வி. ஒரு போதும் இல்லை. அது தமிழ்நாடாக இருந்தால் என்ன? யாழ்ப்பாணமாக இருந்தால் என்ன?**

**இந்தச் சமூகத்திற்குக் கருத்துக்களை விட, கருத்தைச் சொல்கிறவர் யார், அவரின் பின்னணி எது என்பது எல்லாம் முக்கியமானவை. ஏற்கனவே முடிவாக்கப்பட்ட வகைப்படுத்தல்களில் அவரை உள்ளடக்கி, அவர் பற்றிய தீர்ப்பை அவசரமாக வழங்கி, எதிராளியை துரத்தி விவாதங்களை முடிவுக்கு கொண்டு வர முயல்கிற கங்காரு நீதிமன்றச் சமூகம் இது.**

செய்தாலும், என் மனச்சாட்சிக்கும் பொதுநீதிக்கும் முரண் ஆகாத ஏதோ ஒரு நியாயத்தோடு தான் அதைச் செய்திருப்பேன்.

எல்லாவற்றையும் விட, நான் என் எழுத்துக்கும் எனக்கும் உண்மையானவனாக இருக்கவே எப்போதும் முயற்சிக்கிறேன்.

இதனால் தான் எழுதும்போது, மொக்குத்தனமான நியாயங்களோடும், குதர்க்கமான தர்க்கங்களோடும் நான் எழுதுவதில்லை. நான் எழுதுவதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அதையெல்லாம் போதிப்பதுமில்லை.

குறைந்த பட்சம் அதை உரையாடலாகவோ, விவாதமாகவோ செய்ய முடியாவிட்டாலும், அது சிந்தனையில் ஒரு கேள்வியை எழுப்பினால் மட்டுமே, எழுத்தின் நோக்கம் நிறைவு பெறுகிறது.

கருத்துப் பரிமாற்றங்களுக்கான மொழி தர்க்கரீதியானது. எவரும் கருத்துக்களைச் சொல்லி விட்டுப் போகலாம். ஆனால், தான் கொண்டிருக்கும் கருத்துக்களைத் தர்க்கரீதியாகவும், உலக நீதிகளுக்குள்ளாகவும் நியாயப்படுத்த முடியாதவர்கள் கருத்துச் சொல்வதில் எந்த நம்பகத்தன்மையும் இருக்காது. அதற்கு விருப்புக் குறி போட ஆயிரம் பேர் இருந்தாலும், அது வெறும் பிதற்றல் மட்டுமே.

இந்தச் சமூகம் உரையாடலுக்குத் தயாரான சமூகமா? என்பது பெரிய கேள்வி.

ஒரு போதும் இல்லை.

அது தமிழ்நாடாக இருந்தால் என்ன? யாழ்ப்பாணமாக இருந்தால் என்ன?

இந்தச் சமூகத்திற்குக் கருத்துக்களை விட, கருத்தைச் சொல்கிறவர் யார், அவரின் பின்னணி எது என்பது எல்லாம் முக்கியமானவை. ஏற்கனவே முடிவாக்கப்பட்ட வகைப்படுத்தல்களில் அவரை உள்ளடக்கி, அவர் பற்றிய தீர்ப்பை அவசரமாக வழங்கி, எதிராளியை துரத்தி விவாதங்களை முடிவுக்கு கொண்டு வர முயல்கிற கங்காரு நீதிமன்றச் சமூகம் இது.

இதன் மூலம், கேட்கப்பட்ட கேள்விகளுக்கோ, சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கோ பதிலளிப் பதில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியும்.

உரையாடலில் இருந்து தப்பித்துக் கொள்ள பல உத்திகள் உண்டு.

கண்டு கொள்ளாத மாதிரிக் கடந்து போகலாம்.

இவருக்குப் பதில் சொல்லிப் பெரிய ஆளாக்கக் கூடாது என்று பெருந்தன்மையைக் காட்டிக் கொள்ளலாம்.

சம்பந்தமில்லாத ஏதோ ஒரு இடத்தில் எதையோ சொல்லி, ‘அந்த மாதிரிக் கொடுத்திருக்கிறேன்’ என்று பீற்றியும் கொள்ளலாம்.

ஆனால், இவர்கள் ஒருபோதும் தங்கள் தர்க்கரீதியான பதிலை முன்வைப்பதற்கு ஒரு போதுமே தயாராக இருப்பதில்லை.

இதற்கான அடிப்படைகள் இதெல்லாமாக இருப்பதில்லை. தன்னம்பிக்கை இருக்கும் அளவுக்கு இவர்களுக்குத் திறமை இருக்காது. வாயைக் கொடுத்தால் நாற வேண்டி வரும் என்ற பெரும் பயம்.

நானும் ‘அவர்கள் என்ன வைச்சுக் கொண்டா வஞ்சகம் பண்ணுகிறார்கள்?’ என்று கடந்து போக வேண்டியிருக்கிறது.

தனது திறமை மீது தன்னம்பிக்கை இருப்பவருக்குத் தன் கருத்துக்களை நியாயப்படுத்தக் கூடிய துணிவு இருக்கும். திறமை இல்லாதவர்களுக்குக் கருத்துக்களும் இல்லை. தன்னம்பிக்கையும் இல்லை. துணிவும் இல்லை.

இதனால் இவர்களின் மொழி அவதூறாக மட்டுமே இருக்கிறது.

அவதூறு தோற்றவர்களின் மொழி. அதனால் தான் பொறாமையை மனதில் வைத்திருக்கும் அயோக்கியர்களின் மொழியாக அது இருக்கிறது.

கருத்து ரீதியான மோதல்கள் எல்லாம் தனிப்பட்ட வகையில் எதிராளியை அவதூறு செய்வதன் மூலம் வெற்றி காணும் முயற்சிகளாகவே இருக்கின்றன. அதைக் கூட துணிச்சலாகப் பொதுவெளியில் இவர்களால் சொல்ல முடிவதில்லை.

தமிழில் இத்தனையாயிரம் இலக்கியப் பிரகிருதிகள் இருக்கிறார்கள். தமிழில் சிந்தனாவாதிகள், தத்துவவியலாளர்கள் என்று யாரையாவது அடையாளம் காட்ட முடியுமா?

தமிழில் அறிஞர்கள் இருக்கிறார்கள். புத்திஜீவிகள் இல்லை.

விசு நடத்திய அரட்டை அரங்கத்தில் வெள்ளை வேட்டி, சேர்ட்டு, தடித்த மீசைகளுடன் வந்து உட்கார்ந்து, ‘கவிஞர், மற்றும் சிந்தனையாளர்’ என்று விசு அறிமுகம் செய்யும்போது பல்லிளித்துக் கை கூப்புவோர் தான் எனக்கு இதுவரை தமிழில் தெரிந்த சிந்தனையாளர்கள். உட்கார வைக்கப்பட்ட அவர்களும் கருத்து, சிந்தனை, இலக்கியம் எதிலும் சம்பந்தப்படாத அரசியல், வர்த்தகப் பிரமுகர்கள் தான்.

இலக்கிய, அரசியல் உலகில் ‘செயற்பாட்டாளர்கள்’ என்று அறிமுகப்படுத்தப்படுவோர் மாதிரித்தான் இந்தச் ‘சிந்தனையாளர்களும்’.

ஆக மிஞ்சிப் போனால், தமிழில் கண்ணதாசனையும், டாக்டர் உதயமூர்த்தியையும் தான் தத்துவவியலாளர்களாக அடையாளம் காட்ட முடியும். இவர்களை விட, சுகி சிவத்தால் துணிச்சலாக கருத்துக்களைச் சொல்லி விட முடியும்.

இவர்களுடைய உச்சபட்சக் கருத்துக்கள் பெரியாரியமாகவோ, அதை விடக் குறைந்தளவு அம்பேத் காரியமாகவோ, அதையும் விடக் குறைந்தளவு இடதுசாரியமாகவோ தான் இருக்குமே அன்றி, சமூகம் குறித்தும், சமூக நீதி குறித்தும் சொந்தக் கருத்துக்கள் என்று எதையும் இவர்கள் திருவாய் மொழிந்ததாக இல்லை.

**ஆக மிஞ்சிப் போனால், தமிழில் கண்ணதாசனையும், டாக்டர் உதயமூர்த்தியையும் தான் தத்துவவியலாளர்களாக அடையாளம் காட்ட முடியும். இவர்களை விட, சுகி சிவத்தால் துணிச்சலாக கருத்துக்களைச் சொல்லி விட முடியும்.**

**இவர்களுடைய உச்சபட்சக் கருத்துக்கள் பெரியாரியமாகவோ, அதை விடக் குறைந்தளவு அம்பேத்காரியமாகவோ, அதையும் விடக் குறைந்தளவு இடதுசாரியமாகவோ தான் இருக்குமே அன்றி, சமூகம் குறித்தும், சமூக நீதி குறித்தும் சொந்தக் கருத்துக்கள் என்று எதையும் இவர்கள் திருவாய் மொழிந்ததாக இல்லை.**

சில நேரம் கோட்பாடுகள், தத்துவங்கள் பற்றிக் கருத்துச் சொன்னதால், எங்களுக்காவது கைலாசபதியையும், சிவத் தம்பியையும், ஏ.ஜே. கனகரட்னாவையும் காட்டக் கூடியதாக இருக்கும். அவர்களுக்கு இருந்த இடதுசாரிச் சிந்தனை அவர்களை சமூகம் பற்றிய முற்போக்குக் கருத்துக்களைச் சொல்ல வைத்திருந்தது.

இவர்களைப் போல, விமர்சகர்களாக இருந்த தமிழ்நாட்டினர் எவருமே அவர்களின் அளவுக்கு கருத்துக்களுக்காக அறியப்பட்டவர்கள் இல்லை.

இப்படி தமிழர்களாகிய நாங்கள் சிந்தனையின் அடிப்படையிலான அறிவார்ந்த சமூகம் இல்லை. நாங்கள் உணர்வுகளின் அடிப்படையிலான சமூகம். இதனால் தான் எங்கள் சமூகம் எதையும் புதிதாகக் கண்டுபிடிக்கவில்லை. கண்டுபிடித்தவர்கள் எல்லாம் சமூகத்திற்கு வெளியே அதையெல்லாம் வரவேற்கக் கூடிய சமூகங்களுக்குள் போனதால் தான் சாதிக்க முடிந்திருக்கிறது.

தமிழில் முயன்றிருந்தால், தனது சாதிக்காரன் இல்லை என்று தெரிந்தவுடனேயே நசுக்கியிருப்பான் தமிழன். தன்னால் முடியாததைச் செய்கிறான் என்று தெரிந்தவுடன் பொறாமையோடு கூட்டம் சேர்த்து சதித் திட்டம் தீட்டியிருப்பான்.

சிந்தனையை வளர்ப்பதென்ன, திறமையை அங்கீகரிக்கிற சமூகமாகக் கூட இல்லாதபடிக்கு, வெறும் போலிப்புகழ்ச்சிகளிலும் பொன்னாடைக் கலாசாரத்திலும், அதன் நவீன version ஆன விருதுகளிலும் திளைத்தபடி இருக்கிறது.

‘நமது முன்னோர்கள்

ஒன்றும் முட்டாள்கள் இல்லை' என்று பெருமை பேசுகிற முட்டாள்க் கூட்டமாகத் தான் இது இருக்கிறது.

இந்தச் சமூகம் நவீன நாகரிக உலகத்திற்கு எந்த முறையிலும் ஒவ்வாத சாதி முறைக்குள் இன்றைக்கும் ஊறிப் போயிருக்கும்போது, அந்தச் சாதிய உணர்வை தங்கள் பிள்ளைகளுக்குக் கடத்துவதைக் கூட பண்பாட்டுப் பெருமையாக நினைக்கும்போது, சிந்தனை ரீதியாக இந்தச் சமூகம் எப்படி வளர முடியும்? எப்படி ஒரு தர்க்கரீதியான உரையாடலை நிகழ்த்த முடியும்?

எப்படி முன்னேற்றத்தை அடைய முடியும்?

பெரியாரியம் பேசிக் கொண்டே சாதிச் சங்கத்திற்கு சந்தா கட்டிக் கொண்டிருப்பது தான் பெருமை என்றால், அதை விட போலித்தனம், அயோக்கியத்தனம் வேறு எதுவாக இருக்க முடியும்?

எந்தச் சமூகமும் தன் தற்போதைய நடைமுறை குறித்துக் கேள்விகள் கேட்பதன் மூலமாகத் தான் முன்னேற்றத்தை அடைய முடியும். சிந்தனை ரீதியாகவும் அறிவு ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும்.

அது பன்மைத் தன்மையினால் தான் சாத்தியமாகக் கூடியது. தேர்தல் கூட்டு என்பது எவ்வகையானதாக இருக்கிறது என்பதைக் கொண்டே இந்தச் சமூகத்தை அளவிட முடியும்.

சொந்தச் சாதிக்குள்ளேயே திருமணம் செய்ய வேண்டும் என்று ஆணவக் கொலை செய்யும் சமூகத்திடம் பன்மைத்தன்மை குறித்து எப்படி உரையாட முடியும்? தன்னுடைய முட்டாள்தனம் குறித்துப் பெருமை கொள்கிறவனுக்கு என்ன வகையான மொழியைப் பயன்படுத்த முடியும்?

அதனால் தான் பெரியார் திட்டுதலை தனது மொழியாக்கிக் கொண்டார். எவ்வளவு தான் பகுத்தறிவைக் காட்டிக் கொடுத்து தர்க்கரீதியாக கருத்துக்களைச் சொன்னாலும், தன் பிற்போக்குச் சிந்தனையில் ஊறிப் போய் இருக்கிறவர்களுக்கு வேறு எந்த மொழியைப் பயன்படுத்த முடியும்?

வெறும் முட்டாள்களாகப் பெருமை பேசிக் கொண்டிருக்காமல், உங்களுக்குத் தெரியாமலே உங்களை மதத்தைக் காட்டி ஏமாற்றி, அடக்கிக் கொண்டிருப்பதைப் பற்றி சிந்தியுங்கடா என்றதைத் தவிர அவர் வேறு எதைத்தான் சொன்னார்?

திராவிடச் சிந்தனை அதிகாரத்திற்கு வந்ததால், பல்வேறு விடயங்களைச் சாதிக்க முடிந்தது என்பது மறுக்க முடியாத உண்மை.

**இந்தச் சமூகம் நவீன நாகரிக உலகத்திற்கு எந்த முறையிலும் ஒவ்வாத சாதி முறைக்குள் இன்றைக்கும் ஊறிப் போயிருக்கும்போது, அந்தச் சாதிய உணர்வை தங்கள் பிள்ளைகளுக்குக் கடத்துவதைக் கூட பண்பாட்டுப் பெருமையாக நினைக்கும்போது, சிந்தனை ரீதியாக இந்தச் சமூகம் எப்படி வளர முடியும்? எப்படி ஒரு தர்க்கரீதியான உரையாடலை நிகழ்த்த முடியும்? எப்படி முன்னேற்றத்தை அடைய முடியும்? பெரியாரியம் பேசிக் கொண்டே சாதிச் சங்கத்திற்கு சந்தா கட்டிக் கொண்டிருப்பது தான் பெருமை என்றால், அதை விட போலித்தனம், அயோக்கியத்தனம் வேறு எதுவாக இருக்க முடியும்?**

ஆனால், அதிகாரத்திற்கு வந்த திராவிடம் இன்றைக்கும் சாதி அரசியல்தான் செய்கிறது என்பது எவ்வாறான முரண்நகை? அதே பெரியாரியம் பேசுகிறவர்கள் எல்லாம் இன்பநிதிக்கு பராக்! பராக்! கட்டியம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பது எவ்வளவு பெரிய அயோக்கியத்தனம்?

இன்றைக்கும் ஒரு நல்ல தலைமையைத் தேடிக் கொள்ள முடியாதபடிக்குத் தானே இந்தச் சமூகம் இருக்கிறது.

நான் சொல்வது போல, 'காமராஜர், கக்கன், நல்லகண்ணு மாதிரித் தலைவர் வேண்டும்' என்று சொல்லிக் கொண்டே, வேலைக்கும் சேலைக்கும் ஆசைப்பட்டு, சசிகலாவுக்கும் தினகரனுக்கும் வோட்டுப் போடுகிற கூட்டமாகத் தானே இன்று வரைக்கும் இந்தச் சமூகம் இருக்கிறது.

ஏன் இன்னொரு தலைவரைத் தேட முடியவில்லை?

சிந்தனை வளர்ச்சியடையவில்லை. திறமையை அங்கீகரிக்கத் தெரியவில்லை. இத்தனை சிந்தனாவாதிகள் இருந்தும் அறிவை வளர்க்கவும் முடியவில்லை.

அதே குண்டுச் சட்டிக்குள்ளும், யாழ்ப்பாணக் கிணற்றுக்குள்ளுமான பெருமை மட்டும் தான் மிஞ்சியிருக்கிறது.

சமூகம் வளர்ச்சியடையத் தேவையில்லை, பழம் பெருமை பேசிக் கொள்வதே போதும் என்று, சிந்தனை வளர்ச்சி தேவையில்லை என்ற நிலையில், இன்றைக்கு உரையாடலுக்கான மொழி அவதூறும் மௌனமுமாகத் தான் இருக்கிறது.

இது தமிழ்நாட்டு இலக்கிய உலகத்தில் அப்பட்டமாகத் தெரிகிற உண்மை. சுயசாதிப் பற்றும், பொறாமையும், எந்தப் பெறுமதியும் இல்லாத அங்கீகாரத்திற்காக அலைதலுமான சிந்தனைகளுக்கு அப்பால், புதிய சிந்தனைகள் என்று எதைத் தான் காட்ட முடியும்? உலக இலக்கியம் படிக்கிறோம் என்கிறவர்களால் கூட, இந்தச் சிந்தனைக்கு அப்பால் நகர முடியவில்லை. பரந்த உலகம் பற்றிய பார்வை கூட இவர்களின் சிந்தனையை மாற்ற முடியவில்லை என்றால், குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டுவதைத் தான் உலக சாதனையாகக் கருத முடியும்.

சிந்திக்கத் தெரிந்தவர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளும் இவர்களால் கூட, எந்தக் கருத்துக்கள் குறித்தும் ஒரு தர்க்கரீதியான உரையாடலை நாகரீகத்தோடு நிகழ்த்த முடியவில்லை. நாகரிகமான

உரையாடலுக்கானதும் கருத்துப் பரிமாற்றத்துக்குமான உச்சமாக எங்களுக்கு ஆகத் தெரிந்த சிந்தனைத் தளம் பட்டிமன்றமாகத் தான் இருக்கிறது. தொலைக்காட்சியிலும் சமூகவலைத்தள ஒளிப்திவுகளிலும் தோன்றுகிற, 'அரசியல் செயற்பாட்டாளர்களுக்குக்' கூட தர்க்கரீதியான கருத்துப் பரிமாற்றமும், அடிப்படை நாகரிகமும் தெரியாமல் இருக்கிறது.

தனது முகாமைச் சேர்ந்தவர் என்றும், எவரையாவது பகைத்துக் கொண்டால் பிழைப்புக்கும் அங்கீகாரத்துக்கும் பங்கம் என்றும், ஏதோ வகைப்படுத்தல்கள், எவரைப் பயன்படுத்தலாம் என்ற லாப நட்டக் கணக்குகள் கருதித்தான் கருத்துப் பரிமாற்றம் நடக்கிறது. மௌனத்தோடு கடந்து போதலும் நடக்கிறது.

இவர்கள் தனியே சொல்வதற்கும் பொதுவெளியில் சொல்வதற்குமான முரண் பாடுகளே இவர்களின் அயோக்கியத்தனத்தை உறுதி செய்யக் கூடியன.

இவர்கள் வார்த்தைக்கு வார்த்தை பீற்றிக் கொள்கிற அறம் என்கிற அந்தச் சடப்பொருளுக்கும் இவர்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.

தன்னால் கருத்துச் சொல்ல முடியாதபோதும், தன்னை விடத் திறமையானவர்கள், பெருமை பெறுகிறார்கள் என்னும் போது பொறுக்க முடியாமல் பொறாமை கொள்கிறவர்களுமாக இருக்கும்போது, தன்னைச் சாராத எவர் மீதுமான மொழி அவதூறாகத் தான் இருக்கிறது.

தங்கள் வாழ்வுக்கும் எழுத்துக்கும் இடையில் ஏற்றுக் கொள்ள முடியாத முரண்பாடுகளைக் கொண்ட வேசதாரிகளாக இருப்பதால் தான் இவர்களை அயோக்கியர்கள் என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

எங்களை மெய்மறக்க வைத்து ஆகர்ஷிக்கக் கூடிய, எங்களுடைய சிந்தனையை வளப்படுத்தக் கூடிய, எங்கள் அறிவை வளர்க்கக் கூடிய கருத்துக்கள் எதையும் சொல்லாமல், தங்களைப் பற்றிய அதீதமான மதிப்பீடுகளுடன், எங்களை எல்லாம் கேனயர்களாக நினைக்கிற பெரிய நினைப்புப் பேராண்டிகளாக இருக்கும் போது, அவர்களை நோக்கி எழுப்பக் கூடிய மொழி என்ன?

சும்மா வெறுமனே 'இங்கே சிலர்' என்று மொட்டையாகச் சொல்லாமல், தங்கள் மீதான குற்றச்சாட்டுக்களைப் பகிரங்கமாகப் பெயரைச் சொல்லி அவதூறு மொழிகள் இல்லாமல் தர்க்கரீதியாக முன் வைக்கும்போது, ஒரு நேர்மையாளனுக்கு அறச்சீற்றம் வர வேண்டும். அதற்கான தர்க்கரீதியான பதிலை முன்வைக்க வேண்டும். அல்லது தன் பக்க உண்மைகளையும் நியாயங்களையும் சொல்லி தன்னை நியாயப்படுத்தத் தெரிய வேண்டும். 'எதற்காக என் மீது அவதூறு பொழிகிறாய், நீ என்ன கொம்பனோ? பெரிய திறமோ?' என்றாவது துணிச்சலோடு கேட்கத் தெரிய வேண்டும்.

அல்லது நான் சொதப்பியிட்டேன் என்று ஏற்றுக் கொள்கிற மனப்பக்குவம் வேண்டும்.

இது எதுவுமே இல்லாமல், 'இங்கே சிலர்' என்று மொட்டையாக எங்கோ எழுதுவதன் மூலம், 'அவருக்கு நல்லாக் குடுத்திருக்கிறன்' என்று சுற்றியிருக்கிற அல்லக்கைகளுக்கும், நண்பர்கள் என்று பெருமையோடு அழைத்துக் கொள்ளும் மற்ற அயோக்கியர்களுக்கும் பீற்றிக் கொள்வதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

**தன்னால் கருத்துச் சொல்ல முடியாதபோதும், தன்னை விடத் திறமையானவர்கள், பெருமை பெறுகிறார்கள் என்னும் போது பொறுக்க முடியாமல் பொறாமை கொள்கிறவர்களுமாக இருக்கும்போது, தன்னைச் சாராத எவர் மீதுமான மொழி அவதூறாகத் தான் இருக்கிறது.**

**தங்கள் வாழ்வுக்கும் எழுத்துக்கும் இடையில் ஏற்றுக் கொள்ள முடியாத முரண்பாடுகளைக் கொண்ட வேசதாரிகளாக இருப்பதால் தான் இவர்களை அயோக்கியர்கள் என்று சொல்ல வேண்டியிருக்கிறது.**

யாழ்ப்பாணிகள் தங்கள் மீதான விமர்சனங்களை துரோகிகள் என்று கடந்து போவது போல, தங்கள் மீதான விமர்சனங்களை அவதூறு என்று முத்திரை குத்திக் கடந்து போகவே முயற்சிக்கிறார்கள்.

பரஸ்பர முதுகு சொறிதல்கள் இந்த இலக்கியவாதிகள் பலருக்கு பெரும் தலைவீக்கத்தைக் கொடுத்திருக்கிறது. தங்களைப் பெரிய நினைப்புப் பேராண்டிகளாக நினைப்பதற்கான மூலகாரணமும் அது தான். தங்களுடைய விஸ்கிக்கும், விருதுக்கும், விருந்துக்கும், விமானச்சீட்டுக்கும் வாணீர் ஊற்றிச் சொல்லப்படும் போலிப்புகழ்ச்சிகளை உண்மை என்று மற்றவர்களுக்குக் காட்டுவதில் பெருமை கொள்கிறார்கள்.

சாதாரண ஒருவர் தங்களைப் பற்றிப் புகழ்ந்தாலேயே பெருமிதத்தோடு பகிர்கிற இவர்களுக்குத் தங்களைப் பற்றிய விமர்சனங்கயையும் அதைப் போலப் பகிர்ந்து கொள்வதற்குப் பயம். தாங்கள் கட்டியமைத்திருக்கிற பீலாப் பெருமைகளைத் தகர்த்து விடும் என்ற பயம். பெரும் அறச்சீற்றம் கொண்டிருந்தவர்கள் கூட தற்போது அடக்கி வாசிப்பதன் காரணம் அது தான்.

என்னைப் பற்றி எழுதப்பட்டவற்றை நான் தாயகம் காலத்திலிருந்தே அதைப் பிரசுரித்து என் பதிலைக் கொடுப்பதை வழமையாகக் கொண்டுள்ளேன். என் எழுத்துக்கள் குறித்து ஆங்காங்கே கூடிக் கதைப்பது பற்றிக் கேள்விப்படும்போதும், 'உங்கள் கருத்துக்களைச் சொல்லுங்கள், நான் அதையும் போட்டு, அதற்கான என் பதிலைச் சொல்வேன்' என்று தான் சொல்லியிருக்கிறேன். வெறுமனே கூடிப் பேசி, என் காதில் பட வேண்டும் என்று கசிய விடப்படுகின்றவற்றுக்கு

எந்த அடிப்படையில் நான் பதில் சொல்ல முடியும்? தங்களுக்கு கருத்தைப் பகிரங்கமாகச் சொல்லத் துணிவில்லாதவர்களை நான் எப்படிப் பொருட்படுத்த முடியும்?

தாயகத்தில் கூட அந்த நாட்களில் ‘நீங்கள் எழுதுவதற்கான சகல சுதந்திரங்களும் உண்டு, அது என்னைப் பற்றிய விமர்சனமாக இருந்தாலும். ஆனால் அதையும் பிரசுரித்து என் கருத்தையும் பிரசுரிப்பேன்’ என்று தான் சொல்லியிருக்கிறேன்.

நான் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவன் என்றோ, என்னுடைய கருத்துக்கள் கேள்விக்குள்ளாக்கப்பட முடியாதவை என்றோ நான் நம்புவதில்லை. நான் சொல்கிற எல்லாவற்றுக்குமே தர்க்கரீதியான காரணங்களைச் சொல்லிக் கொண்டு தான் இருக்கிறேன். அங்கீகாரம் என்று நான் எதையும் தேடி அலைந்ததுமில்லை. நான் அயோக்கியர்கள், போலிகள் என்று பகிரங்கமாகச் சொல்கிறவர்கள் என்னைப் புகழ்ந்து விட்டார்கள் என்பதற்காக நான் அதில் பெருமை கொள்வதுமில்லை.

எங்காவது கூடும் இடங்களில் எனக்கு அவையத்து முந்தியிருப்பச் chair தரவேண்டும் என்று ஒருபோதும் கோரியதும் இல்லை. நிர்ப்பந்தித்ததுமில்லை.

நான் கொண்டிருந்த கருத்துக்களுக்கு அப்பால் உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டி வந்தால், அதை அறிவு வளர்ச்சியாகக் கருதி மாற்றிக் கொண்டிருக்கிறேன்.

ஆனால், தங்கள் கருத்துக்களைப் பகிரங்கமாகத் துணிச்சலாக, தர்க்கரீதியான நியாயங்களோடு சொல்ல முடியாதவர்களும், தங்களால் முடியாததைச் செய்வதால் பொறாமை கொள்கிறவர்களும் கூட்டத்தில் கூடி நின்று கூவிப் பிதற்றி வஞ்சனை செய்வதைத் தவிர வேறு எதையும் செல்வதில்லை.

இவர்கள் மீதான மொழி திட்டுதல் தவிர்ந்து வேறு எதுவாக இருக்கும்?

**தங்கள் கருத்துக்களைப் பகிரங்கமாகத் துணிச்சலாக, தர்க்கரீதியான நியாயங்களோடு சொல்ல முடியாதவர்களும், தங்களால் முடியாததைச் செய்வதால் பொறாமை கொள்கிறவர்களும் கூட்டத்தில் கூடி நின்று கூவிப் பிதற்றி வஞ்சனை செய்வதைத் தவிர வேறு எதையும் செல்வதில்லை.**

**இவர்கள் மீதான மொழி திட்டுதல் தவிர்ந்து வேறு எதுவாக இருக்கும்?**

இதன் இன்னொரு பக்கத்தில் எங்கள் யாழ்ப்பாணச் சமூகம். தமிழ்நாட்டில் சாதியம் உணர்வுக்குள் எப்படி ஊறி இருக்கிறதோ, அதை விட மோசமாக யாழ்ப்பாணித் தமிழ்த்தேசியம் மனதில் ஊறிக் கிடக்கிறது. சகோதரப் படுகொலைகளை இத்தனை தோல்விகளுக்குப் பின்னாலும் நியாயப்படுத்துகிற சமூகம் உரையாடலுக்குத் தயாராக இருக்குமா? இந்தச் சமூகம் தனது முட்டாள்தனம் மீதான எந்தக் கேள்விக்கும் துரோகி என்ற முத்திரை குத்தலோடு முற்றுப்புள்ளி வைத்து விடுகிற சமூகம்.

இந்தச் சமூகம் சுயநலச் சமூகம். தன் சுயநலத்திற்காக மற்றவர்களின் பிள்ளைகளைப் பலி கொடுப்பதையும், பலி கொடுக்கப்பட்ட பிள்ளைகளுக்கு வணக்கம் செலுத்துவதாகப் பாசாங்கு செய்வதையும் பெருமையாக நினைக்கிற சமூகம்.

இது எனக்குத் தெரிந்த எந்தக் காலத்திலும் தர்க்கரீதியான கருத்துப் பரிமாற்றங்களில் ஈடுபட்டதில்லை. மேடைப்பேச்சுகளின் போது கேள்வி கேட்டவர்களை, ‘பேசாமல் இரடா!’ என்று இருத்துகிற தலைவர்கள் தான் எங்களுக்கு இருந்தார்கள். இந்தச் சமூகம் காலத்திற்குக் காலம் தெரிவு செய்த தலைவர்கள் எல்லாம் கருத்துப் பரிமாற்றங்கள், உரையாடல்கள் மூலமாக வந்தவர்கள் இல்லை. காலத்திற்குக் காலம் மாறிய உணர்வுகளுக்குத் தீனி போட்டவர்களுக்குப் பின்னால் போன மந்தைச் சமூகம் இது.

அறுபதுகளில் இடதுசாரிகள் நடத்திய சமூகநீதிப் போராட்டங்கள் தொடர்ந்திருந்தால், இந்தச் சமூகத்தின் சிந்தனையில் மாற்றங்கள் வந்திருக்கக் கூடும். ஆனால் தமிழ்த்தேசியச் சிந்தனையின் எழுச்சி இதன் தர்க்கரீதியான சிந்தனையை மழுங்கடித்து விட்டது. இன்றைக்கு நீங்கள் யாழ்ப்பாணத்தில் எந்த அரசியல் அமைப்போடும் தர்க்கரீதியாக கருத்துப் பரிமாற்றங்களையோ, உரையாடல்களையோ, விவாதங்களையோ நிகழ்த்த முடியாது. அப்படி நம்பிக்கை தரக்கூடிய அமைப்புகளும் பாலியல் சுரண்டல், தமிழ்த்தேசியம், முகாம் அரசியல் என்றெல்லாம் நாறிப் போய் கிடக்கிறது.

அதற்கான தளமாக இருக்க வேண்டிய பல்கலைக்கழகம் கூட, தமிழ்த்தேசிய உணர்வுப் பாசாங்கின் மையப்புள்ளியாகத் தான் இருக்கிறது.

யுத்தம் தோல்வியில் முடிந்த பின்னால் கூட, உலகில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சகல இனங்களிலும் இருந்த சிந்தனைப் பரிமாற்றம் இந்தச் சமூகத்தில் இன்னமும் நிகழவில்லை.

தங்களுடைய முட்டாள்தனத்திற்கும், தோல்விக்கும் தங்களைத் தவிர்ந்த உலகத்தில் உள்ள சகலரையும் சகலத்தையும் குற்றம் சாட்டுவதை விட, இந்தச் சமூகம் இன்னமும் தங்கள் தவறுகளுக்கான காரணங்களை, எங்கே தவறு விட்டோம் என்ற கேள்விகளைக் கேட்கவில்லை.

ஒருபுறத்தில் மற்றவர்களைக் குற்றம் சாட்டிக் கொண்டு, பட்டுத் துகிலுக்கு ஆசைப்பட்டுக் கோவணத்தைப் பறி கொடுத்தது கண் முன்னால் நடந்த பின்னாலும், இன்னமும் தங்கள் இலட்சியத்தை அடைய முடியும் என்று, இந்தச் சமூகம் நம்பும் அளவுக்குத் தான் அதன் சிந்தனை வளர்ச்சி இருக்கிறது.

இந்தச் சமூகத்திற்கு மாவீரர்களுக்கான அஞ்சலி செலுத்துவதன் மூலம் தங்களைப் புனிதர்களாகப் பாவனை

செய்வதையும், துரோகிகள் என்று தங்களைக் கேள்வி கேட்கும் எவரையும் முத்திரை குத்துவதையும் தவிர கருத்து, சிந்தனை, உரையாடல், விவாதம் என்று எதுவும் இல்லை.

இந்தச் சமூகம் கருத்துப் பரிமாற்றமும், உரையாடலும், விவாதமும் தேவையில்லாத ஆணிகள் என்று நினைக்கும் போது, 'அடிச்சுப் பறிப்பார்' கனவில் இருந்து, 'வாங்கித் தரும்' என்ற கனவுக்கு நகர்வதை விட வேறு என்ன செய்ய முடியும்?

இந்தச் சமூகத்திற்குச் சிந்தனை எழுச்சியை வரச் செய்ய என்ன மொழியைப் பயன்படுத்த முடியும்?

எழுத்தில் எள்ளலும் ஏளனமும், நக்கலும் நளினமும் நையாண்டியும், கிண்டலும் கேலியும் எதனால் வருகிறது?

அது தன்னைப் பற்றிய மேலான சிந்தனையில் வருவதில்லை. தன்னைப் பற்றிய அதீதமான மதிப்பீட்டில் வருவது மற்றவர்கள் கேனயர்கள் என்ற நினைப்பு. அறச்சீற்றத்தால் வருவது திட்டுதல்.

கோமாளிகளைப் பார்த்து எந்த மொழியால் திட்ட முடியும்?

நான் தாயகம் வெளியிட்ட காலத்தில் ஏடு இட்டோர் இயலும், கியூறியஸ் ஜியின் பத்தியும் எழுதிக் கொண்டிருந்தேன். கியூறியஸ் ஜி நகைச்சுவை இழையோட நான் எழுதி பெரும் வரவேற்புப் பெற்ற பத்தி. இன்றைக்கும் என்னைக் காணும் இலக்கியர்கள் 'கியூறியஸ் ஜீ' எழுத்துக்களைத் தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்று சொல்வதுண்டு.

நான் முன்பு தாயகம் நண்பர்களுக்குச் சொல்லுவேன்... ஏடு இட்டோர் இயல் நான் பொறுப்புணர்வோடு எழுதுவது, கியூறியஸ் ஜி நான் பொறுப்புணர்வு இல்லாமல் எழுதுவது!

என்னுடைய மொழித் தேர்வாக ஏன் இது இருக்கிறது?

இப்போது நான் அதிகளவில் யாழ்ப்பாணிகள், தேசிக்காய் தலையர் என்ற வார்த்தைகளைப் பிரயோகித்துக் கொண்டிருக்கிறேன். எதற்காக அதைப் பயன்படுத்துகிறேன் என்பதை எத்தனை தடவை எழுதினாலும், அதைப் புரிந்து கொள்ளாமல் கருத்துச் சொல்கிறவர்களை நான் எதுவும் செய்ய முடியாது.

தன்னைப் படித்தவர்கள் என்று பெருமைப்பட்டுக் கொள்கிற ஒரு சமூகம் இன்றைக்கு ஒரு கோமாளிக் கூட்டமாக அடையாளம் காட்டிக் கொண்டுள்ளது. தன்னை உலகத்திலேயே நாகரிகம் அடைந்த இனமாகவும், தமிழ்நாட்டுத் தமிழர் உட்பட்ட உலகில் உள்ள மற்றவர்கள் எல்லாரும் தனக்குக் கீழானவர்கள் என்றும், உலகத்தில் எங்கு போனாலும் தனக்கான entitlement நினைப்போடு கதை சொல்கிற சமூகம். இந்தச் சமூகத்திற்கு முப்பத்தைந்து வருடங்களாக தர்க்கரீதியாக, உண்மைகளின் அடிப்படையில், நான் யாழ்ப்பாணக் கிணற்றுக்குள் வெளியால் பார்த்த விடயங்களை வைத்து, எத்தனையோ விடயங்களைச் சொல்லியிருக்கிறேன். புலி தன்னையும் அழித்து தமிழர்களையும் அழிக்கும் என்பது உட்பட்ட எத்தனையோ விடயங்களைத் தீர்க்க தரிசனமாகச் சொல்லியிருக்கிறேன் என்பதை தாயகத்தில் நான் எழுதிய ஏடு இட்டோர் இயல்களை வாசித்தவர்களுக்குத் தெரியும்.

இத்தனையும் சொல்லி, எல்லாவற்றையும் கண் முன்னால் கண்ட பின்னாலும், இன்றைக்கும் நான் துரோகியாகத் தான் இருக்கிறேன்.

என்னுடைய தீர்க்க தரிசனங்களுக்காக இவர்கள் என்னைப் பல்லக்கில் தூக்கிக் கொண்டாட வேண்டும் என்று நான் எதிர்பார்த்ததில்லை. இவர்கள் பல்லக்கில் ஏற்றிக் கொண்டாடியவர்களைத் துரோகி என்று தூற்றி மிதிப்பார்கள் என்ற தீர்க்கதரிசனத்தைச் சொல்லி சில நாட்களுக்குள்ளேயே அது நடந்தேறியதை இப்போதும் கண்டவன் நான்.

இந்தச் சமூகத்தில் பிறந்து வளர்ந்து, அதன் தமிழ்த் தேசியக் கனவு முளை விட்டு வந்த காலத்திலேயே அதற்குள்ளேயே வாழ்ந்து அவதானித்து வளர்ந்தவன் நான். இதன் இயல்புகளை அடிநுனி தெரிந்து வைத்திருக்கிறேன். இதன் சிந்தனை எப்படி இருக்கும்,

**தங்களுடைய முட்டாள் தனத்திற்கும், தோல்விக்கும் தங்களைத் தவிர்ந்த உலகத்தில் உள்ள சகலரையும் சகலத்தையும் குற்றம் சாட்டுவதை விட, இந்தச் சமூகம் இன்னமும் தங்கள் தவறுகளுக்கான காரணங்களை, எங்கே தவறு விட்டோம் என்ற கேள்விகளைக் கேட்கவில்லை. ஒருபுறத்தில் மற்றவர்களைக் குற்றம் சாட்டிக் கொண்டு, பட்டுத் துகிலுக்கு ஆசைப்பட்டுக் கோவணத்தைப் பறி கொடுத்தது கண் முன்னால் நடந்த பின்னாலும், இன்னமும் தங்கள் இலட்சியத்தை அடைய முடியும் என்று, இந்தச் சமூகம் நம்பும் அளவுக்குத் தான் அதன் சிந்தனை வளர்ச்சி இருக்கிறது.**

**இந்தச் சமூகத்திற்கு மாவீரர்களுக்கான அஞ்சலி செலுத்துவதன் மூலம் தங்களைப் புனிதர்களாகப் பாவனை செய்வதையும், துரோகிகள் என்று தங்களைக் கேள்வி கேட்கும் எவரையும் முத்திரை குத்துவதையும் தவிர கருத்து, சிந்தனை, உரையாடல், விவாதம் என்று எதுவும் இல்லை.**

**இந்தச் சமூகம் கருத்துப் பரிமாற்றமும், உரையாடலும், விவாதமும் தேவையில்லாத ஆணிகள் என்று நினைக்கும் போது, 'அடிச்சுப் பறிப்பார்' கனவில் இருந்து, 'வாங்கித் தரும்' என்ற கனவுக்கு நகர்வதை விட வேறு என்ன செய்ய முடியும்?**

அபத்தம்

பங்குனி 2024




இதன் அடுத்த நடவடிக்கை எதுவாக இருக்கும் என்றெல்லாம் எனக்குத் தெரியும் அளவுக்கு நான் அதற்குள் தான் இருக்கிறேன். அது தெரிந்ததால் தான் என் வயது ஒத்தவர்கள் இயக்கங்களுக்கு ஓடிப் போனபோதும், ஆயுதக் கவர்ச்சியில் காதல் கொண்டு, மாட்டிக் கொள்ளாமல் இருந்தேன். இருந்திருந்தால், சவுக்குத் தோட்டத்திற்குள் புதைக்கப்பட்டோ, பச்சை வள்ளத்தில் ஜலசமாதியடைந்தோ வீட்டுக்காரர்கள் தவிர்ந்து, யாருக்கும் நினைவில் இல்லாத ஒரு துரோகியாகவே முடிந்திருப்பேன்.

இதே யாழ்ப்பாணிச் சிந்தனையில் இருந்தால், பட்டுத்துகிலுக்கு ஆசைப்பட்டு கோவணத்தை இழக்க வேண்டி நேரிடும் என்று எழுதிய பழைய ஏடு இட்டோரியல் இப்போதும் இருக்கிறது.

நான் வளர்ந்த விதம், எனக்கு ஊட்டப்பட்ட அறிவும், பண்பும், நம்பிக்கைகளும் சமூக நீதி சார்ந்ததாகத் தான் இருந்தது. அதற்கு நான் யாழ்ப்பாணச் சமூகத்தின் கீழ் மட்டங்களில் ஏழ்மைக்குள் பிறந்து வளர்ந்ததும் காரணம். ஒரு சமூகத்தின் அழிவிலும் இரத்தத்திலும் பிழைப்பு நடத்தும் ஈனப்புத்திக்குள் நான் வளர்க்கப்படவில்லை.

என்னுடையவற்றை இழந்து, என் வாழ்வைத் தொலைத்து, கொலைப் பயமுறுத்தல்களுக்கு மத்தியிலும், ‘நாசமாய் போகப் போறீங்கடா?’ என்பதைத் தவிர நான் வேறு எதையும் சொன்னதில்லை.

அதை ஏற்றுக் கொள்ளாத சமூகத்தை, அவதூறு செய்து துரோகி என்று முத்திரை குத்தி சுய இன்பம் காணும் சமூகத்தோடு எந்த மொழியோடு பேச முடியும்?

முட்டாள்களை முட்டாள் என்று சொல்வதில் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை.

‘நீ என்ன திறமோ? பெரிய புத்திசாலியோ? பெரிய இவனா?’ என்று கேட்க விரும்புகிறவர்கள் தாராளமாகவே தங்கள் தர்க்கநியாயங்களை முன் வைக்கலாம்.

வெறும் அவதூறுகளையோ, துரோகி என்ற முத்திரை குத்தல்களையோ கொண்டு வாயை அடக்கலாம் என்று நினைப்பது முட்டாள்தனம். தமிழ்நாட்டு அரசியலை ஒரு கோமாளிக்கூத்து என்று எழுதிய துக்ளக் சோ இந்தச் சமூகத்தால் கோமாளியாக்கப்பட்டது போல, இந்தச் சமூகத்தைக் கடந்து போக விடமுடியாது.

இவர்கள் எல்லாம் நேரடியாகவே விமர்சனங்களை வைத்து ‘அடிக்க மாட்டேன், கிட்டே வாங்கடா’ என்றாலும் வருகிறார்கள் இல்லை. எப்படி அடிச்சாலும் வடிவேலு மாதிரித் தாங்கிக் கொள்கிறார்கள்.

தங்களை மேலானவர்களாக நினைத்துக் கொண்டு, தங்கள் கருத்துக்கள் கேள்விகளுக்கு அப்பாற்பட்டவை என்று நினைப்பவர்களையும், இத்தனை அழிவுகளின் பின்னாலும் அதே வெறும் கனவுகளோடு காலத்தை ஓட்டுகிறவர்களையும் என்ன செய்ய முடியும்?

தர்க்கரீதியான உரையாடல்களுக்குத் தயாராக இல்லாமல், சிந்தனையை வளர்த்து, அறிவை மேம்படுத்தி அடுத்தடுத்த தளங்களுக்குச் செல்லத் தயாராக இல்லாமல், தங்களைப் பற்றிய அதீதமான மதிப்பீடுகளோடும், தங்களைப் பற்றிய வெற்றுப் பெருமையுடனும் வாழ்பவர்களை என்ன செய்ய முடியும்?

நான் கியூறியஸ் ஜி பத்தியில் எழுதி மிகவும் பிரபலமான கருத்து...

உங்களைப் புத்திசாலிகள் என்று நினைப்பதில் எந்தத் தப்புமில்லை. ஆனால் மற்றவர்களை முட்டாள்கள் என்று நினைப்பது தவறு.

முட்டாள்களை முட்டாள்கள் என்று தான் சொல்ல முடியும்.
Intellectually challenged என்று political correctness வார்த்தை ஜாலம் எல்லாம் இந்தச் சமூகத்திற்குப் புரியாது.

அது கேலிக்கும் சிரிப்புக்கும் லாயக்கான ஒரு கோமாளிக்கூட்டம் மட்டும் தான் என்ற உண்மையைச் சொல்வதற்கான மொழி எள்ளல், ஏளனம், கிண்டல், கேலி, நக்கல், நளினம், நையாண்டி தான்.

அந்த மொழியைப் பயன்படுத்துவதில் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை.

ஏனெனில்,

I don't suffer fools gladly!

ஆக்கங்களுக்கு
ஆக்கியோர்களே
பொறுப்பு.
ஆயினும் அதைப்
பிரசுரிப்பதற்கான
பொறுப்புகளில் இருந்து
அபத்தம் விலக மாட்டாது.


email: apaththam@gmail.com
www.thayagam/apaththam
www.facebook.com/apaththam

ஆசிரியர், வடிவமைப்பு
ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்
Editor/Design
George R. Ckrhushchev

# காண்டாமிருகம்



## நடராசா சுசீந்திரன்



காண்டாமிருகம்

யூழேன் இயொனெஸ்கோ

பிரெஞ்சிலிருந்து தமிழில்
டி.எஸ்.தட்சிணாமூர்த்தி

வெளியீடு க்ரியா, சென்னை,
பெப். 1996
ISBN: 81-85602-68-9

# Rhinoceros

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னான எழுத்தாளர்கள் என்று குறித்துரைக்கப்படும் எழுத்தாளர்களுள் யூஜேன் இயொனெஸ்கோ என்ற பிரெஞ்ச்-ரூமேனிய எழுத்தாளரும் முக்கியமானவர். அவர் தனது எழுத்துக்களை இரண்டாம் உலகமகாயுத்தத்திற்குப் பின்னரே வெளியிட்டார்.

இவ்வரிசை அடோர்னோ, குந்தர் கிறாஸ், சீக்பிரிட் லென்ஸ், மார்க்கூச என்ற வகையாக நீளும். அறம் என்பதும் ஐரோப்பிய நாகரிகம் என்பதும் இவைதான் எனப் பரவலாக அறியப்பட்டுப் போற்றப்பட்ட வெகுஜனங்களின் நம்பிக்கைகள் தலைகீழாக மாறிப்போனதைக் கண்டு மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தார் இயொனெஸ்க்கோ.

மனித குலத்தின் கொடூரச் செயல்களும் கோரமுகமும் வெளிப்படுத்தப்பட்ட பின்னர் இந்த உலகம் புதிதாய்ப் பிறக்கவேண்டும் அது தன்னைப் புத்துயிர்ப்புச் செய்யவேண்டுமென இயேனெஸ்க்கோ விரும்பினார். தன்னுடைய 'காண்டாமிருகம்' என்ற நாடகப்பாணியிலான எழுத்தின்மூலம் வாசகர்களின் மென்னுணர்வை, வாழ்வின் அர்த்தபுஷ்டியான ஆழமான தரிசனத்தை நோக்கித் தன்னைப் பிரதிபலிக்க முயன்றார். இதற்காக அவர் 'அபத்த எழுத்து' என்று அறியப்பட்ட இலக்கியவடிவத்தை எடுத்துக்கொண்டார். இந் நாடகம் முதலில் ஒரு சிறுகதையாக எழுதப்பட்டு மூன்று ஆண்டுகளின் பின்னரே நாடகமாக எழுதப்பட்டது என்று அறியக்கிடக்கின்றது.

மிக வெளிப்படையான காட்சிப்படுத்துதலினூடாக எமது கட்புலத் தரிசனத்திற்கப்பால் அதனுள் ஒளிந்திருக்கும் மூலத்தைக் கண்டுபிடிக்கும் நிலைக்கு இதனூடு நாம், பார்வையாளர்கள் தள்ளப்படுகிறோம். இயேனெஸ்கோவின் எழுத்துவகை என்பது யதார்த்தத்தை

**இந்த காண்டாமிருகம் நாடகத்தின் அதியுச்சப் பலம் என்பது அதனது இன்னும், இன்றைய நடப்புக் காலத்திற்கும் சாலப் பொருந்துவதும் இனிவரும் காலங்களுக்கும் சிலவேளை பொருந்திப்போகவும் கூடும் என்பதாகும்.**

நகைச்சுவை உணர்வின்பின்னே ஒளித்துவைத்துக் காட்சிப்படுத்துவதாகும். ஆகையாற்றான் பெறிங்கர் என்பவரது கதாபாத்திரம் நாடகத்தின் தொடக்கத்தில் பொருட்டற்றதாகவே வெளிப்படுத்தப்படுகிறது. அந்தப் பாத்திரத்தின் பொது நிலையினைப் பார்த்தும், டெய்ஸியின் மீது அவரது ஒருதலைக் காதலை கணவும் எமக்கு நகைப்பு வந்துவிடும். ஒரு உறுதியானதும் நியமமானதுமான கட்டமைவான கதாநாயகனுக்குரிய பண்புகளை இந்தப் பாத்திரம் கொண்டிருக்கவில்லை.

இந்தப் பாத்திரத்தின் வார்த்தைகள் ஏனைய பாத்திரங்களின் பலமான குரல்களின் ஒலிப்பில் வலுவிழந்து, உதிர்ந்து அடங்கிப்போய்விடுகின்றன.




ஆனால் இந்தப் பலமற்ற பாத்திரமே பின்னர் காண்டாமிருகமாக மாறிவிடுவதற்கு எதிராக, மறுத்துநின்று, மிகப்பாரிய எதிர்ப்புச் சக்தியை, மறைபண்பினை வெளிப்படுத்துகிறது.

இந்தப் பாத்திரம் மட்டுமே மற்றவர்களின் கண்களைத் திறந்துவிடுவதற்குச் சிறிதளவேனும் முயற்சி செய்கிறது. மறுவளமாக நோக்கினால் பலவீனமாகவும் அப்பாவித்தனமாகவும் தோன்றும் ஒரு பாத்திரமே, பலம்பொருந்திய மாபெரும் சக்தியாக மாறிவிடுவதை பார்க்கிறோம்.

இயேனெஸ்க்கோவின் காண்டாமிருகம் உருமாற்றத்தை அடிப்படையாகக்கொண்டது. இத்தகைய உருமாற்ற இலக்கியமுனைப்பு காவ்காவின் கரப்பன்பூச்சியாக மாறும் 'உருமாற்றம்' கதையில் இயங்குவதைக் காணலாம். இங்கு காண்டாமிருகம் ஒரு பிரதிமை.

இப் பிரதிமையின் காரணமாக இப் பிரதியினை உருவகம் என்ற இலக்கிய வகைமைக்குள்ளும் இலகுவாக அடக்கிவிடலாம். ஆனால் அதற்கும் அப்பாற் சிந்திப்போமாயின் இந்த அற்புத எழுத்தினை எதற்குள் அடக்கிவிடுவது என்பதே கடினமாகிப்போகின்றது.

இயெனெஸ்கோ அவர்கள் தன் எழுத்து முழுவதிலும் நடப்பு மெய்மைகளாகவும் மற்றும் நாம் அவற்றை இனங்காணத்தக்க தடயங்களாகவும் ஆங்காங்கே தூவிச்சென்றுள்ளார். காண்டாமிருகம் என்ற இந் நாடகம் இரண்டாம் உலகப்போருக்கு பிந்திய உடனடிக் காலப்பகுதியில் வெளிவந்தது என்பதை மனதில் நிறுத்தியவாறே பிரதிக்குள் செல்லும் போது, தவிர்க்கமுடியாதபடி பாசிஸ நாசிகளின் கொடூர ராஜகம் பற்றிய குறிப்புக்களும் காட்சிகளும் யூஜேன் இயொனெஸ்கோவின் இலக்கியப் பிரதியெங்கும் வரையப்பட்டிருப்பதைக் காண்கின்றோம்.

பச்சை என்பது மிகப் பச்சையான உலகப்பொது வர்ணம். காண்டாமிருகத்தில் கதாபாத்திரங்களின் உருவமும் சாயலும் மாறும் போதும் அவற்றின் சாயமும் பச்சையாகவே மாறிவிடுகின்றன.

பச்சையென்பது இராணுவம்.

பச்சையென்பது இராணுவச் சீருடை.

பச்சையென்பது கொடிய நாசிகளின் யுத்த மயம்.

அத்தோடு அவ்வப்போது தோன்றுவதாகக் காட்டப்படும் அனேக நிலநடுக்கங்கள் உண்மையில் கலவரங்களையே சுட்டிநிற்கின்றன என்றும் கொள்ளலாம். பஞ்சத்தையும் பட்டினியையும் மற்றும் கதைப்பாத்திரங்களின் கொடூரச் செயல்களையும் மட்டுமல்ல யுத்தகாலத்தில் ஒத்தூதிய எக்காளத்தொனியின் எதிரொலி நினைவுகளும் கூட அனேக மக்களின் பயங்கரங்களாக, வதைபட்ட சிலுவைப் பாடுகளாக மக்களின் மனவடுக்களாக மிஞ்சிநின்றன.

இந் நாடகத்தின் இன்றைய காலப்பொருத்தம் ஒன்றும் தற்செயலானது அல்ல என்கிறபடிக்கே நிகழ்வுகள் பொருந்திப் போவதையும்கூட நாம் கண்டுகொள்ளலாம். தான் படைத்துக் காட்டும் பாத்திரங்களினூடாக, அவை நிகழ்த்தும் மூடத்தனங்களின் வாயிலாக பேரழிவைக் கொண்டுவந்த இரண்டாம் உலக மகாயுத்தத்தின் முட்டாள்த் தனத்தினை, அல்லது பொதுவாகவே போர்களை நிகழ்த்தும் முழுமுட்டாளியப் பண்பினை வெளிப்படுத்திப் பகிரங்கக் குற்றங்களைக் காட்டுவதே யூஜேன் இயொனெஸ்கோ அவர்களின் நோக்கம்.

அந் நோக்கத்திற்கு ஏதுவாக உடனடியாகவே இப் பிரதியின் பாத்திரங்கள் காண்டமிருகங்களாகச் சாயமும் சாயலுமாக மாற்றமுறுகின்றன. வெகுஜனங்கள் என்கிற மனிதா மனிதர்கள் எல்லாம் தம் மனிதம் என்கின்ற விழுமியங்களை ஆழப்புதைத்தும் வீசியெறிந்தும் மாறிப்போய் விட்ட வேளையில் பெறிங்கர் மட்டுமே மனித மாண்புகளுடன் ஏனைய எல்லாரிலுமிருந்தும் வித்தியாசப்பட்டு நிற்கின்றார். யூஜேன் இயொனெஸ்கோ அவர்களின் நோக்கம் குற்றங்களைக் காட்டுவதாக இருப்பினும் அதற்கும் அப்பால் பாசிசப் போக்கின் சர்வ அனைத்ததிகார எதேச்சாதிகார ஆட்சியினைக் கூண்டில் ஏற்றுகின்றார். அவர் உருவாக்கும் பாத்திரங்களின் சிந்தனைகள் அவை காண்டாமிருகங்களாக மாறிவிடும் போது அழிந்துபடுகின்றன. அதன் பாரதூர விளைவுகளான அழிவின் குவியல்கள் தான் நாடகப் பார்வையாளர்களுக்கு விஞ்சி நிற்கின்றன. அன்றியும் விலகி நிற்கும் தனித்த சிந்தனை ஒன்றினைக்கொண்டிருப்பதன் ஆபத்தினையும் அது அதன் வாழ்வினை நிர்மூலமாகிவிடுவதினையும் யூஜேன் இயொனெஸ்கோ அவர்கள் சொல்லிவிடுகின்றார்.

இந்த காண்டாமிருகம் நாடகத்தின் அதியுச்சப் பலம் என்பது அதனது இன்னும், இன்றைய நடப்புக் காலத்திற்கும் சாலப் பொருந்துவதும் இனிவரும் காலங்களுக்கும் சிலவேளை பொருந்திப்போகவும் கூடும் என்பதாகும். நாடகத்தின் பேசு பொருட்கள் காலத்தினை விஞ்சி நிற்கின்றன. உண்மையில் வெகுஜனங்களின் அணிதிரளல் என்பது சிறியதும் பெரியதுமாக அடிக்கடி நடந்துகொண்டிருப்பதுவே. எங்கள் சுய சிந்தனைகளை மழுங்கடித்துக் கொன்றுவிடும் ஆற்றல் வெகுஜன அணிதிரளல் மூலமும் நடைபெறக்கூடும் என்பதே யூஜேன் இயொனெஸ்கோ அவர்கள் எமக்கு உரைக்கும் எச்சரிக்கையாகும்.

பாத்திரங்கள் தமது அடையாளங்களை முற்றிலும் இழந்து, அடையாளம், முகம், பெயர், முகவரியற்றவர்களாகி ஆனால் இயல்பான தேர்வு, இயற்கையின் நியமனம் எனச் சிக்கி, மயங்கிக் காண்டாமிருங்களாக மாறிவிடுவதென்பதும் எங்களை நோக்கிய எச்சரிக்கைக் குறிப்புணர்த்தலே.

அடையாளமிழந்த அநாமதேயங்களின் மீதும் நாம் எப்பொழுதும் எச்சரிகையாக இருக்கவேண்டுமென்பதையும் இது கற்றுக்கொடுக்கின்றது.

பலவேறு முரண்களுடன் (diversity) தான் இருத்தல் என்பது சாத்தியமென்பதையும் சிந்தனை வடிவங்கள் பலவகைப் பட்டன என்பதையும் நாம் எப்பொழுதும் எண்ணத்தில் இருத்த வேண்டும் என்றும் காண்டாமிருகம் தூண்டுகின்றது. தனித்தனியாக ஒவ்வொரு பாத்திரமும் ஏற்படுத்தும் பாதிப்புக்களைவிட பாத்திரங்களின் கூட்டிணைந்த வடிவம் ஏற்படுத்தும் அழிவும் பாரதூரமானது. இங்கே நிகழும் உருமாற்றம் என்பது எதிர்த்து நிற்க முடியாதபடி ஒரு நவீன போக்காக மாறியது. எடுத்துக் காட்டாக டெய்ஸியின் உருமாற்றம் என்பது எப்பரிமாணத்தில் நோக்கினாலும் அர்த்தமற்றதாகவே இருக்கின்றது. அவளுக்கே தெரியாது தான் ஏன் மாறினேன் என்பது. ஆனாலும் மற்றவர்கள் ஒவ்வொருவரும் இதனைத்தானே செய்கின்றனர் என்று நியாயப்படுத்தியவாறே 'நாம் இந்த இயக்கத்தின் கட்டளைகளைப் பின்பற்ற வேண்டும்' என்பதில் பிடிவாதமாக இருக்கின்றாள். பெறிங்கர் அதனை மறுத்து இவ்வாறான யோசனையற்ற, யோசனை செய்யவிடாத அமைப்புக்களின் ஆபத்துக்களைப் பட்டியலிடுகின்றார். மீண்டும் அழுத்திச் சொல்வதென்றால், இந் நாடகம், தம்மைக் கண்மூடித்தனமாகப் பின்பற்ற வற்புறுத்தி, யுத்தத்தினை விரும்பி, மனிதர்களைச் சித்திக்கவிடாது கோலோச்சும் அமைப்புக்களைத் துல்லியமான காட்சிகளாக எமது கண்முன் நிறுத்துகின்றது இந் நாடகம் 'காண்டாமிருகம்'.

# அவுஸ்திரேலிய தமிழ் அகதிகள் கழக நினைவுகள் 1

## நோயல் நடேசன்

அவுஸ்திரேலியாவுக்கு 1987 இல் புலம் பெயரும் முன்பாக, தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழர்கள் தங்கியிருந்த அகதி முகாம்களில் மூன்று வருடங்கள் சுகாதார, மருத்துவ மற்றும் கல்விச் சேவைகளைச் செய்திருந்த அனுபவத்தால், எனது ஓய்வு நேரங்களில் இந்த நாட்டிலும் பிரயோசனமாக ஏதாவது எமது சமூகத்திற்குச் செய்யவேண்டும் என்ற விருப்பம் எனக்கிருந்தது.

இலங்கையில் இப்படியான பொது வேலைகளில் ஈடுபட்டதால் அங்கே பல விதமான தொல்லைகளை எதிர்நோக்க நேரிட்டது. மதவாச்சியில் மிருக வைத்தியராக வேலை செய்த காலத்தில், அங்கும் பதவியாவிலும் பால் சேகரிக்கும் நிலையத்தை அமைக்க முன்னின்று உழைத்தேன்.

அந்த முயற்சியில் வெற்றி கண்டபின்னர், அங்கிருந்த ஊழியர்கள் பாலில் தண்ணீர் கலப்பதையிட்டு நான் பால்சபைக்குச் செய்த முறைப்பாட்டினால், பால் சேகரிப்புக்கு பொறுப்பாகவிருந்த ஒரு சிங்கள மனேஜர், என்னை எதிரியாகப் பார்த்தார். அத்துடன் என்னை ‘கொட்டியா’ எனவும் ஊர் எங்கும் சொல்லித் திரிந்தார்.

அதனால் பெரிதாக எனக்கு அப்போது பாதிப்பு ஏற்படவில்லை. இதேபோன்று 1984 காலப்பகுதியில் றாகலையிலும் எனது பெயர், சித்திரையில் அப்பத்துக்கு வைத்த கள்ளாகப் புளித்ததால் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு வெளியேறும் நிலை வந்தது. ஆனாலும் தேசம் விட்டுத் தேசம் மாறியபோதிலும் எனது குணம் மாறவில்லை. இந்தியாவிலும் அப்படியான வேலைகளில் முடிந்தவரையில் ஈடுபட்டேன்

நமது குணங்கள் நாடு விட்டு நாடு போனாலும் மாறுவதில்லைத்தானே?

மெல்பனுக்கு வந்ததும் சென்னையிலிருந்த காலத்தில் நான் செய்த செயல்கள் பற்றிய விபரங்களுடன் இங்குள்ள உலக கிறிஸ்தவர்களது நிறுவனத்திற்குப் (world council of churches) போனேன். அவர்கள் எனது அனுபவத்தைக் கவனமாகக் கேட்டு விட்டு அனுப்பினார்கள்.

பதில் எதுவும் அவர்களிடமிருந்து வரவில்லை. நமது முயற்சியால் ஏதாவது செய்யும் நோக்கத்தில் அலைந்த எனக்கு அக்காலத்திலே எழுத்தாளர் முருகபூபதி, மெல்பன் பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பில் ஈடுபட்டிருந்த திவ்வியநாதன், சூரி நல்லையா ஆகியோர் அறிமுகமானார்கள்.

அக்காலப்பகுதியில் 300 இற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் பல காரணங்களால் அவுஸ்திரேலி யாவுக்கு வந்து, அகதி அந்தஸ்துக்கு விண்ணப்பித்திருந்தார்கள். அதில்

இரு வருடங்களாக அகதி அந்தஸ்து கிடைக்காத சிலரும் இலவு காத்த கிளியாக அலைந்தார்கள்.

அவர்களுக்குச் சார்பாக மத்திய அரசிடம் இலங்கையின் தற்போதைய நிலைமையை எடுத்துச் சொல்லி லொபி செய்வதற்கு ஒரு நிறுவனம் வேண்டும் என்ற விருப்பம் பலருக்கும் இருந்தது. அதனையிட்டு ஒரு கூட்டம் கூட திட்டமிட்டார்கள். அவர்களுடன் நானும் சேர்ந்து முதல் கூட்டத்திற்குச் சமுகமளித்தாலும் மேற்படிப்பிற்கு சிட்னியில் நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் இடம் கிடைத்ததால் அங்கு போய்விட்டேன்.

இரு வருடங்கள் சிட்னியில் வசித்துவிட்டு, இடையில் வார்ணம்பூல் என்ற ஊரிலும் இருந்துவிட்டு மீண்டும் மெல்பன் வந்ததும் இங்கு உருவாக்கப்பட்டிருந்த தமிழ் அகதிகள் கழகத்தில் அங்கத்தினராகச் சேர்ந்தேன்.

பெருமைக்காகச் சொல்லவில்லை. அந்த அமைப்பிலிருந்தவர்களில் நான் ஒருவன் மட்டுமே அகதியாக வரவில்லை. சில வழக்கறிஞர்கள் அகதிகள் கழகத்துடன் தொடர்பிலிருந்தார்கள் என்பது மட்டும் உண்மை.

பெரும்பான்மையாக அகதி அந்தஸ்து கிடைத்தவுடன், அந்த கழகத்திலிருந்த அங்கத்தவர்கள் பலர், நமது ஊர் பேருந்து நிலையத்தில் உள்ள பொது மலசலகூடத்திலிருந்து வந்த நோக்கத்தை முடித்துவிட்டுச் செல்லும் வேகத்தில் வெளியேறினார்கள். அப்படி வெளியேறியவர்கள் சந்தா கட்டுவதற்கே மறுத்தார்கள்.

நான் கிட்டத்தட்ட ஏழு வருட காலம் அவுஸ்திரேலியாவில் இயங்கிய குறிப்பிட்ட தமிழ் அகதிகள் கழகத்தில் ஆரம்ப அங்கத்தினராகவும் அதேவேளையில் செயலாளர், உபதலைவர் பதவிகளிலும் நிருவாகக் குழுவிலும் என்னை அவர்கள் வெளியேற்றும்வரையில் இருந்தேன்.

அக்காலத்தில் நடந்த விடயங்களை ஏற்கனவே எழுதியிருந்தாலும், சிலவற்றை ஆழமாக எழுதவேண்டும் என நினைக்கிறேன். மேற்கு நாடுகளில் மட்டுமல்ல, தென்கிழக்காசிய நாடுகளிலும் ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழ் அகதிகள் இப்போதும் அலைகிறார்கள். ஒரு சிலர் எதோ நம்பிக்கைகளில் என்னோடும் தொடர்பு கொண்டார்கள். மெல்பனில் அன்று உருவான தமிழ் அகதிகள் கழகம் அழிந்துபோனதால், தற்பொழுதுள்ள அகதிகள் எல்லோரும் கையறு நிலையிலேயே இருக்கிறார்கள்.

இலங்கைத் தமிழர்களது அகதி நிலைமை கடந்த முப்பத்தைந்து வருடங்களாக மாறவில்லை. கடைசித் தமிழன் இலங்கையில் இருக்கும் வரை தொடரும் என்று முன்னாள் வட கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் எப்போதோ கூறினார். அது உண்மை என நான் நினைப்பதால், நமக்குச் சில விடயங்கள் தெரிந்திருக்கவேண்டும் என்பது எனது விருப்பம். இந்த அனுபவங்கள் அவுஸ்திரேலியாவுக்கு மட்டுமல்ல கனடா, மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கும் பொருந்தும்.

இங்கு அகதிகள் கழகம் இருப்பதை ஆரம்பத்தில் இங்கிலாந்து, ஆபிரிக்கா போன்ற நாடுகளிலிருந்து தொழில் தகைமையோடு வந்த தமிழர்கள் விரும்பவில்லை. இங்கு வந்த அகதிகளை யாழ்ப்பாணத்தில் ஒடுக்கப்பட்ட தமிழர்களைப் பார்ப்பதுபோல் பார்த்தார்கள். இலங்கைத் தமிழ்ச் சங்கம் என இயங்கிய பிரதான சங்கத்தில் அங்கத்துவம் தர மறுத்ததால், இந்தத் தமிழ் அகதிகள் கழகம் உருவானது. பிற்காலத்தில் அகதியாக வந்தவரான ஒருவரே இலங்கைத் தமிழ்ச் சங்கத்திற்குத் தலைவரான வரலாறும் உள்ளது.

இங்கு எனது நினைவுகளை மட்டுமே எழுதுகிறேன். இந்த அகதிகள் கழகத்திலிருந்தபோது தஞ்சம் கோரிய அகதிகளுக்கு என்னால் முடிந்தவரையில் உதவவேண்டும் என்ற உணர்வு எனக்கு இருந்தபோதிலும், அந்த உதவிகளையும் வரையறைக்குள் மட்டுமே செய்யமுடியும் என்பதைப் பலர் மறந்து விடுகிறார்கள். பல தடவை தர்மசங்கடமான சந்தர்ப்பங்கள் எனக்கு நேர்ந்துள்ளன.

அகதி அந்தஸ்துக்கு விண்ணப்பிக்கும் 90 வீதமானவர்களுக்கு அவுஸ்திரேலிய அகதி சட்டத்தின் கீழ் அகதி கிடைக்காது. அரசியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே சட்டத்தின் பிரகாரம் அந்தஸ்து கிடைக்கும். எதோ ஒரு இயக்கத்திலும் சேர்ந்து ஆயுதம் ஏந்தினேன் எனும்போது அதை நிராகரிப்பார்கள்.

இலங்கை அரசுடன் தொடர்ச்சியான நட்புறவை அவுஸ்திரேலியா பேணவிரும்புவதால் இந்த விடயத்தில் இறுக்கமாக இருக்கிறார்கள் என நினைக்கிறேன்.

1984-87 வரையும் இந்தியா, இலங்கையின் மனித உரிமை மீறல்களை அவுஸ்திரேலியா மட்டுமல்ல பல மேற்கு நாடுகளுக்கும் தனது தூதரகம் மூலமாக எடுத்துச் சென்றது. 1987 இலங்கை- இந்தியா ஒப்பந்தத்தின் பின்பு அந்த விடயமும் நடக்கவில்லை. ராஜீவ் காந்தியின் கொலையின் பின்பு விடுதலைப்புலிகளது மீறல்களே உலகம் முழுவதும் சுவர்களில் ஒட்டி விளம்பரப்படுத்தப்பட்டன.

ஆரம்பத்தில் குடிவரவுத் திணைக்களத்தால் அகதியில்லை என நிராகரிக்கப்பட்ட ஒருவரை அக்காலத்தில் சுதந்திரமான ஒரு ரிபியூனல் (Independent Tribunal) வைத்து அரச சேவையில் இல்லாத ஒருவரிடம் முடிவை எடுக்க விடுவார்கள். நம்மவர்களில் பெரும்பாலானவர்கள் அக்காலத்தில் ஒரு தமிழ் வழக்குரைஞரிடம் செல்லும்போது அவர்களே இவர்களுக்குக் கதை எழுதவேண்டும். தொடர்ச்சியாகக் கதைகளை எழுதும்போது கதைகள் பல ஒரே மாதிரி நகல் எடுத்ததுபோல் இருக்கும். அவை நிராகரிக்கப்படும்

வழக்குரைஞர்களும் என்ன செய்வார்கள் ?

அவர்கள் என்ன புதுமைப்பித்தனா. ஜெயமோகனா?

ரிபியூனலில் நிராகரிக்கப்பட்டவர்கள் முன்னால் வேறு வழிகள் இல்லை.

மேல் வழக்காடு மன்றத்திற்கு மேன்முறையீடு செய்ய வேண்டும் அதற்கு ஏராளம் பணம் செலவாகும். அல்லது குடியேற்ற அமைச்சருக்கு கருணை விண்ணப்பம் அனுப்ப முடியும் . அந்த இடங்களில் அகதிகள் கழகம் போன்ற சமூக சேவை இயக்கங்களின் சிபார்சுகள் உதவும்

இலங்கை அரசையும் ராணுவத்தையும் தொடர்ச்சியாக சித்திரவதைகள், கொலைகள், பாலியல் துன்புறுத்தல் செய்யும் வில்லனாக அகதிகளின் வழக்குரைஞர்கள் சித்தரிக்க வேண்டிவரும்.

பிற்காலத்தில் இந்திய ராணுவத்தை வில்லனாக்கிய சில விண்ணப்பங்களையும் பார்த்தேன். ஆனால் என்ன? இவர்கள் விண்ணப்பித்து அது விசாரணைக்கு வரும் காலத்தில் இந்திய ராணுவம் இலங்கையை விட்டுப் போய்விட்டது. தமிழ்ப்பட வில்லன் இடைவேளையின் முன்பாக இறந்தால் படம் தோல்வியடைவது போன்ற நிலைமை அது !

அந்தோ விடயம் பரிதாபம்.

அவுஸ்திரேலியர்கள் என்ன சொல்வார்கள் இனிமேல் உங்களுக்குப் பிரச்சினை இல்லைத் தானே! நீங்கள் உங்கள் ஊருக்குப் போகலாம் என்றும் முடிவை எடுப்பார்கள். இப்படியான நேரத்தில் யாரைக் கோபிக்கமுடியும்? பணம் வாங்கிய வழக்குரைஞர்களைப் பச்சைத் தூசண வார்த்தைகளால் திட்டிப் பேசுவதையும் கேட்டிருக்கிறேன்.

1990 ஆண்டின் பின்பு வந்த விடயம் மிகவும் வித்தியாசமானது . வட- கிழக்கில் விடுதலைப்புலிகள் ராமராட்சியம் செய்த காலத்தில் நாட்டை விட்டு வெளியேறுபவர்கள், யார் துன்பப்படுத்துவதாக சொல்லி அகதி அந்தஸ்து கேட்கமுடியும்?

உள்ளூர தயங்கினாலும் வேறு வழி இல்லாது விடுதலைப்புலிகள் தங்களைக் கட்டாயமாகப் படையில் சேர்ப்பதாகவும், வேறு இயக்கமாக இருப்பதால் தங்களைத் தேடி கொலை செய்யவிருப்பதாக புதிய கதைகள் எழுத வேண்டியிருந்தது. அது போன்ற உண்மையான சம்பவங்கள் பல இருந்தன என்பதும் மறுக்கமுடியாது.

வெளிநாடுகளில் ஈபி ஆர் எல் எஃப், புளட் ஏன் இலங்கைத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அங்கத்தவர்களாகவும் ஏராளம் பேர் இருந்தார்கள். சில அகதிகளுக்கு தமிழ் கட்சியினர் தங்கள் அங்கத்தினர் எனவும் கடிதமும் கொடுத்திருந்தார்கள்.

இக்காலம்தான் தமிழ் இயக்கங்களும் மற்றும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் பெருமைப் படக்கூடிய காலம். அது தமிழர்களுக்கு ராஜேந்திர சோழன் காலம்போல், வெளிநாட்டில் அகதி அந்தஸ்து கேட்பதற்கு மகோன்னதமான பொற்காலம்.

ஓடையில் ஓடும் தண்ணீரை அண்ணன், தம்பி அள்ளிக் குடிப்பதுபோல் சில தென் இந்தியத் தமிழர்களும் இலங்கைத்தமிழர்களாக அகதி அந்தஸ்து பெற்றார்கள். அக்காலம் பலருக்கு வெற்றியையே தந்தது. பெரும்பாலானோர் தங்கள் கதைகளை விடுதலைப்புலிகளுக்கு எதிராகவே எழுதினார்கள். அந்த விதத்தில் விடுதலைப்புலிகளின் சேவையை இன்றும் பலர் நினைவு கூருவார்கள்.

பூமியில் ஒரு பகுதியில் விடியும்போது மறு பகுதியில் அஸ்தமனம் தோன்றுவதுபோல் எக்காலத்திலும் ஒரு பகுதியில் ஒரு நன்மை ஏற்படும்போது மறு பகுதி பாதிக்கப்படும். இது தவிர்க்க முடியாத விடயம்.

இங்குள்ள அகதிகள் விடுதலைப்புலிகளுக்கு எதிராக எழுதி, அகதி அந்தஸ்து பெறுவது விடுதலைப்புலிகளுக்குப் பணம் சேர்க்கும் இங்குள்ள தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவுக்கும் அதன் ஆதரவாளர்களுக்கும் பிடிக்கவில்லை. அது நியாயமானதே.

எழுதிய கதைகளின் சாரம் வெளிவரும்போது, அவர்கள், 'அண்ணை, லோயர் அப்படி எழுதினால்தான் அகதி அந்தஸ்துக் கிடைக்கும்' என்றார். அவர் சொன்னதைச் செய்தோம் என்று வழக்குரைஞர்களில் தலையில் பழியைப் போடுவார்கள். அதற்குப் பாவ மன்னிப்பாக அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு வீடு வீடாகச் சென்று பணம் சேர்க்கும் குழுவில் இணைந்து இயங்கி தாங்களும் விடுதலைப்புலி ஆதரவாளர்கள்தான் எனத் தங்கள் கன்னிமையை நிரூபித்தார்கள்.

ஆனால், இது விடுதலைப்புலி ஆதரவாளர்களை மட்டுமல்ல விடுதலைப்புலிகளையும் மிகவும் பாதித்தது. விடுதலைப்புலிகளின் மனித உரிமை மீறல்களை அவுஸ்திரேலிய அரசு புரிந்து கொண்டதும் இலங்கை அரசுக்கு ஆதரவு பெருக்கியது. வெளிநாட்டு உளவு நிறுவனங்களது கவனத்திற்கு இவை வந்தன. இங்குள்ள வழக்குரைஞர்கள் தமிழ்த் துரோகிகளாகவும் எட்டப்பன் களாகவும் பார்க்கப்பட்டார்கள். அவர்களுக்கு எதிராகப் பிரசாரங்கள் நடந்தது. அகதிகளுக்காக வேலை செய்யாது, காணிப் பத்திரம் மட்டும் எழுதும் வழக்குரைஞர்கள் மட்டும் விடுதலைப்புலி ஆதரவாளர்களாகவும் அவர்களின் நெருங்கிய நண்பர்களாகவும் இயங்கினர்.

அக்காலத்தில் அவுஸ்திரேலியாவில் தொழிற்கட்சி தொடர்ச்சியாகப் பல காலம் ஆட்சியில் இருந்து, புதிதாக நாட்டுக்குள் வருபவர்களை அரவணைத்துச் சென்றது. அதற்கு முக்கிய காரணம் புதிதாக நாட்டுக்குள் வந்தவர்களது வாக்குகள் தொழிற்கட்சிக்கே சென்றது. அக்காலத்தில் குடிவரவு அமைச்சர், வெளி விவகார அமைச்சர் போன்றவர்களை இலகுவாக எங்களது அகதிகள் கழக நிகழ்வுகளுக்கு அழைக்க முடியும்.

அடுத்து வரவிருக்கும் அத்தியாயங்களில் எனது தனிப்பட்ட அனுபவத்தை எழுதுகிறேன். அ

# யாழ்ப்பாணிச் சொப்பனசுந்தரி இப்போது யாரை வைச்சிருக்கிறா?

எந்த ஒரு சமூகமும், நாகரிகமும் பண்பாடும் உள்ள சமூகமாக இயங்க வேண்டும் என்றால், அதற்கு ஒரு அறநெறி இருக்க வேண்டும். யாழ்ப்பாண சமூகத்திற்கு என ஒரு அறநெறி இல்லை, அது வெறுமனே அந்தந்த நேரத் தன்நலம் சார்ந்தது என்று முன்னர் எழுதியிருக்கிறேன்.

அதைப் போல, சமூகங்களுக்கு ஒரு தலைமை இருக்க வேண்டும். ஒரு சமூகத்துக்கு அதன் நலன்களைப் பாதுகாக்கவும், அதன் போக்கைத் தீர்மானிக்கவும் ஒரு தலைமை தவிர்க்க முடியாதது. அவ்வாறான தலைமை இல்லாத ஒரு சமூகம் anarchy எனப்படும் அராஜக நிலையிலேயே வந்து முடியும். பலம் வாய்ந்தவர்கள், எல்லாரையும் மிரட்டிப் பயத்துடன் அடக்கி வைப்பதாகவே இருக்கும்.

அந்தத் தலைமை அரசியல் தலைமையாகமட்டும்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. அது அந்தச் சமூகத்தில் உள்ள சமூகப் பொறுப்பும் சமூக உணர்வும் உள்ளவர்களின் கூட்டாகவோ, சமூகத்தின் முன்னேற்றம் சார்ந்து தங்கள் சிந்தனையில் உதித்த கருத்துக்களை மட்டுமே அந்தச் சமூகத்திற்கு வழங்கு கிறவர்களாகவோ கூடவோ இருக்கலாம்.

செயற்பாடு சார்ந்ததாகக் கூட இல்லாமல், அந்தச் சமூகத்தின் சிந்தனைப் போக்கை மாற்றுகிற தத்துவங்களாகக் கூட இருக்கலாம். கிராம மட்டத்திலிருந்து நாடு வரையிலான அமைப்புகளுக்கு இப்படி ஏதோ ஒரு வகையில் ஏதோ ஒரு தலைமை அத்தியாவசியமானது.

பெரியார் இன்றைக்கு இந்தச் சமூகத்தின் சிந்தனையில் ஏற்படுத்திய மாற்றத்தை எந்த அரசியல்வாதிகளாலும் ஏற்படுத்த முடியவில்லை என்பதிலிருந்தே அவ்வாறான தலைமைகள் ஒரு சமூகத்தில் எவ்வாறான மாற்றத்தைக் கொண்டு வர முடியும் என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

**ஜோர்ஜ் இ.**

இயற்கை, போர் போன்ற அழிவுகளால் பாதிக்கப் பட்டிருக்கும் மக்கள் குழுக்கள் அவற்றை எதிர்கொள்ளவும், அவற்றின் பாதிப்பிலிருந்து மீள் எளவும் கூட இவ்வாறான ஒரு தலைமை, அரசியல் தலைமைகளுக்கும் அப்பால் மேல் எழுந்து சமூகத்தை வழிநடத்த வேண்டிய சூழலை நாங்கள் அடிக்கடி காண்கிறோம்.

உதாரணத்திற்கு அகதி முகாம்களில் ஒரு தான் தோன்றியான தலைமை இல்லாமல், எப்படி எல்லாவற் றையும் ஒழுங்கு முறைக்கு கொண்டு வருவது? எப்படி கிடைப்பவற்றை சமனாகப் பகிர்ந்து கொள்வது? அவ்வாறான தலைமை இல்லாவிட்டால், பலம் வாய்ந்தவர்கள் எல்லாவற்றையும் அபகரித்துக் கொள்கிற நிலைமையும், மற்றவர்கள் எதுவுமே கிடைக்காமல் அல்லல் படுவதாகவும் தான் இருக்கும். சகலருக்குமான சமநீதியை இவ்வாறான தலைமை தான் உறுதி செய்ய முடியும்.

அங்கீகாரம் பெற்ற அரசியல் தலைமைகள் செய்கிற நிறுவனமயப் படுத்தப்பட்ட அதிகார துஷ்பிரயோகம் இவ்வாறான தலைமைகளில் பெரும்பாலும் இருப்பதில்லை. அதில் உள்ள பணம் முதல் பாலியல் வரையிலான துஷ்பிரயோகங்கள் பெரும்பாலும் தனிமனிதர்களால் ஆனதாக இருக்குமே அன்றி, அமைப்பானதாகவும் இருப்பதில்லை. ஜனநாயகத் தன்மை ஓரளவேனும் இருக்கக் கூடிய அளவுக்கு சமூக உணர்வுள்ளவர்களும் இதில் இருப்பார்கள்.

நான் சொல்வது சமூக நலன் சார்ந்த சமூக அமைப்புகள். புலிகளுக்கு பணம் சேர்த்த கூட்டமும், புலிகளை வைத்துப் பிழைப்பு நடத்திய கூட்டமும் ஒட்டுமொத்தத் திருட்டுக் கூட்டம். அதற்கு சமூக நலன் ஒரு போதும் இருந்ததில்லை. அது கொலைகாரப் புலிகளை வைத்து தங்களை மேம்படுத்த முயன்ற புலிகளின் முகவர் கூட்டம் மட்டுமே.

கட்டுப்பாடுகளும் கடப்பாடுகளும் இல்லாமல் ஒரு சமூகம் இயங்க முடியாது. அதற்கான சட்டதிட்டங்களை வகுத்து அமுல்படுத்தவும், ஒழுங்கை நிலைநாட்டவும் அதற்கான ஒரு தலைமை அவசியமாகிறது.

யாழ்ப்பாணச் சமூகம் சட்டத்திற்கும் ஒழுங்குக்கும் கட்டுப்பட்டு அமைந்து வாழுகிற சமூகம் இல்லை. எந்தச் சட்டமாக இருந்தாலும், அதை எப்படி மீறுவது என்பதிலேயே சிந்தனை ஆரம்பிப்பதும், அதைப் பெருமையாக நினைப்பதும் எங்கள் சமூகத்திற்கானது.

சுதந்திரம் அடையும் வரைக்கும் யாழ்ப்பாணச் சமூகம் சட்டத்திற்கு அமைவானதாகத் தான் இருந்தது. ஆட்சியில் இருப்பவர்களைக் கைக்குள் போட்டுக் கொண்டு, நியாயமாகக் கிடைக்க வேண்டியதற்கு மேலாகவே பெற்றுக் கொண்டு வாழ்ந்த சமூகம் அது. அது சமூகமாகவோ, சமூகத்தில் தன்னெழுச்சியாக தனிமனிதர்களாகவோ, வந்து ஆட்சி செய்த ஐரோப்பியர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த வரலாறுகள் இல்லை.

சங்கியலியனோ, பண்டார வன்னியனோ தங்கள் அதிகாரங்களுக்கான அச்சுறுத்தலுக்காக போர் செய்திருக்கக் கூடும். அவர்களின் பின்னால் இந்த மக்கள் திரண்டதாகவும் இல்லை. அவர்கள் இல்லாத நானூறு வருடங்களுக்குள் தன்னெழுச்சியாக சுதந்திரப் போராட்டம் நடத்தியதாகவும் இல்லை. தங்கள் நலன்களையும், அதே ஆண்டைச் சிந்தனை களையும் தொடர்ந்தும் கொண் டொழுகுவதற்கு தடை இல்லாத வரைக்கும் யாழ்ப்பாணிகளுக்கு அன்னிய ஆட்சி பிரச்சனையாகத் தெரிந்ததாக இல்லை.

இப்போதைய ஈழவிடுதலை ஆயுதப் போராட்ட, பொங்குதமிழ் அளவுகோல்களின்படி, நல்லூர் கோயில் இடிக்கப்பட்டு, கிறிஸ்தவ ஆலயம் கட்டப்பட்ட போது பெரும் புரட்சி வெடித்து, இரத்தக்களரி ஏற்பட்டிருக்க வேண்டும்.

அப்படி ஏதாவது வரலாறு உண்டா?

காரணம், ஆண்டை களுக்கு அடிமைகளை வைத்து அதே வர்க்க வேறுபாடுகளைத் தொடர்வதற்கு வெள்ளைக்காரர் ஆட்சியிலும் வசதி இருந்தது. ஆட்சி தன் கையில் இருக்க வேண்டும் என்பதை விட, அதிகாரம் தன் கையில் இருக்க வேண்டும் என்கிற பார்ப்பனிய சிந்தனை போன்றதாகத் தான் யாழ்ப்பாணியச் சிந்தனை இருந்தது.

அத்துடன் ஆயுதம் மீதான பயம்.

நேற்று வரைக்கும் புலிகளின் ஆயுதங்களுக்குப் பயந்து புகழ்ந்து பாடிய சமூகம், வந்து ஆட்சி செய்த வெள்ளைக் காரனின் துப்பாக்கிகளுக்கும் பயந் தும் அதைத் தானே செய்திருக்கும்? தமிழ்த் தேசிய இன உணர்வு பொங்கி எழுந்து, பொங்குதமிழா நடத்தியிருக்கும்?

சுதந்திரம் அடைந்த பின்னால், சிங்களவர்களுக்குக் கீழ் வாழ வேண்டுமா என்ற தமிழ்த் தேசியச் சிந்தனை, தமிழ்நாட்டின் திராவிடச் சிந்தனையை அடியொற்றி வந்ததன் பின்னால், சட்டமும் ஒழுங்கும் சிங்களவர்களால் எங்களை அடக்கி ஒடுக்க, எங்களுக்கு எதிராகத் திணிக்கப்பட்ட ஒன்றாகக் கருதுகிற மனநிலை எங்கள் சமூகத்திற்கு வந்திருக்கிறது. முழு இலங்கையையும் தாய்நாடாகக் கருதுகிற, நாட்டுக்கான விசுவாசம் என்ற எண்ணப்பாடு கூட அழிந்து போய், தமிழ் அரசு, ஈழம் என்ற கனவுலகங்களின்

கட்டுப்பாடுகளும் கடப்பாடுகளும் இல்லாமல் ஒரு சமூகம் இயங்க முடியாது. அதற்கான சட்டதிட்டங்களை வகுத்து அமுல்படுத்தவும், ஒழுங்கை நிலைநாட்டவும் அதற்கான ஒரு தலைமை அவசியமாகிறது. யாழ்ப்பாணச் சமூகம் சட்டத்திற்கும் ஒழுங்குக்கும் கட்டுப்பட்டு அமைந்து வாழுகிற சமூகம் இல்லை. எந்தச் சட்டமாக இருந்தாலும், அதை எப்படி மீறுவது என்பதிலேயே சிந்தனை ஆரம்பிப்பதும், அதைப் பெருமையாக நினைப்பதும் எங்கள் சமூகத்திற்கானது.

சஞ்சரிப்புகளுக்குள், நாங்கள் சட்டம் ஒழுங்குகளுக்குக் கட்டுப்பட்டு சுதந்திரமாக வாழ முடியும் என்பதை விட, நாங்களே சட்டத்தை உருவாக்குகிற, ஆண்ட பரம்பரையின் அப்பே ஆண்டுவ நடக்கும் என்ற நினைப்பு, சட்டம், ஒழுங்கை மதித்து நடக்கும் சிந்தனையை இல்லாதொழித்து விட்டது.

இலங்கையை எங்கள் நாடில்லை என்று எண்ணத்தோடு திரிகிற எந்த யாழ்ப்பாணிக்கும் தான் வந்தேறியாகக் குடியேறியிருக்கும் நாட்டை, அந்நிய மொழியும் கலாசாரமும் கொண்டதாக இருந்தாலும், தன் சொந்த நாடாகக் கொள்வதில் தயக்கங்கள் இருந்ததில்லை.

பின்னால் நடந்த ஆயுதப் போராட்டம், சட்டத்தையும், ஒழுங்கையும் மீறும் சட்ட மறுப்பு என்பது வீரமாக்கப்பட்ட நிலைக்கு கொண்டு வந்து விட்டது. கொலையும், கொள்ளையும் போராட்டத்தின் அடிப்படையில் நியாயமாக்கப்பட்டு விட்டன.

பட்டுத் துகிலுக்கு ஆசைப்பட்ட ஆயுதப் போராட்டம் முடிந்து, கோவணத்தையும் பறி கொடுத்த பின்னாலும், அந்த சட்டம், ஒழுங்கு என்பன இன்றைக்கும் எங்களுக்கு அன்னிய மானவையாகவே இருக்கின்றன.

புலிகள் உச்சம் பெற்ற நிலையில், சட்டம், ஒழுங்கை விட, பச்சை மட்டையடி மீதானதும், முகாம்களில் சித்திரவதையினதும், மண்டையில் போடப்படுவதன் மீதானதுமான பயமே, எங்களுடைய ஒழுக்க நெறியாக இருந்தது.

பயம் மௌனத்தைத் தராமல், புகழ்ந்து பாடுவது பிழைப்புக்கான வழியான பின்னால், ஆயுததாரிகளை புனிதராக்குவதில் வந்து முடிந்தது. மண்டையில் போடுவதும் பச்சை மட்டையடி போன்றே போராட்டத்திற்கான வழிமுறைகளில் ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இன்றைக்கு ஆயுததாரிகளும் இல்லை. பயமும் இல்லை. இதனால் சட்டம், ஒழுங்கு பற்றி எந்தக் கவலையும் இல்லை.

இதையெல்லாம் மீறி ஒரு சமூகத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல ஒரு தலைமை மு ன

பட்டுத் துகிலுக்கு ஆசைப்பட்ட ஆயுதப் போராட்டம் முடிந்து, கோவணத்தையும் பறி கொடுத்த பின்னாலும், அந்த சட்டம், ஒழுங்கு என்பன இன்றைக்கும் எங்களுக்கு அன்னிய மானவையாகவே இருக்கின்றன.
புலிகள் உச்சம் பெற்ற நிலையில், சட்டம், ஒழுங்கை விட, பச்சை மட்டையடி மீதானதும், முகாம்களில் சித்திரவதையினதும், மண்டையில் போடப்படுவதன் மீதானதுமான பயமே, எங்களுடைய ஒழுக்க நெறியாக இருந்தது.

எப்போதையும் விட இன்றைக்கு மிகவும் அத்தியாவசியமான ஒன்றாக இருக்கிறது.

சுதந்திரத்தின் பின்னான எங்கள் தலைமைகள் உணர்வுகளை உசுப்பேத்துவதன் மூலமாக, தேர்தல் மூலமாக நாங்கள் தெரிவு செய்தவை. அதன் பின்னால் வந்த ஆயுதத் தலைமை அவ்வாறானதொன்றல்ல.

ஆயுதங்களோடு வந்திறங்கி, சட்டம், ஒழுங்குக்கு முரணாக, எந்த ஜனநாயக பண்புகளும் இல்லாமல் தான்தோன்றிகளாக வந்து சேர்ந்தவை தான் அந்தத் தலைமைகள். பழைய தலைமைகளைக் கொன்றொழிப்பதைக் கூட, அதன் சட்டவிரோதத் தன்மையும், ஜனநாயகத்திற்கு முரண்பாடான இயல்பையும் கருத்துக்கு எடுக்காமல், ஆதரிக்கும் நிலை இந்த யாழ்ப்பாணிச் சமூகத்திற்குள் வந்தது.

எதிரியின் அக்கிரமங்கள், அட்டூழியங்களை விட, இது பரவாயில்லை என்ற எண்ணமும், துப்பாக்கிகள் எதிரிகள் மீது மட்டுமில்லை, தங்கள் மீதும் திரும்பும் என்ற பயமும் ஒத்தோட வைத்திருந்தது.

யுத்தம் முடிந்து ஆயுதத் தலைமை அழிக்கப்பட்ட பின்னர், இந்தச் சமூகம் இன்னொரு மாவீரத் தலைமையைத் தான் தேடிக் கொண்டிருந்தது. பல கருத்துக்களைக் கொண்ட ஜனநாயகம் பற்றியதாக இல்லாமல், அதே யாழ்ப்பாணித் தமிழ்த்தேசியச் சிந்தனையை ஆயுதங்கள் இல்லாமல் முன்நகர்த்தக் கூடிய தலைமையைத் தேடியதாகத் தான் இருந்தது.

அதையும் கூட, உலக ஒழுங்குகள், சட்ட திட்டங்களுக்கு அப்பாலானதாக, ‘உலகம் எங்களுக்கு தீர்வைப் பெற்றுத் தர வேண்டிய கட்டப்பாட்டில் இருக்கும் அளவுக்கு நாங்கள் முக்கியமானவர்கள்’ என்ற சிந்தனையின் அடிப்படையில் தான் இந்தச் சமூகம் தீர்வுகளை வற்புறுத்திக் கோரிக் கொண்டிருந்தது. கனடாவில் தெருவை மறித்த ஆர்ப்பாட்டத்திற்கு அகிம்சையை விட, entitlement தான் அடிப்படையாக இருந்தது.

அதற்கான காரணம், சட்டம், ஒழுங்கு மீது அதற்கு இருந்த ஒவ்வாமை.

அவ்வாறு தேடப்பட்டு, பின்னால் சென்ற தலைமைகளும் இன்று இதே சமூகத்தால் துரோகி ஆக்கப்பட்டிருக்கின்றன என்பது தான் இந்த யாழ்ப்பாணிச்

சமூகத்தின் தனித்துவமான சிறப்பியல்பு.

தற்போது உள்ள யாழ்ப்பாணி அரசியல் தலைமைகள் எந்த விதத்திலும் யாழ்ப்பாணிச் சமூகத்திற்கான அரசியல் தலைமைகள் இல்லை.

பொன்னம்பலத்தின் காங்கிரஸும், செல்வாவின் தமிழரசும், அமிர்தலிங்கத்தின் கூட்டணியும் தேர்தல் ரீதியாகவும், ஆயுத முனையில் புலிகளும் எடுத்துக் கொண்ட தலைமைகள் போன்று எந்தத் தலைமையும், புலிகள் அழிக்கப்பட்ட பின்னால் மேலெழவில்லை. யாழ்ப்பாணிகள் அவ்வாறான தலைமையை உருவாக்க முயன்று, கடும் போக்காளர்கள் என்று நினைத்துக் கொண்டு பின்னால் திரண்ட, பெரும்பாலும் புலன் பெயர்ந்தவர்களின் விருப்பின் பேரில், கஜேந்திரகுமாரும், விக்னேஸ்வரனும், புலிகளின் வாரிசாக நினைத்த அனந்தியும் தேர்தலில் வெற்றி பெற்றாலும், அவர்கள் சமூகத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய தலைமைகளாக மேலெழ முடியவில்லை.

தலைவர் உருவாக்கினார் என்ற கதை விட்ட, துப்பாக்கி முனைத் திருமணக் கூட்டமைப்பு கூட, இந்தச் சமூகத்தின் தலைமையாக முடியாமல் சிதைந்து சிதறிப் போய் விட்டது.

சரி, ஏதோ பேய்க்கு வாழ்க்கைப்பட்டு விட்டோம், புளியமரத்தில் ஏறித் தானாக வேண்டும் என்பதற்காக கடைசியில் தஞ்சம் அடைந்த தமிழரசு கூட கேவலமான நிலையில் வந்து முடிந்திருக்கிறது.

ஒரு சமூகத்திற்கு அரசியல் தலைமையை வழங்கி, அதன் சிந்தனைப் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தி, அதை முன்னோக்கி நகர்த்தக் கூடிய திறமையோ, சிந்தனையோ இல்லாமல், வெறும் அரசியல் அதிகாரத்திற்கான போட்டியில் ஈடுபடும் குழுக்களாகத் தான் இன்றைய அரசியல் கட்சிகளின் நிலை வந்து முடிந்திருக்கிறது.

இன்றைய தமிழ் அரசியல் நாற்காலிகளுக்கு ஆனதே அன்றி, அரசியல் தீர்வுக்கானது இல்லை. தேர்தல் நேரத்தில் வந்து தமிழ்த்தேசிய உசுப்பேத்தலைச் செய்தால் போதும்.

‘ஜெனிவாவில் தீர்வு, காட்டம், ஆவேசம், எச்சரிக்கை, திரும்பவும் ஆயுதம் ஏந்த வேண்டி ஏற்படலாம்’.

எல்லாமே விலை ஆகக் கூடிய சரக்குகள்.

ஒரு
சமூகத்திற்கு அரசியல்
தலைமையை வழங்கி, அதன்
சிந்தனைப் போக்கில் மாற்றத்தை
ஏற்படுத்தி, அதை முன்னோக்கி நகர்த்தக் கூடிய
திறமையோ, சிந்தனையோ இல்லாமல், வெறும்
அரசியல் அதிகாரத்திற்கான போட்டியில் ஈடுபடும்
குழுக்களாகத் தான் இன்றைய அரசியல் கட்சிகளின் நிலை
வந்து முடிந்திருக்கிறது.
இன்றைய தமிழ் அரசியல் நாற்காலிகளுக்கானதே
அன்றி, அரசியல் தீர்வுக்கானது இல்லை. தேர்தல் நேரத்தில் வந்து
தமிழ்த்தேசிய உசுப்பேத்தலைச் செய்தால் போதும்.
‘ஜெனிவாவில் தீர்வு, காட்டம், ஆவேசம், எச்சரிக்கை,
திரும்பவும் ஆயுதம் ஏந்த வேண்டி ஏற்படலாம்’.
எல்லாமே விலை ஆகக் கூடிய சரக்குகள்.
சமூகம் அவ்வளவு தூரம் அறிவார்ந்த சமூகமாக
இருக்கிறது.
‘எண்டாலும் அவங்கள் தானே எங்களுக்காண்டி
கதைக்கிறவங்கள்’ என்பது மட்டுமே
அயோக்கியர்களைக் கூடத்
தலைவர்களாக்கக் கூடிய
மனநிலை.

சமூகம் அவ்வளவு தூரம் அறிவார்ந்த சமூகமாக இருக்கிறது.

‘எண்டாலும் அவங்கள் தானே எங்களுக்காண்டி கதைக்கிறவங்கள்’ என்பது மட்டுமே அயோக்கியர்களைக் கூடத் தலைவர்களாக்கக் கூடிய மனநிலை.

இன்றைக்கு யாழ்ப்பாணிச் சமூகத்திற்கு எந்த ஒரு தலைமையும் இல்லை என்பது மட்டுமல்ல, அவ்வாறானதொரு தலைமையை வழங்கக்கூடிய தகுதியும் திறமையும் தேர்தல்களில் தெரிவான கட்சித் தலைமைகளுக்குக் கூட இல்லை என்பது தான் பெரிய உண்மை. சிங்களவர்கள் தமிழர்களுக்கு உரிமை வழங்க வேண்டும் என்று நினைத்தால் கூட, அதற்கான பேச்சு வார்த்தைக்கு தமிழர்களின் பிரதிநிதிகளாக தங்களை நிலை நிறுத்திப் போகக் கூடிய அளவில் எந்தக் கட்சியும் இல்லாத படிக்கு, யாழ்ப்பாணிச் சமூகம் இன்றைக்கு பிளந்து, நாறிப் போய் கிடக்கிறது.

மாற்றுக் கட்சிகள், துரோகிகள், சிங்கள, இந்திய கைக்கூலிகள் என்றெல்லாம் என்று யாழ்ப்பாணிகளால் வகைப்படுத்தப்படுகிற மற்ற இயக்கங்களில் இருந்து பிறப்பெடுத்த கட்சிகளை விடுவோம்.

தமிழ்த் தேசியம் என்பதை வாய்க்கு வாய் சொல்லிக் கொண்டிக்கிற தலைமைகள் கூட, ஒரே கொடிக்கும் குடைக்கும் கீழ் இல்லை. ஆளையாள் துரோகிகள் என்கிற கேவல நிலைக்கு தமிழ்த் தேசியம் வந்திருக்கிறது. அது கட்சிகளுக்கு இடையிலானதாக மட்டும் இல்லாமல், கட்சிகளுக்குள்ளேயும்

கோமாளிக்கூத்தாக வந்து முடிந்திருக்கிறது.

வெவ்வேறு இயக்கங்களாக இருந்த மாற்றுக் கட்சிகள் கூட தங்கள் வேறுபாடுகளை மறந்து ஒன்றாகச் செயற்படலாம் என்ற கருத்தில் செயற்பட்டாலும், தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் அவ்வாறு செயற்படுவதற்கான எந்தச் சாத்தியமும் இல்லை.

இவ்வாறாக, அரசியல் கட்சிகள் தலைமை வழங்காத, சட்டம், ஒழுங்கு போன்ற விதிமுறைகள் இல்லாத ஒரு அராஜக சமூகமாகத் தான் இன்றைக்கு யாழ்ப்பாணிச் சமூகம் வந்து சேர்ந்திருக்கிறது. இவ்வாறான சமூகத்தில் துப்பாக்கி தூக்கியவன் தான் தோன்றித் தேசியத் தலைவரானது மாதிரி, தடியெடுத்த தண்டல்காரர்கள் இன்றைக்கு இந்தச் சமூகம் முழுவதும் நிறைந்திருக்கிறார்கள். இவர்கள் தான் இந்தச் சமூகத்தின் சிந்தனைப் போக்கை வடிவமைக்கிறார்கள் என்பது இன்றைய பரிதாபகரமான உண்மை நிலை.

எந்த ஒரு இடத்திலும் அதிகாரத்திற்கான வெற்றிடம் ஏற்படும்போது, அதை நிரப்ப தானாகவே ஒரு தலைமை உருவாகி நடத்திச் செல்லும். உடைந்து போன சோவியத் ரஷ்யாவின் எல்லாக் குடியரசுகளும், ஆப்கானிஸ்தானும் சர்வாதிகார அமைப்புகளாக இருந்தாலும், அராஜக நிலையில் சோமாலியா மாதிரி சிதைந்து போகாமல் தொடர்வது அதன் அடிப்படையில் தான்.

கோத்தபாயாவை விரட்டியடித்த போராட்டம் வெற்றி பெற முடியாமல் போனதும், அதிகாரத்தை தனது கையில் எடுக்கக் கூடிய ஒரு தலைமை அங்கே உருவாக முடியாமல் போனது தான்.

எங்களுக்குக் கிடைத்திருப்பது சோமாலிய நிலை தான். இன்றைக்கு சிங்கள அரச இயந்திரமும், இராணுவமும் பொலிஸ் பிரிவுகளும் எங்கள் பகுதியில் இல்லை என்றால், யாழ்ப்பாணம் ஒரு சோமாலிய அராஜக நிலையில் வந்து முடிந்திருக்கக் கூடும் என்பதைத் தான் அவர்களின் சகல நிர்வாக அமைப்பு முறைகளும், மாகாண சபை முதல் கிராம சபைகள் வரை, காட்டி நிற்கின்றன.

> இவ்வாறாக, அரசியல் கட்சிகள் தலைமை வழங்காத, சட்டம், ஒழுங்கு போன்ற விதிமுறைகள் இல்லாத ஒரு அராஜக சமூகமாகத் தான் இன்றைக்கு யாழ்ப்பாணிச் சமூகம் வந்து சேர்ந்திருக்கிறது. இவ்வாறான சமூகத்தில் துப்பாக்கி தூக்கியவன் தான் தோன்றித் தேசியத் தலைவரானது மாதிரி, தடியெடுத்த தண்டல்காரர்கள் இன்றைக்கு இந்தச் சமூகம் முழுவதும் நிறைந்திருக்கிறார்கள். இவர்கள் தான் இந்தச் சமூகத்தின் சிந்தனைப் போக்கை வடிவமைக்கிறார்கள் என்பது இன்றைய பரிதாபகரமான உண்மை நிலை.

நிர்வாகத் திறனும் சமூகத்தை கட்டுப்படுத்தும் வல்லமையும் இல்லாத அதிகாரமும், சட்டத்தை மீறுவதைப் பெருமையாக நினைக்கும் சமூகமும் இருக்கும் இடத்தில் வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

ஏதோ இந்தச் சமூகம் புண்ணியம் செய்திருக்கிறது. யுத்தம் முடிந்த கையோடு 'ஆயுதங்களை மௌனிக்க வைத்திருக்கிறது'. ஒட்டு மொத்த சமூகத்திடமும் ஆயுதங்கள் இருந்திருந்தால், ஆப்கானிஸ்தானை விட மோசமான நிலையில் முடிந்திருக்கக் கூடும்.

பிரபாகரன் என்ற ஒரு ஒற்றைத் துப்பாக்கி மனிதனின் கையில் தங்கள் தலைவிதியைப் பறிகொடுத்த சமூகத்திற்கு, இன்றைக்கு தனக்கு என ஒரு தலைமையைத் தேடிக் கொள்ள முடியவில்லை என்பது மட்டுமன்றி, அந்தத் தலைமை தங்களுக்கு மட்டுமே இருப்பதான நினைப்பு, ஊருக்குள்ளே உள்ள பேட்டை ரவுடி ரேஞ்ச் தற்குறிகள் முதல் வெளிநாட்டுப் புலிகளின் உண்டியல் கூட்டம் வரை இருப்பது தான் இந்தச் சமூகத்தின் துயரமான நிலை.

இன்றைக்கு இந்தச் சமூகத்தின் போக்கை யார் தீர்மானிக்கிறார்கள்?

பேஸ்புக்கில் ஃபேக் ஐடியில் இருக்கும் ஒரு முட்டாள் கூடத் தீர்மானிக்கலாம்.

இந்த நிலை தான் இன்றைக்குத் துவாரகாவை புதுமுக நடிகையாக அரங்கேற்றியிருக்கிறது. ஒரு நாகரிக சமூகத்தில் இந்தக் கோமாளித்தனங்கள் எல்லாம் சாத்தியமாகுமா? எந்தத் தயக்கமும் இல்லாமல் ஒரு கூட்டம், தலைவர் உயிரோடு இருக்கிறார், மகளை அனுப்பி போராட்டத்தை நடத்த வைக்கிறார் என்று எந்தக் கேள்வியும் இல்லாமல் கதை சொல்ல முடிவது எதனால்?

ராஜீவ் கொலை, பத்மநாபா கொலையில் சம்பந்தப்பட்ட சாந்தனின் உடலை வைத்துக் கொண்டு அரங்கேற்றப்பட்ட சகல கூத்துக்களும், அதை இந்தியாவுக்குக் கடைசி எச்சரிக்கை விடும் கூத்தும் எந்தத் தலைமையின் கீழ் நடைபெற்றது?

இங்கே ஒரு சமூகத்தின் தலைமை என்று ஒரு அமைப்பு முறை இல்லாததனால் தான் இத்தனை கூத்துக்களும்.

இதனால் தான் அபத்தத்தில், எங்களுக்குள் ஒரு சிந்திக்கத் தெரிந்த ஒரு தலைமை

மேலெழ வேண்டும் என்று கூறியிருந்தேன்.

இன்றைக்கு யாழ்ப்பாணிச் சமூகத்திற்கு தலைமையாக, யாழ்ப்பாண யூடியூபர்கள் முதல் கனடாவில் தங்களைத் தமிழ்த் தேசிய ஊடகவியலாளர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் வரை, பேஸ்புக்கில் புலிப் புரட்சி நடத்துகிறவர்கள் முதல் வெளிநாடுகளில் புலிகளின் உண்டியலைத் தொடர்ந்தும் குலுக்குகிறவர்கள் வரை, யாழ்ப்பாணத்தில் கட்சிகளின் பின்னால் ஒட்டிக் கொண்டிருக்கிறவர்கள் முதல் கனடாவில் இந்த யாழ்ப் பாணிகளை வைத்து தங்கள் அரசியல் கனவுகளை நிறைவேற்றலாம் என்ற கனவில் திரிகிறவர்கள் வரை, வெளிநாடுகளில் தமிழர்கள் அமைப்புகளாக இருந்த புலி முகவர்கள் முதல் இந்துத்துவ சம்பளப்பட்டியலில் இருந்து யாழ்ப்பாணத்தை சிவபூமியாக்க முயற்சிப்போர் வரை என எத்தனையோ பேர் தங்களை இந்தச் சமூகத்தின் தலைவர்களாக நினைக்கிறார்கள். அதை தலைமை தாங்கி, வழிகாட்டி நடத்திச் செல்லக் கூடிய தகுதியும் திறமையும் தங்களுக்கு இருப்பதாக நம்புகிறார்கள்.

அதுகூடத் தேவையில்லாமல், ஒரு பேஸ்புக் ஃபேக் ஐடி கூட இந்தச் சமூகத்தின் போக்கை மாற்றி விட முடிகிறது.

இலங்கைக்கு இந்திய நட்சத்திரங்கள் வருகிறார்களா?

இரத்தம் காய முன் களியாட்டமா? என்ற ஒரு முட்டாள் குரங்கு கொள்ளிக்கட்டையோடு புறப்பட்டால் போதும்.

காடு கலங்கும்.

கனடாவிற்கு வந்தால்...

மாவீரர் மாதம், முள்ளிவாய்க்கால் மாதத்திலா? என்று தொடங்க வேண்டியது தான்.

இதெல்லாம் அமைப்புகள் போடுகிற கோஷம் இல்லை. ஆங்காங்கே உள்ள தற்குறிகள் போடுகிற கூச்சல். முழுச்சமூகமுமே பின்னால் அணி திரளும்.

ஒரு
பேஸ்புக் ஃபேக் ஐடி
கூட இந்தச் சமூகத்தின் போக்கை
மாற்றி விட முடிகிறது.

இலங்கைக்கு இந்திய நட்சத்திரங்கள்
வருகிறார்களா?
இரத்தம் காய முன் களியாட்டமா? என்ற ஒரு
முட்டாள் குரங்கு கொள்ளிக்கட்டையோடு புறப்பட்டால்
போதும்.
காடு கலங்கும்.
கனடாவிற்கு வந்தால்...
மாவீரர் மாதம், முள்ளிவாய்க்கால் மாதத்திலா?
என்று தொடங்க வேண்டியது தான்.
இதெல்லாம் அமைப்புகள் போடுகிற கோஷம்
இல்லை. ஆங்காங்கே உள்ள தற்குறிகள்
போடுகிற கூச்சல். முழுச்சமூகமுமே
பின்னால் அணி திரளும்.

யாழ்ப்பாணிகளால் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டவர்களை விட, தங்களால் தான் சிங்கள அரசுடன் பேச முடியும் என்று நம்புகிற முன்னாள் புலி முகவர்கள், யாழ்ப்பாணி அரசியல்வாதிகளுக்கு பணத்தை வீசி தாங்கள் நினைத்தது போல அரசியல் செய்விக்கலாம் என்று நம்புகிற புலன் பெயர்ந்த புலி உண்டியல் கூட்டம், எப்படியாவது மகிந்தவைக் கழுவில் ஏற்ற ஐ. நாவில் யுத்தக் குற்ற விசாரணை செய்விக்க தங்களால் முடியும் என்ற கதை சொல்கிற கனடிய அரசியல் கனவுக் கும்பல், பரந்த இந்தியாவின் ஒரு பகுதியாக இலங்கையை உருவாக்கும் திட்டத்திற்காக யாழ்ப்பாணத்தில் மத உணர்வைத் தூண்டும் காவி, பட்டை நாமக் கூட்டம், வெளிநாடுகளில் சம்பாதித்த பணத்தை வைத்துக் கொண்டு அரசியலில் தங்களைப் புகுத்திக் கொள்ள முனையும் புதுப்பணக்காரர்கள்.

இது போதாதென்று, சீமானும் திருமுருகன் காந்தியும் எங்களுக்கு ஈழம் எடுத்துத் தரப் போகிறார்கள்.

இந்த சமூகத்திற்கு எத்தனை தலைவர்கள் இருக்கிறார்கள்?

அமைப்புகளாகவும் உதிரி களாகவும்.

கனடியத் தமிழ் காங்கிரஸ் மகிந்தவுடன் படம் எடுத்தது என்று ஆட்சேபம் தெரிவித்துச் சேர்ந்து கொண்ட உதிரிகளின் குற்றச்சாட்டு, மக்களின் ஆணையை மீறியது என்பது தான். காங்கிரஸ்க்கு எந்த மக்கள் ஆணை வழங்கினார்கள் என்ற கேள்வி ஒருபுறம் இருக்கட்டும், இந்த உதிரிகளுக்கு எந்த மக்கள் ஆணை வழங்கினார்கள்?

கனடாவிற்கு அரசியல்வாதி வந்தாலும், 'அம்மணமா வெளியால வாடா?' என்று அம்மணியும் கூச்சல் போடலாம். சமூகம் அது குறித்துப் பெருமைப்படும்.

கனடாவில் கடைக் காரர்கள் பார்த்திருக்க, கண்ணாடியில் வந்து 'மாவீரர் தினத்தையொட்டி எங்கள் வியாபாரநிலையம் மூடப்படும்' என்று முன்பின் தெரியாதவர்கள் தாங்களே அச்சிட்டுக் கொண்டு வந்த நோட்டீசை ஒட்டி விட்டுப் போக முடிகிறது.

கனடாவில் செல்போன் சகிதம் பேட்டி காணப் போகும் தமிழ்த்தேசிய ஊடகவியலாளர் களுக்குக் கூட ஈழவிடுதலைக்கான பொறுப்பு தன் மீது சுமத்தப்பட்ட பொறுப்புணர்வு. தேசியத் தலைவர்

பங்கருக்குள் இருந்த மாதிரி, கீழே இருந்தபடி வழிகாட்டிக் கொண்டிருப்பார்கள்.

தமிழரசுக் கட்சித் தலைவர் போட்டி நடக்கிறது. ஒரு தற்குறி திடீரென்று வாக்களிக்கத் தகுதி பெற்றோரின் பட்டியலை வெளியிடுகிறது. அந்தப் பட்டியல் அந்தத் தற்குறி மூலமாகக் கசிய விடப்பட்டிருக்கும் என்பதே உண்மையாக இருக்கும். அந்தத் தற்குறியின் பின்னால் திரிகிற மந்தைக் கூட்டம் என்ன செய்யும்? அதில் உள்ள அனைவருக்கும் போன் அடித்து, தமிழ்த் தேசியத் தலைமையைத் தெரிவு செய்யுங்கள் என்று 'பணிவன்போடு' வேண்டியிருக்கும். தெரிவு முடிந்ததும் அந்தத் தற்குறி இதற்காக இரவு, பகலாக உழைத்தோம் என்று அதற்கு உரிமை கோருகிறது. தெரிவு செய்யப்பட்டவரும் அதை ஏற்றுக் கொண்டு, 'சேர்ந்தே பயணிப்போம்' என்கிறார்.

பிறகென்ன? அந்தத் தற்குறிக்கும் விரைவில் ஒரு தேர்தல் சீட்டு பார்சல்!

சிறிதரனுக்கும் சுமந்திரனுக்கும் சமாதானம் செய்யத் தயார் என்று கம்பன் கழகம் ஜெயராஜ் அறிக்கை விடுகிறார்.

இப்படித்தான் இந்தச் சமூகத்தில் இத்தனை தற்குறிகளும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இவர்கள் எல்லாருமே, தலைவர் தங்களிடம் தான் போராட்டத்தை கையளித்துச் சென்றிருக்கிறார் என்ற நினைப்போடு இருக்கிறார்கள்.

உள்ளிருப்பு எதுவென்றே தெரியாத ஒரு தீர்வுப் பொதியை தங்களால் பெற்று கொள்ள முடியும் என்று இந்த முட்டாள்கூட்டத்தை நம்ப வைக்கும் அளவுக்கு கதை விடுகிறார்கள்.

இவர்கள் எவருக்குமே இந்தச் சமூகத்தின் இழிநிலை குறித்தோ, அதன் நலன்களுக்காகச் செயற்பட வேண்டும் என்பதிலோ எந்த அக்கறையும் இல்லை. எரிகிற வீட்டில் பிடுங்கிய வரைக்கும் லாபம் என்பது போல, இதை வைத்து தாங்கள் பிழைப்பு நடத்தலாம் என்பது மட்டுமே இவர்களின் ஒரே நோக்கம் தவிர, இவர்களுக்கு எந்த சமூக நோக்கமும் இல்லை.

போராட்டம் என்பது இன்றைக்கு பலருக்குப் பிழைப்புக்கான வழி. மக்களின் இரத்தத்தையும் அழிவையும் விற்றுப் பிழைப்பதில் எந்த வெட்கமும் இல்லாதர்கள் இந்தச் சமூகத்தில் தலையெடுத்திருக்கிறார்கள்.

இன்றைக்கு இந்தச் சமூகத்தின் அடிப்படைப் பிரச்சனைகள் என்ன?

பொருளாதாரம் முதல் போதைப் பொருட்கள் வரைக்கும், தமிழ்ப் பிரதேசங்களில் வெளியார் குடியேற்றங்கள் முதல் கனடாக் கனவினால் வெளியேறும் சனத்தொகை, அதனால் ஏற்படக் கூடிய அரசியல் பிரதிநிதித்துவக் குறைப்பு வரைக்கும் இந்தச் சமூகம் எதிர்கொள்ள வேண்டிய எத்தனையோ பிரச்சனைகள் உள்ளன.

இதில் எதையாவது பற்றி தேர்தலில் வெற்றி பெற்ற அரசியல் தலைமைகளும் சரி, இந்த தான்தோன்றிகளும் சரி, எப்போதாவது பேசியிருக்கிறார்களா?

இல்லை!

'ஈழம் கிடைச்சா, அஞ்சு வரியத்தில வல்லரசு!'.

அவ்வளவு தான்.

அந்த ஈழம் கேட்கப் போய் தான் எல்லாமே கண் முன்னால் நாசமானது என்பது கூட, இந்தப் பொய்யைச் சொல்கிற கூட்டத்திற்குப் பிரச்சனையாகவும் இல்லை.

சீட்டுக்காரன் ஏமாற்றிக் கொண்டு ஓடினாலும், அடுத்த சீட்டுக்காரனை நம்புகிற சமூகம் இது. எந்த அயோக்கியர்களுக்கும் இந்தச் சமூகத்திற்குள் பிழைப்பு நடத்துவதில் எந்தப் பிரச்சனையும் இருப்பதில்லை.

இந்தச் சமூகத்தில் இத்தனை கோமாளிக் கூத்துக்களும் நடக்கும் போது, ஏன் இந்த முட்டாள் தனங்கள் குறித்து

இப்படித்தான்
இந்தச் சமூகத்தில்
இத்தனை தற்குறிகளும் இயங்கிக்
கொண்டிருக்கின்றன.

இவர்கள் எல்லாருமே, தலைவர் தங்களிடம் தான் போராட்டத்தை கையளித்துச் சென்றிருக்கிறார் என்ற நினைப்போடு இருக்கிறார்கள்.
உள்ளிருப்பு எதுவென்றே தெரியாத ஒரு தீர்வுப் பொதியை தங்களால் பெற்று கொள்ள முடியும் என்று இந்த முட்டாள்கூட்டத்தை நம்ப வைக்கும் அளவுக்கு கதை விடுகிறார்கள்.
இவர்கள் எவருக்குமே இந்தச் சமூகத்தின் இழிநிலை குறித்தோ, அதன் நலன்களுக்காகச் செயற்பட வேண்டும் என்பதிலோ எந்த அக்கறையும் இல்லை. எரிகிற வீட்டில் பிடுங்கிய வரைக்கும் லாபம் என்பது போல, இதை வைத்து தாங்கள் பிழைப்பு நடத்தலாம் என்பது மட்டுமே இவர்களின் ஒரே நோக்கம் தவிர, இவர்களுக்கு எந்த சமூக நோக்கமும் இல்லை.
போராட்டம் என்பது இன்றைக்கு பலருக்குப் பிழைப்புக்கான வழி. மக்களின் இரத்தத்தையும் அழிவையும் விற்றுப் பிழைப்பதில் எந்த வெட்கமும் இல்லாதர்கள் இந்தச் சமூகத்தில் தலையெடுத்திருக்கிறார்கள்.

குரல் கொடுக்க ஒரு தலைமை இல்லையே என்ற எண்ணம் எனக்கு ஏற்படுவதுண்டு.

சமூகத் தலைவர்கள் என்று நாலு வாத்திமாரையும், ஒரு பாதிரியாரையும், ஐயரையும், அகப்பட்டால் ஒரு மௌலவியையும் சமயத் தலைவர்கள் என்றும், மேடையில் உட்கார வைத்து பொன்னாடை போர்த்துவது தான் எங்கள் தலைமை ஆகி விட்டது.

இந்தச் சமூகத்தின் இன்றைய நிலையை எதிர் கொள்வதற்கான தேவை ஒன்று இருக்கிறது. அது அரசியல் கடந்தது. ஆனால், அந்த 'அடிச்சுப் பிடிக்கிற' மனநிலை யிலிருந்து நாங்கள் இன்னமும் வெளியே வரவில்லை.

இதனால், எங்களுக்கு ஹீரோ விளையாட்டுக் காட்ட யாழ்ப் பாணத்தின் மூலைக்கு மூலை மட்டுமல்ல, உலகத்தின் மூலை முடுக்குகளுக்குள்ளும் போர்வழிகள் நிறைய உண்டு.

ஒரு சமூகத்தைத் தாங்க வேண்டிய ஊடகங்களும், இன்றைக்கு எரிகிற வீட்டில் பிடுங்கும் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கும் போது, வெறும் பேஸ்புக் பதிவு ஒன்றை வைத்துக் கொண்டே இந்தச் சமூகத்தின் போக்கை முடிவு செய்து விட முடிகிறது. அடையாளம் தெரியாத ஒருவன் சமூகத்தில் சமூக நோக்கம் கொண்ட எவரையும் துரோகி என்று சொல்லவும், அது குறித்த எந்த விபரங்களும் தேவைப்படாமலேயே அதை நம்பி ஏற்றுக் கொள்கிற ஒரு சமூகமுமாகத் தான் இன்றைக்கு யாழ்ப்பாணி சமூகம் வந்து முடிந்திருக்கிறது.

தொடங்க ஒரு முட்டாள் போதும். கேட்க யாருமில்லை.

அதைக் கேட்பதற்குத் தான் ஒரு தலைமை வேண்டும் என்கிறேன்.

சீமானும் திருமுருகனும் ஈழம் எடுத்துத் தருவோம் என்றால், வாயைப் பொத்துங்கடா! என்று சொல்ல எங்களுக்கு ஒரு தலைமை வேண்டும்.

சுமந்திரனும் சிறிதரனும் நாற்காலிக்கு சண்டை போட்டால்,

ஒரு சமூகத்தைத் தாங்க வேண்டிய ஊடகங்களும், இன்றைக்கு எரிகிற வீட்டில் பிடுங்கும் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கும் போது, வெறும் பேஸ்புக் பதிவு ஒன்றை வைத்துக் கொண்டே இந்தச் சமூகத்தின் போக்கை முடிவு செய்து விட முடிகிறது. அடையாளம் தெரியாத ஒருவன் சமூகத்தில் சமூக நோக்கம் கொண்ட எவரையும் துரோகி என்று சொல்லவும், அது குறித்த எந்த விபரங்களும் தேவைப்படாமலேயே அதை நம்பி ஏற்றுக் கொள்கிற ஒரு சமூகமுமாகத் தான் இன்றைக்கு யாழ்ப்பாணி சமூகம் வந்து முடிந்திருக்கிறது.
தொடங்க ஒரு முட்டாள் போதும். கேட்க யாருமில்லை.
அதைக் கேட்பதற்குத் தான் ஒரு தலைமை வேண்டும் என்கிறேன்.

எச்சரிக்கை விட எங்களுக்கு ஒரு தலைமை வேண்டும்.

துவாராகாவை கதாநாயகியாக அறிமுகம் செய்தால், போய் வேலையைப் பாருங்கடா! என்ற சொல்ல ஒரு தலைமை வேண்டும்.

தங்களின் உண்டியல் பிழைப்புக்காக அங்கே ஒரு கொதிநிலையை எப்போதைக்கும் வைத்திருக்க, இராணுவ வண்டிக்கு பனங்கொட்டையால் ஆவது எறிய மாட்டார்களா? என்ற எண்ணத்தோடு இருக்கும் புலன்பெயர் உண்டியல் கூட்டத்தை, 'உங்கட வேலையைப் பாருங்கோ, எங்களுக்கு எங்கட அலுவல் தெரியும்' என்று எச்சரிக்க ஒரு தலைமை வேண்டும்.

இன்றைக்கு இளைய தலைமுறையை நாசமாக்கும் போதைப் பொருட்கள், இளைய தலைமுறையின் கல்வி வளர்ச்சிக்கும் வேலை வாய்ப்புக்குமாக இருக்கும் சவால்கள் என்றெல்லாம் உள்ள பிரச்சனைகளை எதிர்கொள்வதற்காக இந்தச் சமூகத்தை முன்நகர்த்திச் செல்ல ஒரு தலைமை வேண்டும்.

இந்த அரசியல் தலைமைகளுக்கும் அப்பால், இந்த சமூகத்திற்கான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த ஒரு தலைமை இன்றைக்கு அவசியமும் அவசரமும்.

எங்களுடைய உணர்ச்சி அரசியல் எங்களை எங்கேயும் கொண்டு போய் விடாது, எங்களுடைய தவறுகளுக்கு நாங்கள் மற்றவர்களைக் குற்றம் சாட்டிக் கொண்டே காலத்தை ஓட்டிக் கொண்டிருக்க முடியாது, நடைமுறைச் சாத்தியமான தீர்வுகள் பற்றி ஒரு சமூகமாக நாங்கள் சிந்திக்க வேண்டும், அது சகோதர இனங்களுடனான அடிமட்ட உரையாடல்கள் மூலமாகத் தான் சாத்தியமாகக் கூடியது என்பதையெல்லாம் இந்தச் சமூகத்திற்கு எடுத்துச் சொல்ல ஒரு தலைமை வேண்டும்.

அரசியல் தலைமையினால் இதை எல்லாம் செய்ய முடியாது. அரசியல் தலைமையின் அரசியல் வாக்குகளுக்கும் கதிரைகளுக்குமானது மட்டுமே.

அவ்வாறான ஒரு சமூகத் தலைமை இல்லாமல் போனால், இவ்வாறான தான்தோன்றிகளும், தற்குறிகளும் இந்தச் சமூகத்தை தலைமை தாங்கி வழி நடத்தக் கூடிய தகுதியும் திறனும் தங்களுக்கு மட்டும் இருப்பதாக நினைத்து, யாழ்ப்பாணிச் சொப்பன சுந்தரியின் வீட்டுக்குள்

இரவு நுழையலாம் என்று தான் நினைப்பார்கள்.

கேட்பதற்கு ஆள் இல்லை என்ற நினைப்பில்!

எந்த ஒரு சமூகமும் இப்படியான தற்குறிகளாலும் தான்தோன்றிகளாலும் அங்கு மிங்குமாக இழுபட்டபடி இயங்க முடியாது. பிரபாகரன் என்ற ஒற்றை மனிதன் துப்பாக்கியை வைத்துக் கொண்டு இந்த சமூகத்தை நாசமாக்கிய பின்னாலும், 'அவரே எட்டாம் வகுப்புப் படிச்சவர், எனக்கென்ன குறைச்சல்?' என்ற நினைப்போடு அலைகிறவர்களைத் தான் இந்தச் சமூகம் கொண்டிருக்கிறது. 'நானே எழுபத்தைஞ்சு வோட்டு போட்டனான்' என்றவர் தான் எங்களுக்குத் தலைவர் என்பது குறித்து இந்தச் சமூகத்திற்கு எந்த வெட்கமும் இல்லை.

அவர்களை எதிர்த்துக் கேள்வி கேட்க முடியாமல் தான் இந்தச் சமூகம் இருக்கிறது.

அன்றைக்குப் பிரபாகரன் துப்பாக்கியை வைத்துக் கொண்டு மண்டையில் போட்ட போது கேட்க முடியாமல் போனதற்குக் காரணம், மரண பயம்.

ஆனால், இன்றைக்கு இந்த தான்தோன்றிகளும் தற்குறிகளும் ஆளுக்காள் மூலைக்கு மூலை கிளம்பியிருப்பதற்குக் காரணம், யாருமே கேட்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை மட்டும் தான். துரோகி என்ற ஒற்றைச் சொல்லிலேயே அதை முளையோடு கிள்ள முடியும் என்று அவர்களுக்கும் தெரியும். இந்தச் சமூகத்தின் நிலையும் அதுதான்.

சமூகமாகவும் கேட்க மாட்டார்கள். பிழைப்பு போய் விடும் என்ற எண்ணத்தில் ஊடகமாகவும் கேட்க மாட்டார்கள். துரோகிகள் என்று எந்த முட்டாளும் தங்களை முத்திரை குத்தக் கூடும் என்ற பயத்தில் சமூகத் தலைவர்களாகவும் கேட்க மாட்டார்கள்.

இப்படி சொப்பனசுந்தரி நிலைக்கு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்திருக்கிறது.

சொப்பனசுந்தரியை யார் வைத்திருக்கிறார்கள் என்பது முன்பு கேட்கக் கூடிய கேள்வியாக இருந்திருக்கும். ஒவ்வொரு காலத்தில் இந்த யாழ்ப்பாணிச் சொப்பன சுந்தரியை ஒவ்வொருவர் வைத்திருந்திருந்தார்கள். இராமநாதன், பொன்னம்பலம், செல்வநாயகம், அமிர்தலிங்கம் என்று முறைப்படியும், வரிசைப்படியும் வந்து சேர்ந்த மணாளன்களும், துப்பாக்கியோடு வந்து சேர்ந்த தேசியத் தலைவரும் வைத்திருந்த சொப்பனசுந்தரியை இப்போது யார் வைத்திருக்கிறார்கள் என்று கேட்க முடியாதபடிக்கு, தற்போது தொகையான அரசியல்வாதிகளும், தான்தோன்றிகளும் தற்குறிகளும் தலைமைகளாக வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

> இந்த அரசியல் தலைமைகளுக்கும் அப்பால், இந்த சமூகத்திற்கான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த ஒரு தலைமை இன்றைக்கு அவசியமும் அவசரமும்.
>
> எங்களுடைய உணர்ச்சி அரசியல் எங்களை எங்கேயும் கொண்டு போய் விடாது. எங்களுடைய தவறுகளுக்கு நாங்கள் மற்றவர்களைக் குற்றம் சாட்டிக் கொண்டே காலத்தை ஓட்டிக் கொண்டிருக்க முடியாது.
>
> நடைமுறைச் சாத்தியமான தீர்வுகள் பற்றி ஒரு சமூகமாக நாங்கள் சிந்திக்க வேண்டும். அது சகோதர இனங்களுடனான அடிமட்ட உரையாடல்கள் மூலமாகத் தான் சாத்தியமாகக் கூடியது என்பதையெல்லாம் இந்தச் சமூகத்திற்கு எடுத்துச் சொல்ல ஒரு தலைமை வேண்டும்.

இப்போதைய நிலையில், யாழ்ப்பாணிச் சொப்பனசுந்தரி யாரை வைத்திருக்கிறார் என்று கேட்பது வசதியான கேள்வி.

இப்படி தான்தோன்றிகள், தற்குறிகளாக அலையும் பலரை ஒரே நேரத்தில்!

பட்டுத்துகிலுக்கு ஆசைப்பட்டு, கோவணம் உருவப்பட்ட பின்னாலும், இன்றைக்கும் கனவுகளுக்குக் குறைச்சலில்லை!

பிரபாகரன் துப்பாக்கியோடு வந்து போட்டுத் தள்ளிக் கொண்டிருந்த போது, 'எங்களுக்கு ஏன் தேவையில்லாத பிரச்சனை?' என்று வாயை மூடிக் கொண்டு மௌனமாக இருந்ததற்கு இந்தச் சமூகம் கொடுத்த விலை அதிகம். இறுதியுத்தம் யாழ்ப்பாணத்தில் நடந்திருந்தால், பிரபாகரன் கூடத் துரோகி ஆகியிருப்பார். பிரபாகரனின் யுத்தம் வன்னிமக்களைத் தான் அழித்தது. யாழ்ப்பாணிச் சமூகம் தன் சுயநலத்தால் ஏதோ வகையில் தப்பிப் பிழைத்திருக்கிறது.

இன்றைக்கு மூலைக்கு மூலை கிளம்பியிருக்கும் இந்தத் தான்தோன்றிகளின் தான்தோன்றித் தனத்திற்கு இந்தச் சமூகம் வாயைப் பிளந்தபடி விடுப்புப் பார்த்துக் கொண்டிருந்தால், அதற்குக் கொடுக்கப் போகும் விலை, இது ஒரு சமூகமாகக் கூட மிஞ்சியிருக்காது என்ற நிலை தான்.

வயது போன காலத்துச் சொப்பனசுந்தரி போல, போகிற வழிகளில் காணுகின்ற போகிறவன், வருகிறவன் எல்லாம், 'சோடா மூடி' என்று கத்தி விட்டு ஓடுகிற நிலையில் தான் இந்த யாழ்ப்பாணிச் சமூகத்தின் முடிவு இருக்கும். அ



# இருட்டு இரகசியம்

. அந்தநேரம், பிரபாகரன் சொன்னதுதானே! ‘வீட்டுக்கொருவர் நாட்டைக் காக்க விரைந்து வாரீர்...‘ எண்டு. ஏன் எல்லாரும் போகாமல் விட்டனிங்கள். போயிருந்தால் இப்ப தமிழீழம் கிடைச்சிருக்குமல்லோ.

வணக்கமுங்கோ!

இப்ப கிட்டடியில யாழ்பாணத்தில இருந்து வவுனியாக்குப் போகேக்கை, பரந்தன் சந்தியில ஒரு பொடியன் ஏறி எனக்குப் பக்கத்தில இருந்தான். அவன்ர முகத்தில சிரிப்பெண்டதே இல்லை. கவலை அப்பிக் கிடந்துது. மெதுவாப் பேச்சுக்குடுத்து, என்ன சங்கதியெண்டு அறியலாமெண்டால், பொடியன் வாயைத் திறந்தபாடாயில்லை. நானும் விடேல்லை. பிறகு மெல்லமெல்ல இறங்கிவந்து என்னோட இயல்பாக் கதைக்கத் தொடங்கினான்.

அவன் முந்தி இயக்கத்தில இருந்தவன். அவனுக்கு ஒருகாலில்லை. கண்ணொண்டுக்குக் கீழையும் ஒரு காயத்தழும்பு. பார்க்க கொஞ்சம் விகாரமாத்தான் இருந்தான். முந்தி நல்லவடிவான பொடியனா இருந்ததெண்டும் சொன்னான். இயக்கத்தில இருக்கேக்கை, கழுத்தில ‘சைனட் குப்பி’யோட திரியிறவன் எண்டு தெரிஞ்சும், இவன்ர மச்சாள் பெட்டையள் மூண்டுபேர் தங்களுக்குள்ள விரும்பி இருந்தவளவையாம். இதையறிஞ்ச அவன், அவளவையின்ர விருப்பத்துக்கு மசியேல்லை. ‘எனது தாகம் தமிழீழத் தாயகம்‘ அறைகூவிவிட்டு, அடிபாட்டுக்குப் போயிட்டான்.

கடைசியில சண்டை முடிஞ்சு

பொடியனைத் தேடினா, பொடியன் காலில்லாமல், காயத்தழும்புகளோடை புனர்வாழ்வு முகாமில இருக்கிறதா ஊராக்களுக்கு தகவல் கிடைச்சிருக்கு. பொடியனைப் போய்ப் பார்க்கிறதுக்கு ஆக்களில்லை. பொடியன்ர தாய்தேப்பன் ஆமி அடிச்ச ஆட்டிலறி ஷெல்லுக்குள்ள அம்பிட்டு, அம்பலவன் பொக்கணையில அநியாயமாச் செத்துப் போச்சுதுகள். கூடப்பிறந்த அண்ணனும் அக்காளும் கலியாணம் முடிச்சுப் பிள்ளைகுட்டியளெண்டு, குடும்பம் நடத்திக்கொண்டிருந்த நிலையில, இவன் இயக்கத்தில இருந்தவன் எண்ட காரணத்தைக்காட்டி, ஆமிக்குப் பயந்து இவனைத் தங்களோடை சேர்க்கேல்லை. அதோடை கைகாலுகளுக்குச் சேதாரம் இல்லாமல் இருந்திருந்தால், தங்களுக்கு உழைச்சுத் தருவான்... இப்ப என்னத்துக்கு இவன்...? எண்ட சிந்தனையும் அவையளுக்குள்ளை இருந்திருக்கு.

பொடியனும் எத்தனை நாளைக்குத்தான் பசியோடை மாரடிக்கிறது. பேசாமல் ஊரைவிட்டு வெளிக்கிட்டுப்போய், இன்னொரு ஊரில தனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் மூலமா ஒரு மூண்டுசில்லு தள்ளுவண்டி வாங்கி அதில செங்குத்தா இரண்டொரு தடியளைக் கட்டிப்போட்டு, கச்சான் பைக்கெற், கடலைப் பருப்பு, பீடா, வெத்திலைச்சரை வேறையும் சில தின்பண்டச் சாமானுகளைக் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டு, பஸ்ராண்டு, பள்ளிக்கூட வாசல்களில போய் நிற்பான். பஸ்சுக்குக் காத்திருக்கிற ஆக்கள், பள்ளிக்கூடம் விட்டுப்போற சின்னனுகள் அவனிட்டை ஏதாவது வாங்கித் திண்டுகொண்டு போவினம்.

இப்ப பொடியன்ரபாடு பரவாயில்லை. பஸ்ராண்டுக்குப் பக்கத்தில நிக்கிறதால, அவன்ர தகுதிக்கேற்ற சிலபேர் அவனோட சினேகிதமாயிட்டினம். அவையளும் ஊரவன் எண்ட முறையில இடைக்கிடை ஏதேதோ உதவி செய்யினம். இதில ஒரு முசுப்பாத்தி என்னெண்டால், காலில்லாதவன், அவலட்சணமானவன் எண்டு அவனோட கூடப்பிறந்ததுகள் இருக்கிற ஊரிலதான் அவன் கச்சான் கடலைக்கொட்டை விக்கிறான். அண்ணனும், அக்காளும் அரசாங்கத்தில பெரிய உத்தியோகம். அதால அவையளின்ர உத்தியோகத்துக்கும் இவன்ர வியாபாரத்துக்கும் பொருத்தமில்லாத நிலையில, இவனால தங்கட மானம் போகுதெண்டு ஊர் முழுக்க புறுபுறுத்துக்கொண்டு திரிஞ்சவையாம்... எண்டும் பொடியன் சொன்னான்.

எனக்கு சொல்லுறதுக்கு எவ்வளவோ விசயம் கிடக்க, நான் ஏன் இப்ப இதில இந்தப் பொடியன்ர கதையைச் சொல்ல வாறன் எண்டால், ஒருகாலம் இவனைப்போலப் போராளியள் ஆமியளை ஊருக்குள்ள வரவிடாமல் தடுத்து எங்களைக் காப்பாற்றினதில, இவங்கள் எல்லாம் எங்களுக்கு பெரிசா உசத்தியாத் தெரிஞ்சுது. இப்ப என்னடாவெண்டால், பிரபாகரனும் இல்லை. தமிழ் ஈழமும் இல்லையண்டாப்போல, அந்த வேக்காளத்தை முன்னாள் போராளியளிலை எல்லாரும் காட்டுகினம். அந்தநேரம், பிரபாகரன் சொன்னதுதானே! 'வீட்டுக்கொருவர் நாட்டைக் காக்க விரைந்து வாரீர்...' எண்டு. ஏன் எல்லாரும் போகாமல் விட்டனிங்கள். போயிருந்தால் இப்ப தமிழீழம் கிடைச்சிருக்குமல்லோ. சாதி குறைஞ்சவன்ர பிள்ளையளைப் பாத்து, ' நீங்கள் முன்னுக்குப் போங்கோ... நாங்கள் பின்னால வாறம்... எண்ட ஆக்கள் நீங்கள். இப்பவும் ஆரெவன் துவக்கெடுத்துக் கொண்டு போராடப் போவான். அதில குளிர் காயலாமெண்டிருக்ககிறியள்.

இதில எங்கை உதைக்குதெண்டால், எல்லாற்ற மனசிலையும் தமிழீழம் கிடைக்க வேணுமெண்ட ஆசையை விட, சுத்த அழுப்பழுக்கற்ற சுயநலம் ஊறிக் கிடந்தது எண்டதை உங்கட இப்பத்தே செய்கைகாரியங்கள் வெளிப்படுத்திக் காட்டுது.

அதோட இன்னொரு விசயத்தையும் சொல்லிப்போட்டுப்போறன். அது என்னெண்டால், இந்தப் பொடியன்ர வாழ்க்கையைப்போல வாழுற பல முன்னாள் போராளியளை வைச்சு, சிலபேர் சீட்டாடுகினம். சண்டேக்கை தப்பியோடிப்போய் வெளிநாட்டில இருக்கிற ஆக்களிட்டை, விசயத்தைப் பெரிசா ஊதி, பணம் புடுங்கி, போராளியளுக்கு அங்கினேக்கை ஐஞ்சைப்பத்தைக்குடுத்துப் படம் காட்டிப்போட்டு, மிச்சத்தை சுருட்டுற ஆக்களும் இருக்கினம் எண்டு அந்தப் பொடியனே தன்ர வாயால சொன்னான். இவ்வளவு உயிர்ப்பலியளைக் குடுத்தும் ஏன் உங்களுக்குத் தமிழீழம் கிடைக்கேல்லையெண்டது இப்ப விளங்கும் எண்டு நினைக்கிறன்.

அட! அறுவார் இவங்கள்தான் இப்படியெண்டால், துவக்குத் தூக்காமல் அரசியலுக்கு வந்த பழைய பஞ்சாங்கங்கள் எல்லாம், இந்தப் பொடியனைப்போல ஆக்களை வைச்சு அடிக்கிற கூத்தும் கும்மாளமும் அந்த ஆண்டவனுக்கே பொறுக்காதடாப்பா. பொடியனுக்கு இதொண்டும் விளங்காமலில்லை. இவனைப் போல உங்கினேக்கை கனபேர் இருப்பினம் கண்டியளோ! இந்தப்பொடியனைப் போல எங்கையாவது இடக்குமுடக்கா ஆராவது அம்பிட்டால்தான், உண்மையள் வெளியில வரும். அப்படி இனி ஆராவது இயக்கப்பொடியளைச் சந்திச்சால் அவையளின்ர கதையைக் கேட்டுவைச்சு, இதால வரேக்கை சொல்லுறன். நானும் பாருங்கோ... கதை கேட்கிற ஆவலாதியில பொடியன்ர பேரு, ஊருகளைக் கேட்க மறந்துபோனன். ஆனா, பொடியன்ர முகம் மட்டும் கண்ணுக்கை நிக்குது. சரி... எனக்கும் நேரம்போகுது. போட்டுப் பிறகு வாறன்.

உங்கட குஞ்சியப்பு.


Life doesn't always give a
#SecondChance.
Insure yourself. Secure your family.
647-868-6475
RAVI
PONNUDURAI
Life Insurance
is your family's umbrella
to life's unexpected showers
647-868-6475

# கொல்வேலை மணியம்

மல்லாவி 10



**அ.விஜயன்**

மல்லாவியை வளம்படுத்திய மற்றுமோர் ஆளுமை கொல்வேலை செய்யும் மணியம். எப்போதும் புதுச்சாரம் ஒன்றை மடித்து முடிச்சுப்போட்டுக் கட்டியிருப்பார். நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் மெல்லிய உடற்தோற்றம் உள்ளவர். மணியம் சேர்ட்டுப் போடுவதைக் காண்பது அரிது. எப்போதும் உசாராக இருக்கும் மணியத்துக்கு அப்போது 35 வயதிருக்கும். மேவி இழுத்த சுருள் முடி, சிறிய மீசை, வெற்றிலை போடும் பழக்கமும் இருந்தது. வேலையில் ஒரு சிறிய இடைவெளி கிடைக்கும்போது மூர்த்தி கடைக்குப்போய் ஒருக்கால் வாயில் ஊற்றும் சாராயம் குடித்துவிட்டு பீடி பத்திக்கொண்டு வருவார். ஆனால் அது வெறியாகவோ வேலையில் குழப்பத்தை ஏற்படுத்தியதாகவோ மணியம் யாருடனும் சண்டை பிடித்ததையோ நான் காணவில்லை.

அவரது கொல்லன் பட்டறை ஓலையால் வேயப்பட்டது. ஒரு துருத்தி, ஒரு பிடிச்சிராவி, பெரிதும் சிறிதுமான சுத்தியல்கள், பல வடிவங்களில் அரங்கள் எனக் கொஞ்ச ஆயுதங்களை வைத்து அதிக வேலை செய்தவர் மணியம். காங்கேசர் கடை, மூர்த்தியர் கடை அதற்கு அடுத்ததாக இருந்த வெறுங்காணியில் அந்தப் பட்டறை இருந்தது. மிருக வைத்தியர் கந்தோர், பால்சாலை ஆகியவற்றுக்கு எதிரில் இருந்தது

அப்போது நானும் இராசையாவும் (மயில்வாகனத்தாரின் மகன்) பள்ளிக்கூடம் விட்டுவிட்டு வீட்டுக்குச் சென்றதும் காக்கிக் காற்சட்டையுடன் அங்கு கட்டாயம் போவது வழக்கம். அங்கு நாமிருவரும் செல்வது துருத்தி ஊதுவதற்கே. துருத்தித் தடியைப் பிடித்து நானும் இராசையாவும் மாறி மாறி ஊதுவோம். ஒருவர் களைத்தால் மற்றவர் எனத் தொடர்ச்சியாக ஊதுவோம். மணியமும் பிக்கான், கோடரி, அலவாங்கு எனத் தோய்வதற்கு வரும் பொருட்களை நாங்கள் அங்கு செல்லும்வரை ஓரமாகப் போட்டு வைத்திருப்பார். அவற்றை வேகமாகச் செய்து கொடுப்பதற்குத் துருத்தி ஊதுவது சீராக இருக்க வேண்டும். அதற்கு மணியத்துக்கு வாய்த்தவர்கள் நாங்கள் இருவருமே

எங்களுக்குத் துருத்தி ஊதுவதிலும் பழுக்கக் காய்ச்சிய இரும்பை மணியம் பட்டறையில் வைத்து அடித்து நேர்த்தியாக இரும்புப் பொருட்களைச் செய்வதைப் பார்த்துக் கொண்டிருப்பதிலேயே ஆர்வம் இருந்தது. ஒரு வில்லுத் தகடு, அழகிய கத்தியாக மணியத்தால் உருமாற்றப்படுவது கண்ணுக்கு முன்னால் நடக்கும் அதிசயம்

மல்லாவியில் கிணறு வெட்டுவது மிகவும் கஸ்ரமான காரியம். சில கிணறுகள் 50 அடி வரை வெட்ட வேண்டியிருந்தது. கிணறு வெட்டுவதற்குப் பல குழுக்கள் இருந்தன. பெருமாள், கட்டை ராசன் ஆகியோரைக் குறிப்பிடலாம். அவர்களது அணியை

ஒரு தொழிலாளர் படை என்றே சொல்லலாம். இதைவிட மல்லாவியில் குடியேறிய மக்கள் ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான கிணற்றைத் தமது சொந்த முயற்சியால் வெட்டிக் கட்டியது ஒரு பெருமைக்குரிய விடயமாகவே எனக்கு நினைவிருக்கிறது

ஒரே நேரத்தில் குறைந்தது நான்கு ஐந்து பிக்கான்களைத் துருத்தி முனையில் வைத்துக் கரியை அள்ளிப்போடுவார். அதன் பின் நாங்கள் வேகமாகத் துருத்தி ஊதுவோம். மணியம் பழுக்கக் காய்ச்சிய பிக்கான்களை ஒவ்வொன்றாக வெளியில் எடுத்துப் பட்டறையில் வைத்து அடித்துப் பின்னர் தண்ணீரில் தோய்த்து அதன் கடினத் தன்மையை ஏற்படுத்திக் கொடுப்பார். அது மணியத்துக்கேயுரிய சிறப்பாக இருந்தது

1980களின் ஆரம்பத்தில் ஆழமான கிணறுகளுக்குள் குழாய் அடிக்கும் ஒரு புதிய தொழில்முறை ஆரம்பிக்கப்பட்டது. அதன் முன்னோடி மூன்றாம் யூனிற் தங்கத்துரையர் தான். அதன் பின் அவரது மகனான கண்ணன் இத்தொழிலைச் சிறப்பாகச் செய்தார். அந்தக் குழாய் அடிக்கும் குழுவில் நானும் சில காலம் பணியாற்றியிருக்கிறேன். அது பற்றிப் பின்னர் எழுதுவேன்.

பெரிய குழாய்கள் இரண்டை இணைத்து ஒட்டி அதன் முனையில் பெரிய லொறிகளின் அச்சை அலவாங்காக ஒட்டி அதை மணியத்தின் துருத்தியில் பழுக்கக் காய்ச்சி பட்டறையில் வைத்து அடிக்கும்போது பலர் குழாயை உயர்த்திப் பிடித்திருக்கும் காட்சி அற்புதமானது. அந்த அலவாங்கைக் கூராக்கித் தோய்ந்து கொடுத்தால் எந்தக் கல்லிலும் பயமின்றிக் குத்தலாம். அப்போது மல்லாவியில் பலரது வாழ்வாதாரத்தை தக்க வைத்த ஒரு மனிதனாக மணியம் இருந்தார் என்பது மறுப்பதற்கில்லை

மணியத்தின் பட்டறைக்குச் செல்வது எங்களுக்கு ஒரு பொழுதுபோக்கு, ஒரு தொழில் அனுபவம். அங்கு செல்வதால் நாங்கள் கெட்டுப்போவதற்கான வாய்ப்புகள் இருக்கவில்லை. அது ஒரு நல்ல விடயமாகவே தற்போதும் நினைவுகூர முடிகிறது. சமூகத்தில் படிக்கக் கிடைத்த அரிய வாய்ப்பு அது

இரும்பை வளைத்து என்ன செய்யவேண்டுமோ அது மணியத்தால் முடியும். எதைச் செய்து தருமாறு கேட்டாலும் மணியத்திடமிருந்து ஒரு புன்சிரிப்பு மாத்திரமே வரும். அதிகம் கதைக்காத அவரது சுபாவம் அந்தத் தொழிலுக்கு மிகவும் உவப்பாக இருந்தது

சிலர் உரிய நேரத்தில் வேலையை முடிக்கவில்லை என்று ஆத்திரப்பட்டு மணியத்துக்குப் பேசினாலும் மணியம் ஒரு முனிவரைப்போல அல்லது செவிடன்போல அதைக் கருத்தில் எடுக்காது தனது வேலையைச் செய்து கொண்டிருப்பார். குறிப்பிட்ட வேலை



முடிந்ததும் மணியத்தைப் பேசியவர் “மன்னித்துக்கொள் மணியம்“ என்று கூறிவிட்டுச் செல்லும் அளவுக்குக் குறிப்பிட்ட நபரின் வேலையைச் சிறப்பாகச் செய்துகொடுப்பார்

இதைவிட அந்தக் காலத்தில் பெரிய ரக்ரர்களின் கலப்பையில் பூட்டும் கொழு தேய்ந்துவிட்டால் அதை வாங்குவதற்கு வவுனியாவுக்குச் செல்ல வேண்டியிருந்தது. வவுனியாவில் செட்டிகுளம், பறையனாளங்குளம், பண்டிவிரிச்சான், பாவற்குளம் ஆகிய பல ஊர்களில் நெல் விவசாயமும் உழுந்து உற்பத்தியும் அதிகமாக இருந்ததால் இந்தக் கலப்பைக் கொழுக்களை வவுனியாவிலேயே வாங்கமுடியும்

அந்த ரக்ரர் கொழுவினைப் பழைய வில்லுத் தகட்டை வெட்டித் துருத்தியில் காய்ச்சி ஒரிஜினல் வார்ப்புக் கொலு போல அடித்து அதன் ஆணி பூட்டும் சதுரத் துவாரத்தை அளவு பிசகாமல் அதேமாதிரி அடித்துக் கொடுக்கும் ஆற்றல் மணியத்துக்கிருந்தது. மணியத்தின் வினைத்திறனால் மல்லாவி வாழ் மக்களின் விவசாயம் உயர்வாக இருந்தது. பணவிரயம், நேர விரயம், என்பனவும் தவிர்க்கப்பட்டன. பயணம் செய்து ஒரு பொருளை வாங்கிவரும் சிரமத்தை மணியம் குந்திய குந்தில் செய்து கொடுத்தார். அவரது விதம் விதமான கருவிகளை உருவாக்கும் நுட்பத்தை நேரில் கண்டு வியந்திருக்கிறேன்



வண்டில் சில்லுக்கு வளையம் சுடுவது மிகவும் நுட்பமான வேலை. பெரிய இரும்புச் சலாகையை வண்டிச் சில்லுக்கு ஏற்றவாறு நூலால் அளவெடுத்துச் சலாகையை வெட்டி வட்டமாக வளைத்து இருமுனைகளையும் இணைக்கும் இடத்தில் (வெல்டிங் வசதி அப்போது மல்லாவியில் இருக்கவில்லை) துவாரமிட்டு அந்த இடத்தில் இரும்பாணி ஒன்றைச் செருகி தறைந்து இருமுனைகளையும் சுத்தியலால் தட்டி இணைத்த பின் இரு முனையும் ஒட்டிய இடத்தைக் கண்டுபிடிப்பது சிரமமாக இருக்கும். அந்த அளவுக்கு மணியத்தின் கை வினைத்திறன் இருக்கும்

அடித்தெடுத்த வளையத்தை வண்டில் சில்லைக் கிடையாகப் போட்டு அதன்மேல் வைத்துப் பார்த்தால் அந்த வளையம் கிழே இறங்காது துருவத்தில் இருக்கும்

அதன்பின்னர் அந்த வளையத்தைப் பொச்சு மட்டைகளை வட்டமாக அடுக்கி அதன் உட்புறத்தில் வளையத்தை வைத்து நெருப்புத் தணலைக் கொட்டி (துருத்தி உலையிலிருந்து அள்ளியெடுத்துக் கொட்டுவார்) அதன் மேல் பொச்சு மட்டையை அடுக்கிச் சுளாகால் விசுக்கிப் பற்ற வைத்து வண்டில் வளையம் சிவப்பாகப் பெரிய காப்பு வளையம்போல வந்தபின்னர் அதை 3பேர் சேர்ந்து பெரிய குறடுகளால் தூக்கியெடுத்துக் கிடையாக வைக்கப்பட்டிருக்கும் வண்டிற் சில்லின் புருவத்தில் வைப்பர். மணியம் வேகமாகச் சுற்றியோடி தட்டி இறுக்கி மட்டப்படுத்திவிட்டு உடனடியாகச் சுற்றித் தண்ணீர் ஊற்றுவார். அப்போது அந்த வண்டில் வளையம் சுருங்கி இறுக்கிப் பிடிக்கும

ஏற்கனவே செய்த இரும்பு வளையத்தை மரச்சில்லின் ஓரத்தில் பொருத்த முடியாது. நெருப்பில் போட்டதும் அந்த வளையம் சற்று விரிவடையும் அந்த நிலையில் மரச்சில்லில் இறுக்கிவிட்டு நீருற்றும்போது மரச்சில்லு தீப்பற்றாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்தப் பெரிய விஞ்ஞானத்தை மணியத்தின் மூலமே அறிந்துகொண்டேன்

ஒரு தடவை ஒருவர் செவியுடைந்தத சைக்கிள் போக் ஒன்றைக் கொண்டுவந்து மணியத்திடம் காட்டினார். சில்லை அச்சில் வைத்துப் பூட்டும் செவியின் முனை உடைந்திருந்தது. மணியம் அந்த உடைந்த பகுதியைத் துருத்தியில் வைத்துக் காய்ச்சி எஞ்சியிருந்த துண்டையும் கழற்றிவிட்டு உடைந்த செவியை வேறொரு இரும்பில் செய்தெடுத்து அரத்தால் அராவி திணிசாக எடுத்தார். அதன் பின்னர் இரண்டு மூன்று பித்தளை 5 சதம் காசைப் பட்டறையில் வைத்துச் சுத்தியலால் அடித்துத் தகடாக்கி அத்த கட்டைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டிப் போக்கின் உடைந்த குழாய்ப்பகுதிக்குள் போட்டுப் புதிதாகச் செய்த இரும்புத்துண்டைப் பொருத்தி அத்துகள்களைக் குலுக்கிக் கீழே எடுத்து வெளிப்பகுதியில் களிமண்ணைக் குழைத்துத் துண்டாக வெட்டிய துகள்களை உடைந்த பகுதியில் வைத்துச் சுற்றி மண்ணால் மூடினார். அதன்பின்னர் துருத்தியில் வைத்துக் காய்ச்சியபோது அந்தச் செப்புத் துண்டுகள் உருகி காஸ் வெல்டிங்கில் ஒட்டியதுபோல் உருகிப் பிடித்திருந்தது. அதைத் துருக்கி முனைக்கு வெளியில் எடுத்து ஆறவைத்துவிட்டு வெளியில் பூசிய களிமண்ணை உடைத்தபோது நேர்த்தியாக ஒட்டப்பட்டிருந்தது தெரிந்தது. மணியத்தின் துருத்தி உலையில் இரும்பு உருகியபின் கழிவாக வெளிவரும் "கீச்சுக்கிட்டான்" (சிலவேளை அதற்கு வேறு பெயர்களும் இருக்கலாம்) பெரிய குவியலாகப் போடப்பட்டிருக்கும். நான் பின்னாட்களில் கோட்டை கட்டிப் பகுதிக்குச் சென்றபோது அந்தக் கீச்சுக் கிட்டான் பெருமளவில் நிலத்தில் கிடப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன். அவ்வளது தொகையில் கீச்சுக்கிட்டான் கிடக்கிறது என்றால் மன்னராட்சிக் காலத்தில் மணியத்தைப்போல நூற்றுக்கணக்கான கொல்லர்கள் இரும்பைக் காய்ச்சி ஆயுதங்களையும் தொழில் கருவிகளையும் செய்திருக்க வேண்டும். இதுபற்றிய விரிவான ஆய்வுகள் தமிழர் மத்தியில் இன்றுவரை வறுமையாகவே உள்ளன.

இரும்பில் இப்படியான பல விஞ்ஞானங்களைச் செய்துகாட்டிய மிகத் திறமையான உழைப்பாளி மணியம் என்பது தற்போது மல்லாவியில் வாழ்ந்துகொண்டிருக்கும் பலருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. மணியம் ஒரு மணியான இரும்புவேலைகாரன் என்பதில் சந்தேகமேயில்லை.






# யாழ்ப்பாணிகளே, வெல்கம் ரு கனடா!

## இமாலயப் புரட்டுகள்

ஜோர்ஜ் இ.

துவாரகா வருகிறார், மாவீரர் தின உரை நிகழ்த்தப் போகிறார் என்று உலகத்தமிழர்களை உலுக்கி, ஆனால் சர்வதேசத்தை உற்றுநோக்க வைக்காத பெரும் புரட்டு ஒன்றை யாழ்ப்பாணிகள் கடந்து போய் கனகாலம்.

இங்கிலாந்திலிருந்து சேரமான் என்று ஒருவரும், அவுஸ்திரேலியாவில் இரு ந்து வரும் துன்பத்தமிழ் வானொலிக்காரரும், இவர்களின் பண முதலீட்டாளரான சுவிஸ் நாட்டு உண்டியல் புலியும், தமிழ்நாட்டில் உள்ள சில புலி மையல் முட்டைபோண்டாக்களும் தவிர்ந்து இதைப் பற்றி யாருமே அலட்டிக் கொள்வதில்லை.

தேசத்தின் புதல்வியின் பின்னால், தேசத்தின் புதல்வர்கள் அணிதிரள்வார்கள், வணங்காமண் கப்பல் போய் ஈழத்தில் இறங்கும் என்ற நினைப்பெல்லாம், துவாரகாவின் றொக்கட் லோஞ்சர்களுக்குக் கூட இல்லை. புஸ்வாணமாக முடிந்து போன இந்தக் கோமாளிக் கூத்தைத் தொடர வேண்டிய கட்டாயம் அதைத் தொடங்கியவர்களுக்கு உண்டு. இடையில் கைவிட்டால், உண்டியலைத் தூக்க முடியாது. ஏற்கனவே பர்தா போட்டு வந்த மதிவதனிக்கும் துவாரகாவுக்கும் அள்ளிக் கொடுத்த அறிவுக்கொழுந்துகள் உண்டு. அவர்கள் கூட கையை விட்டு விடக் கூடாது என்பது தான் துவாரகாபாலர்களின் எண்ணம்.

யாழ்ப்பாணிகளே மறந்து போன துவாரகாவை எப்படி ஒரு மூன்று பேர் காவிக் கொண்டு திரிகிறார்களோ, அதைப் போல அந்த இமாலயப்பிரகடனம் என்ற ஒரு வெத்துவேட்டையும் ஒரு கூட்டம் காவிக் கொண்டு திரிகிறது. புலன் பெயர்ந்த யாழ்ப்பாணிகளோ, கனடாவுக்கு புலன் பெயரும் கனவோடு யாழ்ப்பாணத்தில் நாட்களை

எண்ணிக் கொண்டிருக்கும் ஒரிஜினல் யாழ்ப்பாணிகளுக்கு தீர்வுப் பொதி வாங்கித் தர கோர்ட்டுக்குப் போய்க் கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சியினரோ இந்த இமாலயப் பிரகடனம் பற்றி அலட்டிக் கொள்ளவேயில்லை.

இமாலயப் பிரகடனம் கூட லண்டனில் உள்ள Global Tamil Forum எனப்படும் பூகோள தமிழர் அமைப்பு முன்னெடுத்த ஒரு முயற்சி. அந்தத் தாய்க்கலத்தோடு ஒட்டிக் கொண்டு உலகத்தைச் சுத்த புறப்பட்ட சேய்க்கலம் தான் கனடியத் தமிழ்க் காங்கிரஸ்.

இவர்கள் எல்லாம் 'தமிழ் மக்களின் ஆணையைப் பெற்ற' அமைப்புகள் கூட இல்லை. புலியை யூஸ் பண்ணலாம் என்று நினைத்த ஒரு கூட்டத்தை, தான் யூஸ் பண்ணலாம் என்று புலி நினைத்து உருவாக்கிய அமைப்புகள் தான் இவை. கொலைகாரக் கூட்டத்துடன் நேர்மையானவர்கள் இணைந்து கொள்ள முடியுமா? ஊரில் உள்ள கோட் போட்ட அயோக்கியர்கள் எல்லாம் புலிகளோடு ஒட்டிக் கொண்டு தொடங்கப்பட்ட அமைப்புகள் தான் இவை.

இவற்றோடு ஒட்டிக் கொண்டவர்களில் எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்படும் ஒரு நேர்மையாளரை, ஒரே ஒரு நேர்மையாளரைக் காட்ட முடியுமா என்று நானும் தான் நீண்ட காலமாகச் சவால் விட்டுக் கொண்டிருக்கிறேன். இன்றுவரைக்கும் இவர்களால் ஒருவரைக் கூடக் காட்ட முடியாத பரிதாப நிலை தான் இருக்கிறது.

தாங்கள் நூறுவீதம் கள்ள வோட்டில், 99.8 வீதம் ஈழத்துக்கு ஆதரவு வோட்டுப் போட்டுத் தெரிவு செய்த நட்டுக் கழண்ட அரசாங்கத்தைக் கூட 'தமிழ் மக்களின் ஆணையைப் பெற்ற' பிரதிநிதிகள் என்று யாழ்ப்பாணிகளே இன்றைக்குச் சொல்லுவதில்லை. அதை எல்லோரும் மறந்து கன காலம். ஆனால், அதற்கு பிரதமர், அமைச்சர்கள் எல்லாம் வேறு உண்டு. அவர்களுக்கு தேர்தலும் உண்டு. வருடாந்த விரு(ந்)து வைபவமும் உண்டு.

இமாலயப் பிரகடனம் என்பது, ஏதோ திம்புப் பேச்சுவார்த்தை, ஒஸ்லோ சமாதானப் பேச்சுவார்த்தை ரேஞ்சில் நடந்த மாதிரி புரளியைக் கிளப்பியது அதற்கு எதிரானவர்கள் தான்.

ஆனானப்பட்ட இந்தியாவே இலங்கை இந்திய ஒப்பந்தத்தை அமுல்படுத்த முடியாமல் முக்கிக் கொண்டிருக்கிறது. ஏற்கனவே புலிவால்களாக அறியப்பட்டு வீராவேசம் போட்டுக் கொண்டிருந்தவர்கள் சமாதானம் பேச வருகிறார்கள் என்றவுடன் அந்தத் தீர்வை அமுல்படுத்த வேண்டிய தேவை, யுத்தத்தை வென்றதற்கு பால் சோறு பொங்கிய சிங்களவர்களுக்குத் தேவை இல்லை.

**இமாலயப் பிரகடனம் என்பது, ஏதோ திம்புப் பேச்சுவார்த்தை, ஒஸ்லோ சமாதானப் பேச்சுவார்த்தை ரேஞ்சில் நடந்த மாதிரி புரளியைக் கிளப்பியது அதற்கு எதிரானவர்கள் தான்.**

பலம் வாய்ந்த நிலையில் ஒரு தீர்வைப் பெற்றிருக்கக் கூடிய சூழ்நிலையில், பால் பொங்கி வந்த பானையை உடைத்த பொரிமாத்தோண்டி முட்டாள் யார் என்பது எல்லாருக்கும் தெரியும். 'அண்ணை அடிச்சுப் பறிப்பார்' என்று அந்த முட்டாளை உசுப்பேத்தி பப்பாளி மரத்தில் ஏற்றிய கூட்டம் யார் என்பதும் அனைவருக்கும் தெரியும்.

எனவே, இது தீர்வு காண முயற்சிப்பதற்காக சிங்களவர்கள் மத்தியில் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்த, அங்குள்ள மதத்தலைவர்களுடன் நடந்த ஒரு கலந்துரையாடல் மட்டுமே. எந்தத் தீர்வு முயற்சி வந்தாலும், அதற்கான முதல் எதிர்ப்பு பௌத்த பீடங்களில் இருந்து வருவதால், எந்த முயற்சியாக இருந்தாலும், அவர்களின் ஆசீர்வாதத்துடன் தொடங்குவது நல்ல முயற்சி தான்.

யாழ்ப்பாணத்தில் மதத்தலைவர்கள் என்று சொல்லி ஒரு ஐயரையும் பாதிரியாரையும் அகப்பட்டால் ஒரு மௌலவியையும் கொண்டு வந்து இருத்துவதில்லையா? அப்படித் தான்!

இதெல்லாம் ஏதோ இந்தப் புலிவால்களின் மணிமூளையில் உதித்த அற்புதமான கருத்து என்று நீங்கள் நினைக்கத் தேவையில்லை. இதற்கு ஏதோ மேற்குலக முட்டுக்கொடுப்பு ஒன்று இருந்திருக்க வேண்டும். அதை யாழ்ப்பாணப் பத்திரிகை ஒன்று உண்மை என்பது போல, ஏதோ ஒரு பெரிய நாடு இதன் பின்னணியில் இருப்பது மாதிரி கிசுகிசு வெளியிட்டிருந்தது.

அந்தப் புத்த பிக்குகளும் பௌத்தபீடங்களில் செல்வாக்கு உள்ளவர்கள் மாதிரியும் தெரியவில்லை. என்னவோ, அவர்களாவது தமிழர்களுக்கு உரிமை கொடுக்க வேண்டும் என்பது குறித்த சாதகமான கருத்தைக் கொண்டிருப்பது ஒரு நல்ல விடயமே.

அதன் அடுத்த கட்டமாக அந்தப் பேச்சுவார்த்தையின் முடிவில் ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை (Memorandum of understanding) சிங்கள, முஸ்லிம், தமிழ் அரசியல் தலைவர்களிடம் கையளித்திருக்கிறார்கள்.

அமெரிக்க தூதுவரிடமும்!

எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்பது போல!

அது கூட நியாயமானது தான். இலங்கை அரசியலில் எந்தத் தீர்வும் எத்தனையோ தரப்பினரைச் சமாளித்துத் தான் வரவேண்டியது.

அந்த அடிப்படையில் மகிந்தவைச் சந்தித்து படம் எடுத்தது தான் பெரிய திருநெல்வேலிக் கண்ணிவெடி.

மேற்குநாடுகளின் ஆலோசனையில் முன்னெடுக்கப்பட்டதாக இருந்தாலும், அதை நடத்துவது எங்கள் அறிவுக் கொழுந்துகள் தானே?

யாழ்ப்பாணிகள் பொங்கல், தீபாவளி என்று எத்தனையோ தீர்வுப் பொதிகளுக்கு முன்னால், எத்தனையோ ஈழப் பிரகடனங்களைக் கண்டு வந்தவர்கள்,

அவர்களுக்கு பிரகடனத்திற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குமான வித்தியாசம் தெரியும் அளவுக்கு அரசியலும் தெரியாது.

அவர்களுக்குத் தெரிந்த அரசியல் எல்லாம், 'பழம் பழுத்தால் வெளவால் வரும், அண்ணை அடிச்சுப் பறிப்பார், கொடி பிடிச்சா சர்வதேசம் தீவாளிக்கு தீர்வு வாங்கித் தரும்'. இது தான் அவர்கள் அடைந்த அரசியல் பரிணாமமும் நிர்வாணமும்.

வெறும் உரையாடலை பிரகடனம் என்றவுடன், ஈழப் பிணவியாபாரிகள் அலேர்ட் ஆகி விட்டார்கள்.

'அடே, எங்களுக்குத் தெரியாமல் தீர்வு வாங்கப் போறாங்களடா, எங்கட பிழைப்புக்கு ....த்தான் போகுதடா!'

இங்கேயும் இந்த உள், நுண் அரசியலை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

பூகோள தமிழர் அமைப்பு ஏதோ உலகளாவியது என்றெல்லாம் நினைக்கத் தேவையில்லை. அது லண்டனை மட்டும் சேர்ந்தது. உலகத்தமிழர் கனடாவில் மட்டும் இருந்தது மாதிரி!

யாழ்ப்பாணிகள் பொங்கல், தீபாவளி என்று எத்தனையோ தீர்வுப் பொதிகளுக்கு முன்னால், எத்தனையோ ஈழப்பிரகடனங்களைக் கண்டு வந்தவர்கள், அவர்களுக்கு பிரகட னத்திற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குமான வித்தியாசம் தெரியும் அளவுக்கு அரசியலும் தெரியாது.
அவர்களுக்குத் தெரிந்த அரசியல் எல்லாம், 'பழம் பழுத்தால் வெளவால் வரும், அண்ணை அடிச்சுப் பறிப்பார், கொடி பிடிச்சா சர்வதேசம் தீவாளிக்கு தீர்வு வாங்கித் தரும்'. இது தான் அவர்கள் அடைந்த அரசியல் பரிணாமமும் நிர்வாணமும்.
வெறும் உரையாடலை பிரகடனம் என்றவுடன், ஈழப் பிணவியாபாரிகள் அலேர்ட் ஆகி விட்டார்கள்.

முயற்சியை முன்னெடுத்தது அது தான். தமிழ் காங்கிரஸ் புதுசா மோட்டோர் சைக்கிள் வாங்கியவனின் பின்னால், சுதியில் ஏறி ஒட்டிக் கொண்ட அமைப்பு. உலகெங்கும் வெளிவந்த செய்திகளில் கூட வராத அந்த விடயத்தை, இங்குள்ள போராட்டம் நடந்த பின்னால் தான் இவர்களும் ஒட்டிக் கொண்ட கதை எனக்குத் தெரிந்தது.

போராட்டம் முழுவதும் பூகோள தமிழர் அமைப்புக்கு எதிராகவல்லவா எழுந்திருக்க வேண்டும்?

பூகோள காங்கிரஸ் அமைப்பின் நேரலை நிகழ்ச்சியில் பொங்குதமிழர் பொங்கியதோடு சரி. பூகோள காங்கிரஸ் அலுவலக எரிப்பு, முட்டையடிப்பு என்று எதுவும் லண்டனில் நடைபெறவில்லையே?

இரண்டு காரணங்கள்!

கனடாவில் நடப்பது போல, புலியின் பெயரில் பிணவியாபாரம் லண்டனில் மொத்த விற்பனையாக நடைபெறுவதில்லை. கனடாவில் நடைபெறுவதோடு ஒப்பிட்டால், லண்டனில் நடப்பது சில்லறை வியாபாரம்.

மற்ற ஐரோப்பிய நாடுகள் கதை வேறு. பிரான்ஸ், ஜேர்மன், குறிப்பாக சுவிஸ் வந்து சேர்ந்த யாழ்ப்பாணி அகதிகள், லண்டனில் உள்ள அகதிகளை விட, கொஞ்சம் வெளப்பமானவர்கள். பர்தாவோடு வந்தாலேயே அள்ளிக் கொடுக்கும் வள்ளல்கள். லண்டனுக்குள் அந்தப் பருப்பு அவிவதில்லை.

இரண்டாவது காரணம், எரிகிற நெருப்பில் எண்ணெய் விட, கனடாவில் உள்ளது போல, லண்டனின் பெரும் எண்ணிக்கையில் செல்போன் தமிழ்த்தேசிய ஊளையிடலாளர்கள் அதிகம் இல்லை. அங்குள்ள தொலைக்காட்சிகளின் ஊளையிடலாளர்களோடும் லங்காசிறியோடும் இந்த செல்போன் காரர்களால் போட்டியிட முடியாது.

மூலையில் இரண்டு பேர் கொடி பிடித்துக் கொண்டிருந்தாலும், அதை சர்வதேசத்திற்கு நேரலை

நடத்த நாற்பது தமிழ்த் தேசிய ஊளையிடலாளர்கள், பேஸ்புக்கில் ஆய்வு செய்ய பதினைந்து புல நாய் வாலர்கள் கனடாவில் உண்டு. கனடியப் பிரதமர் நடத்தும் ஊடகவியலாளர் மாநாட்டில் கூட அவ்வளவு தொகையை நீங்கள் காண முடியாது. அங்கு நாலு பேர் வந்தாலும் கேட்கிற கேள்விகளை இந்த நாற்பது முட்டாள்களாலும் கேட்கவும் முடியாது.

இவர்களுக்கு தங்களுடைய செல்போன் தமிழ்த்தேசிய விடுதலைக்கான ஏ.கே.74! புஹா...ஹா!

புயல் மையம் கொண்ட லண்டனில் இல்லாத சூறாவளி ஏன் கனடாவில் சுனாமியாகியிருக்கிறது?

மில்லியன் டொலர் கேள்வி.

இந்த இமாலயப் பிரகடனத்தில் கலந்து கொண்ட தமிழ்க் காங்கிரஸின் ஒரு பிரதிநிதி குணசித்திர வேடம் கூட இல்லை. மற்றும் பலரில் ஒருவர்.

இந்தப் பிரகடனம் ஏற்படுத்தக் கூடிய நன்மைகளை விட, இவர்களுக்குப் பெரும் பிரச்சனையாக இருப்பது மகிந்தவுடன் எடுத்த படத்தில் மற்றும் பலரில் ஒருவராக அவர் இருந்தது தான்.

பிரபாகரனுக்குக் கூட மகிந்த ஒரு பிரச்சனையாக இருந்ததில்லை. ஜனாதிபதி தேர்தலில் யாழ்ப்பாணிகள் வழமையான அமெரிக்க சார்பு சிந்தனையில் ஐ.தே.கட்சி ஆதரவில் ரணிலுக்கு வாக்களிப்பார்கள் என்பதால், மகிந்தவிடம் எழுபது கோடி வாங்கி தேர்தலைப் பகிஷ்கரிக்க வைத்து, மகிந்தவை ஜனாதிபதியாக்கியதே பிரபாகரன் தான். மகிந்தவை யதார்த்தவாதி என்று போற்றிப் புகழ்ந்த மகானும் அவரே.

**இந்தப் பிரகடனம் ஏற்படுத்தக் கூடிய நன்மைகளை விட, இவர்களுக்குப் பெரும் பிரச்சனையாக இருப்பது மகிந்தவுடன் எடுத்த படத்தில் மற்றும் பலரில் ஒருவராக அவர் இருந்தது தான். பிரபாகரனுக்குக் கூட மகிந்த ஒரு பிரச்சனையாக இருந்ததில்லை.**

மகிந்த போன்ற ஒரு கடும்போக்கு இனவாதி ஆட்சிக்கு வந்தால் சர்வதேசம் ஆதரவு தரும், ரணில் போன்ற மென்போக்குவாதி வந்தால் சர்வதேசம் அவர் பின்னால் போய் விடும் என்பது தான் தேசிக்காயரின் தலையில் இருந்த சிற்றறிவுக்கு எட்டிய அரசியல்.

'சரி, எல்லாம் முடிஞ்சுது! அதை இனிக் கதைச்சென்ன பிரியோசனம்? அதை விடுவம்'.

மகிந்தவுடனான படம் மட்டும் ஏன் கனடிய யாழ்ப்பாணிகளுக்கு பிரச்சனை யானது?

எப்படி கடும்போக்காளர் ஒருவர் வந்தால், தனது அரசியலுக்கு லாபம் என்று தேசிக்காயர் கருதினாரோ, அதைப்போல மகிந்த என்ற ஒரு உருவத்தை வைத்துத் தான் கனடாவில் யாழ்ப்பாணிகளின் அரசியலும் பிழைப்பும் நடந்து கொண்டிருக்கிறது.

யுத்தம் முடிந்து பதினைந்து வருடங்கள். உலகம் எங்கேயோ போய் விட்டது. கோத்தபாயா விரட்டியடிக்கப்பட்டு ரணில் பதவியில் அமர்த்தப்பட்ட பின்னால், சர்வதேசத்திற்கு ஒக்கம் ஹொறாந்தாய்!

இன அழிப்பு என்பதோ, மகிந்தவைக் கழு ஏற்றுவது என்பதோ எல்லாருமே மறந்து போன விடயங்கள். அதை யாழ்ப்பாணி அரசியல்வாதிகள் கூட இன்றைக்கும் பேசுவதில்லை. பெரிதாக வாய் வீசுகிற கஜேந்திரகுமார் கூட்டம் கூட அதைப் பற்றி யாழ்ப்பாணத்தில் தேர்தல் நேரத்தில் பேசுவது போல, ஜெனிவாவில் பேசுவதில்லை.

எல்லாருக்கும் வசதியாக இருக்கிறது தீர்வுப் பொதி என்ற மாயமான். பதினைந்து வருடமாக வைத்துப் பிழைக்கிறார்கள்.

ஆனால், கனடிய நிலை அதுவல்ல!

கனடாவில் மாவீரர் தின காட்போர்ட் கல்லறை, கொத்துரொட்டி உண்டியல்காரர்களும் சரி, வெள்ளை அரசியல்வாதிகளோடு ஒட்டிக் கொண்டு அவர்களை வேட்டியோடு கூட்டி வந்து கூத்துக் காட்டும் கோட் போட்ட அரசியல் கனவுக் கூட்டத்திற்கும் பிழைப்புக்கு எப்போதும் ஒரு பூச்சாண்டி வேண்டும்.

இதுவரை காலத்தில் இன அழிப்பு, மகிந்தவைக் கழுவில் ஏற்ற சர்வதேச விசாரணை என்ற இரண்டையும் தவிர, இவர்கள் எவருமே 'தமிழ் மக்களுக்கான தீர்வு' என்று எதையாவது பேசியதைக் கண்டிருக்கிறீர்களா?

இன்றைய கனடிய பழமைவாத எதிர்க்கட்சித் தலைவரைக் கூட்டிக் கொண்டு வந்து, 'ஐநாவில் இலங்கைக்கு எதிராக வழக்குத் தொடருவோம்' என்று சொல்ல வைத்திருக்கிறார்கள். முன்பு சொன்ன ஒன்றாறியோ எதிர்க்கட்சித் தலைவர் பிராம்படன் மேயர் ஆன பின்னாலும் அதைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். பிராம்ப்டன் முள்ளிவாய்க்கால் முற்றத்திற்குச் சேர்த்த பணம் என்னாச்சு என்று இன்னும் தெரியாது.

ஏற்கனவே கரி

ஆனந்தசங்கரி இதே கதையைச் சொல்லி பாராளுமன்ற உறுப்பினராக வந்து எக்கச்சக்கமான காலம். இன்றைக்கும் இது குறித்து ஒரு துரும்பைக் கூட நகர்த்த முடியவில்லை. இன அழிப்பு என்ற கனடிய, ஒன்ராறியோ பாராளுமன்றங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் இங்குள்ள யாழ்ப்பாணிகளைக் குஷிப்படுத்தி வாக்கு வாங்க சகல கட்சிகளும் முண்டியடித்துக் கொண்டு நிகழ்த்தப்பட்டவையே அன்றி, தமிழ் மக்கள் பிரச்சனைக்கான தீர்வுக்காக செய்யப்பட்டவை அல்ல.

கனடாவில் உண்டியல் தூக்கி பிழைப்பு நடத்துவதாக இருந்தாலும், பெப்பெப்பே ஆங்கிலத்தோடு கோட்டுப் போட்டு அரசியல் கனவோடு அலைவதாக இருந்தாலும், இந்த ‘இன அழிப்பு, சர்வதேச விசாரணை’ இரண்டும் அவசியம்.

மகிந்தவை மனோகரா மாதிரி இழுத்து வந்து கழு ஏற்றுவோம் என்ற கனவில் வைத்திருக்க வேண்டியது அவசியம்.

யுத்தம் முடிந்து பதினைந்து வருடங்களாக பிழைப்புக்கான வழியாக இருப்பது இந்த இரண்டு மந்திரங்களும் தான். கோத்தபாயா ஆட்சிக்கு வந்து விரட்டப்பட்டு ரணிலும் பதவிக்கு வந்த பின்னாலும், இவர்கள் மகிந்தவை வில்லனாகச் சித்தரிப்பதன் பின்னணி இதுதான்.

மகிந்த மீதான சர்வதேச விசாரணை புலிகளையும் விசாரிக்கும், இன்றைக்கு புலனாய்வுப் பிரிவின் கட்டுப்பாட்டில் இருக்கும் முன்னாள் புலிகளே போட்டுக் கொடுப்பார்கள் என்பதோ இவர்களுக்குப் பிரச்சனை இல்லை.

சரத் பொன்சேகா கூட ஒரு போர்க்குற்றவாளி, இன அழிப்புக்கான செயற்பாடுகளைப் பற்றி பெருமை கொள்கிறவர் என்றாலும், மகிந்தவைப் படம் காட்டுவது போல சரத் பொன்சேகாவை இவர்கள் வில்லனாகச் சித்தரிப்பதில்லை. காரணம், அவர் ஜனாதிபதியாக வர வேண்டும் என்று தலையால் மண் கிண்டியவர்கள் ஆச்சே?

**அங்கு யாழ்ப் பாணத்திலேயே மகிந்தவுக்கு ஆதரவாக அரசியல்வாதிகள் இருக்கிறார்கள். செயற் படுகிறார்கள். அவர்களைத் துரோகிகள் என்று யாரும் சொல்வதில்லை. அவர்கள் வேலை எடுத்துத் தருவதாகச் சொன்னாலேயே அவர்களுக்குக் குத்துவதற்கு ஒரு கூட்டம் இருக்கிறது.**

**ஆனால், மகிந்தவோடு படம் எடுப்பது என்பது இங்கே கனடாவில் இவர்களின் அடிமடியில் கை வைத்து, பிழைப்பில் மண் போடுகிற முயற்சி. தீர்வுக்கு மகிந்தவும் ஆதரவு தெரிவிக்கிறார் என்பது, இங்கே இவர்கள் சொல்லிக் கொண்டிருக்கும் கதை சொல்லலுக்கு வயிற்றில் புளி கரைக்கும் வேலை.**

அங்கு யாழ்ப்பாணத்திலேயே மகிந்தவுக்கு ஆதரவாக அரசியல்வாதிகள் இருக்கிறார்கள். செயற்படுகிறார்கள். அவர்களைத் துரோகிகள் என்று யாரும் சொல்வதில்லை. அவர்கள் வேலை எடுத்துத் தருவதாகச் சொன்னாலேயே அவர்களுக்குக் குத்துவதற்கு ஒரு கூட்டம் இருக்கிறது.

ஆனால், மகிந்தவோடு படம் எடுப்பது என்பது இங்கே கனடாவில் இவர்களின் அடிமடியில் கை வைத்து, பிழைப்பில் மண் போடுகிற முயற்சி. தீர்வுக்கு மகிந்தவும் ஆதரவு தெரிவிக்கிறார் என்பது, இங்கே இவர்கள் சொல்லிக் கொண்டிருக்கும் கதை சொல்லலுக்கு வயிற்றில் புளி கரைக்கும் வேலை.

மகிந்த கட்சித் தலைவர் இல்லை, பிறகு எதற்காக அவரோடு படம் எடுக்க வேண்டும் என்று கேட்கிற சட்ட நுணுக்க அறிவாளிகள் எல்லாம் இங்கே இருக்கிறார்கள்.

போய் கதைத்த பிக்குகள் எல்லாம் தேர்தலில் வென்ற பிரதிநிதிகளா, பீடாதிபதிகளா? கனடாவில் ஆளுக்காள் தாங்கள் தான் தலைவர்கள் மாதிரி கதை விடுவது மாதிரி இல்லாமல், இதில் சம்பந்தப்பட்ட stakeholders, முளையிலேயே கிள்ளி எறியக் கூடியவர்களுடன் கதைக்கிறார்கள். இதில் என்ன பிரச்சனை? கட்சியில் மட்டுமன்றி, இலங்கை அரசியலில் தீர்மானிக்கும் சக்தியாக இருப்பவர், இந்தக் கும்பலின் வீராவேசத்தால் புலி வரப் போகிறது என்று கதை விட்டு திரும்பவும் அரசியல் உயிர்ப்படையக் கூடியவர் என்ற நிலையில் இருக்கும் ஒருவரைச் சந்தித்துப் படம் எடுப்பதில் என்ன வந்து விட்டது?

தீர்வு வந்து விட்டதா?

பிரபாகரன் எழுபது கோடி வாங்கியது பிரச்சனை இல்லை. பிரேமதாசா வாழ்த்துச் சொல்லி, கிட்டு கொழும்பில்

திருமணம் நடத்தி தேன்நிலவு கொண்டாடியது கூடப் பிரச்சனை இல்லை.

கில்மிஷா ஜனாதிபதியோடு படம் எடுத்தது பிரச்சனையாக கருதுகிற சமூகம் இது.

இந்த முட்டாள் கூட்டத்தை ‘இன அழிப்பு, மகிந்தவைக் கழு ஏத்தும் சர்வதேச விசாரணை’ என்றெல்லாம் இலகுவாக சுத்தலாம்.

இப்படி தங்கள் பிழைப்புக்கு பங்கம் வரும் என்றதும் தமிழ் காங்கிரஸ் மீதான எதிர்ப்பு வலுக்கிறது. அந்தக் கும்பலே புலிகளால் தான் நியமிக்கப்பட்டது. அந்தக் கும்பலை ‘தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்கள்’ என்று சொல்லிக் கொண்டு, அவர்கள் சொன்ன இடத்தில் எல்லாம் கரி ஆனந்தசங்கரிக்கு ஒரு குத்து, விஜய் தணிகாசலத்துக்கும் ஒரு குத்து குத்தியது இந்த முட்டாள்க் கூட்டம்.

முன்பு இதே கும்பல் சொல்லித் தான் குத்தாட்டம் போட்ட ராதிகாவுக்கும் இந்தக் கூட்டம் குத்தியது.

இப்போது காங்கிரஸை எதிர்ப்பதற்கான காரணங்கள் இரண்டு.

ஒன்று, மகிந்தவுடனான படத்தை வைத்து பிழைப்பு கெடாமல் பார்த்துக் கொள்வது.

மற்றது காங்கிரஸ் அரசாங்கத்திடமும் தெருக் கூத்துக்களாலும் பெறுகின்ற பெரும் தொகைப் பணத்திற்கு அடி போடுவது.

பழைய உலகத் தமிழர்களின் எச்சங்கள் சேர்ந்திருக்கும் கனடியத் தமிழர்களின் தேசியக் கவுன்சில் தான் இதைப் பெரும் போராட்டம் ஆக்குகிறது.

தமிழ்க் காங்கிரஸ் கனடிய, லோக்கல் தமிழ் பிரமுகர்களை வைத்துப் பிழைக்கும் அமைப்பாக இருந்ததே அன்றி, சாதாரண யாழ்ப்பாணிகளை வைத்துப் பிழைக்கும் அமைப்பாக அதிகம் செயற்படுவதில்லை. தெருவிழா கூட தமிழர் விழாவாகத் தான் இருக்கிறதே அன்றி, புலி விழாவாக இருப்பதில்லை. புலிப் படத்தையும் கொடியையும் மருந்துக்கும் காணக் கிடைக்காது.

ஆனால் தேசியக் கவுன்சில் தான் மாவீரர் தினம் முதல் சகல புலி நிகழ்வு களையும் பிரபாகரன் படத்தையும் புலிக் கொடியையும் வைத்து ஊரைக் கூட்டி உலையில் போடும் அமைப்பு. வருடாந்தம் இந்தக் கொண்டாட்டங்கள் எல்லாம் பணம் சேர்ப்பதற்கான நிகழ்ச்சிகளாக இருப்பதே அன்றி, எந்த வகையிலும் இறந்தவர்களுக்கான அஞ்சலி யாகவோ, தீர்வு நோக்கியதாகவோ இருந்ததில்லை. சேர்த்த பணத்தை முன்னாள் போராளிகளுக்கு கொடுப்பதாகவோ இல்லை.

அது பொதுவெளியில் உருவாக்கப்பட்ட எதிர்ப்பை அறுவடை செய்ய கோஷம் போடுகிறது. பத்திரிகையாளர் மாநாட்டில் தேசியக் கவுன்சில் சொன்ன கதைக்காக, மானநட்ட சட்ட நோட்டீஸ் பறக்கிறது.

அதன் எதிரொலியாக தமிழ்க் காங்கிரஸ் அலுவலகம் எரிக்கப்படுகிறது. அதன் முன்னால் ஆர்ப்பாட்டம் நடந்து முட்டை வீச்சு நடத்தப்படுகிறது. (உண்மையில் எரிப்பு குறித்து நடவடிக்கை எடுத்த பொலிசாரிடம் விசாரணையை அங்கிருந்து, மானநட்ட வழக்கு தொடுக்கப் பட்டவர்களிடம் இருந்து, தொடங்குங்கள் என்று தான் முறைப் பாட்டாளர்கள் சொல்லி யிருக்க வேண்டும். அதைச் சொன்னதாகத் தெரியவில்லை. பின்பு நடைபெற்ற முட்டை யடிப்புக்குத் தலைமை தாங்கியவர் யார் என்பது வீடியோவில் பார்த்த எல்லாருக்கும் தெரியும்.)

இதற்குள், திடீரென்று ‘தங்களுக்கு தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை மீறி’ காங்கிரஸ் செயற்படுவதாக ஒரு கூட்டம்... ஓ... சாம்பார் கூட்டு கிளம்பியது.

காங்கிரசின் முன்னாள் முக்கியர்கள். இவர்களுக்கும் மகிந்தவுடனான படம் தான் பிரச்சனை. அது ‘இன அழிப்பு, சர்வதேச விசாரணை’க்கு பங்கமாக இருக்குமாம்.

பதினைந்து வருடங்களாக முக்கி முடியாததை இன்னும் பதினைந்து வருடங்களுக்கு நீட்டுவது மட்டுமில்லை, இதைச் சாக்காக வைத்து நிர்வாகத்தை வெளியேற்றி விட்டு தாங்கள் காங்கிரசைக் கைப்பற்றிக் கொள்வது தான் அந்த நோக்கம்.

**கனடாவில் மாவீரர் தின காட்போர்ட் கல்லறை, கொத்துரொட்டி உண்டியல்காரர்களும் சரி, வெள்ளை அரசியல்வாதிகளோடு ஒட்டிக் கொண்டு அவர்களை வேட்டியோடு கூட்டி வந்து கூத்துக் காட்டும் கோட் போட்ட அரசியல் கனவுக் கூட்டத்திற்கும் பிழைப்புக்கு எப்போதும் ஒரு பூச்சாண்டி வேண்டும். இதுவரை காலத்தில் இன அழிப்பு, மகிந்தவைக் கழுவில் ஏற்ற சர்வதேச விசாரணை என்ற இரண்டையும் தவிர, இவர்கள் எவருமே ‘தமிழ் மக்களுக்கான தீர்வு’ என்று எதையாவது பேசியதைக் கண்டிருக்கிறீர்களா?**

இவர்கள் தமிழ் மக்கள் பிரதிநிதிகளாக எப்போது ஆணையைப் பெற்றார்கள்? முன்னாள் முக்கியஸ்தர்களான இவர்கள் அவர்களோடு நேரடியாகப் பேசாமல் பொதுவெளிக்கு வருவதன் காரணம் என்ன?

பொதுவெளியில் ஆதரவைத் திரட்டி விட்டு, பின்னர் போர்க்கொடி தூக்கி பகிரங்க தேர்தலுக்கு அழைத்து கள்ளவாக்கு போடும் இன்னொரு முயற்சிக்கான முஸ்தீபு தான் இது.

சரி, தீர்வுக்கான வழி உங்களால் தான் முடியும் என்றால், அது என்ன? இன அழிப்பு முத்திரை குத்தி, சர்வதேச விசாரணைக்கு சம்மதிக்கக் கூடிய சர்வதேசம் தீர்வுக்கு வழிவகுக்கும் என்றால், அதை நீங்கள் முக்கியஸ்தர்களாக இருந்த போது ஏன் செய்ய முடியவில்லை?

இந்த இமாலயப் பிரகடனக் கூத்து, இந்தச் சமூகத்தில் துவாரகா பரபரப்பு மாதிரி இலகுவாகவே மறக்கப்பட்டிருக்கும்.

எங்களுக்கு வந்து சேர்ந்த இந்த செல்போன் ஊளையிடலாளர்கள் இல்லாமல் இருந்திருந்தால்.

இந்தச் சமூகத்தில் செல்போன் வைத்திருக்கிற ஒவ்வொரு யாழ்ப்பாணித் தமிழ்த் தேசிய ஊளையிடலாளருக்கும் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு தன் மீது சுமத்தப்பட்டிருக்கும் நினைப்பு.

ஏற்கனவே மற்றவர்களை முட்டாள்கள் என்றும் தங்களை மட்டும் புத்திசாலிகளாகவும் நினைக்கிற யாழ்ப்பாணிகள் தானே இவர்களும்.

கேள்வி கேட்க உட்கார்ந்த இடத்திலிருந்து மேடையிலிருப்போருக்கு வகுப்பு எடுப்பார்கள். கேட்கிற கேள்விகள் எல்லாம் இளகின இரும்பைக் கண்டால், பின்புறத்தைத் தூக்கிக் கொண்டு அடி தான்.

இதே ஆக்ரோஷமான

**இந்த இமாலயப் பிரகடனக் கூத்து, இந்தச் சமூகத்தில் துவாரகா பரபரப்பு மாதிரி இலகுவாகவே மறக்கப்பட்டிருக்கும். எங்களுக்கு வந்து சேர்ந்த இந்த செல்போன் ஊளையிடலாளர்கள் இல்லாமல் இருந்திருந்தால்.**

**இந்தச் சமூகத்தில் செல்போன் வைத்திருக்கிற ஒவ்வொரு யாழ்ப்பாணித் தமிழ்த் தேசிய ஊளையிடலாளருக்கும் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு தன் மீது சுமத்தப்பட்டிருக்கும் நினைப்பு. ஏற்கனவே மற்றவர்களை முட்டாள்கள் என்றும் தங்களை மட்டும் புத்திசாலிகளாகவும் நினைக்கிற யாழ்ப்பாணிகள் தானே இவர்களும்.**

கேள்விகளை இவர்கள் தேசியக் கவுன்சில் குறித்துக் கேட்க மாட்டார்கள். அவர்கள் இனத்தின் அழிவில் நடத்தும் வியாபாரத்தால் சமூகத்திற்கு என்ன நன்மை என்று ஒரு போதும் கேட்டதில்லை. தங்களைத் துரோகிகள் ஆக்கி விடுவார்கள் என்பது மட்டுமல்ல அடி விழும் என்ற பயம். இதனால் புனைபெயர்களில் கூட எழுத வேண்டிய நிலையில் தான் இன்றைக்கு இருக்கிறார்கள். புலி ஆதரிக்கக் கூட புனைபெயரில் உலவ வேண்டிய கட்டாயத்தில் இந்தச் சமூகம் இருக்கிறது.

காங்கிரஸ் ஏன் எரிக்கப்பட்ட செய்தியை உடனே வெளியிடவில்லை என்பது எவ்வளவு முக்கியமோ, அதே அளவு முக்கியமானது முட்டையடிப்பின் நோக்கமும் பின்னணியும் என்ன என்பதை அறிந்து மக்களுக்குச் சொல்வது. முட்டையடிப்பை நேரலை செய்து பிழைப்பு நடத்துவதை விட அந்தக் கேள்விகள் முக்கியமானவை.

புலி இருந்த காலத்தில் செய்த அத்தனை முட்டாள் தனங்களுக்கும் கும்பலோடு கோவிந்தா போட்டவர்கள் தான் இவர்கள். அன்றைக்கு இவர்கள் இந்தக் கேள்விகளைக் கேட்டிருந்தால் யாழ்ப்பாணிகள் உருப்பட்டிருப்பார்கள். புலிகளைப் பேட்டி எடுக்க முந்திக் கொள்ளவும், புலிகளின் தாக்குதலில் இறந்த இராணுவ எண்ணிக்கையைக் கூட்டிக் காட்டுவதிலும் போட்டி போட்டதைத் தவிர இவர்கள் எதையும் செய்ததில்லை. இவர்களுடைய வாசிப்பும் வன்னியின் அறிக்கைகளை மிஞ்சியதாகவும் இல்லை.

தங்களுக்கு கிடைக்கும் விளம்பரங்களுக்காக இவர்கள் எந்த அயோக்கியர்களையும் புகழ்வார்கள். மாதாந்தம் புலிகளை வைத்து நடத்தும் சகல உண்டியல் நிகழ்வுகளுக்குமான விளம்பரங்களுக்காக வாணீர் ஊற்றியபடி அலைகிறவர்கள் இவர்கள்.

இந்த ஊளையிடல் கூட்டம் பற்றி விரிவாக எழுத வேண்டும். எங்கள் சமூகத்திற்கு புலிகள் புற்றுநோய் என்றால், இந்த ஊளையிடலாளர்கள் தலைமுறைகளுக்கும் அழியாத

பெரும் சாபக்கேடு.

இந்த யாழ்ப்பாணி சமூகத்தில் தமிழ்க் காங்கிரஸ் போன்ற அமைப்புகள் மீதான தாக்குதல்களும் சேறடிப்புகளும் ஏதோ ஜனநாயகத்திற்கான அச்சுறுத்தல் என்றெல்லாம் நாங்கள் கவலைப்பட வேண்டியதில்லை.

இதே வன்முறைச் சிந்தனையை வளர்த்து விட்டதும் போஷித்ததும் இந்தத் தலைமைகள் தான். கனடாவில் தமிழர்கள் மத்தியில் புலிகளுக்கு எதிரான விமர்சனங்களுக்கு எதிராக வன்முறையைக் கட்டவிழ்த்து விட்ட சகல நடவடிக்கைகளும் புலி வால்களால் தான் நடத்தப்பட்டன. கருத்துச் சுதந்திரம் என்ற அடிப்படைச் சுதந்திரம் கனடாவில் உறுதி செய்யப்பட்டிருக்கும் போது, வன்னிக் காடைத்தனத்தை இங்கே அரங்கேற்றியவர்களும் அதை நியாயப்படுத்தியவர்களும் இவர்களே. இந்த முட்டாள் கூட்டத்தைக் குஷிப்படுத்த ஆங்கிலத் திரைப்படம் எங்கள் வரலாற்றைத் திரிக்கிறது என்று சீன் காட்டியவர்கள்.

இவர்களை எப்படிக் குறை கூற முடியும்? இதே சுதந்திரங்களுக்கு எதிராக மண்டையில் போட்ட கூட்டத்தைத் தானே போற்றிப் பாடிக் கொண்டிருந்தார்கள்.

பத்திரிகைத் தடை, நூலகம் எரிப்பு, பத்திரிகையாளர் தாக்குதல் எதையும் ஒரு அமைப்பாக இவர்கள் கண்டித்ததேயில்லை.

இன்றைக்கு யுத்தம் முடிந்து நீண்ட காலமாகி விட்டது, இதே வன்முறைகளைத் தொடர முடியாது என்று இவர்களுக்குப் போதிமரத்து ஞானம் வந்திருக்கக் கூடும். தற்போதைய வன்முறை தங்கள் மேல் பாய்ந்ததில், வன்முறை தீர்வல்ல என்ற ஞானம் வேறு வந்து விட்டிருக்கிறது.

ஆனால், அந்த ஞானம் இவர்களால் வளர்க்கப்பட்டிருப்போருக்கும் வராவிட்டால், அதே வளர்த்த கடாக்கள் மார்பில் பாய்வது வழமை தானே!

வளர்த்து விட்ட அமிர்தலிங்கத்தின் மார்பில் பிரபாகரன் பாய்ந்ததை அறியாதவர்களா இவர்கள்?

இப்படியானதொரு புரிந்துணர்வு முன்னெடுப்பை இவர்கள் செய்வதற்கு முன்னால், இவர்கள் இதற்கான தேவை குறித்து இந்த யாழ்ப்பாணி மந்தைக் கூட்டத்திற்கு அறிவு புகட்டியிருக்க வேண்டும்.

சிங்களவர்களுக்கு புரிந்துணர்வு வருவதற்கு முன்னால், இந்த யாழ்ப்பாணிகளுக்கு புத்தியைப் புகட்டியிருக்க வேண்டும். அடிச்சுப் பிடிக்கிற கதையெல்லாம் அண்ணையோட போயிட்டுது, நாங்கள் கிடைக்கிறதை வைச்சுக் கொண்டு எங்களைக் கட்டி எழுப்ப வேணும், இல்லா விட்டால், எல்லாரும் கனடா போக, யாழ்ப்பாணிகள் இல்லாத யாழ்ப்பாணமாகத்தான் இது முடியும் என்ற விசயத்தையாவத மண்டைக்குள் ஏற்றியிருக்க வேண்டும்.

ஆனால், இந்த மந்தைக் கூட்டம் அறிவு பெறுவதை இந்தக் கும்பல்கள் ஒருபோதும் விரும்பியதேயில்லை.

காட்டுகிற இடத்தில் குத்தவும், உண்ணா விரதம் இருந்து இறந்த திலீபனின் நிகழ்வில் மட்டன் றோல் விற்கவும் ஒரு முட்டாள் கூட்டம் எப்போதும் தேவை. அது அறிவு பெற்றுவிட்டால், தாங்கள் தலைவர்களாக முடியாது என்பது இவர்களுக்குத் தெரியும்.

இந்த ஊளையிடலாளர்கள் என்போருக்கு ஒரு சமூகத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய பெரும் பொறுப்பு உண்டு. ஈழக் கனவோடு தொடர்ந்தும் வாழ முடியாது, நடைமுறைச் சாத்தியமான தீர்வுகள் குறித்து நாங்கள் யோசிக்க வேண்டும் என்றெல்லாம் இந்தச் சமூகத்திற்குச் சொல்ல வேண்டியவர்கள் இவர்கள்.

**இப்படியானதொரு புரிந்துணர்வு முன்னெடுப்பை இவர்கள் செய்வதற்கு முன்னால், இவர்கள் இதற்கான தேவை குறித்து இந்த யாழ்ப்பாணி மந்தைக் கூட்டத்திற்கு அறிவு புகட்டியிருக்க வேண்டும். சிங்களவர்களுக்கு புரிந்துணர்வு வருவதற்கு முன்னால், இந்த யாழ்ப்பாணிகளுக்கு புத்தியைப் புகட்டியிருக்க வேண்டும். அடிச்சுப் பிடிக்கிற கதையெல்லாம் அண்ணையோட போயிட்டுது, நாங்கள் கிடைக்கிறதை வைச்சுக் கொண்டு எங்களைக் கட்டி எழுப்ப வேணும், இல்லா விட்டால், எல்லாரும் கனடா போக, யாழ்ப்பாணிகள் இல்லாத யாழ்ப்பாணமாகத் தான் இது முடியும் என்ற விசயத்தையாவத மண்டைக்குள் ஏற்றியிருக்க வேண்டும். ஆனால், இந்த மந்தைக் கூட்டம் அறிவு பெறுவதை இந்தக் கும்பல்கள் ஒருபோதும் விரும்பியதேயில்லை.**

இவர்கள் லங்காசிறி தவிர்த்து வேறு எதையாவது வாசித்திருந்தால், இன்றைய பாலஸ்தீனப் பிரச்சனையில் சர்வதேசம் இன அழிப்பு என்பது பற்றி என்ன கருத்தைக் கொண்டிருக்கிறது என்பது தெரிந்திருக்கும். இவர்கள் இந்த புலன் பெயர்ந்த முட்டாள் கூட்டத்தை ஏமாற்றிக் கொண்டிருக்கும் இன அழிப்பு முத்திரை, சர்வதேச விசாரணை எல்லாம் சாத்தியமாகக் கூடியவையா என்ற உண்மை தெரிந்திருக்கும். கண் முன்னால் நடக்கிற இன அழிப்பு ஒன்றுக்கே உற்சாகம் கொடுத்து நியாயப்படுத்துகிற சர்வ தேசம், பதினைந்து வருடத்திற்கு முந்திய நிகழ்வுக்கு நியாயம் வாங்கித் தரும் என்று யாழ்ப்பாணி முட்டாள்கள் தவிர்ந்து வேறு யாரும் நம்ப மாட்டார்கள்.

ஆனால், இதையெல்லாம் இந்தச் சமூகம் தெரிந்து அறிவு பெற்று விட்டால், இவர்களின் 'அம் மணம் வெளியால்' தெரிந்து விடும். இதனால் இவர்கள் எவருமே அதை விரும்புவதில்லை.

**இவர்கள் லங்காசிறி தவிர்த்து வேறு எதையாவது வாசித்திருந்தால், இன்றைய பாலஸ்தீனப் பிரச்சனையில் சர்வதேசம் இன அழிப்பு என்பது பற்றி என்ன கருத்தைக் கொண்டிருக்கிறது என்பது தெரிந்திருக்கும்.**

**இவர்கள் இந்த புலன் பெயர்ந்த முட்டாள் கூட்டத்தை ஏமாற்றிக் கொண்டிருக்கும் இன அழிப்பு முத்திரை, சர்வதேச விசாரணை எல்லாம் சாத்தியமாகக் கூடியவையா என்ற உண்மை தெரிந்திருக்கும். கண் முன்னால் நடக்கிற இன அழிப்பு ஒன்றுக்கே உற்சாகம் கொடுத்து நியாயப்படுத்துகிற சர்வதேசம், பதினைந்து வருடத்திற்கு முந்திய நிகழ்வுக்கு நியாயம் வாங்கித் தரும் என்று யாழ்ப்பாணி முட்டாள்கள் தவிர்ந்து வேறு யாரும் நம்ப மாட்டார்கள்.**

**ஆனால், இதையெல்லாம் இந்தச் சமூகம் தெரிந்து அறிவு பெற்று விட்டால், இவர்களின் 'அம்மணம் வெளியால்' தெரிந்து விடும். இதனால் இவர்கள் எவருமே அதை விரும்புவதில்லை.**

இதனால் தான் கோட், சூட்டோடு செல்போனை வைத்துக் கொண்டு, தமிழ்த் தேசிய ஊடகவியலாளர்களாக போஸ் கொடுக்கிறார்கள். இதே யாழ்ப்பாணிகளின் முட்டாள்தனமான சிந்தனையில் கேனைத்தனமான கேள்விகளைக் கேட்டு தங்களை ஹீரோக்களாகச் சித்தரிக்க முயல்கிறார்கள்.

மகிந்தவின் வயதுக்கு அவருடைய வாழ்நாள் காலம் நீண்ட காலத்திற்கு இருக்கப் போவதில்லை. சம்பந்தன் போல சூயிங் கம் மாதிரி ஒட்டிக் கொண்டு இழுபட்டால் ஒழிய!

மகிந்த இருக்கும் வரைக்கும் தான் இந்தக் கூத்து நீடிக்க முடியும். அதற்குள் சுருட்ட வேண்டியதைச் சுருட்டும் அவசரம் இவர்களுக்கு.

கனடிய யாழ்ப்பாணிகளுக்கு மகிந்தவுடனான படம் பிழைப்பைக் கெடுக்குமா என்பது பெரும் பிரச்சனை. இன அழிப்பு, சர்வதேச விசாரணையை வைத்து எத்தனை நாளைக்கு ஓட்டலாம் என்ற கவலை.

யாழ்ப்பாணிகளுக்கு அரசியல் தீர்வு என்பது தமிழரசுக் கட்சி தலைமைப்பதவிக்கு நீதிமன்றம் ஏறியிருப்பதில் முடிந்திருக்கிறது. அவர்களுக்கு தீர்வை விட, யார் தலைவர் என்பது தற்போது பெரும் பிரச்சனை.

தனது அரசியல் எதிர்காலம் குறித்து தன்னைச் சூழவும், உலகம் முழுவதும் இத்தனை குத்துப்பாடுகளும் நடந்து கொண்டிருக்கும் போது, அசல் யாழ்ப்பாணிகளின் கவலை எல்லாம்...
கனடா விசா கிடைக்குமா? என்பது தான்!

இருந்தாலும், கனடா வந்தாலும், மாவீரர் தினக் களியாட்டத்தில் கலந்து கொண்டு, காட்போட் கல்லறைகளுக்கு அஞ்சலி செலுத்தி, கொத்து ரொட்டியும் வாங்கிக் கொண்டு வீடு ஏகி, தமிழ்த் தேசியத்திற்கான தன் தேசியக் கடமையை நிறைவேற்றலாம், 'எங்கட ஒற்றுமையைக் காட்டி சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்து, தீர்வு வாங்கிக் கொள்ளலாம்', முடிந்தால் காங்கிரஸ் அலுவலகத்திற்கு கல் எறிந்தும் எதிர்ப்புக் காட்டலாம் என்பது கூட அந்த யாழ்ப்பாணிகளுக்கு உற்சாகம் தரக்கூடிய உண்மை தான்.

யாழ்ப்பாணிகளே, வெல்கம் ரு கனடா!

உங்களுக்கு விடுதலை கிடைக்கிறதோ என்னவோ, உங்களிடமிருந்து சிங்களவர்களுக்கு விரைவில் விடுதலை கிடைத்து விடும்.

# வாசிப்பும் யோசிப்பும்




வ.ந.கிரிதரன்

## இலக்கியம் ஒரு காலக் கண்ணாடி ம.வே.திருஞானசம்பத்தப் பிள்ளையின் படைப்புகளை முன்வைத்துச் சில குறிப்புகள்

*"டொராண்டோ"வில் 22.10.17 அன்று நடைபெற்ற ம.வே. திருஞானசம்பந்தப்பிள்ளையின் 'உலகம் பலவிதம்' தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வில் நான் ஆற்றிய உரை...*

இலக்கியம் ஒரு காலக்கண்ணாடி என்றொரு கூற்றுள்ளது. உண்மை. இலக்கியப் படைப்பொன்றினை ஆராய்ந்து பார்ப்போமாயின் பல்வேறு விடயங்களை



அப்படைப்பினூடு அறிந்து கொள்ள முடியும். அப்படைப்பில் பாவிக்கப்பட்டுள்ள மொழியிலிருந்து அப்படைப்பின் காலகட்டத்தை ஆய்வொன்றின் மூலம் அறிவதற்குச் சாத்தியமுண்டு. உதாரணத்துக்குச் சங்க இலக்கியப் படைப்புகளை எடுத்துக் கொள்ளலாம். அவற்றினூடு பண்டைத்தமிழரின் வாழ்க்கை முறை, இருந்த நகர அமைப்பு, ஆட்சி முறை, நிலவிய மானுடரின் பல்வேறு விடயங்களைப் பற்றிய நம்பிக்கைகள் எனக்கூறிக்கொண்டே செல்லலாம். எனது இச்சிற்றுரையில் இலக்கியம் காலக்கண்ணாடி என்னும் அடிப்படையில் ம. வெ.திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்களின் படைப்புகளை உள்ளடக்கிய 'உலகம் பலவிதம்' நூலினை அணுகுவதாகும்.

அளவில் இந்நூல் பெரியது. நூலிலுள்ள அனைத்துப் படைப்புகளையும் குறுகிய காலத்தில் முழுமையாக வாசிப்பதென்பது சாத்தியமற்றதொன்று. ஆனால் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்னும் அடிப்படையில் இந்நூலை அணுகலாம். அதுவும் கூட முழு நூலைப்பற்றிய இவ்விதமானதோர் அணுகுதலுக்குரிய மாதிரி அணுகலாகவிருக்கும் என்பதால், அது என் நம்பிக்கை என்பதால் அவ்விதமே இந்நூலை அணுகுவதற்கு முடிவு செய்து, அவ்வணுகுதலின் அடிப்படையில் இலக்கியம் காலக்கண்ணாடி என்னும் கூற்றிலுள்ள உண்மை பற்றி அறிதற்குச் சிறிது முயற்சி செய்வதே என் நோக்கம்.

இதற்காக நான் இத்தொகுப்பபிலுள்ள இரு நாவல்கள் மற்றும் ஆசிரியரின் பத்திகள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றின் மீது என் கவனத்தைத் திருப்பப் போகின்றேன்.

### 1. மதமாற்றம்

அந்நியராட்சியின் கீழ் முக்கியமானதொரு விடயமாக மதமாற்றம் இருந்ததைக் காண முடிகின்றது. பாதிரிமார்கள் மக்களை மதம் மாற்றுவதில் தீவிர முனைப்புடன் செயற்பட்டதை அறிய முடிகின்றது. பல்வேறு ஆதாயங்களுக்காக மக்கள் மதம் மாறியதையும் , பலர் மத மாற்றத்துக்கெதிராகச் செயற்பட்டதையும் ம.வெ.தி. யின் புனைகதைகளிலிருந்து காணமுடிகின்றது. அவர்

இந்துக்கல்லூரியின் ஆசிரியராக நீண்ட காலம் பணியாற்றியவர். இந்து சாதனம் பத்திரிகையின் ஆசிரியராக விளங்கியவர். இயல்பாகவே மதமாற்றம் என்பது அவரை மிகவும் பாதித்ததொரு விடயமாக இருந்திருக்கும். இருந்திருக்க வேண்டும். தன் எழுத்தை மதமாற்றத்துக்கெதிராக மக்களை விழிப்படைய வைப்பதற்கு அவர் பாவித்ததை அவரது புனைகதைகள் வெளிப்படுத்துகின்றன.

நூலின் முதலாவது ஆக்கம் அவரது 'ஓம் நான் சொல்லுகின்றேன்' பாகம் 1 என்றுள்ளது. ஆனால் படைப்பு முழுமையான குறுநாவலாகத் தென்படுகின்றது. முத்தன் முதலாளி முத்துக்குமாரசுவாமிப் பிள்ளையான முறை என்று உப தலைப்பு இடப்பட்டுள்ளது. முத்தன் என்னும் தந்தையைச் சிறுவயதில் இழந்த ஏழைசசிறுவன் தாயாருடன், திருகோணமலைக்குத் தோணியில் சென்று, யாழ்ப்பாண முதலாளியொருரின் கடையில் பணியாற்றி, நல்லபெயர் பெற்று, முத்து என்று அழைக்கப்பட்டுப் பின்னர் அம்முதலாளியின் மகளான தனலட்சுமியை மணம் முடித்து முத்துக்குமாரசுவாமிப்பிள்ளையான கதையினைக்கூறுவது. இக்கதையை மிகவும் அழகாகப்புனைந்துள்ள ஆசிரியரின் திறமையினை இக்கதைக்கு வைத்த தலைப்லிபிருந்து அறிந்து கொள்ளலாம். இக்கதையின் தலைப்பு 'ஓம் நான் சொல்லுகிறேன்'. முதலாளி முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை எவர் தம்மைம்கண்டு மரியாதை செய்யும்போதும் 'ஓம் நான் சொல்லுகின்றேன்' என்பார். பின்னர் வீட்டுக்கு சென்றதும் தமது பணப்பெட்டகத்தைத் திறந்து ஏதோ முணுமுணுப்பார். இவர் இவ்விதம் செய்வதை மனைவி இடையிடையே கண்டாளாயினும் அதற்கான காரணத்தைக் கேட்கவில்லை. இவர் இவ்விதம் செய்வதை ஊர் முழுவதும் அறிந்திருந்தது. அவர்களும் தங்களுக்குள் இவர் ஏன் இவ்விதம் செய்கின்றார் என்பதற்கான காரணம் பற்றி முணுமுணுத்துக் கொள்வார்கள். ஆனால் இதற்கான காரணம் கதையின் முடிவில் உடைபடுகின்றது. ஒருமுறை இவரது முதலாளியே இதற்கான காரணத்தைக் கேட்டு விடுகின்றார். அப்போது முதலாளி முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை பின்வருமாறு கூறுவார்॰

'இந்த மரியாதைகளும் உபசாரங்களும் எனக்கல்ல. என்னிடத்திலுள்ள பணத்திற்குத் தான் என்பது புலப்பட்டது. ஆனதினால் யார் யார் மரியாதை செய்கின்றார்களோ அப்படிச் செய்தவர்களுடைய பெயர் களையெல்லாம் அவதானித்துக் கொண்டு. வீட்டிற்கு மீண்டவுடன் அங்கிருக்கும் பணப்பெட்டகத்தைத் திறந்து இன்னின்னார் இன்றைக்கு உனக்கு மரியாதை செய்தார்கள் என்று தனித்தனியவர்களுடைய பெயர்களைப் பெட்டகத்திலிருக்கும் பணத்திற்குச் சொல்லிவிடுவேன்' ,பக்கம் 26

இதுதான் காரணம். இக்குறுநாவலில் வெளிப்படும் முக்கிய விடயங்கள் சிலவாகக் கீழுள்ளவற்றைக் குறிப்பிடுவேன்.

அந்நியமார்க்கப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்கள் சைவப் பிள்ளைகள் மதம் மாறுவதைத் தடுப்பதற்காக வேலாயுதம்பிள்ளை என்னும் செல்வந்தர் சைவ ஆங்கில வித்தியாசாலையைத் தொடங்கி ஏழைப் பிள்ளைகளிடத்தில் பணம் வாங்காமால் அவர்களுக்கு இலவசமாகவே கல்வியை வழங்கி வருபவர். அதனை நாவல் பின்வருமாறு வெளிப்படுத்தும்॰

'சைவப்பிள்ளைகள் அந்நிய மார்க்கப் பள்ளிக்கூடங்களிலே படித்துச் சமயாபிமானங்கெட்டு ஈற்றிலே சிலர் தம் மதத்தை விட்டு அந்நிய மதத்திற் சேர்வதைக் கண்டு மனம் பொறாராய், தாமாகவே ஒரு சைவ ஆங்கிலப்பாடசாலையைத் தனியே தொடங்கி ஏழைப் பிள்ளைகளிடத்துக் கல்வி வேதனமு 'பெறாமல் நடாத்தி வருபவர்.',22, 23.

மதமாற்றம் அக்காலகட்டத்தில் அந்நிய மார்க்கப்பள்ளிகளில் (கிறிஸ்தவப் பாடசாலைகளில்) நடைபெற்றுள்ளதை இக்கதை வெளிப்படுத்துகின்றது.

இதுபோல் ம.வே.தி.யின் இன்னுமொரு நாவலான 'உலகம் பலவிதக் கதை' என்னும் உபதலைப்புடன் வெளியான 'கோபால- நேசரத்தினம்' நாவலும், மதமாற்றத்தையும், அதற்கெதிரான செயற்பாடுகளையும் வெளிப்படுத்தும் நாவலாக இருப்பதை அறிய முடிகின்றது. இந்நாவலின் மையக்கருத்தே மதமாற்றத்துக்கெதிராக மக்களை விழிப்படைய வைத்தலே என்பதை நாவலின் கதைப்பின்னலும், முடிவும், இடையிடையே பாத்திரங்கள் நடத்தை, கூற்றுக்கள் வாயிலாக வெளிப்படும் கருத்துக்களும் வெளிப்படுத்துகின்றன.

கோபாலன் என்னும் சிறுவன் சிறுவயதிலேயே தந்தையை இழந்தவன். தாயார் பிட்டு விற்று அவனைப் படிக்க வைக்கின்றாள். அவனும் மிகவும் திறமையாகப் படித்து வருகின்றான்.

அவனைப் பாதிரியார் ஒருவரின் உதவியுடன் பாதிரிப் பள்ளிக்கூடமொன்றில், அவளது குடும்பநிலை காரணமாக இலவசமாகப் படிப்பிக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. பாதிரியாரின் முக்கியமான நோக்கம் மிகவும் திறமைசாலியான அவனை எப்படியாவது கிறித்தவ மதத்துக்கு மாற்றுவதுதான். அதன் காரணமாகவே அவனுக்கு இலவசமாகப் படிப்பிக்க அவர் வசதிகள் செய்து கொடுக்கின்றார். இடையில் ஒரு சமயம் அவன் எட்டாம் வகுப்பு மாணவனாகவிருக்கும்போது பாதிரியார் அவனைத் தன் வீட்டுக்கு அழைத்துச்சென்று 'எப்பொழுது மனந்திரும்புவது?' என்று கேட்கின்றார். அதன் அர்த்தம் அவன் எப்பொழுது மதம் மாறுவதென்று. அதனையுணர்ந்து அவன் தன் தாயாரிடம் சென்று

அதனைத் தெரிவிக்கின்றான். அவளோ ஆசிரியர் இன்னுமொருமுறை பாதிரியார் அவ்விதம் கேட்டால் அவன் அங்கு சென்று படிக்கத்தேவையில்லை என்று கூறுகின்றாள். பின்னர் பாதிரியாரும் தான் இனிமேல் அவ்விதம் கேட்பதில்லை என்று உறுதி கூறியதன் அடிப்படையில் கோபாலன் அங்கு படிப்பைத் தொடர்கின்றான்.

பாதிரியாரின் மன மாற்றத்துக்குக் காரணம் விட்டுப்பிடிப்பதுதான். அவரிடம் அவ்விதமான மனமாற்றத்தை ஏற்படுத்திய அவருடன் பணியாற்றும் குட்டிப்போதகர் என்பவர் கோபாலனைத் தன் வீட்டில் தன் மகனுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்கின்றார் காரணத்தோடுதான். அவருக்குப் பால்ய வயதில் திருமணம் செய்து விதவையான நேசரத்தினம் என்ற மகளும் இருக்கின்றாள். எப்படியாவது கோபாலனை அவளுக்கு மணம் செய்வித்து அவனை மதம் மாற்றி விடவேண்டுமென்பதுதான் அவரது திட்டம். இவ்விதம் செல்லும் கதை இறுதியில் கோபாலன் - நேசரத்தினத்தின் திருமணத்துடன் முடிகின்றது. அவளும் சைவ சமயத்துக்கு மனம் மாறுகின்றாள். பாதிரியார் எவ்வளவோ முயற்சிகள் செய்கின்றார் அவளை மதம் மாறாமலிருக்க. கிறித்தவ இளைஞனொருவனுக்கு அவளை மணம் முடிக்கப் பாடுபடுகின்றார். ஆனால் நேசரத்தினமோ பிடிவாதமாக இருந்து விடுவதால் அவரது முயற்சியும் தோற்று விடுகின்றது. இறுதியில் குட்டிப்போதகரையும் பாதிரியார் பணியிலிருந்து நீக்கி விடுகின்றார். காரணம் அஞ்ஞானியை மணந்த அவளது பிள்ளையினால் அவர் அங்கு வேலை செய்ய முடியாது என்பதுதான். இதனால் மனமுடைந்த குட்டிப்போதகரும் மகனும் சைவ சமயத்தவர்களாக மீண்டும் மாறிவிடுகின்றார்கள். ஆம். இவர்கள் ஆரம்பத்தில் சைவ சமயத்தவர்களாக இருந்து மதம் மாறியவர்கள்தாம். இதுதான் நாவலின் முக்கியமான மையக் கருப்பொருள்.

இந்நாவலில் பாதிரியாரின் முயற்சிகள் எவ்வளவுதூரம் அக்காலகட்டத்தில் பாதிரிமார்கள் மக்களை மதமாற்றம் செய்வதில் மும்முரமாகவிருந்தார்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. இந்நாவலில் பாதிரியார் நேசரத்தினத்திடம் அவள் அஞ்ஞானியான கோபாலனை மணந்தால் அவளது தந்தை வேலையை இழக்க நேரிடும் என்று கூட பயமுறுத்துகின்றார். உதாரணத்துக்கு சில பகுதிகளைப் பார்க்கலாம்.

'பாதிரி (சிறிது நேரம் யோசித்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டு) நேசம், உம்மைச் சாத்தான் மெத்தவும் அணாப்பி விட்டான். அவனிலிருந்து உம்மை மீட்க முடியாமலிருக்கின்றது. ஆனால் ஒன்று சொல்கின்றேன்,, அதை நன்றாய் மனசில் வைத்துக் கொள்ளும் நீர் அஞ்ஞானியானால் உம்முடைய பிதா போதகராக வேலை பார்க்க முடியாது.' ,பக்கம் 67.

இந்துக் கல்லூரியொன்றின் ஆசிரியராக, இந்து சாதனம் பத்திரிகை ஆசிரியராக விளங்கியவர் நூலாசிரியர் ம.வே.தி அவர்கள். அவரைப் போதகர்களின் மதமாற்றும் செயற்பாடுகள் பலமாகப் பாதித்திருக்க வேண்டும். அதன் விளைவுதான் மதமாற்றத்துக்கெதிரான இந்த நாவல்.

### 2. பெண்களின் நிலை.

இன்னுமொரு விடயத்தையும் இந்நாவல் வெளிப்படுத்துகின்றது. அது பெண்களின் நிலை. குறிப்பாகக் கிறிஸ்த்தவப் பெண்களின் நிலை. நாவல் எழுதப்பட்ட காலகட்டத்தில் பால்ய விவாகமொன்றில் கணவனையிழந்து கைம்மை நிலையினை அடைந்தவள் நேசரத்தினம். நேசரத்தினம்-கோபாலன் காதல், அவர்கள் பழகும் முறையெல்லாம் அக்காலகட்டத்தில் கிறித்தவப்பெண்கள் எவ்வளவு தூரம் முற்போக்காக இருந்தார்கள் என்பதை வெளிப்படுத்துகின்றது. அறுபதுகளில் வெளியான வர்த்தக அம்சங்களை உள்ளடக்கிய திரைப் படங்களிலொன்றான 'ஒளிவிளக்கில்' நான்கு வயதில் திருமணம் செய்து விதவையான சௌகார்ஜானகி வளர்ந்த நிலையில் காதல் உணர்வுகளால் பீடிக்கப்படும் நிலை வருகையில் அது தகாது என்று உணர்ச்சிப்பிளம்பாக வெடித்தெழுவதைக் காணலாம். அறுபதுகளில் வெளியான தமிழ்த் திரைப்படமொன்றில் வரும் கைம்மை நிலையினை அடைந்த பெண்ணின் நிலை இவ்வாறுதான் இருந்திருக்கின்றது.

ஆனால் 1921அம் ஆண்டில் இந்து சாதனம் பத்திரிகையில் வெளியான இக்கதையில் வரும் நேசரத்தினத்தின் பாத்திரம் எவ்வளவு தூரம் கிறித்தவப்பெண்கள் முற்போக்காக இருந்திருக்கின்றார்கள் என்பதை வெளிப்படுத்துகின்றது. இது அந்நியராட்சியில் ஏற்பட்ட நன்மைகளிலொன்றாக நான் கருதுவேன். இங்கு நான் கிறித்தவப் பெண்களென்று குறிப்பிடுகின்றேன் என்று ஏன் குறிப்பிடுகின்றேன் என்று நீங்கள் கேட்கலாம். அதற்குக் காரணத்தை நாவலிலேயே வரும் நேசரத்தினத்தின் கூற்று வெளிபடுத்துகின்றது.

'..சைவர்களாகிய உங்களுடைய பெண்களுள் அநேகர் ஆடவர்களைக் கண்டால் வீட்டினுள் ஓடியொளிக்கும் வழக்கமுடையவர்களாக இந்தக் காலத்திலும் காணப்படுகின்றார்கள். நாங்கள் அப்படியோடி ஒளிப்பதில்லை', பக்கம் 32.

### 3. அந்நியராட்சி ஏற்படுத்திய விளைவுகள்

அடுத்து ஆங்கிலேயரின் ஆட்சியினால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட மாற்றங்களையும் ம. வே.தி.யின் எழுத்துக்கள் பதிவு செய்கின்றன. உதாரணமாக ஆங்கிலம் கல்வி கற்கும் மாணவர்கள்

பாடசாலைக்குச் செல்வதையும் , விளையாடுவதையும் தவிர வேறொன்றுமறியமாட்டார்கள். அதுபற்றி ம.வே.தி.யின் பத்தி எழுத்தொன்றில் கூறப்பட்டிருப்பதைப் பார்ப்போம்.

'..கமத்தொழிலையேனும் ஏதுமொரு கைத்தொழிலினையும் கல்வி பயில்வதோடு விஷேசமாகப் பயின்றுகொள்ள வேண்டு மென்னும் ஆர்வத்தை இவர்களிடத்தில் காணோம். உலகத்தில் உண்ணவும் உடுக்கவும் உறங்கவும் ஆங்கிலம் பயிலவும் விளையாடவும் வாய்த்தால் உத்தியோகம் பார்க்கவுமே தாங்கள் திருவவதாரஞ் செய்ததாக நினைத்துக்கொண்டு இம்மாணவர் பேரிடர்ப்படுகின்றனர்...' உலகம் பலவிதம் 1922 நவம்பர் 23.

இவ்விதமாகக் குறிப்பிடும் மாணவர்களுக்கு சிகரட், பீடி, சுருட்டு, லெமொனட் லொஸன்சர் ஊற்றுபேனா, றிஸ்ட் கடிகாரம் பட்டுக் கைக்குட்டை, பொடிப்பட்டை, கறுவாப்பட்டை, கடலை, துவிச்சக்கர வண்டி முதலிய டாம்பீகத்துக்குரிய பொருட்களாகிய இவற்றின் செலவிற்கும் பணங் கொடுத்து இப்பெற்றார் பெரும்பான்மையும் இலவு காத்த கிள்ளைபோல் அணாப்புண்டு போகின்றார்கள் என்றும் குறிப்பிடுகின்றார். உலகம் பலவிதம் 1922 நவம்பர் 23, 24.

எம் காலத்திலிருந்ததை விட 1920 களில் ஆங்கிலேயரின் காலத்தில் மாணவர்களுக்கு சிகரட் போன்றவற்றை வாங்குவதற்குக் கூடப் பெற்றார் பணம் கொடுத்ததை அறிய முடிகின்றது. எம் காலத்தில் இவற்றையெல்லாம் மாணவர்கள் பெற்றார், ஆசிரியர்களுக்குத் தெரியாமல் ஒளித்துச் செய்தார்கள். பெரியவர்களுக்கு மரியாதை கொடுத்தார்கள். இந்நிலையில் அக்காலத்து மாணவர்களின் மனநிலையும், செயல்களும் வியப்பை அளிக்கின்றன. அத்துடன் விளையாட்டுத் திடல்களுக்குச் செல்லும் மாணவர்கள் செய்யும் கூத்துக்களையும் ஆசிரியர் பட்டியலிடுகின்றார்.

'இனி இவர்கள் விளையாட்டு முன்றிலுக்குப் புறப்பட்டு விட்டால் கூட்டிலிருந்த புலி வெளியே புறப்பட்டுக் காட்டிற்குச் செல்வது போலிருக்கும். தெரு வீதியாற் செல்வோரிற் சிலரினுஞ் சிலரே இம்மாணவர்களின் பரிகாச வார்த்தைக்கு அகப்படாமல் செல்லுதல் முடியும். ஒரு கிழவன் வீதி வழியே போனால் அவனுக்கொரு பரிகாச வார்த்தை, மாட்டு வண்டி சென்றால் அதற்கொரு பரிகாச வார்த்தை, யாரும் பெண்பாலார் அலட்சியமாகச் சென்றால் அதற்கொரு பரிகாச வார்த்தை, புதிதாகத் துவிச்சக்கர வண்டியோடு மொருவர் ஒரு கிழவி மீது முட்டி கிழவியை வீழ்த்தி விட்டால் அதற்கு அடங்கா நகைப்பும், இடைவிடாக் கரகோசமும் செய்வர்..' இவ்விதம் பரிகாசம் செய்யும் மாணவர்களின் தேகநிலையை ம.வே.தி நகைச்சுவையாக விபரிப்பார்.

'இவர்கள் தேகவலிமையைச் சொல்லுகிலோ கீரைமரம் பிடுங்குவதற்கு ஏலப்பாட்டுப் பாடும் நிலையிலிருக்கின்றனர்' உலகம் பலவிதம் 1922 நவம்பர் 23 பக்கம் 93.

இதற்குரிய தீர்வாக ம. வே.தி கருதுவது ஆங்கிலக் கல்வியை ஒழித்துத் தமிழ்க் கல்வியில் கற்பிப்பதே. அதனையே அவரது பின்வரும் கூற்று வெளிப்படுத்துகின்றது. 'எய்தவனிருக்க அம்பை நோவதுபோல் இவர்களை நோவதாலும் குறை கூறுவதினாலும் ஆம்பயன் யாதுமில்லையாம். இவர்கட்கு விதேசியக் கல்வியையொழித்துத் தேசியக் கல்வியை யூட்ட வேண்டும்.' உலகம் பலவிதம் 1922 நவம்பர் 23 பக்கம் 94.

மதமாற்றம், விதேசக் கல்வி முறையும் ஒழிக்கப்பட வேண்டுமென்பது ம.வே.தி.யின் நிலைப்பாடாக இருப்பதையும், தம் எழுத்தை அதற்காகவே அவர் பாவிப்பதையும் அறிய முடிகின்றது.

## 4. மதுப்பழக்க வழக்கங்கள்

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்த யாழ்ப்பாணப் பெருங்'குடி' மக்களின் குடிப்பழக்க வழக்கங்கள் பற்றி ம.வே. திருஞானசம்பந்தப் பிள்ளையின் 'உலகம் பலவிதம்' என்னும் தொகுப்பு நூலில் சுவையான தகவல்கள் பல காணப்படுகின்றன. ஒரு சமயம் யாழ்ப்பாணத்திலுள்ள கள்ளு, சாராயத் தவறணைகள் பல அகற்றப்படுகின்றன. அது பற்றியும் அதற்கான காரணம் பற்றியும் ம.வே.தி. சுவையாக , வேடிக்கையாகக்கூறுவார்.

'யாழ்ப்பாணத்திலுள்ள கள்ளு, சாராயத்தவறணைகள் பல அகற்றப்படுகின்றன. இப்படிச் செய்வதனாலே மதுபானத்தாலே வருங் கேடும் பொருட்செலவும் விரைவில் நீங்கிவிடுதல் கூடுமென நம்மவர் எண்ணக்கூடும். ஆனால் விஷயம் அப்படியன்று. மேலைத்தேச மதுபானங்காளாகிய பிறண்டி, விஸ்க்கி முதலியன விற்கப்படுஞ் சாப்புகட்டு இப்பொழுதிருக்கும் மானம் வேறு எதற்கும் எவருக்கும் இல்லையெனலாம். கள்ளுக்குஞ் சாராயத்திற்கும் பிரதியாக ஜின் எனப்படும் ஒரு மதுபானம் புறப்பட்டிருக்கின்றது. ஜின் வேண்டிய மட்டிற்குச் சாப்புகளில் இருப்பதால் மதுபானிகட்கும் பணப்பஞ்சமன்றி மதுபானப் பஞ்சமில்லை' ,உலகம் பலவிதம் 1922 டிசம்பர் 14 பக்கம் 97.

இவ்விதமாகக் கள்ளுத்தவறணைகள் அகற்றப்பட்டதால் மதுப்பிரியர்கள் சனிவாரத்திற் காலையிலும் மாலையிலும், ஏனைய வாரங்களில் மாலைக்காலத்திலும் பறங்கித்தெருவிலுள்ள குடிவகைச் சாப்புகளைத் தரிசனஞ் செய்து வருகின்றார்கள் என்பதையும் மேற்படி பத்தி எழுத்தின் மூலம் அறிய முடிகின்றது. உலகம் பலவிதம் 1922 டிசம்பர் 7

இவ்விதமாகக் கள்ளு, சாராயத்திலிருந்து ஜின்னுக்கு

மாறிய மதுபானப்பிரியர் ஒருவரின் கூற்றையும் ஆசிரியர் வேடிக்கையாகப் பதிவு செய்திருக்கின்றார்ஃ

'புளீச்சற் கள்ளையும், ஈரலையறுக்குஞ் சாராயத்தையும் விட்டு ஜின்னையல்லவோ குடிக்க வேண்டும். அது அதிகம் மஸ்து உள்ளதானாலும் குடிவகையல்ல. எல்லா வியாதிகளுக்கும் மருந்து தம்பீ. கொஞ்சம் விலை கூடத்தான். அதுக்கென்ன செய்கிறது' என்றார். அவருடன் இன்னுங் கொஞ்ச நேரந் தாமதித்துப் பேசினால் அவர் நம்மையும் மதுபானஞ் செய்யும்படி தூண்டி விடுவார் போலிருந்தமையினால் நான் சரி அண்ணே போய் வாருமென்று சொல்லிக் கடத்தி விட்டேன் என ஒரு வித்தியாசாலை உபாத்தியாயர் கூறினார்.' ,உலகம் பலவிதம் 1922 டிசம்பர் 14 பக்கம் 97

இதை வாசித்தபோது எனக்கு நித்தி கனகரத்தினத்தின் 'கள்ளுக்கடைப் பக்கம் போகாதே' பொப் பாடலில் வரும் 'விட்டமின் பி என்று வைத்தியரும் சொன்னதாலே விட்டேனொ கள்ளுக்குடியை நான்' என்னும் வரிகள்தாம் நினைவுக்கு வந்தன.

## 5. அந்நியர் ஆட்சியிலும் தமிழர், சிங்களவர்களுக்கிடையிலான பிரச்சினைகள்...

அந்நியர் ஆட்சியிலும் தமிழர், சிங்களவர்களுக்கிடையிலான பிரச்சினைகள் எவ்விதமிருந்தன என்பது பற்றிய தகவல்களையும் ம. வே.திருஞானசம்பந்தப்பிள்ளையின் பத்தி எழுத்துகள் புலப்படுத்துகின்றன. உதாரணத்துக்கு ஒன்று சான்றினைக் குறிப்பிடுவேன்.

அரசியற் திருத்தமொன்று பற்றிய ஆவணமொன்றினை இலங்கைத்தமிழர்கள் ஐரோப்பியர், பறங்கியர் மற்றும் முஸ்லீம் மக்களுடன் இணைந்து சிங்கள மக்களைத்தவிர்த்து அனுப்பி வைத்த விபரத்தைப் பற்றியது. அது பற்றிய ம.வே.தி.யின் பத்திக்குறிப்பு வருமாறுஃ

'..இவ்விலங்கையின் ஈடேற்றத்தின் பொருட்டு சிங்களர், தமிழர் என்னும் இரு சாதியாளரும் ஒத்துழைத்தாலே அநுகூலமுண்டாகுமென் எண்ணி தமிழர்களாயுள்ளவர் சிங்களருடன் சில காலமாக ஐக்கியப்பட்டு உழைக்க முயன்றனர். ஆனால் சிங்களரோ அந்தச் சமையத்திலும் சுயநயங் கருதுபவர்களாய் பிரிவினை காட்டி நின்றனர். சிங்களரியல்பை மாற்றுவது அசாத்தியமெனக் கண்ட தமிழர் அவர்களை விடுத்து ஐரோப்பியர், பறங்கியர் இஸ்லாமானவர் என்னுமிவர்களுடன் தாமுஞ் சேர்ந்து தங்கள் சாதியின் சுயாதீனத்தின்பொருட்டு உழைக்கத் தொடங்கினர். இச்சிங்களரையொழிந்த ஏனைய சாதியார்களின் பிரதிநிதிகளும் சனத்தலைவர்களும் இலங்கை அரசியற்றிருத்தத்தைக் குறித்து இலங்கை மந்திரிக்கு ஒரு விண்ணப்பம் சில மாசங்கட்டு முன் அனுப்பியிருந்தனர். உலகம் பலவிதம் ஆகஸ்ட் 14, பக்கம் 86

## 6. தொழில் நுட்பம் மற்றும் நகர அமைப்பு

அக்காலகட்டத்தில் நிலவிய போக்குவரத்து சம்பந்தமான தொழில் நுட்பம் பற்றியும் இந்நூ லிலுள்ள ஆசிரியரின் உலகம் பலவிதம் பத்தி எழுத்தொன்றில் விபரிக்கப்பட்டுள்ளது. அது தார் றோட்டிற்குப் பதில் றப்பர் றோட் போடுவதைப் பற்றியது. அது பற்றிய குறிப்பு வருமாறுஃ

'கொழும்பு நகரசங்கத்தார் நகர எல்லைக்குட்பட்ட தெருக்களுக்குத் 'தார்' இடுவதைத்தவிர்த்து 'றப்பர்' போடுவதற்கு யோசிக்கின்றனர். 'டார்லி றோட்' எனப்படும் வெள்ளைமணல் என்னுமிடத்திலுள்ள தெருவிற்கு றப்பர் இட்டுப் பரீஷித்துப் பார்த்தவிடத்திலே தாரிலும் பார்க்க றப்பர் விசேடமானதென்றும், தெரு விரைவிலே தேய மாட்டா தென்றும், வண்டிகள் சத்தமின்றிப் போக்குவரவு செய்யக்கூடுமென்றும் கண்டு பிடித்து விட்டார்கள். ,உலகம் பலவிதம் ஆகஸ்ட் 24, 1922 பக்கம் 87

றப்பரைக் காங்கிரீட் அஸ்பால்ட் கலவையுடன் கலந்து வீதிகளை அமைப்பது அமெரிக்காவில் பீனிக்ஸ், அரிசோனாவில் அறுபதுகளில் முதல் முறையாக ஆரம்பிக்கப்பட்டதாக இணையத்தில் கூகுள் தேடுதலில் அறிய முடிந்தது. பிரான்ஸ் உள்படப் பல நாடுகளில் றப்பர் கலந்த அஸ்பால்ட் - காங்ரீட் கலவையுடன் வீதிகள் அமைப்பது பற்றியும் தகவல்களைப் பெற முடிகின்றது. மேலும் இவ்விதமான றப்பர் வீதிகள் பல நன்மைகளையும் தருகின்றனவாம். சத்தத்தைக் குறைக்கின்றன. நீண்ட காலம் நிலைத்து நிற்கின்றன. பாவித்த டயர்களிலிருந்து இதற்குத் தேவையான றப்பரைப் பெறுவதால் சூழலுக்கும் நல்லது. வீதிகளின் மேற்பரப்பில் உராய்வினை அதிகரிப்பதால் வாகனம் செலுத்துவதற்கும் நல்ல வீதி நிலைமையினைத் தருகின்றனவாம். ஆனால் இவ்விதமான தொழில் நுட்பம் இருபதுகளிலேயே பாவிக்கப்பட்டுப் பரீட்சிக்கப்பட்டதாக உலகம் பலவிதம் பத்தியெழுத்தில் பதியப் பட்டுள்ளதானது உண்மையில் என்னை வியப்படையே வைத்ததெனலாம். மான்ரியாலில் பாதாள ரயில்கள் றப்பர் தண்டவாளங்களில் ஓடுவதும், அவை சப்தமின்றி அமைதியாக ஓடுவதும் நினைவுக்கு வந்தன.

## யாழ் மணிக்கூட்டுக் கோபுரம்

யாழ் நகரிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரம் பற்றியும் சுவையான தகவல்களை நூலாசிரியரின் பத்தி எழுத்துக்கள் பகர்கின்றன. பழுதாகிப் போன நிலையிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரம் பலருக்கு உதவியாக விருந்ததையும், கைக்கடிகாரம் பாவனைக்கு வந்தபின்னர் அதனைப் பாவிப்பது குறைந்து போனது பற்றியும், பின்னர் அது திருத்தப்பட்ட விடயம் பற்றியும் மேற்படி பத்தி எழுத்துக்கள் எமக்கு

எடுத்துரைக்கின்றன. உலகம் பலவிதம் ஆகஸ்ட் 17, 1922 பக்கம் 85

'உலகம் பலவிதம் செப்டம்பர் 14' பத்தியில் பழுதாகியிருந்த மணிக்கூட்டுக் கோபுர மணிக்கூடு திருத்தப்பட்டு மீண்டும் இயங்குகின்ற விடயம் தெரிய வருகின்றது. அதில் 'யாழ்ப்பாணச் சுகாதார சங்கத்தார் இது ஓடாமல் நிற்பதைக்கண்டு போலும் கத்தோலிக்கக் குருவர்க்கத்திற் சேர்ந்த ஒருவரைக் கொண்டு இதனைத் திருத்துவித்துப் பழையபடி ஓடச் செய்திருக்கின்றனர்' என்ற விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் எதற்காகச் சுகாதார சங்கத்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது? நகரசபையினர் என்றல்லவா குறிப்பிட்டிருக்க வேண்டும். நான் நினைத்தேன் ஆசிரியர் வேடிக்கையாக ஓடாமல் நோய்வாய்ப்பட்டிருந்த மணிக்கூட்டின் நோய் நீக்க உதவிய சங்கம் என்பதால் சுகாதார சங்கத்தார் என்று குறிப்பிட்டுள்ளாரோ என்று. ஆனால் மேலும் சில இடங்களில் இவ்வாறே சுகாதாரச் சங்கத்தார் என்று குறிப்பிடப்பட்டிருப்பதால் அவர் வேடிக்கையாக அல்ல உண்மையாகவே அவ்விதம் குறிப்பிடுகின்றார் என்பதை உணர முடிந்தது. நகரின் நன்மையைக் கருத்தில் கொண்டு இயங்குவதால் நகர சபையினர் அவ்வாறும் அன்று அழைக்கப்பட்டனரோ அல்லது ம.வே.தி.மட்டுமே அவ்வாறு அழைத்தாரோ என்பது ஆய்வுக்குரியது.

மேலும் இப்பத்தியில் கோபுரமானது ஏழாம் எட்வேர்ட் மன்னர் இளவரசராக இலங்கைக்கு விஜயம் செய்தபோது 1875ம் ஆண்டு அவரது விஜயத்துக்கான ஞாபகச்சின்னமாகக் கட்டப்பட்டதென்றும், அப்போது மணிக்கூடு வைக்கும் நோக்கம் இருந்திருக்கவில்லை யென்றும், பின்னர் இலங்கையின் தேசாதிபதியாகவிருந்த ஸேர் ஜேம்ஸ்லாங்டனே தமது உபயமாக மணிக்கூட்டினை வாங்கி இக்கோபுரத்தில் பொருத்தியவர் என்றும் மணிக்கூட்டுக்கோபுரம் பற்றிய விபரங்கள் தரப்பட்டுள்ளன. ,பக்கம் 138

## 7. வழக்கிலிருந்த சொற்றொடர்கள் மற்றும் பழமொழிகள்

இந்நாவல் வெளிப்படுத்தும் அக்காலகட்டத்தில் நிலவிய மதமாற்றம், கைம்மை நிலை போன்ற விடயங்களில் கவனம் செலுத்தினோம். இனிமேல் வேறு விடயங்களில் கவனத்தைத் திருப்புவோம்.

இந்நாவல் அக்காலகட்டத்தில் மக்கள் மத்தியில் பாவிக்கப்பட்டுள்ள பழமொழிகள், சொற்தொடர்கள் பலவற்றைப் பட்டியலிடுகின்றது. அவற்றில் சிலவற்றை இன்னும் நாம் பாவித்தாலும் பலவற்றைப் பாவிப்பதில்லை. உதாரணத்துக்குச் சிலவற்றைப்பார்போம்.

'கெட்டார் தழையாரோ கேடொருக்கால் நீங்காதோ ',ஓம் நான் சொல்லுகின்றேன் பக்கம் 21

'நக்கினார் நாவெடார்' ,ஓம் நான் சொல்லுகின்றேன் பக்கம் 21

'அரைக்காசுக்குப் போன மானம் ஆயிரங்காசு கொடுத்தாலும் மீண்டும் வரப்போவதில்லை' ஓம் நான் சொல்லுகின்றேன் பக்கம்21

'உண்டானபோது கோடானு கோடி உறமுறையார் ' பக்கம் 22

'ஒரு நேரச்சோறு தா. ஒரு சேலை தா' ,கோபால - நேசரத்தினம் பக்கம் 27

'பாலன் பஞ்சம் பத்து வருடம்' ,கோபால - நேசரத்தினம் பக்கம் 27

'காலம் போம். வார்த்தை நிற்கும் கண்டாய்' ,கோபால - நேசரத்தினம் பக்கம் 27

'வடலி வளர்த்துக் கள்ளுக்குடிக்க நினைத்தவனைப்போல்' ,கோபால - நேசரத்தினம் பக்கம் 30

'பலாக்காய்ப்பாலில் அகப்பட்ட ஈ' ,கோபால - நேசரத்தினம் பக்கம் 34ஐ

'பஞ்சம் போம். பஞ்சத்திற் பட்ட வடுப்போகாது'. கோபால - நேசரத்தினம் பக்கம் 37

'நான் கம்பலபொதியை விட்டாலும் கம்பலபொதி என்னை விடுகிறதில்லை' ,கோபால- நேசரத்தினம் பக்கம் 44

'ஆனையும் அறுகம் புல்லிலே தடக்குப்படக்கூடும்' கோபால - நேசரத்தினம் பக்கம் 44

'செத்தையிற் கிடந்த ஆமையை மெத்தையிற் கொண்டுபோய் வைத்தாலும் அது செத்தையைத்தான் நாடும்' ,கோபால - நேசரத்தினம் பக்கம் 44

'சத்துருவானாலும் தம் வீட்டிற்கு வந்தால் பெரியோர் அவனைச் சமாதானம் பண்ணுவார்கள்' ,கோபால - நேசரத்தினம் பக்கம் 45

'கெட்ட மாடெல்லாம் கேப்பா புலத்திற்கு' கோபால - நேசரத்தினம் பக்கம் 46

'கோழி தின்ற கள்ளனுங் கூட உலாவுகின்றான்' கோபால - நேசரத்தினம் பக்கம் 55

'நீரடித்து நீர் விலகுவதல்ல' ,கோபால - நேசரத்தினம் பக்கம் 61

இவ்விதம் கூறிக்கொண்டே செல்லலாம். ம.வே.தி.யின் படைப்புகளில் இவை போன்ற அக்கால வழக்கிலிருந்த சொற் தொடர்களை, பழமொழிகளை நூற்றுக்கணக்கில் காணலாம். இவை பற்றித் தனியாகவே ஆய்வொன்றினைச் செய்யும் எண்ணிக்கையில் இவற்றின் எண்ணிக்கை ஆசிரியரின் பல்வேறு படைப்புகளிலுள்ளன.


இதுவரையில் இலக்கியம் ஒரு காலக்கண்ணாடி என்னும் அடிப்படையில் 'உலகம் பலவிதம்' நூலிலுள்ள படைப்புகள் சிலவற்றிலிருந்து சான்றுகளை எடுத்துரைத்தேன். இவை தவிர இன்னும் எத்தனையோ விடயங்களை அக்காலகட்டத்துச்

சமூக, அரசியல், பொருளாதார நிலைகளை வெளிப்படுத்தும் விபரங்களை, அக்காலகட்டத்தில் நிலவிய போக்குவரத்து மற்றும் பாவிக்கப்பட்ட தொழில் நுட்பம் பற்றிய விபரங்களை, நகரின் முக்கிய கட்டடங்கள் போன்ற விபரங்களையென்று இந்நூலின் படைப்புகள் வெளிப்படுத்துகின்றன. அதனை வைத்துப் பட்டப்படிப்பு மாணவர்கள் ஆய்வுகள் செய்வதற்குரிய வளமாகத் திகழ்கின்றது இந்நூலின் படைப்புகள் எனலாம்.

## அமரர் பொன் குலேந்திரனின் அறிவியற் புனைவுகள் பற்றி....

தமிழகத்தில் ஓவியா பதிப்பக வெளியீடாக வெளிவந்த எழுத்தாளர் பொன் குலேந்திரனின் 'காலம்' (அறிவியற் சிறுகதைகள்) தொகுப்புக்காக நான் எழுதிய அணிந்துரை இது. -

அறிவியல் புனைகதை (Science Fiction) என்றால் அறியப்பட்ட அறிவியல் தகவல்கள், உண்மைகளின் அடிப்படையில் எதிர்காலத்தில் அல்லது சம காலத்தில் நடக்க் இருப்பதை எதிர்வு கூறி, அதனடிப்படையில் படைக்கப்படும் புனைவு என்றுதான் பொதுவாக அறியப்பட்டுள்ளது. விண்வெளிப் பயணங்கள், ஏனைய கிரக உயிரினங்கள், பிரம்மாண்டமான விண்வெளித் தொலைவுகளைக் கடப்பதற்கான வழிவகைகள், புதிர் நிறைந்த விண்வெளி அதிசயங்கள் (கருந்துளைகள் போன்ற), பல்பரிமாண உயிரினங்கள், மானுடரின் எதிர்கால நிலை, நமது பூமியின் எதிர்கால நிலை, இவ்விதமான விடயங்களைக் கருப்பொருளாகக் கொண்டு படைக்கப்படும் புனைகதைகளையே அறிவியல் புனைகதைகள் என்போம். சமகால அறிவியல் உண்மைகளை விபரித்தலைக் கருப்பொருளாகக் கொண்ட புனைகதைகளை அவ்வகையான புனைகதைகளாகக் கருதுவதில்லை. ஆனால் அறிவியல் விடயங்களை




மையமாக வைத்துப் புனையப் பட்டவையாதலால் அவையும் அறிவியல் புனைகதைகளே என்று அத்தகைய புனைகதைகளைப் படைத்த எழுத்தாளர் ஒருவர் வாதாடினால் அவருடைய தர்க்கத்தையும் மறுப்பதற்கில்லை. அவ்வகையில் பொன் குலேந்திரன் அவர்களின் இத்தொகுதியிலுள்ள புனைகதைகளையும் அறிவியல் கதைகளாகக் கொண்டு இத்தொகுதிக் கதைகளை பற்றிச் சிறிது நோக்குவோம்.

பொன் குலேந்திரன் அவர்கள் ஒரு பௌதிகவியல் பட்டதாரி. அத்துடன் தொலை தொடர்புப் பொறியியலாளரும் கூட. அவரது பரந்த அறிவியல் உண்மைகளைப் பற்றிய அறிவு பிரமிக்க வைக்கின்றது. அவரது பன்முகப்பட்ட சுய தேடலை, சுய வாசிப்பை அது வெளிப்படுத்துகின்றது. தான் அறிந்ததை, உணர்ந்ததை சிறு சிறு கதைகளாக அழகாகப்புனைந்துள்ளார் அவர். அது அவரது எழுத்துத்திறனைப் புலப்படுத்துகின்றது.

இத்தொகுதியிலுள்ள சிறு கதைகளைப் பொறுத்தவரையில் மூன்று வகையான பிரதான பண்புகளை அவதானிக்க முடிகின்றது. முதலாவது வகைப்புனைகதைகள் பொதுவாக அறிவியல் கதைகள் என்று கூறப்படும் கதைகள். அடுத்தவகைப்பண்பாக சமகால அறிவியல் உண்மைகளை விபரிக்கும் கதைகள். மூன்றாவது வகைப்பண்பாக ஆசிரியரின் மத மற்றும் பாரம்பரிய நம்பிக்கைகளை ஆங்காங்கே வெளிப்படுத்தும் கதைகள். இவ்விதமாக முப்பண்புகளை வெளிப்படுத்தும் கதைகளில் பல ஆசிரியரின் படைப்புத்திறனை வெளிப் படுத்துவனவாக அமைந்திருக்கின்றன.

குலேந்திரன் அவர்களின் முன்னுரையில் அவர் கூறியிருப்பதும் மேற்படி என் அவதானம் சரியென்பதையே எடுத்துக் காட்டுகின்றது. 'இத்தொகுப்பில் உள்ள கதைகள் பல விஞ்ஞான தத்துவங்களையும் ஆராச்சிகளையும் கருவாகக் கொண்டவை.' என்றும் 'மூடநம்பிகைகளுக்கு அறிவியல் விளக்கம் கொடுகிறது கதைகள் 19, ,20' என்றும் அவர் குறிப்பிடுவதையே குறிப்பிடுகின்றேன்.

தொகுப்பின் முதலாவது கதையான 'காலம்' கருந்துளைக்கான பயணத்தைப்பற்றிக் கூறும் கதை. அப்பயணத்தினூடு கருந்துளைகள் பற்றிய தகவல்களையும் கதை உள்ளடக்கியுள்ளது. கருந் துளைக்குக்குப் பயணிப்பதைப்பற்றிய கனவினை உள்ளடக்கிய கதை. கருந்துளை பற்றி, அவை எவ்வாறு உருவாகுகின்றன என்பது பற்றியெல்லாம் தகவல்களைத் தநதாலும் , கதையிலுள்ளதைப்போல் கருந்துளைக்கு அருகில் பயணிக்க முடியாது. கருந்துளை ஒரு கிரகம் அல்ல. அது ஈர்ப்புச் சக்தி மிகவும் அதிகமான 'காலவெளி'ப் பிரபஞ்சத்தின் ஒரு பகுதி. கடும் ஈர்ப்பு விசை காரணமாக அதனை அண்மிக்கும் அனைத்துமே ஒவ்வொரு பக்கம் இழுபட்டு உருக்குலைந்து இல்லாமலாகி விடும். ஆனால் இக்கதை சிறுவன் ஒருவனின் கனவின் விபரிப்பால் நடைபெறுவதால்

கனவில் இவையெல்லாம் சாத்தியம் தானே என்று ஆசிரியர் கூறி விளக்கமளிக்கலாம். அவ்விதமளித்தால் நாமும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஏனெனில் கனவுகளில் நிஜ வாழ்வில் நடக்க முடியாத சம்பவங்கள் தோன்றுவதொன்றும் அதிசயமல்லவே. ஆனால் அச்சிறுவனின் கருந்துளைக்கான அக்கனவுப்பயணம், நடைமுறைச் சிக்கல்களைத்தீர்த்து இன்னுமொரு வழியில் கருந்துளைகளுக்கான பயணங்களை எதிர்காலத்தில் நிஜமாக்கிட எதிர்வு கூறுமொரு தீர்க்கதரிசனமாகக் கருதலாம். நேற்றைய கனவுகள் இன்றைய சாதனைகளல்லவா.

இக்கதை ஆசிரியரின் பாரம்பரிய விடயங்களிலான நம்பிக்கைகளையும் வெளிப் படுத்துகின்றது. மகன் தந்தையிடன் தனது விண்வெளிப்பயணக் கனவு சாத்தியமாகுமா என்று கேட்கின்றான். அதற்குத் தந்தை 'அகஸ்தியா. உன் கனவு நனவாகுமா என்பதை நாம் நாடி சாஸ்திரக்காரனிடம் கேட்டு விடுவோமே' என்று பதிலிறுக்கின்றார்.

இக்கதையை இத்தொகுப்பின் மாதிரிக் கதைகளிலொன்றாகக் குறிப்பிடலாம். பொதுவான அறிவியல் கதைகளிலுள்ளதைப் போல் விண்வெளிப் பயணத்தைப் பற்றி பேசுகின்றது. அதுவும் கருந்துளைக்கான விண்வெளிப்பயணத்தைப் பற்றி. அடுத்தது இக்கதை கருந்துளைகள் பற்றிய அறிவியல் தகவல்களை வழங்குகின்றது. அடுத்தது இக்கதை ஆசிரியரின் நாடி சாத்திரம் போன்றவற்றிலுள்ள ஈடுபாட்டினையும் வெளிப் படுத்துகின்றது. ஆரம்பத்தில் குறிப்பிட்ட மூன்று வகையான பண்புகளையும் இக்கதை வெளிப் படுத்துவதாலேயே தொகுப்பின் மாதிரிக் கதைகளிலொன்றாக இதனைக் குறிப்பிட்டேன்.

பொதுவாக அறிவியல் புனைகதைகள் என்னும் நோக்கில் புனையப்பட்ட கதைகளில் என்னை மிகவும் கவர்ந்த கதையாக 'விநோதன்' கதையினைக் குறிப்பிடுவேன். விநோதன் தொகுப்பின் மிகச்சிறந்த அறிவியற் கதையென்பேன். படைப்புத்திறனும் மிக்க சிறப்பான அறிவியல் கதையாக இதனைக் கூறுவேன். கதை இதுதான் கிறிஸ்தவனான ஜெயன் வானியற்பியல் துறையில் கலாநிதிப்பட்டம் பெற்ற அறிவியல் அறிஞன். வேற்றுலகத்து உயிரினங்கள் பற்றிய ஆய்வில் மூழ்கியிருப்பவன். அவனது மனைவி ஓர் இந்து. திறமையான 'புறோகிறாமர்'. வேற்றுலகங்களிலிருந்து வரும் சமிக்ஞைகளைப் பகுத்தாராய்ந்திடக் கூடிய 'புறோகிறா'மொன்றினை எழுதியவள். அவர்களிருவரும் மணம் புரிந்து கலிபோர்னியாவில் வாழ்ந்து வருபவர்கள். அவர்களுக்குப் பிறக்கும் மகன் விநோதமான தோற்றம் மிக்கவன். குட்டையான கால், கைகளுள்ளவன். பெரிய விழிகள், அகலமான நெற்றி, கூர்மையான காதுகள், குறைந்த தலைமயிர், முதிர்ச்சியான முகவாகு என விநோதமான தோற்றமுள்ளவன். பிறந்தபோது சில மணி நேரம் அழாத குழந்தை அவன். ஆனால் அவனது மூளை மட்டும் அபரிதமான வளர்ச்சியடைந்திருந்தது. ஒருமுறை தாய் வேற்றுலகச் சமிக்ஞைகளைப் பகுத்தாரய்வதற்காக எழுதிய 'புறோகிறாம்' வேலை செய்யவில்லை. அதனைத்திருத்தி வேலை செய்யுமாறு செய்கின்றான் இந்த விநோதமானவன். அதனைக் கொண்டு சமிக்ஞயொன்றினை வாசித்தபோது ஜெயனும், லக்சுமியும் திகைத்தே போனார்கள். அதுதான் இக்கதையின் முடிவும் கூட. அச்சமிக்ஞையில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது॰

"உங்கள் ஆராச்சிக்கு உதவ ஒருவனை உலகுக்கு அனுப்பியுள்ளோம். கொஞ்சம் பொறுங்கள். இன்னும் சில மாதங்களில் அவன் உதவியுடன் எம்முடன் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்' என்றது செய்தி.'. அப்படியானால் அந்த விநோதமான குழந்தை வேற்றுலக வாசிகளால் பூமிக்கு அனுப்பப்பட்ட குழந்தையா? ஆம் விநோதன் வேற்றுலக வாசிகள் பூமிக்கு அனுப்பிய குழந்தையேதான்.

இச்சிறுகதை சிறந்த அறிவியல் புனைகதை. நன்கு திட்டமிட்ட, சிந்தைக்கினிக்கக் கூடிய கற்பனை. அந்தக் கற்பனை ஆசிரியரின் படைப்புத்திறனைப் புலப்படுத்துகின்றது. படைப்புத்திறன் மிக்க இது போன்ற அறிவியல் புனைவுகளையே நூலாசிரியர் பொன். குலேந்திரனிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கின்றேன். நல்லதோர் அறிவியற் புனைவுக்கு மாதிரியாகத் தொகுப்பிலுள்ள சிறந்த கதையாக இதனையே எவ்விதத் தயக்கமுமில்லாமல் அடித்துக் கூறுவேன்.

இன்னுமொரு கதையான 'சக்தி மாற்றம்' கதையும் கவனத்தை ஈர்க்குமொரு கதை. இக்கதையின் பிரதான பாத்திரமான இயற்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்ற விஸ்வா பற்றி நூலில் இவ்விதம் விபரிக்கப்பட்டுள்ளது॰

'விஸ்வா பெளதிகத்துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். அவர் இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சக்தி மாற்றத்தைப்பற்றி ஆராச்சி செய்தவர். அறிவியலில் மட்டுமல்ல ஆன்மீகத்திலும் ஈடுபாடுள்ளவர். உயிர் வாழும் எந்த ஜீவனுக்கும் உடல், ஆன்மா என்பது இரு முக்கிய அம்சங்களாகும். உடல். அழிந்தாலும் ஆன்மா அழியாது. ஊடலானது இறப்பின் போது செயல் இழந்துவிடுகிறது. ஆனால் ஆன்மா என்ற சக்தியானது, சக்தி மாற்றத்தினால் மறுபிறவி மூலம் வேறு புது உடலுக்குள் புகுந்துவிடுகிறது. இந்தத் தத்துவத்தை கருவாகக் கொண்டே அவரது ஆராச்சியிருந்தது.'

சக்தி மாற்றத்தைப்பற்றிக் குறிப்பிடு கையில் ஆசிரியர் ஐன்ஸ்டைனின் புகழ்பெற்ற சூத்திரமான $E=MC^2$ பற்றிக் குறிப்பிடுகையில் 'இதன் படி

ஒவ்வொரு பொருளோடு தொடர்புள்ள சக்தியுண்டு. சக்தியில் மாற்றம் ஏற்படும் போது திடப்பொருள் மாறுகிறது. ஒவ்வொரு பொளுக்கும் சக்தியோடு இணைந்த இயற்கையான அலை அதிர்வுண்டு.° என்று கூறுகின்றார். நானறிந்த வரையில் மேற்படி சூத்திரம் பொருளின் உள்ளிருக்கும் சக்தியை அப்பொருளை அழித்து உருவாக்குவதைப் பற்றிக் கூறுகின்றது. ஆனால் ஆசிரியர் குறிப்பிடும் உடல் என்பதும் ஆத்மா என்பதும் வேறு வேறானவை. உடல் அழிந்தாலும், ஆன்மா அழியாது. ஆனால் ஐன்ஸ்டைனின் சூத்திரம் பொருளை அழித்துப் பெறும் சக்தியைபற்றிக் கூறுகின்றது. இக்கதை கூறும் விடயமும் சுவாரசியமானது. இறந்த பூனையொன்றின் உடலுக்குள் எலியொன்றின் உயிர்ச்சக்தியைச் செலுத்தியபோது, உயிர்த்தெழும் பூனையானது பூனையில் இயல்புகளுடனேயே செயற்படுகின்றது. எலியின் இயல்புகளுடன் அல்ல. இச்சிறுகதையில் சித்தர்களின் அறிவியல் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்து மதக் கோட்பாடுகள் பற்றியும் குறிப்பிடப் பட்டுள்ளது. இவை இக்கதை பூரணமான அறிவியற் கதையென்னும் வரைவிலக் கணத்துக்குள் வருவதைத்தடுத்து விடுகின்றது. இருந்தாலும் இதுவும் இத்தொகுப்பில் காணப்படும் மூவகைப் பண்புகளையும் பிரதிபலிக்கும் புனைகதையாகக் குறிப்பிடலாம். கூடவே ஆசிரியரின் படைப்புத்திறனை வெளிப்படுத்தும் கதையாகவும் குறிப்பிடலாம். எலியின் உயிர்ச்சக்தி பூனையின் உடலுக்குள் சென்றதும் பூனையின் இயல்புடன் செயற்படுகின்றது என்னும் ஆசிரியரின் கற்பனை உண்மையில் கதையின் படைப்புத்திறனை வெளிப்படுத்துகின்றது.

தொகுப்பிலுள்ள இன்னுமொரு கதை 'மலடி'. தேவனும் அபிராமியும் கணவன் மனைவி. அவர்களுக்குக் குழந்தையில்லை. உண்மைக்காரணம் கணவன் தேவனிலுள்ள குறைபாடே. அவனது விந்து குழந்தைகள் உருவாவதற்கான சக்தியை இழந்து விட்டது. தேவனின் நண்பன் டாக்டர் சந்திரன் புகழ்பெற்ற மகப்பெற்று வைத்தியன். அவன் இதற்கு ஒரு வழி சொல்கின்றான். அதன்படி இன்னுமொருவரின் யாரென்று அறியாத ஒருவரின் விந்தினை அபிராமியின் கருப்பையில் செலுத்துவதன் மூலம் குழந்தையை உருவாக்கலாம் என்னும் நவீனத்தொழில் நுட்பத்தினைப் பாவித்து அவர்களுக்குக் குழந்தையை வழங்க முடியுமென்கின்றான். கணவன் மனைவி இருவரும் அதற்கு சம்மதிக்கின்றனர். அவ்விதமான கருக்கட்டல் மூலம் அபிராமி குழந்தை பெறுகின்றாள். கர்ப்பமாகவிருந்த தன் காதல் மனைவியை ஏற்கனவே இழந்தவன் டாக்டர் சந்திரன். அவன் தன் சொத்துக்களையெல்லாம் அந்தக் குழந்தைக்கு எழுதி வைத்து விட்டுச் செல்வதுடன் கதை முடிகின்றது. அந்தக் குழந்தைக்குரிய விந்தை வழங்கியவன் அவனே என மறைமுகமாக ஆசிரியர் எடுத்துக்கூறி அதனை வாசகரின் கற்பனைக்கே விட்டு விடுகின்றார். இதுவும் ஆசிரியரின் படைப்புத்திறனை வெளிப்படுத்தும் சிறுகதை. இக்கதை குழந்தை பெறுவது சம்பந்தமாக நடைமுறையிலிருக்கும் அறிவியல் உண்மையினை வெளிப்படுத்தும் கதை, ஆனால் வழமையான அறிவியல் கதை என்னும் அர்த்தத்தில்ல. அறிவியல் தகவலை எடுத்துக்கூறும் கதையென்பதற்கு அப்பால் இது நல்லதொரு சிறுகதை.

'வைரஸ்' என்றொரு கதை. நிறுவனத்தில் கணினியிலுள்ள 'வைர'ஸை அழிப்பதில் வெற்றியடைந்த கதையின் நாயகன் ஆஸ்பத்திரியில் நிஜ 'வைரஸா'ல் பீடிக்கப்பட்டிருக்கும் தந்தையைக் கடவுள் துணையுடன் காக்கச் செல்வதாக முடிகின்றது. அறிவியல் கதையின் முடிவில் இவ்விதம் கடவுள் நம்பிக்கையுடன் முடிவது சற்று நெருடலாகவுள்ளது. ஆனால் இவ்விதம் விஞ்ஞானத்துடன் மெய்ஞானத்து ஈடுபாட்டையும் தன் அறிவியல் கதைகளில் வெளிப்படுத்துவது எழுத்தாளர் குலேந்திரனின் இயல்பாக இருப்பதைத் தொகுதியின் ஏனைய கதைகள் பலவும் வெளிப்படுத்துவதால் ஆச்சரியத்தைத் தரவில்லை.

'அல்செய்மார் ஆராச்சி' என்னும் கதை ஸ்டெம்செல் மாற்று மருத்துவச்சிகிச்சை மூலம் அல்செய்மார் நோயினை நீக்குவது பற்றி எடுத்துரைக்கின்றது. 'மனஇறுக்கம்' என்னுமொரு கதையில் இவ்விதக் குறைபாடால் பாதிக்கப்பட்ட சிறுவனொருவன் இசைத்துறையில் மிகுந்த திறமையுள்ளவனாக விளங்குகின்றான். ஒலி அலைகள் மூலம் எதிர்காலத்தில் இந்நோயைத்தீர்க்க முடியுமா என்று இக்கதை ஆராய்கிறது.


'தோட்டா' என்னும் கதை சுடப்படும் ஒருவரை 48 மணி நேரம் உறைய வைக்கும் துப்பாக்கித் தோட்டாவின் கண்டுபிடிப்பைப் பற்றியும், தமிழரின் ஆயுதப்போராட்டத்தில் போர்க் களமொன்றில் அதன் பாவிப்பையும் பற்றிக் கற்பனையையோட்டுகின்றது. 'கிரகவாசி' என்னும் கதை இந்து மதம், கைலை மலையின் சிறப்புகள், இந்து மதம் போன்றவை வேற்றினக் கிரக வாசிகளின் விளையாட்டோ என்று சிந்தனையை வித்தியாசமான கோணத்திலோட்டுகின்றது. இவ்விதமான வித்தியாசமான ஆசிரியரின் கற்பனை வியக்க வைக்கின்றது. இக்கற்பனைகளை இன்னும் சிறிது விரிவாக அறிவியற் பார்வையில் அணுகிக் கதைகளை உருவாக்கியிருக்கலாமோ என்றொரு எண்ணமும் ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை.

பல கதைகளில் ஆசிரியர் கதாபாத்திரங்களை ஆரம்பத்தில் அறிமுகம் செய்கின்றதை

அவதானிக்க முடிகின்றது. ஒரு கதையில் அவ்விதமிருக்கலாம். பல கதைகளில் அவ்வாறிருக்கத் தேவையில்லை. கதைகளினூ டு கதாபாத்திரங்களின் பின்னணியைப்புரிந்துகொள்ளும் வகையில் கதைகளை அமைப்பதே நல்லதென்பதென் எண்ணம். கதாசிரியர் எதிர்காலத்தில் இதனைக் கவனத்திலெடுப்பார் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

கிரகணம், கொல்லி வாய்ப் பிசாசு, தூமகேது போன்ற, கதைகள் அறிவியல்ரீதியில் நிலவும் மூடநம்பிக்கைகளை அணுகுகின்றன. விளக்கமும் தருகின்றன. கொல்லி வாய்ப் பிசாசு கதையில் கொல்லி வாயுப் பிசாசு என்பதையும் விளக்கத்துடன் சேர்த்திருக்கலாம். கொல்லி வாயுப் பிசாசே மருவி கொல்லி வாய்ப்பிசாசாக வந்திருக்க வேண்டும். கிரகணத்தில் அமாவாசை நேரத்தில் பிறந்த மகனுக்குப் பரிகாரம் செய்ய வேண்டுமென்ற சோதிடர்களின் ஆலோசனையை முற்போக்குச் சிந்தனைகள் மிக்க மனைவியின் ஆலோசனைக்கேற்பப் புறக்கணிக்கின்றார் இரத்தினக்கல் வியாபாரியான சின்னத்தம்பி. பரிகாரம் செய்யாததால் மகனுக்கு எதுவும் ஆகவில்லையென்றும், இரத்தினக்கல் வியாபாரத்தில் அவனுக்கு நன்மையே கிட்டுகின்றது என்னும் வகையில் கதை முடிகின்றது. தூமகேது கதையில் தற்செயலாக நடைபெறும் காட்டுத்தீ மக்களின் தூமகேது பற்றிய நம்பிக்கையை வலுப்படுத்துகின்றது என்றாலும் அது உண்மையல்ல என்பதை வாசகர்களுக்கு உணர்த்தும் வகையில் அறிவியல் விளக்கத்துடன் கதையை முடிக்கின்றார் ஆசிரியர்.

மொத்தத்தில் படைப்புத்திறன் மிக்க கற்பனைகளுடன் ஆசிரியர் கதைகள் பலவற்றை ஆசிரியர் படைத்திருந்த போதிலும் தேவைக்கு அதிகமாக ஆன்மிகத்தை அறிவியலுக்குள் புகுத்தி விட்டாரோ என்றொரு எண்ணமும் கூடவே தோன்றுவதைத்தவிர்க்க முடியவில்லை. அறிவியல் கதைகளில் ஆன்மீகத்தைக் கலப்பதாகவிருந்தால் தொட்டுக்கொள்ளப் பாவிக்கும் ஊறுகாயைப்போல் பாவிப்பதுடன், அப்பாவிப்பு அறிவியல்ரீதியில் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் வகையில், வெறும் ஆய்வுகளற்ற நம்பிக்கைகளின் அடிப்படையில் அல்லாமல் இருப்பது அவசியம். இத்தொகுப்பிலுள்ள சில கதைகள் ஆசிரியரின் மத, பாரம்பரிய நம்பிக்கைகளின் பாதிப்பினை வெளிப்படுத்தினாலும் கொல்லி வாய்ப்பிசாசு, தூ மகேது போன்ற கதைகளில் மூட நம்பிக்கைகளுக்கெதிராக அறிவியல் ரீதியிலான அணுகுமுறையினையும் ஆசிரியர் கையாண்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. வரவேற்கத்தக்கது. இதனையும் ஆசிரியர் கவனத்திலெடுத்து இன்னும் சிறப்பான கதைகளை எதிர்காலத்தில் தருவாரென்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அவ்வளவுக்கு அறிவியல் தகவல்கள், வித்தியாசமான அறிவியல் கற்பனைகள், கனவுகள் எல்லாம் நிறைந்திருக்கும் கதைகளைக் கொண்டதாகத் தொகுப்பு இருக்கின்றது. இன்னு மொன்றினையும் தொகுப்பிலுள்ள கதைகள் வெளிப்படுத்துகின்றன.




அது ஆசிரியரின் சுவையான மொழிப் பிரயோகம். கதைகளைச் சரளமாகச் சுவையாகக்கூறிச்செல்கின்றார். இது வாசகர்களைக் கதைகளுடன் ஒனறிணைந்து பயணிப்பதை இலகு வாக்குகின்றது. மொத்தத்தில் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளதைப்போல் தொகுப்பின் கதைகள் மூவகைப் பண்புகளையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருப்பதுடன் சிந்தனையையும் தூண்டும் வகையிலும் அமைந்திருக்கின்றன. கூடவே படைப்புத்திறனை வெளிப்படுத்துவனவாகவுமுள்ளன. வாழ்த்துகள்.

**சரத்சந்திரரின் தேவதாஸ் பற்றி...**

எழுத்தாளரும், பிரபல மொழி பெயர்ப்பாளருமான அமரர் சு.கிருஷ்ணமூர்த்தியின் மொழிபெயர்ப்பில் வெளியான வங்க நாவல்கள் அல்லது படைப்புகள் எதனையாவது எங்கு கண்டாலும் எடுத்து வாசிக்கத் தவறுவதேயில்லை. அவரது மொழிபெயர்ப்பில் வெளியான வங்க நாவலான 'நீல கண்டப் பறவையைத்தேடி ' வாசித்ததிலிருந்து ஆரம்பித்த என் விருப்பங்களில் இதுவுமொன்று. மொழிபெயர்ப்பு என்பதே தெரியாத வகையில் அற்புதமாக விளங்குபவை இவரது மொழிபெயர்ப்புகள். அதுவே இவரது மொழிபெயர்ப்பின் சிறப்பும் கூட.


இவரைப்போல் இன்னுமொருவர் ஞாபகமும் கூட வருகிறது. எழுபதுகளில் என் மாணவப்பருவத்தில் கா.ஸ்ரீ.ஸ்ரீ. யின் மொழிபெயர்ப்பில் வெளியான பிரபல மராட்டிய நாவலாசிரியரான காண்டேகரின் படைப்புகளை ஒரு வித வெறியுடன் தேடிப் பிடித்து வாசித்திருக்கின்றேன். காண்டேகரின் நாவல்களில் வரும் 'வாழ்க்கையென்றால் புயல்' போன்ற வசனங்களை விரும்பி வாசித்த அப்பருவத்து நினைவுகள் இப்பொழுதும் அவ்வப்போது தோன்றுவதுண்டு.

அண்மையில் டொராண்டோ விலுள்ள பொதுசன நூலகத்தின் ஸ்கார்பரோ கிளையொன்றில் சு. கிருஷ்ணமூர்த்தியின் மொழி பெயர்ப்பில் வெளியான தேவதாஸ் நாவலின் பிரதியொன்றைக் கண்டபோது, அம்மொழிபெயர்ப்பு சு.கிருஷ்ண மூர்த்தியின் மொழிபெயர்ப்பில் வெளியான காரணத்தினால் எடுத்து வாசிக்க விரும்பி இரவல் பெற்று வந்தேன்., 'நல்லநிலம்' பதிப்பக வெளியீடாக வெளிவந்த பிரதி இது. தேவதாஸ் நாவலை எழுத்தாளரும், மொழிபெயர்ப்பாளருமான த.நா. குமாரசாமியும் தமிழில் மொழி பெயர்த்திருக்கின்றார். ஆனால் அந்த மொழிபெயர்ப்பினை நானின்னும் வாசிக்கவில்லை.

ஏற்கனவே திரைப்படம் மூலம் எல்லாருக்கும் நன்கு அறிமுகமான கதை. வாசிப்பதில் அப்படியென்ன பெரிதாக இருக்கப்போகின்றது என்றொரு எண்ணமும் கூட எழுந்தாலும். மொழிபெயர்ப்பாளரின் மேலிருந்த விருப்பு காரணமாக எடுத்து வந்து வாசித்தேன். சிறிய நாவல். விரிந்த , ஐந்நூறு பக்கங்களைக் கடந்த பெரிய நாவல்களிலொன்றல்ல. மானுட உளவியல் போராட்டங்களை விரிவாக, பக்கம் பக்கமாக விவரித்துச்சொல்லும் படைப்புமல்ல. எனக்கு அதிகம் பிடித்த இயற்கை வர்ணனைகள் நிறைந்த நாவலுமல்ல. ஆனாலும் வாசித்த பொழுது முக்கியமாக நாவலின் முடிவினை வந்தடைந்த பொழுது நெஞ்சினை அதிர வைத்த படைப்பு சரச்சந்திரரின் தேவதாஸ்.

ஏன் இந்தப் படைப்பு மிகுந்த வரவேற்பினையும், ரோமியோ-யூலியட், லைலா-மஜ்னு, அம்பிகாபதி- அமராவதி வரிசையில் மக்கள் மனதில் நிலையான இடத்தைப்பெற்றது என்று சிந்தனையோடியது.

இந்த நாவலின் சிறப்பு பாத்திரங்களின் உரையாடல்கள், செய்கைகள் மூலம் தூய காதலின் சிறப்பினை வெளிப்படுத்தி யிருப்பதுதான். பெரும்பாலும்



உண்மையான காதல் என்று பலர் தம் வாழ்வில் அனுபவிக்கும் காதல் உணர்வுகள் உண்மையான காதல் உணர்வுகள் அல்ல என்பதென் கருத்து. பருவத்துக் கிளர்ச்சிகளை, அவற்றின் விளைவுகளை உண்மையான காதலாகப் பலர் கருதி விடுகின்றார்கள் என்று தோன்றுகிறது. அதனால்தான் அவ்விதமான காதல் நிறைவேறாதபோது ஒருவர் மீது ஒருவர் ஆத்திரம் கொள்கின்றார்கள். வஞ்சம் தீர்த்துக்கொள்ள விளைகின்றார்கள். காதல் உண்மையாகவிருப்பின் விளைவு எவ்விதமாகவிருப்பினும், அவ்விதமான காதல் உணர்வுகளால் பீடிக்கப்படும் ஒவ்வொருவரும் மற்றவரின் நல் வாழ்வுக்காகவே முதலில் வேண்டிக்கொள்வார்கள். அவ்விதமில்லாத எந்தக் காதலும் உண்மையான காதலாக இருக்க முடியாது. இது என் தனிப்பட்ட கருத்து. இந்நாவலில் வரும் தேவதாஸ்-பார்வதிக்கிடையிலான காதல் அவ்விதமான உண்மையான காதல்.

சிறு வயதிலிருந்தே தேவதாஸ்-பார்வதிக்கிடையில் தொடங்கி வளர்ந்த தூய நட்பு, காதலாகப் பரிணமிக்கின்றது. அவள் அவனை எப்பொழுதுமே 'தேவ் அண்ணா!' என்றே அழைக்கின்றாள். அவன் செய்யும் குறும்புத்தனங்கள், குளப்படிகள் இவற்றால் பாதிக்கப்படும் தருணங்களில் எல்லாம் பெரும்பாலும் அவள் அவற்றை வெளிப்படுத்தி அவனுக்குத் தண்டனை வாங்கிக் கொடுப்பதில்லை. மறைத்து அவனுடன் தொடர்ந்தும் இருப்பதற்கே விரும்புகின்றாள். அவர்களது குடும்பத்தினர் ஒருவருக்கொருவர் நண்பர்களாகப் பழகுபவர்கள். இருந்தாலும் தங்கள் பிள்ளைகள் மணம் முடிப்பதை ஏற்றுக் கொள்ளாதவர்கள். சிறு சிறு சமூக ஏற்றத்தாழ்வுகள் அவர்கள் முன்னால் பெரிதாக விரிகின்றன. ஆனால் அவற்றை அவர்கள் உணரும்போது வாழ்க்கைப்போராட்டத்தில் சிக்கி தேவதாஸ்- பார்வதி இருவரின் வாழ்க்கைப்படகுகளும் வெவ்வேறு திசைகளில் பயணிக்கத்தொடங்கி விட்டிருந்தன.

அவளுக்குத் திருமண ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அவளை மனைவியை இழந்த, அவளையொத்த பருவத்தினரான பிள்ளைகளைக் கொண்ட, செல்வந்தரான, முடியிழந்த, முதியவர் ஒருவருக்கு மணம் முடித்து வைப்பதற்காக ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. தன் மணவாளனாகத் தேவதாசையே எண்ணி வாழ்ந்து கொண்டிருப்பவளான பார்வதி, ஓரிரவு அவனைச் சென்று சந்திக்கின்றாள். அவனது காலடியில் ஓரிடம் கேட்கின்றாள். அவனுடன் ஓடிவரவும் துணிவுடனிருக்கின்றாள். ஆனால் அவனோ அச்சமயத்தில் அவள் மேல் தான் வைத்திருந்த காதலையும் உணர முடியாத நிலையில் அல்லது வயதிலிருக்கின்றான். தன்னை மறந்து விடும்படியும், தன்னால் தன் பெற்றோரை மீற முடியாத நிலை பற்றியும் கடிதம் எழுதுகின்றான். ஆனால் தன்னை நன்குணர்ந்து, அவன் அவளிடம் ஓடி வந்தபோது அவளால் அவனை ஏற்க முடியவில்லை. அந்தச்சந்திப்பில் அவர்களுக்கிடையில் வாக்கு வாதமும் கூடவே சிறு மோதலும்

ஏற்பட்டு விடுகிறது. தன்னை ஏற்றுக்கொள்ளும்படி அவன் அவளிடம் வேண்டுகின்றான். ஆனால் ஏற்கனவே அவனது மறுப்பால் பாதிக்கப்பட்ட அவள், அந்த முதியவரையே மணந்து அவரது ஊருக்கே சென்று விடுகின்றாள்.

அதன் பின் தேவதாசின் வாழ்க்கை மாறிவிடுகின்றது. பார்வதியின் இழப்பை அவனால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. குடிக்கத் தொடங்குகின்றான்.

பின்னர் தேவதாசின் தந்தையின் மரணத்தின்போது, வந்திருந்த பார்வதியை அவன் சந்திக்கின்றான். அவனது நிலை கண்டு வருந்தும் பார்வதி அவனைத் தன்னுடன் வரும்படி கூறுகின்றாள். குடியைக் கைவிடும்படி சத்தியம் செய்து தர வற்புறுத்துகின்றாள். அவன் கூறுகின்றான் 'ஒன் வார்த்தையை மறக்க மாட்டேன். என்னைக் கவனிச்சுக்கிறதாலே ஒன் துக்கம் மறையும்னா நான் வருவேன். சாகறதுக்கு முன்னாலே கூட எனக்கு ஒன்னோட வார்த்தை ஞாபகமிருக்கும்'

ஆனால் அவ்விதமே அவன் சாகக்கிடக்கும்போது அவளுக்குக் கூறியபடி அவளைக்கடைசி நேரத்திலாவது சந்திப்பதற்காக அவளது வீடு நோக்கிச் செல்கின்றான். அவளது வீட்டு வாசலின் முன்னாலேயே விழுந்து கிடக்கின்றான். இது எதனையுமே அவள் அறியாத நிலையில் சம்பவங்கள் விரைகின்றன. பார்வதிக்கு யாரோ ஒருவன் குடித்து விட்டு விழுந்து கிடக்கின்றான் என்று கதைப்பதைக் கேட்டாலும், அம்மனிதன் தேவதாஸ்தான் என்பது தெரியவில்லை. அவன் இறந்து, யாருமில்லாத நிலையில் எரிக்கப்பட்ட நிலையிலேயே அவளுக்கு அவ்விதம் இறந்தவன் தேவதாஸ், அவள் மனதில் குடியிருக்கும் தேவதாஸ் என்பது தெரியவருகிறது. சித்தப்பிரமை பிடித்தவளைப்போல் அவனைத்தேடி ஓடுகின்றாள். அவளை ஓடிச்சென்று அவளது குடும்பத்தவர்கள், வேலைக்காரர்கள் எல்லாரும் அவளது மயங்கிய உடலைத் தூக்கி வீடு கொண்டு வருகின்றார்கள். அந்தக் காட்சியைச் சரச்சந்திரர் பின்வருமாறு விபரிக்கின்றார்°

'மறுநாள் அவளது மயக்கம் தெளிந்தது. ஆனால் அவள் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. ஒரு வேலைக்காரியை மட்டும் கூப்பிட்டுக்கேட்டாள் 'ராத்திரியிலே வந்தாரா? ராத்திரிபூரா இருந்தாரா?'

அதன்பிறகு அவள் பேசவேயில்லை.'

ஆனால் அதன் பின்னர் அதுவரை மறைவாகவிருந்து தேவதாஸ்-பார்வதி கதையினை, படர்க்கையில் விபரித்துக்கொண்டு வந்த கதாசிரியர், நேரடியாகவே தலையிட்டுச் சில வார்த்தைகளை உதிர்க்கின்றார். அதுவரையில் நாவலின் சம்பவங்களினூடு, பாத்திரங்களின் உரையாடல்களினூடு , அவர்களின் வாழ்க்கையினுள் தம்மை மறந்து, அவர்கள்தம் இன்ப துன்பங்களுக்குத்தாமும் ஆட்பட்டுக் கொண்டிருந்த வாசகர்களின் துயரத்தினை மேலும் அதிகரிக்கும் வகையில் அமைந்து விட்டன கதாசிரியர் தலையிட்டு உதிர்க்கும் அவ்வார்த்தைகள். அவ்வார்த்தைகள் இதோ

'இதன்பிறகு பார்வதிக்கு என்ன ஆயிற்று, அவள் எப்படி இருக்கிறாள் என்று தெரியவில்லை. இது பற்றி விசாரிக்கவும் விருப்பமில்லை. தேவதாஸை நினைக்கக் கஷ்ட்டமாயிருக்கிறது. இந்தக்கதையைப் படிக்கும் நீங்களும் எங்களைப் போலவே வருத்தப்படலாம். எனினும் எப்போதாவது தேவதாஸைப்போல் அதிருஷ்ங்கெட்ட, தறுதலையான, பாவி எவனையாவது பார்த்தால் அவனுக்காகச் சிறிது பிரார்த்தனை செய்யுங்கள். என்னதான் நேர்ந்தாலும், அவனுக்கு நேர்ந்தமாதிரி சாவு வேறு எவருக்கும் நேர வேண்டாம் என்று பிரார்த்தனை செய்யுங்கள். மரணத்தில் மோசமில்லை. ஆனால் சாகும் தறுவாயில் அவனது நெற்றிக்கு ஒரு பரிவு நிறைந்த கையின் ஸ்பரிசம் கிடைக்கட்டும். இரக்கத்தால் ஈரமான, பரிவு மிக்க ஒரு முகத்தைப்பார்த்துக்கொண்டே அவனது வாழ்வு முடியட்டும். யாரோ ஒருவருடைய ஒரு கண்ணீர்த்துளியைப் பார்த்தாவது அவன் இறக்கட்டும்!..'

சரச்சந்திரரின் தேவதாஸ் பல்வேறு பிரிவுகளால் பிரிவு பட்டிருக்கும் மானுடரின் பிரச்சினையை அவற்றுக்கான தீர்வுகளை விரிவாகக்கூறும் நாவலல்ல. ஆனால் சரத்சந்திரர் தேவதாஸ்-பார்வதியின் தூய காதலை விபரிப்பதன் மூலம், அவர்கள் அடைந்த இன்ப துன்பங்களை உயிர்த்துடிப்புடன் எழுத்தில் வடிப்பதன் மூலம், நாவலில் பல விடயங்களை வெளிப் படுத்தியிருக்கின்றார். மேற்கு வங்கத்தினரின் பிராமண சமுகத்தில் நிலவிய வர்க்கரீதியாக நிலவிய பிரிவுகளை, இவ்விதமான பிரிவுகள் எவ்விதம் தூய்மையான காதல் நிறைவேறுவதைத் தடுக்கிறது என்பதை மற்றும் காதலர்களிடையே ஏற்படும் தேவையற்ற கர்வங்கள் மற்றும் மானுட சமூகத்தில் நிலவும் தேவையற்ற சமூக ஏற்றத்தாழ்வுகள் தூய காதலைப் பிரிக்கின்றன என்பதை வெளிப்படுத்தி யிருக்கின்றார். நிர்ப்பந்தங்கள் மூலம் இளம் பெண்ணொருத்தி, முதியவருக்கு மணம் முடித்துக் கொடுக்கப்படும் பொருந்தா மணத்தை எடுத்துரைத்திருக்கின்றார். ஆனால் அவ்விதம் அவளை மணம் முடிக்கும் அந்த முதியவரையும், அவர்தம் பிள்ளைகளையும் கொடியவர்களாக ஆசிரியர் படைத்திருக்கவில்லை. இருந்தாலும் பார்வதி பொறுப்புள்ள குடும்பத்தலைவியாக விளங்கியபோதும், மனதினாழத்தே அவள் மகிழ்ச்சியாக இல்லை என்பதை அவளது செயற்பாடுகள் மூலம் நுட்பமாக வெளிப்படுத்தி யிருக்கின்றார். வாசிக்கும் வாசகர் ஒவ்வொருவரும் 'தேவதாஸ்-பார்வதி ஒன்று சேர்ந்திருக்க வேண்டும். குழந்தையைப் போன்ற அவளது வாழ்வு

இவ்விதம் சின்னாபின்னப் படுத்தப் பட்டிருக்கக்கூடாது. மானுட சமுதாயத்தில் இவ்விதமான முடிவுகளை ஏற்படுத்தும் அனைத்துப் பிரிவுகளும், நடைமுறைகளும் ஒழிக்கப்பட வேண்டும்.' என்று மனப்பூர்வமாக எண்ணிட நாவல் தூண்டுகிறது. அதுதான் சரத்சந்திரரின் 'தேவதாஸ்' அதனை வாசிக்கும் ஒவ்வொருவரிடத்தும் முடிவில் வெளிப்படுத்தும் முக்கிய உணர்வு. அதுவே நாவலின் வெற்றிக்கான முக்கிய காரணங்களிலொன்றும் கூட.

## 'காவியத்துக்கு ஒரு மஹாகவி!'

காவியத்துக்கு ஒரு மஹாகவி' என்று அழைக்கப்படக் காரணமாக இருந்த காவியம் மஹாகவியின் 'கண்மணியாள் காதை' காவியம். அவலச்சுவை மிக்க காவியம். தீண்டாமைக் கொடுமையினை விபரிக்கும் குறுங்காவியமிது. கவிஞர் 'சடங்கு' என்று 'விவேகி'யில் எழுதிய தனது குறுங்காவியத்தின் நாயகனான செல்லையாவை வைத்து, லடீஸ் வீரமணிக்காக வில்லுப்பாட்டாக, இன்னுமொரு கோணத்தில் எழுதிய துயர காவியம் 'கண்மணியாள் காதை'

குறுங் காவியமானாலும் அதில் வரும் பாத்திரங்களான கண்மணி யாளையும், செல்லையனையும் படித்தவர்களால் மறக்கவே முடியாது. அவ்வளவிற்குப் பாத்திரப்படைப்பு நன்கு அமைந்திருந்த காவியமது. இக்காவியம் முதலில் அன்னை வெளியீட்டகம் (யாழ்ப்பாணம்) என்னும் பதிப்பகத்தால் நவம்பர் 1968இல் நூலாக வெளிவந்தது. மேலும் 'கண்மணியாள் காதை' தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் லடீஸ் வீரமணி குழுவினரால் வில்லுப்பாட்டாக மேடையேறியபோது மிகுந்த வரவேற்பைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. அது பற்றி 'ஈழநாடு' பத்திரிகையின் வாரமலரில் வெளிவந்த 'தேனி'யின் விமர்சனம் 'காவியத்துக்கு ஒரு




மஹாகவி வில்லுப்பாட்டுக்கு ஒரு வீரமணி' என்ற தலைப்புடன் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

மேற்படி 'கண்மணியாள் காதை'யும் எனக்கு மிகவும் பிடித்த காவியங்களிலொன்று. அதில்வரும் 'கண்மணி', 'செல்லையன்' ஆகியோர் மறக்க முடியாதவர்கள். ஒரு விதத்தில் வாசிக்கும்போது அதன் பெயரும், பாடு பொருளும், காவியத்தில் வரும் சில கவிதை வரிகளும் சிலப்பதிகாரத்தை நினைவுக்குக் கொண்டுவரும் குறுங்காவியமது. காவியத்தை இரு கூறுகளாகக் கவிஞர் பிரித்திருப்பார். முதலாம் கூறு வெண்ணிலவு காவியத்தின் இன்பமான பக்கத்தை விபரித்தால், இரண்டாம் கூறான 'காரிருள்' காவியத்தின் துன்பகரமான பக்கத்தை விபரிக்கும். அக்காவியத்தில் என்னை மிகவும் கவர்ந்த வரிகளாகக் கீழுள்ளவற்றைக் குறிப்பிடலாம்:

'யாழைக் கொணர்ந்திங்கு மீட்டிய
தால், ஒரு
யாசகன் மன்ன னிடம் இருந்தோர்
பாழைப் பரிசு பெற் றான்!' எனக்
கூறிடும்
பண்டைப் பழங்கதை கேட்டதுண்டு
-

பாழைப் பரிசு பெற் றாலும், அப்
பாலையைப்
பச்சைப் படுத்திப், பயன் விளைத்து,
வாழத் தொடர்ந்து முயன்றத னால்,
இன்று
வையத் துயர்ந்தது யாழ்ப்பாணம்!

'ஆழக் கடலுள் அமிழ்ந்தன வே
எங்கள்
அன்றைப் பெரும்புகழ் ஆதலினால்,
வீழத் தொடங்கி முடிந்தன வாம்
பல
விந்தை!' என்றோர் கதை
வந்ததுண்டு -
வீழத் தொடங்கிய விந்தை
முழுவதும்
மீட்டுக் கொடுத்த பெருமையிலே
'ஈழத் தமிழகம்' என்று நிலம் தனில்
இன்று நிமிர்ந்தது யாழ்ப்பாணம்!

'ஆறு நடந்து திரிந்த வயல்கள்
அடைந்து கதிர்கள் விளைந்திட,
வான்
ஏறி உயர்ந்த மலை ஏதும்
இல்லையே!' என்ற ஒரு கதை
சொல்வதுண்டு -

'ஏறி உயர்ந்த மலை இல்லை
ஆயினும்
என்ன? இருந்தன தோள்கள்!'
என்றே
கூறி, உழைத்த பின் ஆறிக்,
கலைகளில்
ஊறிச் சிறந்தது யாழ்ப்பாணம்!

...

ஆழ நீர் கொண்டு வாழ இளைஞர்
அகழ்கின் றார் தம் நிலத்தினைத்
தானே!

--

காவிய நாயகியான கண்மணியாள் பற்றி வரும் வரிகள்:
பெண் ணிருக்கும் அழகை
யெல்லாம்
பேணி வைத்த பொற் குடமாம்.
விண்ணவர்க்கும் எட்டாது
விளைந்திருக்கும் நிலத் தமுதாம்.

கண் ணிமிர்த்தி அவள் பார்த்தால்,
கண்டவர்கள் மறப்ப தில்லை.
மண் மிதித்தம் மயில் நடந்தால்,
மண் கூடச் சிலிர்ப்ப துண்டு.

திங்கள் அவள் முகமளவு.
செழுங் கூந்தல் மழை யளவு.
தங்கம் அவள் நிறமளவு.
தயிர் அவளின் மொழியளவு.

கொங்கை இரு செம்பளவு.
கொடி இடையோர் பிடியளவு.
பொங்கும் அவள் அங்கம்
ஒருபொல்லாத பாம்பளவு!

செல்லையன் தனது வயலில் துலா மிதிக்கின்றான். கண்மணியாளோ நாற்று நடுகின்றாள். அவர்களுக்கிடையில் நிகழும் உரையாடலைக் கீழுள்ள வரிகள் புலப்படுத்தும். செல்லையனுக்கும் , கண்மணியாளுக்குமிடையில் நிலவும் காதலை விபரிக்கும் வரிகள் இவை.

'நாற்றுப் பிடி எடுத்துநாற்று நட்டு
நான் இருக்க,
நாற்றுப் பிடி பிடியில்
நழுவுவது தான் எதற்கு?'

'சேற்றில் சதிர் மிதித்துச்
சின்ன இடை நீ வளைக்க,
நேற்றுச் சிரித்தபடி
நின்றவள் நி னைப்பெனக்கு!'

'நேற்றுச் சிரித்துவிட்டு
நின்றவள் நி னைப்பிருந்தால்,
காற்றிற் பறந்து விடும்
கதை விடுதல் தான் எதற்கு?'

'காற்றில் பறந்து வரும்
காவியத்தோ டாவி செல்ல,
ஏற்றத் துலா நடந்தே
இளைக்கும் உடல் இங்கெனக்கு!'

'ஏற்றத் துலாவினிலே
ஏறி நிற்கும் மன்னவர்க்குச்
சேற்றிற் கிடக்கும் ஒரு
சிறிய மலர் ஏன்? எதற்கு?'

'சேற்றிற் கிடைக்கும் அத்

திரு மலரோ இல்லை யென்றால்,
சோற்றைப் பிற கெதற்கு?
சொல்லடி இப் போதெனக்கு!'

மேற்படி காவியத்தின் முடிவு துயரகரமானது. செல்லையன் ஊர் இளைஞர்களுடன் கூடி, கலட்டியான தரையை உழைப்பால் பண்படுத்தி, அங்கு அவ்வூரின் தாழ்த்தப்பட்ட சமூகத்து மக்களைக் குடி அமர்த்துகின்றான். தந்தையின் எதிர்ப்பையும் மீறி, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த கண்மணியாள்மீது காதல் கொண்டு, அவளையே திருமணம் செய்து வாழ்க்கையைத் தொடங்குகின்றான். இவ்விதமாகக் காதலர்கள் தம் மணவாழ்வைத் தொடங்கும் சமயத்தில் நீண்டகாலமாகக் கண்மணியாளின் அழகில் ஆசை வைத்திருந்த சந்திக்கடை முதலாளி, அடியாட்களை அனுப்பி, செல்லையனைக் கொலை செய்து, கண்மணியாளைக் கவர்ந்து சென்று, தன் ஆசைக்கு இணங்க வைக்க முயல்கின்றான். அப்பொழுது அங்கிருந்து தப்பிச் செல்லும் கண்மணியாளின் நிலையைக் கவிஞர் இவ்விதம் விபரிப்பார்.

ஓடுகின்றாள், ஓடுகின்றாள்,ஓர்
இரண்டு நாய் குரைக்கப், பேய்
துரத்த,
ஓடுகின்றாள், ஓடுகின்றாள்...

சேலையின் முன்றானை
காற்றினிலே
செல்ல, இடை மின் நுடங்க,
ஓடுகின்றாள், ஓடுகின்றாள்...

பால் முகத்தின் மேல் வியர்வை
பாய, விழி நீர் பெருக,
ஓடுகின்றாள், ஓடுகின்றாள்...

இவ்விதம் ஓடுமவள் முத்துமாரியம்மன் ஆலயத்தை அடைகின்றாள். அவளுக்கேற்பட்ட அநீதிக்கெதிராகக் கவிஞர் மாரியம்மனிடம் நீதி கேட்கின்றார்.

மாரியம்மன் வாசல் வழி
வந்தாளே கண்மணியாள்.
ஊரின் ஒரு புறத்தே
உறங்கினையோ மாரியம்மா?

நல்லான் ஓர் நல்லவளை
நாடுவது நாத்திகமோ?
எல்லாரும் ஒத்த குலம்
என்று சொன்னால் ஏற்காதோ?

ஏழை இருக்க நிலம்
ஈஅ7தலும் ஓர் ஏமாற்றோ?
வேள்வி மறுப்பதுவும்
வேண்டாத வெஞ் செயலோ?

பாழை விளைத்திடுதல்
பாதகமோ, பேசடியே!
கூடி உழைத்தல்
கொடுமை என்றோ கூறுகிறாய்?

ஏடி, முத்து மாரியம்மா,
எடுத்தொரு சொல் சொல்லடியோ!

'மெல்லியலார்' வாழவிடாயோ
பெருமாட்டி?

சொல்லடியே என் தாயே,
சுறுக்காகச் சொல்லடியோ!

புல் லிதழே பிய்ந்துபுயற் காற்றிற்
போனது போல்-

ஓடுகின்றாள், ஓடுகின்றாள்,

ஓர் இரண்டு நாய் குரைக்கப், பேய்
துரத்த,
ஓடுகின்றாள், ஓடுகின்றாள்...

ஓடும் கண்மணியாள் தனது கணவனின் கொலையுண்ட உடலைக் காண்கின்றாள்.

காதலனைக் கண்டு கொண் டாளே!
முலை
மீ த றைந்தாள் நிலம்
மீதுருண்டாள்.

சிறுமாது கண் செந் நீர் வழிந்
தாளே!
ஒருசேதி, கீழ்ப் புற வானில் ஞாயிறு
நீதி காண எழுந்ததே!

இருள்
சாதி போலே போய் ஒ ழிந்ததே!

'ஒளிவாழ்க!' என்றும், 'இருள்
வீழ்க!' என்றும்,

கிளைமீது சேவல் கூவு கின்றதே!

இவ்விதமாகச் செல்லும் மெற்படி குறுங்காவியம் பின்வருமாறு முடியும்.

ஒத்துழைத்தால், ஒன்று பட்டால்,
உயர்வு பல காட்டி நின்றால்,
ஒத்தவர் தாம் யாரும் என்றே
ஒருத்தியின் மேல் அன்பு வைத்தால்,
பித்தரின் கைக் கோடரி போய்ப்
பிளந் தெறிய, நல்லவர்கள்
செத்திடத் தான் வேண்டுவதோ?

செக முடையோர், செப்புவிரே!

இலங்கையிலிருந்து வெளிவந்த தமிழ்க் காப்பியங்களில் மஹாகவியின் 'கண்மணியாள் காதை'க்குமோ ரிடமுண்டு. இக்காவியத்தை முழுமையாகப்படிக்க விரும்பினால் 'நூலகம்' இணையத்தளத்தில் வாசிக்கலாம்.


## விநாயக முருகனின் ‘ராஜீவ்காந்தி சாலை‘!

*அண்மையில் விநாயக முருகனின் ‘ராஜீவ்காந்தி சாலை‘ நாவல் வாசிக்கும் சந்தர்ப்பமேற்பட்டது. உயிர்மை வெளியீடாக வெளிவந்துள்ள நாவல் தமிழ் நாவல்களில் முக்கியமான, கவனிக்கப்பட வேண்டிய நாவல்களிலொன்று. மொழியில் எந்தவிதப் புதுமையுமில்லை. தமிழக வெகுசனப் பத்திரிகைகளை வாசிக்கும் வாசகர் ஒருவருக்கு நன்கு பழகிய மொழிதான். இந்த நாவல் முக்கியத்துவம் பெறுவது இது கூறும் பொருளினால்தான். அப்படி எதனைப் பற்றி இந்த நாவல் பேசுகிறது? சுருக்கமாகக் கூறப்போனால் உலகமயமாதலுக்குத் தன்னைத் திறந்து விடும் வளர்ந்து வரும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடொன்றில் சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் அரசியல் சூழல்களில் எவ்வகையான மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதை விமர்சிக்கும் நாவலிதுவென்று கூறலாம். இத்தருணத்தில் கறுப்பு ‘ஜூலை‘ 1983யினைத் தொடர்ந்து, உலகின் நானா பக்கங்களையும் நோக்கி, அகதிகளாகப் படையெடுத்த ஈழத்தமிழர்களைப் பற்றி சில விடயங்களை எண்ணிப்பார்ப்பது ‘ராஜீவ்காந்தி சாலை‘ நாவல் கூறும் பொருளைப்பொறுத்தவரையில் முக்கியமானது பயன்மிக்கது.*

**இத்தருணத்தில் கறுப்பு ‘ஜூலை‘ 1983யினைத் தொடர்ந்து, உலகின் நானா பக்கங்களையும் நோக்கி, அகதிகளாகக் படையெடுத்த ஈழத்தமிழர்களைப் பற்றி சில விடயங்களை எண்ணிப்பார்ப்பது ‘ராஜீவ்காந்தி சாலை‘ நாவல் கூறும் பொருளைப் பொறுத்தவரையில் முக்கியமானது பயன்மிக்கது.**

ஈழத்தமிழர்களைப் பொறுத்த வரையில் அகதிகளாகப் புலம் பெயர்ந்துப் புகுந்த நாடுகள் செல்வச்செழிப்புள்ள, முதலாளித்துவச் சமுதாய அமைப்பைக்கொண்ட மேற்கு நாடுகள். இந்த நாடுகளில் நிலவும் சமூக, பொருளாதாரச் சூழல்களுக்கும், அதுவரை அவர்கள் வாழ்ந்த நாட்டின் சமூக, பொருளாதாரச் சூழலுக்கும் மலைக்கும், மடுவுக்குமிடையிலான வித்தியாசம். மேற்கு நாடுகளில் நிலவும் கடனட்டைக் கலாச்சாரம் ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரையில் புதியது. உலக மயமாதலின் விளைவுகளால சமூக, பொருளியல் சூழல்களில் மிகப்பெரிய மாற்றத்தை அடைந்த இந்திய மத்திய வர்க்கத்தினரின் நிலையும், மேற்கு நாடுகளின் பொருளியற் சூழல்களுக்குள் இறக்கி விடப்பட்ட ஈழத்தமிழ் அகதிகளின் நிலையும் இந்த வகையில் ஒரே மாதிரியானவை என்று கூறலாம். ஒரு வேலை இருந்தால், தகுதிக்கு மீறிய கடன் தொகையுள்ள கடனட்டைகளைப் பெற்றபோது, ஆரம்பத்தில் அகதிகளாகப் புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்களுக்கு அது இன்பமளிப்பதாகவே யிருந்தது. அதன் பின்னர் அவர்களது வாழ்க்கை கடன் கலாச்சாரத்துள் முற்றாகவே மூழ்கி விட்டது. கடனுக்குக் கார் வேண்டலாம் கடனுக்கு வீடு வாங்கலாம் வீட்டுப் பெறுமானத்தின் உபரி மதிப்பிற்குச் சமமாக கடன் எடுக்கும் வசதியினைப் பெறலாம். இவ்விதமாகப் பல ‘கடன்‘ நன்மைகளைச் சுகிக்கலானார்கள் புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்கள். இவ்விதமான சமூக, கலாச்சார மாற்றங்களுக்குள்ளாகியவர்கள் அகதிகளாகப் புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்கள் மட்டுமல்லர். கல்வி, வேலை வாய்ப்பு போன்ற பல காரணங்களுக்காக, மேற்கு நாடுகளை நோக்கிப் பல்வேறு நாடுகளிலிருந்தும், வளர்முக, அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலிலிருந்து சென்ற அனைவருக்கும் பொருந்தும். இவ்விதமாகக் கடனட்டை, கடன் போன்றவற்றின் ஆதிக்கத்தின் கீழ் மக்களைக் கொண்டுவரும் முதலாளித்துவ சமுதாய அமைப்பானது, அதன் பின் அம்மக்களை அதன் பிடிக்குள் கொண்டுவந்து, செக்குமாடுகளாக்கி விடும். உழைப்பது கடன்களைக் கட்டுவதற்கே என்று வாழ்க்கை மாறிவிடும். பெரும்பாலானவர்கள் உதாரணத்துக்கு வாங்கிய வீட்டின் விலையைப்போல் இரு மடங்கு வரையிலான விலையை 25 வருட காலத்து வீட்டுக் கடனுக்குக் கட்டி முடிக்கும்போது அவர்களது வாழ்வின் பெரும்பகுதி முடிந்து விட்டிருக்கும். இவ்விதமான வாழ்க்கையானது குடும்பங்களுக்குள் பல்வேறு வகையான சிக்கல்களை உருவாக்கிவிடுகின்றது.

இதே வகையானதொரு நிலையினைத்தான் இந்தியாவில் உலகமயமாக்கலின் விளைவாக உருவான ‘பணம் புழங்கும்‘ நடுத்தர மக்களின் வாழ்க்கையிலும் காணலாம். மேற்கு நாட்டுசமூகக் கலாச்சாரச் சூழலை அப்படியே கொண்டு வந்து, வளர்ந்துவரும் இந்தியா போன்ற நாடொன்றில் நட்டுவிட்டால் எவ்வகையான விளைவுகள் உருவாகுமோ அவ்வகையான விளைவுகள் அனைத்தும் இங்கும் உருவாகும். அவைதான் ‘ராஜீவ்காந்தி சாலை‘யிலும் உருவாகின. பணம் புழங்கும் மத்தியதர மக்கள் மில்லின் கணக்கில் உருவானதும், மேற்கு நாடுகளின் மிகப்பெரிய நிறுவனங்களுக்குப் புதியதொரு சந்தையினை இந்த மாற்றம் திறந்து விட்டது. குறைந்த அளவு ஊதியத்துடன் உழைப்பை வாங்குவதன் மூலம் இலாபத்தை அதிகரித்த மேற்கு நாடுகளின் மிகப்பெரிய நிறுவனங்கள், இந்த மாற்றத்தால் உருவான புதிய மத்தியதர வர்க்கத்தை மையமாக வைத்துத் தம் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்து மேலும் இலாபத்தைச் சம்பாதித்தன. ஒரு கல்லில் இரு மாங்காய்கள். ‘கோல்கேற்‘ பற்பசை, கோர்ன் ஃ பிளாக்ஸ் சீரியல்கள் தொடக்கம்,




ஃபோர்ட் வாகனங்கள், ஜிஎம் வாகனங்கள் போன்ற வாகனங்கள் தொடக்கம், புதிய சந்தை நிலவும் நாட்டில் பேசப்படும் பன்மொழிகளில் திரைப்படங்களை மிகச்சிறப்பாக 'டப்பிங்' செய்வது தொடக்கம் இலாபத்தை அள்ளிக்குவித்தன மேற்கு நாட்டின் நிறுவனங்கள். 'மாஸ்டர்கார்ட்', 'விசா', 'அமெரிக்கன் எக்ஸ்பிரஸ்' என்று அத்தனை கடன் அட்டை நிறுவனங்களும் நுழைந்து விட்டன. பல்வேறு வகையான காப்புறுதி நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள், 'மல்டி லெவல் மார்கட்டிங்' என்று அனைத்து நிறுவனங்களும் நுழைந்து விட்டன.

மேற்கு நாடுகளின் நிறுவனங்களின் பணியினைக் குறைந்த ஊதியத்தில் செய்வதற்காகப் பல தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் புற்றீசல்களைப் போல் முளைத்தன. இவ்விதமான நிறுவனங்களில் மிகவும் உயர்ந்த ஊதியத்துடன் வேலை பார்க்கும் மக்களை மையமாக வைத்து வங்கிகள், நிதி நிறுவனங்கள் எல்லாம் வலையை விரித்தன. கையில் காசு புழங்கத்தொடங்கியதும் இவ்வகையான நிறுவனங்களில் பணி புரிவோரின் வாழ்க்கை மாறத்தொடங்கியது. மேற்குக் கலாச்சாரம் அவர்களைச் சுற்றிப் பின்னிப் பிணைந்து விட்டது. வாகனம் வாங்குவது, கார் வாங்குவது என்பவையே அவர்களது கனவுகளாகின. புதிய சூழல், புதிய வாழ்க்கை முறை மக்கள் மத்தியில் மகிழ்ச்சியை மட்டுமல்ல மன அழுத்தத்தினையும் கூடவே கொண்டுவந்து விட்டது. சக்திக்கு மீறிய வகையில் கடன்களைப் பெறும் சூழல் உருவாகியது. கடன்களைப் பெற்று வீடுகள், வாகனங்கள் போன்றவற்றை வாங்கியவர்களுக்கு, வேலை சிறிது காலம் இல்லாமல் போனால் கூடத் தாங்க முடியாத நிலைதான். வாசலில் நின்று கடன்களை அவர்கள் மேல் திணித்த நிதி நிறுவனங்கள், வங்கிகள் இவ்விதமான இக்கட்டான நிலையில், உதவுவதில்லை. பணத்தைத் திருப்பிக் கட்டும்படி நெருக்குதல்களைக் கொடுக்கத் தொடங்கும் சூழலுருவாகும். விளைவு? குடும்பங்கள் பிளவுறுதல், தற்கொலைகள், கொலைகள் என்று பல்வேறு வகையான பக்க விளைவுகள் உருவாகும். இரவினில் தனித்துப் பெண்கள் வேலை செய்யும் சூழல்கள், அவர்களுடன் பணி புரியும் ஆண்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பினை ஏற்படுத்தும். வேலையிழத்தல் போன்ற சூழல்கள் உருவாக்கும் பொருளியற் சுமைகள் காரணமாக ஒருவருக்கொருவர் பண உதவிகள் பெறுவது, பின்னர் அதன் காரணமாக ஒருவருக்கொருவர் அநுசரித்து வாழ்வது என்று ஏற்படும் மாற்றங்கள் தம்பதியினரின் குடும்ப வாழ்வினைச் சீரழிக்கின்றன.

இன்னுமொரு விடயத்தையும் இந்நாவல் விமர்சிக்கின்றது. குழந்தைகள் மேல் புரியப்பட்டும் பாலியல் வன்முறைகள் எவ்விதம் அவர்களது வாழ்வினைச் சிதைத்து விடுகின்றன என்பதை நாவலில் வரும் கௌசிக் பாத்திரத்தினூடு ஆசிரியர் விமர்சனத்துக்குள்ளாக்குகின்றார். சிறுவயதில் ஆண் உல்லாசப்பிரயாணிகளினால், முதிய செல்வந்தப் பெண்களினால் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்படும் அவன் வளர்ந்ததும் இளம்பெண்களைப் பாலியல்ரீயில் வதைப்பதில் இன்பம் காணுமொரு வெறியனாக உருமாற்றமடைகின்றான். அதன் விளைவாகக் கொலையுண்டும் போகின்றான். சிறு வயதில் அவன் மிக அதிகமாகப் பாலியல் வன்முறைக்குள்ளாகியது ஆண் உல்லாசப்பிரயாணிகளால்தான். எனவே அவனது ஆத்திரம் அவ்விதமான ஆண்கள்மேல் ஏற்படாமல் எதற்காகப் பெண்கள் மேல் ஏற்பட வேண்டும் என்றொரு கேள்வி எழுவதையும் தடுக்க முடியவில்லை.

மொத்தத்தில் விநாயக முருகனின் ராஜீவ்காந்தி சாலை இவ்விதமாக உலகமயமாதலால் அடியோடு மாறுதலடைந்து, ராஜீவ்காந்தி சாலையாக மாறிய சென்னையின் மகாபலிபுரச் சாலையின் மாறுதல்களை விமர்சிக்கின்றது. உண்மையில் உலகமயமாதல் எவ்விதம் செல்வந்த நாடுகளின் இலாபத்திற்காக வளர்முக நாடுகளில் நிலவிடும் இயற்கைச் சூழலினை , விவசாயம் போன்ற தொழில்களை, சிறுவர்த்தகச் செயற்பாடுகளைச் சிதைத்து விடுகின்றது. எவ்விதம் நகர்ப்புறங்களில் செல்வச்செழிப்புள்ள பகுதிகளை உருவாக்கும் அதே சமயம், மிகவும் வறிய மக்களைக்கொண்ட சேரிகளையும் உருவாக்கி விடுகின்றது. எவ்விதம் பாலியல்ரீயிலான உளவியற் பிரச்சினைகளை உருவாக்கி, அவற்றின் தீய விளைவுகளை உருவாக்கி விடுகின்றது. இவற்றைப்பற்றியெல்லாம் விமர்சிக்கின்றது. அந்த வகையில் 'ராஜீவ்காந்தி சாலை' ஒரு குறியீடு. உலகமயமாதல் வளர்ந்துவரும், அபிவிருத்தியடைந்துவரும் நாடொன்றில் ஏற்படுத்தும் சமூக, பொருளியல், கலாச்சார மற்றும் சூழற் பாதிப்புகளை விமர்சிக்குமொரு குறியீட்டு நாவல் விநாயக முருகனின் 'ராஜீவ்காந்தி சாலை'.

### எங்கே போய் முட்ட?

# தமன்னாராய்ச்சியும் துவாரகாபாலர்களும்

வேலை நேரத்தில் பொழுது போகாவிட்டால், போனை நோண்டிக் கொண்டிருப்பது வழக்கம். இலவச வானலை இணைப்பு உண்டு. எதேச்சையாக பேஸ்புக்கிற்குப் போனால், தடுத்தாட் கொண்டு விட்டது. இதென்ன, புதிதாக? என்று இரண்டு தடவை முயன்று பார்த்து விட்டு, உத்தரவின்றி உள்ளே யாரும் நுழைந்திருப்பார்களோ என்ற எண்ணம் வந்தாலும், எதற்கும் ஒரு தடவை கூகிளில் Is facebook down? என்று தேட, செய்தி நிறுவனங்கள் பேஸ்புக் பலரை வீட்டுக்கு வெளியே நிறுத்தி வைத்திருக்கிறது என்று செய்தி போட்டிருந்தன.

சரி, நம்ம வேலையைப் பார்ப்போம் என்று வேலையைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, சாவகாசமாக பின்னால் நேரம் கிடைத்தபோது தட்டிப் பார்க்க, பலர் நெஞ்சுவலியால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரு கொஞ்ச நேரம் பேஸ்புக் இல்லாமல் இருப்பது என்பது பலருக்கு முடியாததாகி இருக்கிறது. எத்தனை பேரின் anxiety level எகிறிப் போய், இரத்த அழுத்தம் கூடியதோ தெரியாது?

தொழில்நுட்பத்தின் சிறைக்குள் எங்களை அறியாமலேயே எங்களைக் கைதிகளாக்கிக் கொண்டிருக்கிறோம். இணையத்தில் பாவனையாளர்களாக இருப்பதால் வரும் பிரச்சனை இது.

நமக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. நாம படைப்பாளி. Creator. எப்போதாவது எதையாவது செய்து கொண்டிருக்கும் ரகம்.

காலநிலை முன்னெப்போதும் இல்லாமல் மணியாக இருக்கிறது. இம்முறை எந்தப் பெரும் பனிப்பொழிவும் நம்ம பக்கத்தில் இல்லை. தோட்ட வேலை ஆரம்பம். நிலக்கீழ் அறையில் விதைகள் முளைக்கப் போட்டாயிற்று.

பேஸ்புக்கில் குப்பை கொட்டாமல், தோட்டத்தில் குப்பை கொட்டினால், பலன் நிறைய. அதை வீடியோக்கள் எடுத்துக் கொண்டிருக்கிறேன். இனிமேல், பேஸ்புக் பக்கம் நடமாட்டம் குறைவாகத் தான் இருக்கும்.

ஊருலகத்தில் என்ன நடக்கிறது என்று அப்டேட் பண்ண அடிக்கடி பார்த்துக் கொண்டாலும், அறச்சீற்றம் வராமல் பார்த்துக் கொள்வது தான் கொஞ்சம் சிரமமாக இருக்கும். நமக்கு பேஸ்புக் இல்லாமல் இருப்பதால் நெஞ்சுவலி வருவதில்லை. பேஸ்புக் இருப்பதால் நெஞ்சுவலி வரும் ரகம். யாழ்ப்பாணிகளின் முட்டாள் தனங்களைப் பார்க்கும்போது, அனாவசியமாக இரத்த அழுத்தம் கூடுகிறது. நான் தமிழ் ரேடியோ இங்கே கேட்காமல் விட்டதன் காரணமே அது.

எப்போதாவது சிரிக்க வைக்க வேண்டும் என்று தோன்றினால், வரக் கூடும். மற்றும்படி தற்போதைக்கு பெரிதாக நடமாடுவதாக இல்லை என முடிவு.

நம்பிக்கை தரக்கூடிய விடயங்கள் வாழ்க்கையில் நடக்கத் தொடங்கியிருக்கின்றன. சிலநேரம் அதில் பொழுதைப் போக்குவது வாழ்க்கைக்குப் பயன்தரக் கூடும்.

வாழ்த்த மாட்டீங்களா, பிரண்ட்ஸ்?

பேஸ்புக்கில் பெரும் அறச்சீற்றமும் உரையாடலும் நடந்து கொண்டிருந்தது. மொத்தமான தடித்த புத்தகங்கள் தான் தரமான புத்தகங்கள் என்று யாரோ சொன்னதாக ஒரு உரையாடலும் அறச்சீற்றமும்.

யாராவது பழைய பத்திரிகை விற்கிற வியாபாரியாக இருக்குமோ என்று பார்த்தால், சொன்னது பெரும் இலக்கியவாதியாம். வழமை போல, மற்ற இலக்கியவாதிகள் அறச்சீற்றம் கொண்டு, தங்களுடைய டொப் டென் பட்டியல்களோடு உரையாடத் தொடங்கியிருந்தார்கள்.

என்னே உரையாடல்? சிந்தனையைக் கூட்டி, அறிவைப் பெருக்கி பிரித்து அள்ளி கழித்து விடும் உரையாடல். இவ்வாறானதொரு இலக்கிய உலகில் பிறக்க யாம் என்ன தவம் செய்தோமோ?

எடைப்படி தரத்தை

**ஜோர்ஜ் இ.**

நிர்ணயிப்பதாயின் பொன்னியின் செல்வனா? கடல்புறாவா? உலகத் தரமானது என்று என்பது தெரியவில்லை. இரண்டுமே நான் வாசிக்காதவை.

மறுபக்கத்தில் ஆசான் மலையாளிகளைத் திட்டியது பற்றியது.

நமக்குப் பெரும்பேறாய் கிடைக்கும் புத்திஜீவித்தனமான உரையாடல்கள் இப்படித் தான் இருக்கின்றன. போங்கடா, போய் வேலையைப் பாருங்கடா என்று இந்த வேலையத்த கூட்டத்துக்கு சொல்ல ஒருத்தன் இல்லாமல் போய் விட்டான்.

இவ்வாறான அறிவையும் சிந்தனையையும் வளர்க்கும் மனம் திறந்த கருத்துப் பரிமாற்றமும், உரையாடலும் நடக்கும் இந்த பேஸ்புக்கை யாராவது ransomware பேர்வழிகள் உள்ளே நுழைந்து, எல்லாவற்றையும் அழித்திருந்தால், உலகம் உருப்பட்டிருக்கும்.

பலருக்கும் பைத்தியம் பிடித்திருக்கும் தான். ஆனால், முட்டாள்களை விட, பைத்தியங்களை கையாள்வது இலகுவானதாக இருந்திருக்கும்.


அபத்தம் முதலாவது இதழில் இருந்தே சாருவின் அயோக்கியத்தனம் பற்றி எழுதியிருக்கிறோம். சாரு இலங்கைக்கு வரப் போகிறார் என்றதுமே, 'வானத்தில் போகிற சனியனை ஏணி வைத்து இறக்காதீங்கப்பா!' என்று தீர்க்கதரிசனம் கூடச் சொன்னோம்.

வந்தார். நொந்தார். சீன் காட்டினார்.

தன்னைக் கொல்லப் போகிறார்கள் என்றெல்லாம் தமாஷ் பண்ணினார். அதன் பின்னால் எந்தக் கதையும் இல்லை. அமெரிக்க விருதுக் கதை மாதிரி, அதுவும் கொஞ்ச நாள் பரபரப்பு.

பிறகு, அவசரம் அவசரமாக இலங்கைப் பயணம் பற்றி நாவலே எழுதியிருக்கிறார். அதை அவரது தலைமைச்சீட அல்லக்கை வழமை போல, உலக மகாகாவியம், பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தப் போகிறது என்று புழுகித் தள்ளியிருந்தார்.

சாரு அதில் தன்னை அழைத்தவர்கள் பற்றி எழுதியிருப்பதாக யாரோ பேஸ்புக்கில் சொல்லியிருந்தார்கள். சம்பந்தப்பட்டவரும் பூடகப் பெயரில் குறிப்பிடப்பட்டவர் தனது கதையைச் சொன்னால் வேறாக இருக்கும் என்று பண்போடு குறிப்பிட்டிருந்தார்.




நமக்கோ, 'அப்பவே சொன்னேன், கேட்டியா? மோமண்ட்.

சாரு போன்ற அயோக்கியர்கள் தங்களை ஏதோ றோயல்டி, அதுதான் அரச குடும்பம் என்ற நினைப்பில் entitlement சிந்தனையில் அலைகிறவர்கள். ஒருவர் வீட்டில் விருந்தினராகப் போனால், எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படைப் பண்பு கூடத் தெரியாதவர்கள். இவர்களை எல்லாம் விருந்தாளிகளாக அழைப்பது என்பது சொந்தச் செலவுச் சூனியம் மாதிரி. குறைந்த பட்ச நன்றியுணர்வும், நாகரீகமும் இல்லாத இந்த அயோக்கியர்களை எல்லாம், பெரும் இலக்கியவாதிகள் என்று தூக்கிக் கொண்டாடிக் கொம்பு சீவினால், நெஞ்சில் குத்தத் தான் செய்வார்கள்.

அவரவரை அவரவருக்குரிய இடத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இல்லை, அவர் உங்களைப் பற்றி அவர் எங்காவது சொல்லி, இலக்கிய முக்தி அடையலாம் என்று நினைத்தால்... அதற்காக செலுத்தும் விலை இப்படித் தான் இருக்கும் என்பதையும் தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

ஓசியில் தனக்கு எல்லாம் கிடைக்க வேண்டும் என்று டிமாண்ட் பண்ணுகிற இவன் போன்ற அயோக்கியர்கள் தங்களுக்கு நீங்கள் மாமா வேலை பார்க்க வேண்டும் என்றெல்லாம் எதிர்பார்ப்பார்கள். பெண்கள் உள்ள வீடு வாசல்களுக்கு அண்டாமல் பார்த்துக் கொள்வது எதற்கும் நல்லது.

இவன் போன்றவர்களின் எதிர்பார்ப்பு எப்படியானதாக இருக்கும்?

தனக்கு மாமா வேலை பார்க்கும் தன் தலைமை அல்லக்கையிடம், தன் கனவு என்று சொல்லிக் கொள்ளும், பாப்லோ நெருடா வாழ்ந்த சிலிக்கு, தன்னைக் கூட்டிச் செல்லக் கேட்காமல், பாங்கொக் கூட்டிச் செல்லக் கேட்கிறான் என்றால், அவனுடைய எண்ணமும், நோக்கமும் எதுவாக இருக்கும் என்பதைத் தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

இந்த மனப்பிறழ்வு கொண்ட சமூக விரோதியையெல்லாம், தமிழிலக்கியத்தின் சொத்து, பிறழ்வு இலக்கியத்தின் பீலாமகன் என்றெல்லாம் கொண்டாடி அசிங்கப்படாதீர்கள்.

இவனைப் போன்றவர்களின் லிஸ்டில் நமக்குத் தெரிந்த நம்ம ஊர் விடுதலைக் கவிஞர்கள், தமிழ்த்தேசிய இலக்கியவாதிகள் எல்லாம் நிறைய உண்டு.

கொஞ்ச நாளைக்கு முன்னால், பேஸ்புக்கில் ஒரு யாழ்ப்பாணி

இளைஞன் இலக்கியம் பேசியிட்டிருந்தான். கொஞ்சம் வித்தியாசமா யோசிக்கிறானே என்று நினைத்தேன். ஒரு தடவை பெரும் மனச்சலிப்போடு பதிவு ஒன்றைப் போட்டிருந்த போது, மனம் கேளாமல், உட்பெட்டியில் ‘மனம் தளர வேண்டாம். வாழ்க்கை இப்படித்தான்’ என்று ஆறுதல் சொல்லியிருந்தேன். இளம் பையன், ஏதோ சமூகச் செயற்பாடுகளில் ஈடுபடுகிறான், என்னைப் போல எத்தனையோ சவால்களை எதிர்கொள்கிறான், மனம் சலிக்க விடக் கூடாது என்ற எண்ணம் மட்டுமே எனக்கு இருந்தது.

அதற்கு நன்றி கூட இல்லாமல், ம் என்பது போல ஏதோ பதில் வந்தது.

இப்படிப் பதில் சொன்னதும், சரி, சின்னப் பையன், வளர இடமுண்டு, யாழ்ப்பாணிகள் நன்றாகவே கற்றுக் கொடுப்பார்கள் என்று விட்டு விட்டேன். பின்னர் ஏதோ இலக்கிய முயற்சிகள் செய்வதாக பதிவுகள் வந்தன. நான் அலட்டிக் கொள்ளவில்லை.

தற்போது ஆறு.திருமுருகன் பெண்கள் பற்றிச் சொன்ன பிற்போக்குக் கருத்துக்கள் குறித்தும் அறிக்கைகள் விட்ட ஞாபகம். ‘அது நல்ல விசயம் தான் தம்பிகளா! ஆனா, இந்துத்துவக் கனவோடு கொஞ்சப் பேர் அலைகிறார்கள். அவர்களையும் கவனியுங்கள். இல்லையேல் நீங்களும் கோமியம் குடிக்க வேண்டி வரும்’ என்று பேஸ்புக்கில் எழுதியிருந்தேன்.

ஆனால், தாங்கள் யாழ்ப்பாணம் போன போது, அவனையும் அவன் சார்ந்தவர்களையும் சந்தித்த இரண்டு நண்பர்கள் சொன்னார்கள், அவர்கள் அங்கே வெளிநாடுகளில் இருந்து இலக்கியம் படைக்க அனுப்பப்படும் பணத்தில் ஜாலியாகத் திரிகிறார்கள், தங்களை அழைத்துக் கொண்டு விலையுயர்ந்த மதுச்சாலைகளுக்கு அழைத்துச் சென்று, தாங்களே இவர்களின் செலவில் விலையுயர்ந்த மதுவை ஓடர் பண்ணிக் குடித்தார்கள் என்று.

இப்போது, அவர்களின் குழுமம் பாலியல் சுரண்டலில் ஈடுபட்டிருந்ததாக பெரும் செய்திகள்



ஓடிக் கொண்டிருக்கின்றன. நபர்கள் பேஸ்புக்கில் கடையை மூடி விட்டுத் தலைமறைவு.

யாழ்ப்பாணிச் சிந்தனை யோடு முற்போக்கும், இலக்கியமும் பேசுகிறவர்கள் மீது நான் எப்போதுமே அலேர்ட் ஆகத்தான் இருக்க வேண்டியிருக்கிறது. அவர்களுடைய சிந்தனை எப்போதுமே ஒன்றாகத் தான் இருக்கிறது.

•••

சாமான்யன்.

சராசரி.

காமன்னே.

அற்பர்கள்...

இலக்கிய

....ண்டைகக்கு

எல்லாம் பெரிய நெனப்பு!

ஓ...

ஆண்டைகளுக்கு!

•••

ஈழத்துப் பிணங்காவிகளுக்கு கூத்து நடத்த இன்னொரு பிணம் கிடைத்தது. சாந்தனைக் கடவுள் ஆக்காத குறையாக கொண்டாடித் தீர்த்தார்கள்.

மாவீரர் பட்டம் கொடுத்த பிரபாகரனுக்கே கிடைக்காத அஞ்சலி சாந்தனுக்குக் கிடைத்திருக்கிறது.

இதற்குள் அசல் புலிகளின் உத்தியோகபூர்வ ஏஜண்டுகள் நாங்களே என்று உரிமை கோரிக் கொள்வோர், அதெப்படி? யுத்தத்தின் தற்கொடை செய்யாத அவரை மாவீரர் இல்லத்தில் புதைக்க முடியும்? என்றெல்லாம் கொதித்து விட்டார்கள்.

அவர் வெறும் மாணவன், அப்பாவி என்றார்கள். பிறகு அது அந்தச் சாந்தன் இல்லை, வேறு சாந்தன் என்றார்கள். பிறகு அவரை மாவீரன் என்கிறார்கள். இப்போது இந்தியாவுக்கு எச்சரிக்கை வேறு விடுத்திருக்கிறார்கள்.

முன்பு நெடுமாறனும் இப்போது சீமானும் நெய்தல் படையணியோடு இலங்கைக்கு வர, இந்த பொய்தல் படையணி இந்தியாவுக்குப் போக...

கச்சதீவில் வியூகம் வகுத்து, தாச்சி விளையாடப் போகிறார்கள் போல.

இந்தச் சமூகம் தன்னைக் கோமாளியாக்க இன்னும் எத்தனை வழிகள் இருக்கிறதோ?

•••

உண்மையில் சாந்தன் அரும்பொட்டில் தப்பியிருக்கிறார்.

ஈழக்கடும் போக்காளர் கஜேந்திரகுமார்,

புதுடில்லியில் தமிழரசுக்கு
அலுவலகம் வைக்கிற சிறிதரன் உட்பட்ட
தமிழ் தேசிய அரசியல்வாதிகளிடம் போயும்
பலனில்லாமல்...

தாயும் சகோதரனும்
அமைச்சரிடம் உதவி கேட்டுப் போனார்கள்.

சாந்தன் அவரின் உதவியுடன்
வந்து சேர்ந்திருந்தால்...

இந்தப் புகழுடலைப் பல்லக்கில் காவுகிற
அத்தனை பேரும்...
கில்மிஷாவுக்கு செய்த
அதே சம்பவத்தை
அதே பெருமையோடும்
ஆக்ரோஷத்தோடும் செய்திருப்பார்கள்.

சாந்தன் தன் வாழ்நாள் பூராவும்
அவமானத்தோடு...



தான் அனுபவித்ததை விட
மோசமான வேதனையை அனுபவிக்க வேண்டியிருந்திருக்கும்.

நீங்கள் நாசமாய் போனதற்கான
காரணங்களை வெளியில்
தேட வேண்டியதில்லை.

•••

யாழ்ப்பாணித் தமிழ்த் தேசியம் என்பது...
ஊரில் செத்தவீடுகளுக்குப் போவது மாதிரி.

முகத்தைக் காட்ட வேண்டும்.
கட்டிப்பிடித்து ஒப்பாரி வைக்கவேண்டும்,.
மூக்குச் சளியைச் சீறி பக்கத்தில் உள்ளவரின் தோளில் துடைக்கலாம்.

கண்ணீர் துடைக்கத் தேவையில்லாமல்...
முடிந்து எழும்பி வெத்திலை பாக்குப் போடலாம்.

எரியும் தணல் கயிற்றோடு வரும் பையன் வைத்திருக்கும் சுருட்டை வாங்கிப் பத்தலாம்.
ஏன் செத்தது என்ற கேள்விக்கான பதிலை...
அழுது கொண்டே இருக்கும் வீட்டுக்காரரிடமட்
நூற்றிப் பதினாலாம் தரம் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டியது முக்கியம்.

நாங்களும் வந்தனாங்கள் எண்டு வீட்டுக்காரருக்குத் தெரியவேணுமல்லே!?

சந்திக்காத ஆக்களைக் கண்டு சுகம் விசாரிச்சுப் புதினம் பறையலாம்.

எல்லாமே கடமைக்காக.

போகாட்டி பிறகு எங்கட சுக துக்கங்களுக்கு வராயினமல்லோ!?

இறந்தவனின் இழப்பு, குடும்பத்தின் துயர் எல்லாம்
அவேன்ரை பிரச்சனை.

எங்கட பிரச்சனை முகம் காட்டிறது மட்டும் தான்.

பிறகு, என்ன அண்டைக்கு அங்க காணேலை எண்ட கேள்விக்கு, கேக்கிறவேக்கு எல்லாம் பதில் சொல்ல வேணும்.

பண்பாடு, பாரம்பரியம், சம்பிரதாயங்கள் எல்லாம் காரண காரியம் இல்லாத... மற்றவே என்ன நினைப்பினம், மற்றவே எல்லாரும் செய்யினம் என்று கடமைக்காகச் செய்யப்படுகின்றவையே!

பூப்புனித நீராட்டு முதல் பேஸ்புக் இரங்கல்கள் வரைக்கும்!

நாங்கள் எங்கட ஒற்றுமையைக் காட்ட வேணும்...
துரோகிகளுக்கு மண்டையில் போட்டபடி.
யாழ்ப்பாணித் தமிழ்த் தேசியவாதியாக இருப்பதும்...
அதன் இறுதிக்கடன்களையும் கடமைகளையும் நிறைவேற்றுவதும் மிகவும் சுலபமானது.
•••

சாந்தனின் இறுதிக்கிரியைக் கூத்துக்கள் இந்த அடிப்படையில்

தான்.

இதை விட பெரிய ஊர்வலத்தை எல்லாம் சின்ன வயதில் பார்த்திருக்கிறேன். உண்மையான சயனைட் போராளி நம்ம ஊர் சிவகுமாரன் இறுதி ஊர்வலத்தின் போது. அப்பா கூட்டிப் போய், சிறு பையனாக நேரில் கலந்து கண்டது.

இப்படித் தொடங்கி இப்படித் தான் முடியும் என்பது விதி!

துவாரகா வந்து போனதை விட தமன்னா வந்து போனது, யாழ்ப்பாணத்தை உண்மையாக ஒரு உலுக்குத் தான் உலுக்கி விட்டிருக்கிறது.

முப்பது வருசத்துக்கு முன் நளினிக்கு கை குடுக்க யாழ்ப்பாணிகள் பிரான்சில முப்பது பிராங் கொடுத்தவே. இப்ப தமன்னாவோட யாழ்ப்பாணத்தில் செல்பி எடுக்க முப்பதாயிரம்.

யாழ்ப்பாணிக்கு பணவீக்கமோ, தலைவீக்கமோ தெரியாது?

யாழ்ப்பாணிக்கு உது பெரிய காசுமில்லை. பெரிய விசயமும் இல்லை.

தனுஷ், சிம்புவைக் கூட்டிக் கொண்டு வந்து, ரசிகைகளோட படம் எடுத்தாத்தான் பண்பாடு, கலாசாரம் என்ற பிரச்சனை கிளம்பும்.

கிணத்துக்குள்ள இருந்து வெளியே வரக் காணேலை. வேலியை அடைச்சுத் தான் என்ன?

தமன்னாவைப் பார்க்கப் பொட்டைப் பிரித்தும் பனையில் ஏறியும் யாழ்ப்பாணிகள் பகீரதப்பிரயத்தம் செய்த கதை பெரும் பரபரப்பு.

தமிழ்த்தேசியக் குத்தாட்டம் அப்படித் தான்.

தேசிக்காய்த்தலையருக்கும் ஒரு குத்து.
அவர் போட்டுத் தள்ளின தமிழரசுத் தலைவர் சிறிதரனுக்கும் ஒரு குத்து.

ஆறு திருமுருகனுக்கும் ஒரு குத்து.

அப்பிடியே, தமன்னாவுக்கும் ஒரு குத்து.

தமன்னா நிகழ்ச்சி முழு கவரேஜில் பல யூடியூபர்கள் பிரபலமாகி விட்டார்கள்.

யாழ்ப்பாணத்தில் செல்போன் வைத்திருந்தா, யூடியூபர்.
கனடாவில் செல்போன் வைத்திருந்தா, தமிழ்த்தேசிய ஊடகவியலாளர்.


உங்களுக்கு என்ன மாதிரிப் படுகுதுதோ தெரியாது. எனக்கு என்னவோ ஆறு.திருமுருகன் ஐயாவைக் காப்பாற்ற றோ சதி செய்த மாதிரித் தான் படுகுது.

ஒழுங்கா மதில் வேலியைக் கட்டியிருந்தா, எட்டிப் பாக்க ஏன் பனை ஏன் பனை மரத்தில் ஏறுறாங்கள்?

இந்தக் கூத்தையெல்லாம் பார்த்த சில யாழ்ப்பாணிகள் வழமை போல, இருப்பவர்கள் இருந்திருந்தால் இப்படியெல்லாம் நடந்திருககுமா? என்றபடி.

உண்மை தான்.

தேசிக்காய்த் தலையரின்



திருநாமத்தினாலே பச்சை மட்டை அடி வாங்கியிருப்பியள்.

உங்களை மிருகங்கள் போல நடத்துகிற மிருகங்களால் ஆளப்பட வேண்டும் என்று விரும்புகிறீர்களா? இல்லை, நாகரிகமும் பண்பாடும் கொண்ட சமூகமாக, சட்டத்துக்கும் ஒழுங்குக்கும் மதிப்பளிக்கிற மனிதர்களாக வாழ்ப் போகிறீர்களா? என்பதை,
ஒரு சமூகமாக நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.

இல்லை என்றால், வாயைத் திறந்தால் மண்டையில் போடுகிற ஒரு தேசிக்காய் தலையரின் கீழ் வாழ மட்டுமே நீங்கள் தகுதி பெற்றவர்கள்.

மலை போல் எழுந்ததொரு மறவர் கூட்டம்
குலை நடுங்கி கதி கலங்கி கயவர் ஓட்டம்.

இப்படி மலைபோல் எழுந்த கூட்டத்தைப் பார்த்து உண்மையில் பயந்து தான் போனேன்.

என்னவோ, நல்ல காலம்.

முத்தவெளியில் இன்னொரு ஐம்பது நினைவுத்தூபி கட்டி இந்திய வல்லாதிக்கத்திற்கு எதிராக இன்னொரு நாற்பது வரியம் அல்லல்பட வேண்டி வருமோ எண்டு உண்மையாய் பயந்து தான் போனன்.

தமிழாராய்ச்சி தமன்னாராய்ச்சியில் முடிந்திருக்கும்.

இப்படியாக கரட் விலையும் ஆறு.திருமுருகனின் வேலியும் பிரச்சனையா இருந்ததை விட, தமன்னாவின் டிக்கட் விலையும் வேலியும் அதை விடப் பெரிய பிரச்சனையாப் போச்சு.

தமன்னாவை வைச்சு நல்லா உழைச்சுத் தள்ளின யூடியூபர்களுக்கு ரம்பா புருஷன் ஆப்பு வைச்சிட்டார் போல. தங்கள் கணக்குகள் முடக்கப்பட்டதாக யூடியூபர்கள்

புலம்பிக் கொண்டிருந்தார்கள். ஒரு பெரும் கனடியத்தொழில் அதிபரை அதென்ன ரம்பா புருஷன் என்று கேவலமாக?

அவர்கள் உண்மையில் கம்பத்தில் தொங்கிய தொங்குமானைப் பேட்டி கண்டிருந்தால், அவரும் கல்பனா அக்கா மாதிரி பேமஸ் ஆகி, அடுத்த மாவீரர் தினத்திற்கு கனடாவிற்குக் கூப்பிட்டிருக்கலாம்.




ராஜ் ராஜரத்தினம் தற்போது யாழ்ப்பாணத்தில். அவரும் யாழ்ப்பாணம் தானே. 47 நாடுகளைக் குற்றம் சொல்வது போல, அமெரிக்காவைக் குற்றம் சொல்கிறார்.

யாழ்ப்பாணிகள் இப்போது தான் லங்காசிறியிலும் உதயன் பத்திரிகையிலும் அவரைப் பற்றி அறிந்திருப்பார்கள் போல.

தமிழனுக்கு அநீதி இழைக்கப்பட்டது போல எல்லோருமே கதை சொல்கிறார்கள்.

அமெரிக்க நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டு, தண்டமும் கட்டி, தண்டனையும் பெற்றவர். அவர் செய்தது அமெரிக்கச் சட்டப்படி குற்றம். அவரது புத்தகம், பேட்டிகள் எல்லாம் வாசித்துத் தான் இருக்கிறேன். அவருக்கும் புலிகளுக்குமான தொடர்பு பற்றி Vanity Fair இல் வந்ததைப் பற்றி தாயகம் இணையத்தளத்தில் ஒரு கட்டுரை கூட எழுதியிருக்கிறேன்.

அவரோடு இருந்தவர்கள் இவருக்கு எதிராக சாட்சி சொல்லியிருக்கிறார். அதற்கு தன் மீது இந்தியர்கள் பொறாமை கொண்டது போல அவர் கட்டமைப்பது தவறு.

பங்குச் சந்தையில் மற்றவர்களுக்குத் தெரியாத உள்தகவல்கள் தெரிந்து கொண்டு முதலீடு செய்து லாபம் பெறுவது குற்றம். அது பரவலாக நடக்கிறது தான். இவர் அகப்பட்டுக் கொண்டார். அதற்கு இவர் சொல்வது உட்பட்ட பல காரணங்கள்.

அதற்காக அவரைக் குற்றமற்றவர், அவருக்கு அநீதி இழைக்கப்பட்டது என்பது எல்லாம் முழு ஓவர். தமிழர் என்பதால் கொலைகாரர்களைப் புனிதர்கள் ஆக்கிய சமூகம். இப்படித் தான் செய்யும். சொல்லும்.

குற்றத்திற்கான தண்டனையை அனுபவித்து விடுவிக்கப்பட்டிருக்கிறார். அத்தோடு நிறுத்திக் கொள்ள வேண்டியது தான்.

தமிழேண்டா என்ப தெரல்லாம் யூடியூபர்கள் முட்டாள்களை வைத்துப் பணம் சம்பாதிப்பதற்கானது.

காலம் அறுபது இதழில் சோபா சக்தியின் கதை ஒன்று வெளிவந்திருக்கிறது. ஒரு விதவைப் பெண்ணின் கியூபப் பயணக் கதை.

லண்டனில் 24 மணி நேரம் அரச உதவிப் பணத்தில் பசி நோக்காது கண் துஞ்சாது அறச்சீற்றம் கொள்ளும் தோழர் கம்யூனிச கியூபாவை விபசார மையம் என்றால் விடுவாரா? பொங்கி எழுந்து விட்டார். ஏகாதிபத்தியத்தின் சதியும், கியூபாவை உடலுறவு உல்லாசப் பயணத்திற்குச் செல்வோர் மேற்குலகினர் என்றும், அங்கு பாலியல் தொழில் நடக்கிறது என்று நிரல் விரல் நீட்டுகிறவர்கள் முதலாளித்துவத்தின் தொங்குதசைகள் அல்லது கிறிஸ்தவ ஒழுக்க அடிப்படை வாதிகள் என்று சீற்றம் கொண்டிருக்கிறார்.

சரி, அவரை விடுவோம். அவர் பழைய கணக்குத் தீர்க்கிறார்.

எம்.டி.முத்துக்குமாரசாமி வேறு குழப்பம் அடைந்திருக்கிறார். கியூபாவின் நிலைக்கு பொருளாதாரத் தடை உட்பட்ட காரணங்களைச் சொல்கிறார்.

அந்தக் கதை என்ன சொல்ல வருகிறது என்பது தான் அவரது கேள்வி.

இவர்கள் இருவரையும் வாசித்த எனக்கு குழப்பமாக இருக்கிறது.

எம்.டி.எம் அங்கு பாலியல் தொழில் இருக்கிறது, அதற்குக் காரணங்கள் வேறு என்கிறார். லண்டன் அறச்சீற்றக்காரர் அங்கு சுயவிருப்பத்தின் பேரில் செய்யத் தடை இல்லை, ஆனால் அது பாலியல் தொழில் இல்லை என்கிறார்.

இங்கே கனடாவில் வாழுகிற தமிழர்களைக் கேட்டால் கதை கதையாகச் சொல்வார்கள். எனக்கே மிகவும் நெருக்கமான தெரிந்தவர்களின் கதைகள் நிறைய உண்டு.

கியூபாவின் பொருளா தாரத்தை சிதைந்து போக விடாமல் காப்பாற்றுவது கனடாவில் உள்ள யாழ்ப்பாணிகள் தான் என்பது என் ஊகம். அப்படி திருவிழாவுக்கு அள்ளுப்பட்ட மாதிரி போய் இறங்குகிறார்கள். நீண்ட காலம் வசிக்கிறார்கள்.

அதெல்லாம் இருக்க, எம்.டி.எம் சார் தானே கொஞ்ச நாளைக்கு முன்னால், சோபா சக்தியின் கதைகளில் நெஞ்சம் பதறி மெய் சிலிர்த்துப் போனதாக கதை சொன்னவர்.

ஊதிப் பெருப்பிப்பதே நீங்கள். பிறகெதற்கு இந்த வேதனை எல்லாம்!? நம்மாளு எதைச் செய்தாலும் இலக்கியம் என்ற ஞானமரபில் ஒரு விருதைக் கொடுக்க வேண்டியது. யார் என்ன சொல்ல முடியும்?

எதற்கும் அவுஸ்திரேலியா விலிருந்து தீர்ப்பு வரட்டும்.



# கொடி கொண்டு வந்தீங்களோ?

பூங்கோதை

பனி படர்ந்து, உறைந்து போயிருந்த மலைச் சிகரங்களின் இடையே ஒரு அழகான நதி வளைந்து நெளிந்து செல்வதைப் போல வீழ்ந்து கிடந்த வீதியின் ஊடாக சந்திரா தன் காரை இலாகவமாகச் செலுத்திக் கொண்டிருந்தாள். டெய்சி தன் வழமையான நகைச்சுவை உணர்வு குறையாமல் அதே வேளையில் சந்திராவின் கவனம் அவளது வாகன ஓட்டத்திலிலிருந்து விலகி விடாமல் பல கதைகளையும் பேசிய படியே இருந்தார்.

டெய்சிக்கு இப்போது எழுபது வயதாகினாலும் துரு துருவென்ற உற்சாகத்திற்கும், கலகல சிரிப்புக்கும் பஞ்சமில்லாமல் வேலைகளை எல்லாம் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தவாறே இருப்பார். சந்திராவிலிருந்து பல வயதுகள் கூடுதலாக இருப்பினும் இத்தனை வருட கால நட்பை அந்த வயது வித்தியாசம் எதுவும் செய்து விடவில்லை.

அண்மையில் தான் தன் அருமைக் கணவரை இழந்து விட்டிருந்தார். அந்தத் துயரிலிருந்து மீண்டெழ முன்னரே அவரை மார்பகப் புற்றுநோய் தாக்கியிருந்தது. யாருக்கும் கூற விரும்பாது, சந்திராவை மாத்திரம் நேரில் அழைத்து, விடயத்தை மிக அமைதியாக அவளுக்கு அறிவித்தார். அதன் பின் அது குறித்துப் பேசுவதை அவர் விரும்பவில்லை. இருந்தாலும் சந்திரா அவர் அவ்வளவு தூரம் வைத்தியசாலைக்குத் தனியாக வண்டி ஓட்டிச் செல்வது கூடாது எனக் கூறி விட்டாள். சந்திரா மீது இருந்த நேசத்தில் டெய்சிக்கு எதுவும் மறுக்க முடியவில்லை.

சில வேளைகளில் இந்நோய் எந்த அறிகுறியும் இல்லாது வந்து குந்தி விடுகிறது. அதைக் கண்டு பிடித்த போது அது இறுதிக் கட்டத்திற்கு வந்திருப்பதை வைத்தியர்கள் அறிந்து கொள்கிறார்கள். டெய்சியின் நிலையும் அதே போலத் தான் இருந்தாலும் அவர் புன்னகையில் எந்த மாற்றமும் இருக்கவில்லை. சந்திராவின் எண்ணங்களை டெய்சியின் குரல் இடை நிறுத்தியது.

'என்னை வைத்தியசாலையில் இறக்கி விட்டபின், நீ வீட்டுக்குப் போய் விடு சந்திரா. எனது சிகிச்சை முடிந்த பின்னர் நான் வாடகைக் கார் ஒன்றை அழைத்து, வீடு போய் விடுவேன்.' மெதுவாகக் கூறியவரை சந்திரா அமைதியாகப் பார்த்து புன்னகைத்தாள்.

'அது எப்படி என்னால் முடியும்? நானும் உங்களோடு இருந்து சிகிச்சை முடிந்ததும் மீண்டும் உங்கள் வீட்டில் கொண்டு போய் விட்டுவிடுகிறேனே?' அவருடைய கைகளைத் தன் கைகளுக்குள் பொத்திக் கொண்ட போது ஏறத்தாழ இருபத்தியைந்து ஆண்டுகளுக்கு முன்னர், 90களின் இறுதிகளில், அவர்கள் கடந்து வந்த தருணங்கள் எல்லாம் அவர்களுக்கிடையில் வந்து போயின.

•••

*1990 களின் இறுதிப் பகுதி அது.*

'இதில ஆயிரம் டொலர் இருக்கு, பத்திரமாய்க் கொண்டு போய் என்ர தங்கச்சியின்ர கையில குடுங்கோ.' மாறன் தந்ததை அவள் ஏக்கத்துடன் வாங்கிக் கொண்ட போது, அவமானத்தாலும் கோபத்தாலும் இனம் தெரியாத ஒரு பச்சாதாபத்தாலும் துடித்த மனதை அடக்கிக் கொள்ளப் பெரும்பாடு பட்டாள் சந்திரா.

அவளுடைய அத்தியாவசிய, அவசர, உயிர் காக்கும் மருத்துவத் தேவைக்கான பணம் எதுவும் அவளிடம் இல்லை என்பது தெரிந்தும் தன்னுடைய தேவையை விடத் தன் தங்கையின் சாதாரணத் தேவை ஒன்றுக்காய் தன்னிடமே அவ்வளவு பணத்தைத் தந்து விடும் தன் கணவனை அவள் எந்த வகையில் சேர்த்துக் கொள்வாள்?

ஒரு வேளை தான் தன்னுடைய சிகிச்சைக்கான பணத்தைத் தானே காவிச் செல்வதை விரும்பாது, தனக்கான பணத்தைத் தான் தன் தங்கைக்கான பணம் என்று சொல்லித் தருகிறானோ என்றும் அவள் மனதில் ஒரு சிறு நப்பாசை எட்டிப்பார்த்தது. எதற்கும் எதுவும் கூறாது அமைதியாக அதை வாங்கிப் பத்திரமாக வைத்துக் கொண்டாள்.

'தங்கச்சி உங்களைக் கூட்டிக் கொண்டு போக கொழும்பு ஏர்போர்ட்டுக்கு வருவா. சில வேளை என்ர அண்ணையும் வருவார்.' மாறன் தொடர்ந்தான்.

சந்திராவுக்கு அவன் பேசுவது எதுவும் மனதில் பதியவில்லை. அவள் சிந்தனை எல்லாம் நான் இல்லாது போனால் என் மூன்று குழந்தைகளும் தாயில்லாப் பிள்ளைகளாய் போய் விடுவார்களே என்ற ஏக்கத்திலேயே கழிந்தது. வைத்திய நிபுணர்கள் அவளை உடனடியாகத் தம்மோடு பேச அழைத்த போது அவள் கடைக்குட்டிக் குழந்தைக்கு அப்போது தான் பிறந்து மூன்று மாதங்கள் ஆகியிருந்தன. மூத்த மகனுக்கு ஆறு வயதும், இரண்டாவது மகனுக்கு நான்கு வயதும் ஆகியிருந்த போது இப்படியொரு அதிர்ச்சியைத் தாங்கும் சக்தி அவளுக்கு எங்கிருந்து வந்ததென்பது அவளுக்கே ஆச்சரியம் தான்.

வைத்திய அறிக்கை அவளுக்கு மார்பகப் புற்றுநோய் என்பதை அறிவித்து அவள் நெஞ்சை உடைத்த பின் வந்த இந்நாட்களில் அவளால் எவரையும் நம்ப முடியாது போனது. ஊரில் இருப்பவர்கள் போலவே, டென்மார்க்கில் அவள் குடும்பம் வாழ்ந்து வந்த இந்தப் பகுதியில், வாழ்ந்து வந்த தமிழ் பேசும் மக்கள் அவளைத் தாக்கிய நோய் குறித்து ஒருவருக்கொருவர் தமக்குத் தெரிந்த, தெரியாத விடயங்களைக் கூட்டியும் குறைத்தும் பேசிக் கொண்டனர்.

அதுவும் போக அவள் டென்மார்க் வந்த இந்தக் குறுகிய காலப் பகுதியில் ஓரளவு இந்நாட்டு மொழியைக் கற்றுத் தேறி அதில் பேசவும், வேலை பார்க்கவும் தெரிந்து வைத்திருந்தது மட்டுமல்ல, அவளும் அவள் கணவன் மாறனும்

இணைந்து பணத்தைச் சேமித்து, மாறனின் தம்பியையும் அவன் மனைவியையும் இந்நாட்டுக்கு வர உதவி செய்திருந்தார்கள்.

அந்தத் தங்கமான தம்பியும் அவனுக்கு வாய்த்த பதிவிரதையும் மார்பகப் புற்றுநோய் தங்களுக்கும் தொற்றி விடும் என்றோ அல்லது அவளுடைய மூன்று சிறு குழந்தைகளையும் தம்மிடம் பாரம் தந்து விடுவார்கள் என்று பயந்தோ அவள் வீட்டுப் பக்கம் வருவதை திடீரென நிறுத்திக் கொண்டனர். அவள் அவர்களோடு தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும் முடியவில்லை. அதன் பின் தான் அவள் அவர்கள் இனி அந்நியர்களானதைப் புரிந்து கொண்டாள். எப்படி இவர்களால் இவ்வாறு நடந்து கொள்ள முடிகிறது என அவளுக்கு யோசித்துப் பார்க்கவும் முடியவில்லை.

•••

விமானம் பறக்க ஆரம்பித்து ஒரு சில மணிகள் கடந்தும் அவளால் அமைதியாகத் தூங்கவோ ஆறுதல் அடையவோ முடியாதவாறு மனதும் உடலும் அதீத அயற்சியில் தோய்ந்து போய்க் கிடந்தன. பல்வேறு உணர்வுகளால் மூடப்பட்ட மனதில் தனித்தனியாக அவற்றைப் பிரித்துப் பார்க்க அவளால் முடியவில்லை. கோபம், துயரம், அதிர்ச்சி, பயம் எனப் பலதும் கூட்டாக அவளை அலைக்கழித்தாலும் ஒவ்வொன்றும் எதற்காக என்பதை அவளால் இனம் கண்டு கொள்ள முடியவில்லை. மிக இளம் வயதிலிருந்தே எத்தனை தடைகளை வென்று வந்தவள் தான் என்பது அவள் மீது அவளுக்கே ஒருவித பெருமிதம் தந்ததாய் இருக்கும் போது, இறப்பதற்காகவா பயம் ஏற்பட்டிருக்கிறது? இல்லவே இல்லை.

சந்திராவிற்கான மருத்துவ சிகிச்சைகளை ஆரம்பிக்க முன்னர், வைத்தியசாலையில் பரிசோதனைகளுக்குப் போகும் போதெல்லாம் அவளது குழந்தைகளை அங்கு வேலை பார்க்கும் ஊழியர்கள்,

அதே வேளையில் வீட்டுக்குத் துக்கம் விசாரிக்க வந்தவர்களின் நாக்குகள் பல்வேறு திசைகளை நோக்கியும் அசைந்தன. சந்திராவின் முன்னே கதிரைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு அவர்கள் தமக்கு வைத்திய சிகிச்சைகள் அனைத்துமே தெரிந்தது போல பேசியதை அவள் பயத்தோடு கேட்க நேரிட்டது. குடும்ப மட்டத்தில் யாருக்குமே புற்றுநோய் வந்ததில்லை ஆகையால், அது குறித்த எந்த விழிப்புணர்வும் அவளுக்கும் இருந்ததில்லை. ஆனால் என்ன எப்போது பேச வேண்டும் என்ற இங்கிதம் தெரிந்தவளுக்கு, துக்கம் விசாரிக்க வந்தவர்களின் உரையாடல்கள் பல்வேறு யோசனைகளைக் கிளறி விட்டிருந்தது.

'அந்த கணபதிப்பிள்ளையின்ர மோனுக்கும் எல்லே உப்பிடி ஒரு வருத்தம் வந்தது. அவனைக் கொண்டு போய் இங்க ஒரு ஆஸ்பத்திரியில வைச்சுப் பார்த்தவங்கள். காலில வருத்தம் ஏதோ எண்டு சொல்லாமல் கொள்ளாமல் காலை வெட்டிப் போட்டாங்களாம் எல்லே.' வந்தவர்களில் ஒருவர் ஆரம்பித்து வைத்தார்.

தாதிமார்கள், வைத்தியர்கள் என அனைவரும் அன்போடும் நேசத்தோடும் பார்க்கும் போதெல்லாம் அவளுடைய மனதில் ஒரு வித கடும் துயரம் ஆழப்பற்றிக்கொள்ளும். ஒரு வேளை நான் இறக்க நேரிட்டால் இக்குழந்தைகள் தாயில்லாக் குழந்தைகளாக அல்லவோ அல்லல் பட நேரிடும். அதை எண்ணித் தான் அவர்கள் எல்லோரும் தன் குழந்தைகளை அன்போடு தலை தடவி விடுகிறார்களோ என்ற எண்ணத்தை அவளால் தடுத்து நிறுத்த முடியவில்லை.

'சிகிச்சைகள் எப்போதும் 50% தான் வெற்றியளிக்கும் நிலையில் தற்போது உள்ளது. இருந்தாலும் நாங்கள் எம்மால் முடிந்தவரை இறுதிவரை போராடுவோம்.' வைத்திய நிபுணர்கள் அவளுக்குக் கூறியதை எப்படி மறக்க முடியும்?

அதே வேளையில் வீட்டுக்குத் துக்கம் விசாரிக்க வந்தவர்களின் நாக்குகள் பல்வேறு திசைகளை நோக்கியும் அசைந்தன. சந்திராவின் முன்னே கதிரைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு அவர்கள் தமக்கு வைத்திய சிகிச்சைகள் அனைத்துமே தெரிந்தது போல பேசியதை அவள் பயத்தோடு கேட்க நேரிட்டது. குடும்ப மட்டத்தில் யாருக்குமே புற்றுநோய் வந்ததில்லை ஆகையால், அது குறித்த எந்த விழிப்புணர்வும் அவளுக்கும் இருந்ததில்லை. ஆனால் என்ன எப்போது பேச வேண்டும் என்ற இங்கிதம் தெரிந்தவளுக்கு, துக்கம் விசாரிக்க வந்தவர்களின் உரையாடல்கள் பல்வேறு யோசனைகளைக் கிளறி விட்டிருந்தது.

'அந்த கணபதிப்பிள்ளையின்ர மோனுக்கும் எல்லே உப்பிடி ஒரு வருத்தம் வந்தது. அவனைக் கொண்டு போய் இங்க ஒரு ஆஸ்பத்திரியில வைச்சுப் பார்த்தவங்கள். காலில வருத்தம் ஏதோ எண்டு சொல்லாமல் கொள்ளாமல் காலை வெட்டிப் போட்டாங்களாம் எல்லே.' வந்தவர்களில் ஒருவர் ஆரம்பித்து வைத்தார்.

'நாங்கள் சிலோனில இருந்து வந்தனாங்கள். எங்களுக்கு இவங்களின்ர வைத்தியங்கள் சரிவராது. இப்பிடித்தான் ஏதாவது இடக்கு மடக்காய்ச் செய்து போடுவாங்கள். நான் எண்டால் உடன ஊருக்குப் போயிடுவன்.' அவருடைய மனைவி சந்திராவைப் பார்த்தவாறே கூறி முடித்தார்.

'இந்தப் பிள்ளைகள் தான் பாவம்.' இன்னொருத்தி இழுத்தாள்.

இவை எல்லாம் காதில் விழுந்த போது சந்திராவிற்கு எப்படியாவது இந்தக்குழந்தைகளை வளர்த்தெடுக்கும் வரையிலாவது உயிரைக் கையில் பிடித்திருக்க வேண்டும் என்ற ஓர் ஓர்மம் மனதில் வந்து குந்தியது.

‘ஒருவேளை இவர்கள் சொல்லுறதைப் போல நான் என்ர நாட்டில போய் எங்கட டொக்ரர்மாரைப் பார்த்துக் கதைச்சால் நல்லது போல கிடக்கு.‘ சந்திரா தனக்குத்தானே அடிக்கடி சொல்லிக் கொண்டது மாத்திரமல்ல அதற்கான ஏற்பாடுகளையும் தானே தனித்து நின்று கவனித்துக் கொண்டாள்.

ஒரு கணவனாகத் தன் மீது அன்பு செலுத்தவோ, கருணை காட்டவோ தெரியாதிருந்த போதும் மாறன் தன் குழந்தைகள் மூவரிலும் அன்பும் அக்கறையும் காட்டி வந்தது சந்திராவுக்கு இச்சூழ் நிலையில் ஓரளவுக்கேனும் ஆறுதல் தந்தது. அல்லாது போனால் அவள் இப்படி போட்டது போட்டபடி இலங்கையை நோக்கித் திரும்பவும் பயணம் செய்யக் கூடியதாய் இருந்திருக்காது.

•••



இதோ கொழும்பு விமான நிலையத்தில் தரையிறங்கி, அங்கு முடிக்க வேண்டிய காரியங்களை இயந்திரம் போல முடித்துக் கொண்டு, தனது பயணப் பொதியை எடுத்த படி வெளியே வருகிறாள். விமான நிலையத்தின் பரபரப்பு குறையாத காலை நேரம். பயணிகளை அனுப்பவோ அல்லது அழைத்துச் செல்லவோ காத்திருக்கும் மக்கள் கூட்டத்தில் தன் மைத்துனியைக் கண்களால் துழாவினாள். உடலும் மனமும் அன்பிற்கும் ஒரு அணைப்பிற்குமாக ஏங்கியது.

‘அண்ணி, அண்ணி, வாங்கோ, வாங்கோ. பயணம் எப்பிடி இருந்திது? திடீரெண்டு வெளிக்கிட்டு வந்திட்டிங்கள்?‘ உஷா அவளை வரவேற்ற போது அவள் முகத்தில் தெரிந்த ஒருவித வேண்டா வெறுப்பை சந்திரா உடனடியாக இனம் கண்டு கொண்டாள்.

உஷா இரண்டடி தள்ளி நின்றே பேசினாள். திருமணத்தின் பின்னர், சந்திராவும் மாறனும் டென்மார்க் வர முன்னர் இருந்த குறுகிய காலப்பகுதியில் உஷாவை அவளுக்கு ஒரு குட்டி மைத்துனியாக மிகவும் பிடித்துப் போயிருந்தது. உஷாவும் சந்திராவோடு நன்றாக ஒட்டிக் கொண்டு விட்டாள். அந்த உறவு இந்த நிமிடம் வரை நீடித்துத் தான் இருந்தது. அதனால் இந்த விதமான செயலை சந்திரா அவளிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. கண்களில் நிறையப் பார்த்த கண்ணீரை உடனடியாகத் தன் கறுப்புக் கண்ணாடியை அணிந்து மறைத்துக் கொண்டாள்.

‘கார் வெளியில நிக்குது, வாங்கோ போவம்.‘ வெறும் சம்பிரதாயம் அவள் பேச்சில் ஒலித்தது. சந்திரா தன் பயணப் பொதிகளோடு தானும் ஒரு பொதியாய் அவளைப் பின் தொடர்ந்தாள்.

காரிலும் பெரும் அமைதி நிலவியது. அவள் கணவனும் ஒருவித அந்நியத்தனத்துடன் சந்திராவுக்கு வணக்கம் சொன்னான். உஷாவின் திருமணத்திற்காக டென்மார்க்கிலிருந்து வந்த போது புது மாப்பிள்ளையாக சில வருடங்களின் முன்பு பார்த்தது தான். இருந்தாலும் தொலைபேசித் தொடர்புகள் இடையிடையே இருந்தது. கார் ஓட்டுவதில் வேண்டுமென்றே அவன் அதிக கவனம் செலுத்துவதை சந்திரா கவனிக்கத் தவறவில்லை.

சந்திரா தாய் தந்தையோடு வளராமல் தன் தாத்தா பாட்டியோடு வளர்ந்தவள். ஓரளவுக்கு வாழ்வின் கனதி புரிய வந்த இளம் வயதில் அவர்களுக்கு எந்த அசௌகரியங்களும் தன்னால் ஏற்படக்கூடாதென்ற எண்ணம் மேலிட, தன் காலில் சுயமாக நிற்பதற்கும், தன் பல்கலைக் கழகக் கல்வியைத் தொடர்வதற்கும் பழகிக் கொண்டவள். அவள் ஊரில் ஒரு பட்டதாரியாக வருமுன்னரே, ஒரு கொட்டகை போட்டு இளம் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துத் தன்னை ஒரு தன்னம்பிக்கை கொண்ட பெண்ணாக, வளர்த்துக் கொண்டவள். சுய சிந்தனை,

ஆரோக்கியமான தேடல், வாசிப்பை நேசிக்கும் பக்குவம் போன்ற பண்புகளைக் கொண்டிருந்தவள்.

ஊரிலும், பின்னர் புலம் பெயர்ந்த பின் டென்மார்க்கிலும் என அவளுக்கு பல சிறந்த நட்புகள் இருக்கிறார்கள். அப்படியிருக்க அவர்கள் எவரையும் தொடர்பு கொள்ளாது தன் கணவன் குடும்பத்தை மாத்திரம் நம்பி வந்தது தவறோ என அவள் எண்ணத் தலைப்பட்டாள். இருந்தாலும் இன்னொரு பக்கம் அவளுக்கு இன்னும் அவர்களில் நம்பிக்கை இருந்தது. சில வேளை தான் தன் நோயின் மனத் தாக்கத்தால் அவர்களை அப்படியெல்லாம் நினைக்கிறேனோ என எண்ணவும் அவளுக்குத் தோன்றியது.

அவளுடைய பயண அலுப்பும் தலை நிறைந்த யோசனைகளும் அவளுக்கு உஷாவின் வீட்டை வந்தடைந்ததைக் கூட உணர விடவில்லை.

'அண்ணி வாங்கோ, இந்த அறையில உங்கட சூட்கேசுகளை வையுங்கோ. குளிச்சிட்டு வந்தால் சாப்பிடலாம்.' உஷாவின் முகம் பேயறைந்தது போல இருந்தது.

வேண்டா வெறுப்பாக சந்திராவை வரவேற்க வேண்டிய ஒரு கட்டாயத்தின் பெயரில் உஷா இயங்க வேண்டியிருந்ததை சந்திரா கலக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். நோய் தாக்கிய அதிர்ச்சியை விட தன்னைச் சுற்றியுள்ளவர்களின் அது குறித்த எதிர் வினையாற்றல் அவளை இடி போல் தாக்கியது. ஒரே மாதத்தில் எல்லாமே மாறி விட்டிருந்தது.

சந்திரா தன் சிகிச்சை குறித்தும் அதன் செலவுகள் குறித்தும் ஏற்கனவே அவளுடைய குடும்ப நட்பு ஒருவர் மூலமாக அறிந்து வைத்திருந்தாள். இவை எல்லாவற்றையும் மனதில் பல் வேறு விதமாகக் கணக்குப் போட்டவாறே சாப்பிட்டு முடித்துக் கை கழுவிய பின்னர் தான் ஓய்வு எடுக்கலாம் என நினைத்துத் தனக்குக் காட்டப்பட்ட அறையினுள் நுழைந்தவளுக்கு இன்னொரு அதிர்ச்சி காத்திருந்தது.

அந்த அறையில் இருந்த கட்டிலில் உஷாவும் அவள் குழந்தையும் தூங்குவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர். அவளுக்கென ஒரு ஒடுங்கிய வாங்கு போடப்பட்டிருந்தது. குழந்தை பெற்று மூன்று மாதங்கள் தான் ஆகியிருந்தது, அதற்குள் மார்பகக் கட்டியெனத் தோன்றிய புற்றுநோயின் வலி, அவற்றையெல்லாம் கடந்து வர வேண்டியிருந்த மன உளைச்சல் என அல்லல் பட்டுக்கொண்டிருந்தவளுக்கு தூக்கம் ஒன்று தான் சிறிது அமைதி தந்து கொண்டிருந்தது. அதையும் சரியாக அனுபவிக்க முடியாதவாறு, அதுவும் பயணக் களைப்பில் இருந்தவளுக்கு அந்த அனுபவம் பெரும் துன்பத்தைத் தந்தது. உடைந்து அழ வேண்டும் போல உணர்வுக் குவியலில் அவள் திக்கு முக்காடிப் போனாள். ஒருவாறு அன்றைய இரவுப் பொழுது கழிந்தது.

அடுத்த நாளே சந்திரா அவர்கள் மூலமாகவே ஒரு தங்கும் விடுதியில் (Hotel ) ஒரு அறையைத் தனக்காக எடுத்துக் கொண்ட போது, அன்றைய நாளில் இன்னுமொரு அதிர்ச்சி அவளுக்குக் காத்திருந்தது. அவள் கணவரின் மூத்த அண்ணா அவளைச் சந்திக்க வந்திருந்தார்.

'எப்பிடி பயணமெல்லாம் இருந்தது?' என மெதுவாகப் பேச ஆரம்பித்தவர், திடீரென இன்னுமொரு கேள்வியை அவளை நோக்கி எறிந்தார்.

'தாலிக்கொடி கொண்டு வந்தனீங்களோ?' கேட்டவாறே சந்திராவை உற்று நோக்கினார். அவர் முகத்தில் தான் கேட்கும் கேள்வி குறித்த எந்த சலனமும் இல்லை. பொரித்த மீனை ஒரு பூனை பார்ப்பது போல அவர் அவளை பார்ப்பது போன்று அவளுக்குத் தோன்றியதும், அவள் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, அந்தக் கேள்வியை உள்வாங்கிக் கொள்ள முயற்சித்தாள். எத்தனை குரூரமான சிந்தனை அவருக்கு உதித்திருக்கிறது?

அவர் கேட்டதின் பின்புலம் என்னவென்பதை ஓரளவுக்கு சந்திரவால் ஊகிக்க முடிந்ததும் ஏற்கனவே காயம் பட்டிருந்த அவள் மனது மேலும் துன்பப்பட்டது. அவரது கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டும் என்றும் அவளுக்குத் தோன்றவில்லை. அண்ணர் எனப்பட்ட அந்த மனிதரை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை என அவள் முடிவு செய்த போது, அவர் எதுவும் சொல்லாமல் அந்த விடுதியின் அறையின் ஒரு புறத்திலிருந்த சொகுசு மெத்தைக் கதிரையில் கால் நீட்டி இருந்து கொண்டார்.

அவளுக்குத் தூக்கம் வந்த போதும் அவர் அந்த அறையை விட்டு நீங்காமல், அங்கிருந்த படியே விடுதியின் தொலைபேசி மூலமாக யாருக்கோ சொல்லிக் கொண்டிருந்தார்.

'ஓம், ஓம், சந்திராவை நான் தான் பார்க்கிறன். விட்டிட்டுப் போகேலாது தானே. ஞாயமாய் முடியப் போகுது எல்லாத்துக்கும்.' அந்த 'எல்லாத்துக்கும்' என்பதற்கு பலமாக ஒரு சத்தம் போட்டுக் கொண்டார்.

சந்திராவுக்கு எல்லாவற்றையும் கேட்டுத் தலையைச் சுற்றியது. நல்ல வேளையாக அடுத்த நாளே அவள் குடும்ப நட்பு மூலமாக அவள் பார்க்க வேண்டிய வைத்தியர்களின் சந்திப்பு நேரம் கிடைத்திருந்தது. இன்று இரவு இப்படி இம்சையோடு கழிக்க வேண்டியது தான் என அவள் முடிவு செய்து கொண்டு, இறுகக் கண்களை மூடிக் கொண்டாள். மெத்தைக் கதிரையில் அண்ணரின் குறட்டை ஒலி அவளைத் தாலாட்டியது.

•••

மறுநாள் காலை மனம் நிறையக் கேள்விகளுடன் சென்றவளை

டொக்டர் ஜயதிலக்க அன்போடு வரவேற்றார். அவள் தன்னோடு கொண்டு வந்திருந்த அத்தனை மருத்துவப் பரிசோதனை அறிக்கைகளையும் அவர் மிகக் கவனத்தோடு வாசித்து, அவளுக்கு இன்னும் விரிவாகப் புரிய வைத்த பின், ஒரு வைத்தியருக்கேயுரிய கடமை உணர்வோடு பேசத் தொடங்கினார்.

'உங்களுக்கு இங்கு இலங்கையில் தான் சிகிச்சை செய்வது நல்லது எனக் கூறியது யாரெனத் தெரியவில்லை. எம்மிடம் இப்போது இருக்கும் வைத்திய வசதிகளை விட டென்மார்க்கில் உங்களுக்குக் கிடைக்கக் கூடிய சிகிச்சைகள், சிகிச்சையின் பின்னான கவனிப்புகள் அனைத்தும் மிக உச்ச கட்ட வசதிகள். அவற்றை நீங்கள் பணம் கொடுத்தால் கூட இங்கு வாங்க முடியாது சந்திரா. உடனடியாக நீங்கள் டென்மார்கிற்குப் போய் உங்கள் சிகிச்சையை ஆரம்பியுங்கள். நல்வாழ்த்துகள்,' என ஆணித்தரமாகக் கூறியதும் சந்திரா அவருக்கு நன்றி கூறியவாறே எழுந்து கொண்டாள்.

அதைத் தொடர்ந்து இன்னுமொரு புற்றுநோய் வைத்திய நிபுணர் ஒருவரின் கருத்தும் இதே போல ஒருமித்து இருந்ததில் சந்திரா அந்த வாரமே டென்மார்க் வந்து சேர்ந்து விட்டாள்.

அவள் டென்மார்க் விமான நிலையத்திலிருந்து வீடு வந்து சேர்ந்த போது நேரம் மாலை ஏழு மணியாகி விட்டிருந்தது. வீட்டில் மாறன் மூன்று குழந்தைகளோடு எப்படிச் சமாளித்தானோ, வீட்டில் எல்லாம் போட்டது போட்டபடி சுத்தப்படுத்தாமல் தான் இருக்கும் என்றெல்லாம் எண்ணியவாறே கதவைத் திறந்தவளுக்கு வீட்டைப் பார்க்கப் பெரும் ஆச்சரியமாக இருந்தது.

வீட்டில் எல்லாம் இருக்க வேண்டிய இடத்தில் இருக்க, நிலவிரிப்புகள் எல்லாம் சுத்தமாகக் காட்சியளித்தன. குழந்தைகள் சரியான நேரத்திற்கு படுக்கைக்கு போய் விட்டிருந்தனர். மாறன் மிக ஆனந்தமாக தொலைக் காட்சிப் பெட்டியோடு ஒன்றிப் போயிருந்தான். சந்திரா வரும் நேரம் தெரிந்திருக்காததால் அவளைக் கண்டதும் ஆச்சரியத்தோடு அவளை ஒரு முறை பார்த்து விட்டு பழைய படி தொலைக்காட்சியோடு ஒன்றிக் கொண்டான்.

யாரோடாவது பேச வேண்டும் போலிருக்க, அவள் தன் சக பணியாளரும் தோழியுமான டெய்சிக்கு தொலைபேசினாள்.

'வணக்கம் சந்திரா, நல்லபடி வந்து சேர்ந்து விட்டாயா?' டெய்சியின் குரலில் நேசம் நிறைந்து கிடந்தது. அவள் மேலும் தொடர்ந்தாள். 'நானும் என் கணவரும் இப்போது தான் உன் வீட்டிலிருந்து எங்கள் வீட்டிற்கு வந்து சேர்ந்தோம். நான் உன்னைக் கேட்காமலே உன் வீட்டிற்கு ஒவ்வொரு நாளும் காலையும் மாலையும் போய் வந்து எம்மால் முடிந்த உதவியை உன் கணவனுக்குச் செய்து கொடுத்தோம். இனியும் வருவோம், எம்மை நீ வர வேண்டாம் என்று சொல்ல மாட்டாய் என நம்புகிறோம்.'

அதன் பின் வந்த கடுமையான சிகிச்சை காலங்களில் அந்த வீட்டையும், குழந்தைகளையும், முக்கியமாக கடைக்குட்டியை மிகக் கவனமாகப் பார்த்துக் கொண்டது டெய்சியும் அவள் கணவரும் தான். அதன் பின்னர் இன்னும் சில டானிஷ் எனப்படுகின்ற டென்மார்க் நாட்டு நட்புகளும் அவர்களோடு இணைந்து கொண்டார்கள்.

•••

சந்திராவும் தன் திடமான மனதை மேலும் உரப்படுத்திக் கொண்டாள். அவளது மனோதிடம் தான் அவள் சிகிச்சையோடு சேர்ந்து கொண்டதில் அவளை விரைவில் குணப்படுத்தியது.

சிகிச்சையும் சிறு சத்திர சிகிச்சையும் முடிந்து ஏறத்தாழ ஐந்து வருடங்கள் கழிந்த பின்னர் ஒரு நாள் அவள் மாமியார் அவளுக்குக் கேட்கக் கூடியதாய் அவள் முன்னுக்கே தன் மகனிடம் இரைந்து பேசியது அவள் காதுகளுக்குக் கேட்கட்டும் என்று தான் என்பது அவளுக்கும் தெரிந்திருந்தாலும் அது அவளைப் பாதிக்கவில்லை.

' மாறன், எதுக்கும் நான் சொல்லுறதைக் கேள். அங்க ஊரில எத்தனையோ நல்ல, வடிவான பொம்பிளைப் பிள்ளைகள் கை நிறைய காசும் வைச்சுக் கொண்டு மாப்பிள்ளைமார் இல்லாமல் இருக்குதுகள். நீ ஓம் எண்டு ஒரு தரம் சொன்னால் போதும். நான் உடனடியாகக் கூப்பிட்டுத் தருவன்.' மாமியார் பேசி முடிக்கும் போது சந்திரா அவர்களைக் கடந்து பூச்செடிகளுக்கு நீர் ஊற்றச் சென்று கொண்டிருந்தாள்.

நோய் குறித்த விழிப்புணர்வு இல்லாது இருந்தவர்களின் நாக்குகள் அவளைச் சுட்டுப் பொசுக்கியதைத் தாங்கி, அதைக் கடந்து வருவதென்பது புற்றுநோயைக் கடந்து வருவதை விடக் கடினமானது என்பதை அவள் உணர்ந்து கொண்டதில் அவளுக்கு இன்று வரை வாழ்வை மகிழ்வோடு எடுத்துச் செல்லக் கூடியதாய் இருக்கிறது.

•••

ஏறத்தாழ 25 வருடங்களுக்கு முற்பட்ட காலப்பகுதியில் இச்சம்பவங்கள் நடந்திருந்தாலும் அன்றிலிருந்து இற்றை வரை மார்பகப் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வும், நோய் வந்தவர்களோடு என்ன, எப்படி பேச வேண்டும் என்ற இங்கிதமும் எம்மிடையே குறைவாகவே இருப்பது கண்கூடு. நோயிலிருந்து மீண்டவர்கள் தம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கு தாம் கடந்து வந்த பாதை குறித்து பேசுவதும், ஏதோ வரக்கூடாத ஒன்று வந்திருப்பது போல நோயை மறைத்து வைக்காமல் அது குறித்து பேசுவதும் ஓரளவுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தலாம் என நம்புவோம்.



அதிகாரம் 09

# ‘ஒரு ஏதோ..!’

## அங்கும் இங்கும், எங்கும் ஒரு நீள் கதை

‘ஒரு ஏதோ;!!!‘

அங்கும் இங்கும் எங்கும் ‘ஒரு NOVEL

### முன் சிறு குறு குறிப்பு

ஏலவே குறிப்பிட்டதுபோல, இந்த ‘ஏதோவொரு ஏதோ‘வை ஒரு நீள் கதையாக (novel ஆக,- NOVEL ஆக அல்ல.) எழுத நினைத்திருந்தும், போகிற போக்கில், இப்போ,- அது சரியான சிந்தனையாகத் தோற்றவில்லை. ஏற்கனவே மனதில் தோற்றிய ஒரு ‘கூட்டம்‘ எண்ணங்களை, ‘ஒரு novel ஆக எழுத விழைந்து,- நீண்ட காலத்துக்குப் பிற்பாடு, அதன் குறுக்கமாகவென்று துவங்கிய ஒன்றை, வாஸ்தவத்தில் novel வடிவில் போடுவதே இப்போ சரியாகப்படுகிறது. ஒற்றை முக அல்லது ஒருசில முக theme அல்லது concept அல்லாமல் பன்முக ‘யாவாரங்களை‘ வெளிக்கிடுத்தினால் இப்படித்தான் நிகழுமாக்கும்.

பழைய முறைமையிலேயே ‘மட்டும்‘ கிடந்தழுந்தி இலக்கியம் படைக்க வேண்டுமென்கிற, சக்குப்பிடித்து பாண்டலான கருதுகோளை அல்லது எடுகோளை உலகு, எப்போதோ பின் தள்ளி, முன் நகர ஆரம்பித்தாயிற்று.

புதியன புகுதலும் கூர்மையான முன் பாய்ச்சலும் ஆரம்பித்து நீள் காலம் வழமைபோல். நியமம் போல் ‘தமிழ்‘ இதில் ‘மிக மெது நடை‘தான்;!!! விரைவில் மீட்சியுறும், என்கிற நம்பிக்கையும் இல்லை. அது சோகம்;!!!

சிறினோ சிறி சிறிசு

இங்கு…

அப்பேர்ப்பட்ட பதற்றத்தை இவண் என்றுமே உணர்ந்ததில்லை. வேனில் வெக்கை வியர்ப்பு இன்னும் வேகமாகியதாகவே பிசுபிசுத்தது. மேற்சட்டைக்குள்ளே, மேல் முண்ட உடம்பு கடுமழையில் தோய்ந்த கரிக்குருவியின் இறகுக்கூடு நனைந்தது மாதிரியான தினுஸில் உணர்ந்தான். இவ்வளவிற்கும் அரைக்கைச் சட்டையும் கட்டைக்கழிசானுமே உடுத்திருந்தான். முழங்கால் முட்டியிலேயே கூடுதலாக வியர்ப்பதாகப் பட்டது. இத்தனைக்கும் காற்சட்டை விளிம்பு முழங்கால் சிரட்டை முட்டைத் தொடவேயில்லை.

அம்பிகை வரும் நேரம் ஆகிற்று;!!

ஆகப்பெரியதோ சிறியதோ என்றில்லாத ஒரு மத்திய கணிய Caféteria அது. வாகன, சன சந்தடி மிகுந்த பெருந்தெரு, ஒழுங்கைத்தெருவை வெட்டும் மூலையில், ஒரு வகையில் பார்வைக்கு ஒரு திடீர் 'கண் குழப்பி' வினோதப்பாங்கிலேயே அந்த சிற்றுண்டிச்சாலை சமைந்திருந்தது. வழமைக்கு மாறாக அது, சிறு தெருவிலேயே வாசலைக் கொண்டிருந்தது. பெரு வியாபாரச் சாவடிகள், முடிந்தால், பெருஞ்சாலைகளிலேயே நுழை கபாடத்தைக் கொண்டிருப்பது வழக்கம். ஆச்சர்யகரமாக, விகிதாசாரத்துக்கு முரணான நீள-அகலப்பாங்கிலான, Neon வரி விளக்குகள் பூட்டப்பட்ட பெயர்ப்பதாகைக்குக் கீழே, மேலும் முரணான வகையில் அகன்ற-வாய் நுழைவாயில் இருந்தது. அதன் கண்ணாடிச் சட்டங்கள் பூரா,- அங்கத்தைய சாப்பாட்டுச் சமாச்சாரங்களின் சிறப்பு, நேர சூசிகை, அனுமதியாகும் கடனட்டைகளின் விபரம் மற்றும் ஏற்கனவே அருகு பூங்கா-மரத்திடலில், ஏலவே நடந்து முடிந்த, Peru நாட்டு உச்ச பிரபல இசைக்குழுவின் விளம்பரம் போன்றன பற்றிய கடதாசித் துண்டங்கள் விரவலாய், விபரமாய் ஒட்டப்பட்டிருந்தன. அந்த கிட்டமட்ட Metalic Rock வகையறா குழுவினது முன்னணிப் பாடகியின், இடுப்பை கௌவிப்பிடித்த குறு உள்ளாடையிற்கு கீழாக,- குதியுயர்ந்த வெள்ளி நிற வார்ச்செருப்பு வரை ஏதுமில்லை. வாளிப்புத் தொடையும் 'கிளுகுளு' கீழ்க்காலுந்தான். இடப்பாத வார்ச்செருப்பின் முன்னுனியில் அநாயாஸமாய் எம்பி, 'குளுகிளு' வலக்காலை 90 இல், உதைக்கிற பாவனையில் தூக்கியமை, சற்று அஸ்ஸ்ஸிங்கமாய் இருந்தாலும், அந்த 'கிளுகுளுப்பு' தான் இப்போதெல்லாம் 'யாவாரத்துக்கான' பெரு யுக்தியாம். அந்த மினுங்கும் கடதாசியில் பிரச்சாரிக்கப்பட்ட நிகழ்ச்சியில் எத்தனை ஆயிரம் பேர் தொடை வாளிப்பைக் கண்டு, இறும்பூதெய்தினார்கள் என்ற புள்ளி விபரம் தெரியவில்லை.

பெருந்தெருப்பக்க பின் மூலையிலிருந்த இருவருக்கான மேசையையண்டி குந்தியிருந்தான், இவண். ஆளையாள் பார்க்கும் இரு நாற்காலிகள். இந்த சிற்றுணவகத்துக்கு பல தடவை வந்திருக்கிறான். Over-Easy முட்டை, சுடுதளத்தில் வேகிய Breakfast Sausages. Oven இல் வெந்தீய்த்த செவ்வுருளைக் கிழங்குக் கீலங்கள், இவற்றுடன் Coffee என்ற அங்கத்தைய காலையுணவு நீங்கலாய் தனி 'கொஃப்ஃபீ' இற்காகவும் வந்ததுண்டு. வலக்கரை தெருக்கரையான அகன்ற கண்ணாடிச் சுவரூடு தெருவில் போவோர், வருவோர் உடன் உருவங்களாய் தெளிவாகத் தெரிந்தனர். தனக்கெதிரேயான கதிரையில், இன்னும் சிறிது நேரத்தில், அம்பிகை வந்து உட்காரப்போகிறாள் என்ற நினைவு மண்டையை இறுக்கி, சூடு எகிற்றியது. முழங்கால் வியர்ப்பு மேலே-கீழே காட்டமாக விசுறுவதாகத் தோற்றியது. சந்தியையண்டியிருந்த னாருளு தரிப்பிடத்தில் இறங்கச் சொல்லி துலக்கமாக விளக்கியிருந்தான். Caféteria பின்புற மேசையில் தான் காத்திருப்பதாகவும் கூறியிருந்தான். கண்ணாடிச் சுவரூடு வெளியுலகு தன்பாட்டிற்கு நகர்ந்தது. 'தக்கு பிக்கு' என்று நடந்து சென்ற ஒரு குழந்தையை கொறகொறவொன்று இழுத்துக் கொண்டு ஒரு தாய்க்காரி நகர்ந்தாள். அவள் 'பிக்கு தக்கு' என்று குழந்தையை அதட்டி, ஏதேதோ புலம்பியமை ஏதுமே கண்ணாடிக்கு இங்கால் இவண்பால் கேட்கவில்லை. அவளுக்குப் பின்னால், ஒரு நீள் கூந்தல் கொண்ட, மஞ்சலில் பூப்போட்ட சட்டையும் சிவப்பூதா நிறத்து Pants உம் உடுத்திய மண்ணிற வெள்ளைப் பெண் ஒருத்தி உணவக முடக்கில் திரும்பினாள். அம்பிகையோ, என அதிர்ந்தான் இவண்.

இல்லை! தெரு வொழுங்கையின் எதிர்ப்புறத்து மடங்கில் ஒற்றையாக ஒரு மரம் நெடிதுயர்ந்திருந்தது. அதன் பெயர் தெரியாது. விசித்திரமான வகைக்கு சொரியலாக கீழ் தூங்கும் மண்-சிவப்பு, மண்-பச்சை, மண்- மஞ்சல் போன்ற விநோத வண்ணங்கள் விரவியமைந்த தண்டிலைகளைக் கொண்ட அம்மரத்தின் மார்பளவிலான உயர மர குத்தித்தண்டில் சிவப்பு வர்ணத்தில், சுற்று வளையமாக கோடு போட்டிருந்தது. அதன் அர்த்தம், 'அதற்கு மரண தண்டனை' அளிக்கப்பட்டிருக்கிறது, என்பதாகும். காலக்கிரமத்தில் பூரணமாக பட்டுப் பாறப்போகிறது அல்லது வேர் ஓடும் வேகம் அயல் கட்டுமானம் ஏதாவதன் அடி அஸ்திவாரத்துக்கு பங்கம் செய்யப்போகிறது, பிற நிர்மாணம் ஒன்றிற்கு இடைஞ்சலாக இருக்கிறது,- போன்ற ஏதோவொரு காரணம் சார்ந்து அதை வெட்டிச் சாய்க்க முடிவு செய்யப்பட்டதன் சமிக்ஞையே அந்த சிவப்புக்கோட்டு வளையம். அது நீள் நாளாக இருப்பதை இவண் கண்டிருக்கிறான். இன்னும் மரண தண்டனை நிறைவேற்றப் படவில்லை. பெரு நகர வாரியம், இன்னும் முறையான அலுக்கோஸை கண்டு பிடிக்கவில்லைப் போலும். மரத்தின் உச்சாணிக் கொம்பருக்கு நேர் கீழே விநோதச் சிக்கலாய் குழை பரப்பியிருந்த கிளையொன்றில் திடுமென்று மூன்று சிறு குறுணிக்குருவிகள் விர்ர்ர்ரென்று பறந்து வந்து வரிசையாய்க் குந்தின.

அவை பாட்டுச்சிட்டுக்களாக (Song Sparrows) இருக்கலாம். அவற்றின் வரிசை ஒற்றை ஒத்திசைவில் இல்லை. நரை- பழுப்பு நிற மண்டையும் கருஞ்சாம்பல் வண்ண அடி வயிறும் கொண்ட இரு சிட்டுக்குருவிகளும் ஜோடியாகவே தோற்றின. அவை ரம்பத்தில் உலோகப்பீடம் தேயுமாற்போன்ற சன்னத் தொனியிலான கீச்சுப்பாட்டுக்கு பெயர் எடுத்தவை. மூன்றாவது,- இளம்மஞ்சல் கழுத்துக் கொண்ட சிட்டுக்குருவியாகவே (Yellow Neck Sparrow) பட்டது. அடுத்தடுத்து குந்தியிருந்தாலும் ஓரின வகைப்பிரிவைச் சேர்ந்திருந்தாலும், அது புறத்தியாகவே தெரிந்தது. அது பேடோ போத்தோ (= ஆண் குருவி) என்று அறிய முடியாது. 'இரண்டுமற்ற ஒன்றோ(?)' என்பதும் தெரியாது. ஜோடி குறுங்குருவிக் காதலில் கீச்சிலளைய, கீழே தெரு முடக்கில் இளஞ்ஜோடியொன்று ஆளுக்காள் கை வளைந்தளைய உள் மதனக்குச் சிறு குஷிச்சூட்டில் இழைந்து நடப்பதாக படுவதாக இவனுக்கு இருந்தது.

கண்ணாடிச்சுவர் ஓர நடைபாதையில் மிக மோசமான உடல் வாகு கொண்ட, ஊதா நிறத்தில் ஊத்தைச்சட்டையும் வலப்புறத்தில் பொத்தல்கள் கொண்ட நீள் கழிசானும் அணிந்த கிழவரொருவர் இடக்கால் உரமாய் நிலம்பதிய, முன் உந்தும் சீக்கிர விரைவாய் வலக்காலைப் ஊன்றி, ஒரு கோர விநோதப்பாங்கில் கெந்திக்கெந்தி நடந்து கடந்தார். அவருக்குப் பின்னால் பச்சைக்கீழ்க்கோடுகள் வரிந்த, சோர்வான, துடிப்பற்ற கறுப்பு முடீறுகூ அணிந்த மெலிய பெண்ணொருத்தி தெருவொழுங்கை வளத்தில் திரும்பி, Cafétéria இனுள் நுழைந்து, உயரத்திலிருந்து கடுந்தளத்தில் மல்லாக்காய் விழுந்த இறக்கையற்ற சிறு பூச்சி போல, கண உறைவின்பின், பதட்டமாக சுற்றுமுற்றும் பார்த்தாள். உடல் வாடி, முகம் வாடி, கண் வாடியிருந்தது.

அம்பிகை;..!!!!

திடுமென்றொரு, உடலையும் உணர்வையும் சூடாய் சுண்டியிழுக்கும் வியாகூல வலியொன்று இவனைக் கௌவியது. இவனறிந்திருந்த அம்பிகையல்ல அது. ஆவளைப்பிள்ளையார் ஆலய, 'பொன் பளக்கும் செந்நீல நீள் துணி சுழற்றியுடுத்திய அரைச்சேலையும் சிவப்புச் சட்டையும் அணிந்த,- 'அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்.' தினுஸான அம்பிகையல்ல, நிச்சயமாக அது. சுருண்ட கேஸம் நீட்சியுற்ற, நீண்ட கேஸம் சிக்குண்ட, துயர நரம்புகள் புறம் பின்னிய இவளை இவண் அறிந்திருக்கவேயில்லை. முன்னே நகர்ந்து, எதிரே வந்தமருமாறு சைகை செய்தான். வந்தமர்ந்தாள். இவண் ஏலவே அறிந்திருந்த,- 'குழிகிற மாவெள்ளைக் கன்னத்தின் அளவான உப்பலும், கனியும் இதழ் விரிவுறும் மென்னகையும், வளை நுதலின் தீர்க்க புருவம் மெருகூட்டும் விழித்தீட்ஷண்யமும்' அவளிடத்தில் இல்லை. அவை தோற்கப்பட்டிருந்தன.

எங்கு, எவ்வாறு, என்று கிறுங்கி அதிர்ந்தான், இவண்.

'உனக்கு என்ன நடந்தது..?? ஆளேயே அடையாளம் தெரியாத அளவிற்கு உலைஞ்சுபோய் இருக்கிறாய்,' என அந்தரித்துக் கேட்டான். 'அது பெரீய்ய்ய்ய கதை,' என்று வேதனை மிகப்பெற்ற பெரூ(ஊ) மூச்சொன்றை அவலமாக வெளி விட்டாள், அம்பிகை. 'சரி;சொல் நான் கேட்பேன்தானே. அதற்குத்தானே வந்திருக்கிறாய்.'

அது பெரீய்ய்ய்ய, நீண்ண்ண்ட கதைதான். சாதாரண பெண்டுகள் போல், பெருத்த எதிர்பார்ப்பு களுடனும் நம்பிக்கையுடனும், பெரும் பணக்கார மாப்பிள்ளைக்கு மணமகளாகத்தான், அம்பிகை இங்கு வந்திருக்கிறாள். வந்த பின்னர்தான் தெரிந்தது, எல்லாமே 'கால் மேல் தலை கீழென்று'. நாடு மாறி, குடும்ப வாழ்வில் பல இன்ப ஏக்கங்களைச் ஏகமாய் காவி வந்தவளுக்கு பார்ர்ர்ரிய அதிர்ச்சிகளே தொடர்ச்சியான பதிலாக தரப்பட்டன. அம்பிகையின் தகப்பன்காரன் எதிர்பார்த்தபடியோ, நம்பியபடியோ, சொன்னபடியோ, 'துண்டாக' ஏதுமேயில்லை. மணஞ்செய்து வைக்கப்பட்ட, அதி மேலாய் புளுகப்பட்ட கணவன், பரமேஸு என்கிற பரமேஸ்வரன் சொல்லியபடிக்கான ஆள் கிடையாது. நிறைய பணம் இருந்தது உண்மை. மற்றவை ஏதும் பெரும்படியாய் இல்லை. பணம், பொருள், என்று ஆலாய்ப்பறக்கும், பரவி பரபரக்கும் ஆவலாதியில் மீதியான, வாழ்வின் சுவாரஸ்ய ரஞ்சகங்கள் யாதுமே ஒட்டையூடு தவற விடப்பட்டன. பலரைப்போல், பணத்திலும் மேலான பல, வாழ்வாங்கத்தில் பிரதானம் ஆனவையாக இருப்புக் கொண்டிருப்பதை, அம்பிகையின் பணக்காரக்கணவன் ஏற்றுக்கொள்ளவில்லை அல்லது புரிந்து கொள்ளவில்லை. அவன் திருமண பந்தத்தில் பிணைந்ததானது,- ஒரு வகையில், சூழ உள்ளோர்க்கு, தன் தாம்பத்திய வாழ்வு, சுமுக சாதாரணங்கொண்ட, மேலான ஒன்று என்பதை வெளிக்காட்டுகிற தேவை கருதியதாயே இருக்க வேண்டும். பலரையும் போலவே, பங்காளியின் வாழ்வின் மகிழ்ச்சி பற்றி அவன் எண்ணவில்லை. பலரைப்போலவே, சதியாள்- மனையாளின் பாசாவாசைகளுக்கு அதி பிரதானத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்பதை பரமேஸ்வர பதியான் சிறிதும் நினைக்கவேயில்லை.

இது குரூரமானது. குரூராம்ஸங்களில்லாத வாழ்வேதும் இல்லைத்தான். ஆயினும், இது மிகவும் கடூர வகைக்குள்ளேயே விழுந்தது. தேவைக்கு சிற்றிடைவெளியில் மட்டும் தொள்ளலாகப் பொருத்த வேண்டிய ஒரு வெற்று ஜடமாகவே அம்பிகையை பார்த்திருக்கிறான். பேச்சு ரோதனையுடன், தேவையற்ற, மோஸமான உடல் தாக்குதலும் நடந்திருக்கிறது. 'இனி முடியாது் போதும்; போதும்' என்றாகியிருக்கிறது. வேறு வழியில்லாமல் இவணிடம் வந்திருக்கிறாள். ஏதோ வழியில், இவணின் மூன்று வெடிவால்களில் இரண்டாமவனான குட்டி ஓலாவைக் கண்டு பிடித்து,- அச்சம் அதிகம் கொண்டாலும், பிற பாதை ஏதும்

தெரியாமல் இவணையே சரண டைந்திருக்கிறாள்! அவளிடமான சம்பாஷணையின்

அடிமூல விபரம் இதுதான்;!!!!

சிக்கல்தான். பல படு முடிச்சுப் சிக்கல் இவளுக்கு.

சற்றே கூச்சப்பட்ட பின், அவளின் ஆகப்பெரிய பிரசினத்தையும் சொன்னாள்॰ 'பரமேஸுக்கு பெட்டைகளில் விருப்பமில்லை. பொம்பிளைகளுடன் படுப்பதில்லை. ஆம்பிளைகளில் தான் விருப்பம்..!!!'

எதிர்ப்புற தனி மரத்து தனிச் சிட்டுக்குருவி உர்ர்ர்ருக்கென்று, வரிசைக்கிருந்த பாட்டுச்சிட்டுஜ் ஜோடியை விலக்கிப் பறந்து பெரு வெளியில் கரைந்து மறைந்தது. நீண்ட காலமாய் சிவப்பு வளையக்குறி போட்டும் தறிக்கப்படாதிருந்த அந்த விநோத மரத்தை வெட்டிச்சாய்க்க, வியப்புகரமாக,- மாநகர வாரியத்து தொழிலாளிகள் வந்தனர்.

அங்கு (அ)...

ஒரு கால் முறிந்த மயில் தன் நீலக்கண்களால் உன்னிப்பாய் பார்த்த மாதிரி இருந்தது. உயிர் மயில் அல்ல. மயில் வாகனம். அநேகமாக தனி இளங்கடவுளையும் சமயங்களில் அவருடன் அவரது இரு மனைவியாரையும் காவும் வாகனம். ஒரு கால் நீள் நாட்களாய் தூக்கி, ஆட்டோ ஆட்டென்று ஆட்டியதாலாக்கும்,- முறிந்திருந்தது. ஆவளைப்பிள்ளையார் கோவில் தேர்முட்டியின் வலப்புறத்து கள்ள அறை இருண்டிருந்தது. பழுது பட்டுப்போன கோவில் வாகனமான மயிலையும் வேறு தேவையற்ற தட்டுமுட்டுச் சாமான்களையும் அங்கு போட்டிருந்தனர். கோவில் பிரதம குருக்கள் கறார் ஆள். உட்பிரகாரத்தில் அநாவசியமாக கஞ்சல் குப்பைகள் இழுபடுவதை அனுமதியார். செங்குப்பு இரகஸ்யமாகத்தான் கிளப்பிக் கொண்டு வந்திருந்தார். இதெல்லாம் ஊர் கூட்டி பரஹஸ்யமாகச் செய்கிற காரியமன்று. அப்போ படு இளந்தாரி அவர். வெறும் செங்குப்புதான் ஐயா ஆகவில்லை, இன்னும். கொடிச்சிவாலியும் வாலைதான் கிழவி ஆகவில்லை அதற்கு நிரம்பக்காலம் இருந்தது. பதினேழு வயதுங்கூட ஆகவில்லை. அதெல்லாம் செ.குப்பர்,- கொ.வாலி வாலையை கிளப்பிக் கொண்டு தேர்முட்டி இருட்டு காறையறைக்கு போவதைத் தடுக்கவில்லை. செங்குப்பு அப்படி. எதற்கும் கிறுங்கார். விறுக்கன் என்று ஊரூர் பூரா பேர் எடுத்தவர். அதென்ன மதன ராசியோ, அந்த சிலந்தி ஒட்டடை புழுத்த, அழுக்கு, பழைய சாமான்-சக்கட்டு இருளறையில் நூதனமான, சமயங்களில் விநோதமான, மதனத்து பெருங்களியாட்டம் காட்டும் ஆயிரங்கண் காமராச விழாவெடுப்புகள் நிகழ்ந்து விடுகின்றன;!!

'ஏலவே சொன்னதன் பகுதி'!

'சுண்டு மிருகம் திடுமென சொல்லாமல் கொள்ளாமல் பெரு கரிக்கரி-கருவாண் யானையாக பிரமாண்டித்தது. துதிக்கை எம்பிப்பருக்க, முன் கால்களைத் தூக்கி பிளிறிற்று. சுருக்கங்கள் வரிவடிவங்களாவதும் வரிகள் வடிவங்கெடுவதும் சுருக்கம் நிரவப்படுவதும் உறிஞ்சிய நீரை விசிறுவதுமென எம்பிப்பருத்த துதிக்கை துழாவிற்று.'

'செங்குப்பு கொடிச்சிவாலி.'

மயிலின் பல்வண்ண தோகையிறகுக் கண்களில் எரி நட்சத்திரங்கள் விழுந்து, அவை தீப்பற்றி எரிந்து கரியாகின. தேர்முட்டியின் காறைக்கள்ள அறையினுள் என்றுமில்லாதவாறு அன்று, மர்ம மயமான பிரஹாஸ ஒளி பரவிற்று. சூர்யன் தனது ஏழு பச்சை நிற புரவிகள் பூட்டப்பட்ட, ஒற்றைச் சக்கரத்தேரில் இறங்கி வந்து அங்கு நொண்டியிருந்த மயிலின் முதுகில் குந்தினான். மயிலின் மற்றக்காலும் முறிந்தது.

கன்னி, கொடிச்சிவாலிப் பெட்டை, அங்கு-அப்போது சூல் கொண்டாள்;!!!!

அங்கு ,(ஆ)

வளைத்து, பொத்தல் பொத்தலாக இடைவெளி விட்டு பனை மூரி வரிந்த, கறையான் பாழி குடிகொண்ட சொத்தை வேலி முகப்பு படலைக்கு முன்னே போய் நின்றது அந்த Van. அங்கு கொண்டு போக முற்பாடு, குட்டி ஓலாவின் கழுத்தாங்குத்தியைப் பிடித்து இழுத்துப்போய் ஒரு பழைய வீட்டின் சிதிலமான முன் குந்தில் விழுத்தினர். அது ஒருவகையில் பாழடைந்த விருத்தம் கொண்ட வீடு. பேய்க்கதைகளில் சொல்லப்படும் திஙுஸில் ஒரு பயங்கர சாச்சூழலைத் துப்பும் வகையில் அது இருண்டிருந்தது. மின்சாரம் கிடையாது. குப்பி 'இலாம்போ' அல்லது 'ஹறிக்கேன்' விளக்கொன்றோ உள்ளுள் ஒரு கூடத்தில் சாவுயிராய் அனுங்கியது. இடையிருட்டு இரவு. கருளில் இருள் கோரங்காட்டும் கச இருட்டு. என்ன 'விளக்குமாறென்றோ' அங்கிருப்பவர்கள் இருளில் 'இரத்த யாவாரம்' செய்கிறார்களோ, தெரியாது. உள்ளேயிருந்து ஒரு பருமனான ஆள் வந்து, 'இவன்தானோ ஓடி ஒளித்து இம்மட்டு நாளும் திறுக்கீஸ் காட்டிய வீரவாகு..?' என்று கரகரத்த குரலில் கேட்டான். மரவள்ளிக்கூடலின் குட்டி ஓலா ஆள்பிடியின்போது, கோணிப்பறியில் துவக்கொளித்து வந்தவன், இடுப்புக்கட்டு முகவரியில் துவக்குப் படங்காட்டியவன் என்ற இருவரும் ஒற்றை நேரத்தில், 'ஓம். இவன்தான் காச்சு மாஸ்ரர்,' என்று பதில் சொல்லினர். அதென்ன, 'காச்சு மாஸ்ரர்' என்பது தெரியாது. ஆனால், அந்த இடத்துக்கும் அது சார்ந்த இரத்த யாவாரத்துக்கும் 'காச்சு'தான் மாஸ்ரர். 'அணி'ப்பொறுப்பாளர். 'ஓடி ஒளித்து இம்மட்டு நாளும் திறுக்கீஸ் காட்டிய' இன்னொரு வீரவாகுவையும் இருள் வீட்டிலிருந்து வேறிருவர் இழுத்து வந்தனர். குட்டி ஓலாவுடன் சேர்த்து இப்போ, இரண்டு திறுக்கீஸ் வீரவாகுகள் ஆயினர். இருவரையும் பலாத்காரமாக van இல் தேவையற்ற உறுக்கல் செலுத்தி ஏற்றினார்கள். காச்சு மாஸ்ரர் ஏறி சாரதிக்கு அருகு ஆசனத்தில் உட்கார்ந்தார். இடுப்பில் புதுத் துவக்கு கொழுவியிருந்தார், ஒரு பெரு மலை வெளியின் சுற்று முழுவதையும் கிடுக்குப்பிடியாய்

ஆளும் ஒரு குறு நில மன்னனின் இறுமாப்பின் ஆணவ விசாரம் அவர் மூஞ்சியில் அப்பியிருந்தது. இதெல்லாம் துப்பாக்கிகளின் கையளிப்பு என்பதே முழு நிஜமான யதார்த்தம். நேர்கோட்டை எரிக்கும் சக்தி துப்பாக்கிகளுக்கு துவக்க நாட்களிலிருந்தே இருக்கிறது. இரத்த அணிக்கு, தொடர்ந்தும் இரத்தத்திலே தோயும் ஒரு blood cult குழுவிற்கு ஆள்பிடிக்க வந்து, மரவள்ளிக் கும்பத்துள் குட்டி ஓலாவை அமுக்கிய இரண்டு துப்பாக்கிதாரிகளும் இருட்டு வீட்டுள் சென்றனர். அங்கு பாதியிருளில் அவர்கள் என்ன 'இரத்த யாவாரம்' செய்வார்கள், என்பது பற்றி தெரியாது.

கறையான் பாழி, மூரி வரி வேலி வீட்டுக்கு காச்சு மாஸ்ரின் van வந்தபோதும் சூழல் பூரா கச இருட்டுத்தான். ஆனால் இந்த வீட்டுக்கு மின்சாரம் இருந்தது. பல அறைகள் கொண்ட வீடு போலும். தெறியன் தெறியனாக அறைகளுக்குள் அதிகப்பிரஹாஸம் அற்ற ஒளி கண் காட்டியது. அறைகளுள் மோஸமான நிலைமையில் பல இளைஞர்கள் தங்க வைக்கப்பட்டிருந்தனர். கோரமான நிலபரத்தில் அடாத்தாக கொடுஞ் சிறைக்கைதிகளாகவே அவர்கள் பிடித்து அடைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் பலருக்கு உடல் பூரா கடுமையான காயங்கள் இருந்தன. பயங்கர வகையில் சித்திரவதை செய்யப்பட்டதன் சமிக்ஞாக்குறிகளே அவை. அவர்கள்,- 'விடுதலைக்கு வீட்டுக்கு ஆகக்குறைந்தது ஒருவராவது;' என்ற நெருப்புப்பிடி வதைப்பு-வற்புறுத்தலின் பிரச்சாரப்படிக்கு, அணிக்கான அடாவடி ஆட்பிடிப்பில் அள்ளி வரப்பட்டவர்கள் அல்லர். ஒற்றை அணியின் பெருபெருபெருந்தலைவர்,- அவரது அணி கேட்டு சண்டை பிடிக்கும் அதே குறிக்கோளை அண்டி போராடும் மற்ற அணிகளை தூரமைத்தனமாய் தடை செய்ததன் விளைவாக கொடுமையாக ஆயுத பிரசன்னத்தில் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்ட இளைஞர்கள்தான் அவர்கள். கோரமாக கைது செய்யப்பட்டு அதி கோரமாக சித்திரவதைக்கு உள்ளாகுபவர்கள். இவர்கள் யாபேரும் ஒரே இனத்தையே சேர்ந்தவர்கள், என்பதே கோராச்சர்யம்.

குட்டி ஓலாவையும் மற்ற 'திறுக்கீஸ் வீரவாகுவையும்' கெறுக்கு குறுநில மன்னராய காச்சு மாஸ்றரின் உத்தரவின்படிக்கு பெருவீட்டின் உள்ளேயிருந்த ஒரு அழுக்கு அறையுள் முடக்கமாக தள்ளினர். 'நச்புச்'சென்று ஒரு நாசியை கூர்மையாய் தாக்கும் நெடியொன்று அங்கிருந்து கிளம்பிற்று. அது உறைக்குருதி வாடை போலவே பட்டது. ஐந்து இளைஞர் அந்த அறையில் அடைந்திருந்தனர். எதிரணிக் கைதிகள். எல்லோரும் வாடிச்சாடி, உச்ச பலஹீனத்தின் உடல் நிலையில் பெயருக்கு உயிருடன் இருந்தனர். கிழிந்த உடையும் கிழிந்த தோற் பாகங்களும் கொண்டிருந்தனர். அந்த பாவ ஆத்மாக்களுடன் சேர, வீசப்பட்ட இந்த இரு'வீரவாகுகளும்' எதிரணியினதும் அங்கத்துவரும் அல்லர். பெருபெருபெருந்தலைவர் 'உடனுடனே வந்து,- 'நாளை அல்லது நாளையடுத்த நாள்', தங்கத்தட்டில்= 'வைத்தெடுக்கப்படவிருக்கும்' புது தேஸத்துக்காக, உயிரை விலை எழுதி, சண்டை பிடித்து, எதிரி மண்டை பிளந்து வீரத்தியாகம் செய்ய வா,' என்று விட்ட இரத்த அறைகூவலிற்கு 'பெப்பே' காட்டி, ஒளித்துத்திரிந்த குற்றத்தையே செய்தனர். இருப்பினும், ஒரே அறையில் சேரவேவீசப்பட்டிருந்தனர். அதற்கு காரணம் இருக்க வேண்டும்.

> 'விடுதலைக்கு வீட்டுக்கு ஆகக்குறைந்தது ஒருவராவது' என்ற நெருப்புப்பிடி வதைப்பு:வற்புறுத்தலின் பிரச்சாரப்படிக்கு, அணிக்கான அடாவடி ஆட்பிடிப்பில் அள்ளி வரப்பட்டவர்கள் அல்லர். ஒற்றை அணியின் பெருபெருபெருந்தலைவர்,: அவரது அணி கேட்டு சண்டை பிடிக்கும் அதே குறிக்கோளை அண்டி போராடும் மற்ற அணிகளை தூ மைத்தனமாய் தடை செய்ததன் விளைவாக கொடுமையாக ஆயுத பிரசன்னத்தில் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்ட இளைஞர்கள்தான் அவர்கள்.

'ஒற்றை அணியில்' சேர மறுப்பவர்களுக்கு தண்டனை கொடூரமாக இருக்கும், என்பதைக்காட்டவும், ஓடி ஒளிப்பவர்களுக்கு எப்படி தோற்பட்டை உரியும் ஆகவே, ஓடியொளியாமல் உடன் சாக வருக, எனச்சொல்லவும்;.!!!!!

காச்சு மாஸ்ரர், குறுநில மன்னர் தோரணையில், மூஞ்சி சிவந்த கடுஞ்சினத்துடன், இரத்த வெடுக்கு அறைக்குள் வேகமாக நுழைந்து, 'டேய், றாஸ்கோல்;, எல்லாரும் நாட்டுக்காக ஓடி வந்து போராட, நீ பு,,, ஓடி ஒளிக்கிறியோடா;.??என்று கத்தியபடி, குட்டி ஓலாவின் முதுகுப் பட்டையில் பப்படாரென்று ஓங்கிக்குத்திய அதே கணத்தில்!

இங்கு...

முன்னர் ஒரு முறைபோல், போதைத்தகிப்பில், Bar இன் குந்து வளைதட்டில் முழங்கை ஊன்றி, உள்ளங்கை விரிமொட்டில் முகவாயைப் பொதிந்திருந்த குட்டி ஓலா, பட்படாரென்று கிடையாய் தரையில் விழுந்தான். இம்முறை இவண் அவனுடன் மட்டுமே வந்திருந்தான். ஆச்சர்யகரமான போன தடவை போல மற்றைய இரு குட்டி-வெடிவால்களும் இம்முறை வந்திருக்கவில்லை. படு இங்கிதமாக முழு ஒளிபுன்னகையுடன் இராப்பூரா குடிபானம் பரிமாறிய, உடல் பூரா பச்சை குத்திய, நீலக்கண் இளம்பெண், கு.ஓலா தொபுக்கடீரென்று தளத்தில் விழுந்ததைப் பார்த்து, பதறிப்போய் ஓடி வந்து, 'என்ன நடந்தது..??!!' என்று கேட்டாள்.

'காச்சு மாஸ்ரர் முதுகில் அறைந்த கோரத்தில், நிலை குலைந்து கீழே விழுந்து விட்டான்,' என்றான் இவண்.

,இன்னும் வர உண்டு.

# ‘சிதைப்பு’

## அல்லது ‘ஒரு குண்டூசி (வலி)ச் சமாச்சாரம்‘

அதிகாரம்
09

Chapter: 09

எவ்வளவு குறுணிகளாக இருக்கிறோம், நாம்!!!

ஆயினும்,:

வெறும் குண்டூசியை அல்லவா தேடிக் கொண்டிருக்கிறோம்..?!
அவர்கள்,: கல்ப(ம்)’ ‘பிரமாண்ட சிதறல்‘ *
மீள மீள நடப்பதாக சொல்கிற போதும்.!!!

நாம் தேடும் குண்டூசி கழிவறையின் பின்புற
கிடங்கில் தான் கிடக்கிறது. ஆதலினால்,
அதை என்றுமே எடுக்க முடியாது.

அது கிடக்கிற இடமும்
அதை எடுக்க முடியாதென்பதும்
எவருக்குமே தெரியாது.

சட்டையில் குத்திய குண்டூசியோடு தான் கழிவறையில்
குந்தியதோ, என்பதும் தெரியாது.

சட்டையில் சொருக குண்டூசிசியைத்
தேடும்போது தான் தெரிகிறது,:
சட்டையே இல்லை, என்று.

சட்டையை சட்டை செய்யாது
வெற்று உடம்புடன் போகவும் முடியாது.
சூர்யன் எரிப்பான்.

கல்ப சூர்யர்களின் ஒளியிலும்
குண்டூசியை கண்டுபிடிக்க இயலாது.

ஆளுக்காள் ‘பூ‘ எறிவதாகத்தான் சொல்லிக் கொள்கிறோம்.
அப்போ, ஏன் அப்பூக்களில் மலவாடை வீசுகிறது??!!

அப்பூக்கள் மலக்கிடங்குள் தோய்ந்தவையா..?!
அல்லது, அங்குதான் பூத்தவையா..??!!

குண்டூசியைத் தேடியபோது மலர்க்கொத்தை கண்டிருக்கலாம்.
பூக்களைக் கண்டவுடன் குண்டூசி பற்றி மறந்தே விட்டது.

‘குண்டூசி இருக்கிறதா..????!!!!‘

யஹ்ஹ்ஹூ(ஊ)!!!
உங்களுக்குத் தெரியுமா..?!
அவன் தனது குண்டூசியைக் கண்டெடுத்து விட்டான்.

அவனுக்கு இனி பூ வேண்டாம்.!!
...

* கல்பம் சிறீமத் பாகவதம், நாலாம் ஸ்கந்தப்படி.
10: இன் 22:ஆம் அடுக்கு.

## “RUIN”
## [Or, a p(a)in affair]

How tiny are we…
(even though.)
We are just searching for a pin. Aren't we ??

Even when they say that the multi-trillion year*
'Big Bang' happens over and over again……!

The pin we are searching for.
Is in the pit behind the toile
therefore
We can never find it.

Nobody knows where th pin is.
Neither it is possible to retrieve it
it's not known whether (anybody) sat on the toilet
with the pin attached to the shirt.

It is noticed that there is no shirt when only
(we) search for the pin to wea in the shirt.

You can' go out without the shirt. Ignoring it.
With your naked body
the sun would burn (you).

Even with the light of
multi-trillion suns.
(We) can't find the pin.

We say that we launch flowers at each other
then. Why those flowers smell feces?

Were those flowers immersed in the excrement
pit…??
Or. They blossomed there…??

The bouquet may have been found when (we)
searched for the pin
when (we) found the flowers.
The pin was forgotten.

Does pin exist…?

Yahhhooo…

Do you know that he found and picked up his pin
He doesn#t need flowers. Anymore

Kalpa — according to forth skanda of shrimath
bhagavatham: 10-to the power of 22




# மீளக் கட்டியெழுப்பப்பட்ட சீனாவிலிருந்து இன்றைய சீனாவுக்கு!

## From China Reconstructs to China Today

பள்ளிக்கூட காலங்களில் வருட ஆரம்பத்தில் புதிய புத்தகங்கள், கொப்பிகளுக்கு அவை கிழிந்து போய்விடாதபடிக்கு அவற்றுக்கு உறை போட்டு வைப்பது ஒரு பாரம்பரியமாக இருந்தது. கொப்பிகளுக்கு அப்பியாசப் புத்தகம் என்ற தமிழ்ப் பெயரும் இருந்தது.

அதற்கென என்றே கடைகளில் பிறவுண் நிற தடித்த காகிதச் சுருள்கள் விற்கப்பட்டாலும், பளபள காகிதத்தில் வரும் சஞ்சிகைகளின் பக்கங்களைக் கொண்டு அவற்றுக்கு கவர் போடுவதிலேயே பெருமை.

அந்தக் காலத்தில் மலிவாகக் கிடைக்கக் கூடிய தடித்த வெள்ளைக் காகிதம் கொண்ட சஞ்சிகைகள் ரஷ்யா வெளியிட்ட சோவியத் நாடு சஞ்சிகையும் சீனா வெளியிட்ட China Reconstructs, China Pictorial சஞ்சிகைகளுமே. அதிலும் சோவியத் நாடு சஞ்சிகை தடித்த பால் வெள்ளைக் காகிதத்தில் வந்தாலும், சீனச் சஞ்சிகைகள் தான் பளபள glossy காகிதத்தில் வெளிவந்தவை.

இதில் China Reconstructs மலிவாக ஒரு ரூபா அறுபது சதத்திற்கும், சைனா பிக்ரோறியல் இரண்டு ரூபாவிற்கும் விற்பனையாகிக் கொண்டிருந்தன.

சோவியத் நாடு சஞ்சிகை தனி ஒற்றையாகவோ, இரட்டைப் பக்கமாகவோ உறை போட முடியாதபடிக்கு எங்கள் புத்தகங்களுக்குச் சம்பந்தமில்லாத சைஸில் வெளிவந்தது. சில நேரம் சேமித்து வைக்க வேண்டிய தங்கள் கால பொக்கிஷச் சஞ்சிகையை சம்பந்தமில்லாத கொப்பிகளுக்கு உறை போடப் பயன்படுத்துவது பிடிக்காத ரஷ்யர்களின் சதித்திட்டமாகவும் இருக்கலாம்.

பிரச்சனை என்னவெனில் China Reconstructs இல், சில பக்கங்கள் மட்டுமே பளபள காகிதம். மீதி ரிஸ்யூத் தாள் போன்ற மெல்லிய நியூஸ்பிரிண்ட் மட்டரகக் காகிதம். அத்துடன் லெட்டர் சைஸ் சஞ்சிகை.

**ஜோர்ஜ் இ.**

ஆனால், பிக்ரோறியல் முழுவதும் பளபள காகிதம். அத்துடன் tabloid size. இதனால், ஒரு கொப்பிக்கு உறை போடுவதாயின் பிக்ரோறியலில் ஒரு ஒற்றை போதும். China Reconstructs இல் இரண்டு பக்கங்கள் வேண்டும். அதை விட, சில பளபள பக்கங்கள் தவிர்த்து மிஞ்சுகிற நியூஸ் பிரிண்ட் ரக காகிதம் பெரும் பாதுகாப்பை வழங்கி விடப் போவதுமில்லை.

ஒட்டுகிற ரேப் இல்லாத காலம். கொப்பியின் மட்டையோடு மடித்து பிளேட்டால் வெட்டி அதைக் கழர விடாமல் சொருகுவதும் ஒரு கலை.

இந்த உறை போடுவதைக் கலையாகச் செய்து, மிகவும் கவனத்தோடு பத்திரமாக தங்கள் புத்தகம், கொப்பிகளைப் பேணிய பெண்பிள்ளைகள் நிறைய இருந்தனர்.

எங்களுக்கு இந்த உறையெல்லாம் கொஞ்ச நாள் கூத்துத் தான். எங்கள் ஊர் வெயில் வியர்வையில் கொஞ்ச நாளிலேயே

உறைகள் நெக்கி உக்கி கிழிந்து விடும். மட்டை கிழிந்து பக்கங்களின் மூலைகள் சுருண்டு அடையாளமே தெரியாமல் போய் விட்டிருக்கும்.

அந்தக் காலத்தில் இப்படித் தான், ரஷ்யாவும் சீனாவும் தங்கள் கம்யூனிசப் புரட்சி பெருவெற்றி பெற்றதாக எங்களுக்குப் பிரசாரம் செய்து கொண்டிருந்தன. கூட்டுப்பண்ணைகள், விண்வெளி ஆராய்ச்சி சாதனைகள் என்று ரஷ்யா ஒரு புறமும், பெரும் வயல்களில் அறுவடை செய்யும் பெரும் இயந்திரங்கள், 'மக்களின் பெருமண்டபத்தில்' நடக்கும் பொலிட்பீரோ மாநாடுகள், ஒரே பச்சை நிற உடையும், சிவப்பு நட்சத்திர பதக்கமும், ஒரே மாதிரித் தொப்பியும் அணிந்து சைக்கிள்களில் பெரும் பட்டாளமாக பீகிங் நகரை எறும்புகள் மாதிரி மொய்த்திருக்கும் சீனத்தோழர்கள், தோழிகளின் பல்லிளித்த அனாவசியச் சிரிப்புகளின் பின்னால் Forbidden City யின் பெரும் சுவரில் தோழர் மாவோ புன்னகைத்தபடி இருக்கும் படங்கள், சீன தூரிகை ஓவியங்கள் என சீனா ஒரு புறமும் தங்கள் புரட்சியின் வெற்றியைப் பறை சாற்றிக் கொண்டிருக்கும்.

சீன சஞ்சிகைகளில் வரும் எல்லாப் படங்களிலும் வலப் பக்க மேல் மூலையிலோ, அல்லது கீழ் மூலையிலோ சிவப்புப் பூக்கள் நிறைந்த கிளை ஒன்று தொங்கிக் கொண்டிருக்கும். படத்தில் இருக்கும் விடயத்திற்குச் சம்பந்தம் இல்லாமல் ஏதோ ஆயிரம் பூக்கள் மலர்ந்திருக்கும் பூங்கா என்று படம் காட்ட, படம் எடுக்கிறவரோ, வேறு யாரோ அதைப் பிடித்திருக்கக் கூடும்.

இப்படித் தான் அந்தக் காலத்தில் வெளிநாடுகளுக்கு வந்த யாழ்ப்பாணிகள் அதிகம் மலர்கள் இருக்கும் புதைகுழி மயானங்களுக்குள் உள்ள பூங்கன்றுகளோடும், கார்களுக்கு அருகில் நின்றும் படம் எடுத்து ஊருக்கு அனுப்பி கொண்டிருந்தார்கள்.

இப்படி அவர்களின் வாழ்க்கை மலர்த்தோட்டம், அந்தக் கார்கள் எல்லாம் அவர்களின் சொந்தக்காரர்கள், அவர்கள் எல்லாம் சொகுசு வாழ்க்கை வாழுகிறார்கள் என்று, அந்தப் பிரசாரத்தை உண்மை என்று நம்பிய யாழ்ப்பாணிகள் தங்கள் கனவுகளை வளர்த்துக் கொண்டிருந்தார்கள்...

இந்த நாடுகளின் அரசுகளின் உள்ளூர் ஆதரவாளர்களைப் போல!

பெரும்பாலான யாழ்ப்பாண வாசிகசாலைகளில் சோவியத் நாடு சஞ்சிகை கவனிப்பாரற்றுக் கிடக்கும். நான் அக்கறையாக வாசிப்பேன். சீன சஞ்சிகைகள் அவ்வாறு கிடப்பதில்லை. சிலநேரம் வாசிகசாலையில் போட்டவற்றை யாராவது உறை போடத் திருடிச் சென்றிருக்கவும் கூடும்.


விலைக்கு வாங்கி அந்த சீன சஞ்சிகைகளை வாசிக்கும் அளவுக்கு அவற்றில் எதுவும் இருந்ததாக ஞாபகம் இல்லை. உறை போடுவதற்காக வாங்கியவை மட்டுமே.

வீட்டில் மாவோவின் சிந்தனைகள், லெனின், ஸ்டாலின் சிந்தனைகள் என்று என் அண்ணன்மார் கொண்டு வந்த சிவப்பு, நீலப் புத்தகங்கள் எல்லாம் விசயம் தெரியாத வயதுகளில் வாசித்திருக்கிறேன். ஆனால், வர்க்கம், ஏகாதிபத்தியம், பூர்ஷுவா என்பவற்றுக்கான கருத்துத் தெரியாததால் அவற்றை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. எனக்குத் தெரிந்த வர்க்கம் கணிதத்தில் மட்டும் தான்.

ஆனால் ஒரு காலத்தில் Soviet film என்ற மாதச் சஞ்சிகை, China Screen என்ற காலாண்டிதழ் இரண்டுக்கும் இந்தக் கிராமவாசி சந்தா கட்டி வாசித்துக் கொண்டிருந்தான். ஆங்கிலம் கற்பித்துக் கிடைத்த பணம் இப்படித்தான் செலவாகிக் கொண்டிருந்தது. அந்தப் பணத்தில் உடுப்புகள் எல்லாம் வாங்கியதாக ஞாபகம் இல்லை. வாங்கியவை முழுக்க புத்தகங்கள் தான். English Grammar புத்தகங்கள் உட்பட.

அப்போது தான் Sergei Eisenstein இயக்கி Battleship Potemkin படத்தின் பழைய சுருள்களை தேடி யெடுத்து சீர்திருத்தி புதுப்பிரதி எடுத்திருந்தார்கள். அப்போது நடந்த மொஸ்கோ திரைப்பட விழாவில் அதற்கு முதல் பரிசு வழங்கியிருந்தார்கள். அதெல்லாம் Soviet Film சஞ்சிகையில் மட்டுமன்றி, சோவியத் யூனியன் சஞ்சிகையிலும் வந்திருந்தது.

அந்த விருது கொடுத்த கமிட்டியில் மிர்ணாள் சென் அல்லது ஷியாம் பெனகல் இருந்ததாக ஞாபகம். அவரது பேட்டி ஒன்று



கணையாளியில் வந்திருந்ததை வாசித்திருந்தேன். அதில் முதல் பரிசை அந்தப் படத்திற்குக் கொடுக்கும்படி உள்துறை அமைச்சில் இருந்து ‘அறிவுறுத்தல்’ அனுப்பப்பட்டதாகக் கூறியிருந்தார்.

விருதை இரஷ்யா கொடுத்தால் என்ன? இலக்கியத் தோட்டம் கொடுத்தால் என்ன? லட்சணம் இதுதான்!

சைனா ஸ்கிரீன் சஞ்சிகையில் Shaolin Temple படம் பற்றி பெரிதாக எழுதியிருந்தார்கள். புரூஸ் லீயின் என்டர் த ட்ராகன் படம் பார்த்துப் புல்லரித்துப் போயிருந்த காலம். அப்போது கராத்தே என்பது மிகவும் பிரபலம். எங்களுக்குக் கராத்தேக்கும் குங் பூவிற்கும் வித்தியாசம் தெரியாது. அப்போது ஹொங்கொங்கிலிருந்து வெளிவந்த 36th Chamber of Shaolin படம் மிகவும் பிரபலம். சிங்காரச் சென்னையில் அது திரையிடப்பட்டு, ஆனந்தவிகடனில் அதைப் பற்றிய விமர்சனம் கூட வந்திருந்தது.

அந்தப் பிரபலத்திற்கான பதிலடியாகத் தான் சீன அரச திரைப்பட நிறுவனம் இந்த Shaolin Temple எடுத்திருக்க வேண்டும். 36th Chamber of Shaolin படம் ஊரில் வெலிங்டன் தியேட்டரில் பார்த்தேன்.

மற்றப்படங்கள் பார்க்க முடியவில்லை.

சிகையை விடுவானா இந்தச் சிங்கன்? தன் முயற்சியில் சற்றும் மனம் தளராது, எத்தனையோ வருடங்களின் பின்னால், கனடா வந்து சீனக் கடைகளில் தேடிப்பிடித்து அந்த Shaolin temple, ரொறன்ரோ நூலகத்தில் வாங்கிய Battleship Potemkin ஐயும் பார்த்திருந்தேன்.

சீனச் சஞ்சிகைகளில் மாவோ சுவரில் சிரித்துக் கொண்டிருந்த Forbidden City அரண்மனையில் நடந்த கதையை மையமாக வைத்த, Bernardo Bertolucci யின் The Last Emperor படத்தை பார்த்து அதைப் பற்றி தாயகத்திலும் எழுதியிருக்கிறேன். சீனப்புரட்சி நடந்த காலத்தில் சீனச்சக்கரவர்த்தியாக இருந்தவர் கடைசியில் எல்லாம் இழந்து அங்குள்ள பூங்கா ஒன்றில் தோட்டக்காரராக இருந்தார். கலாசாரப் புரட்சியின் போது அவரையும் அவமானப்படுத்தியிருந்தார்கள்.

சில நேரம் அவரைத் தான் படங்கள் எடுக்கும்போது அந்த சிவப்புப் பூமரக் கிளையைப் பிடிக்கும்படி தோட்டக்காரனாக வைத்திருந்தார்களோ, யாருக்குத் தெரியும்?

சோவியத் யூனியன் சஞ்சிகை நகர மத்தியில் பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள பூபாலசிங்கம் புத்தகசாலையில் கிடைக்கும். அதற்கு பூபாலசிங்கத்தார் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் என்பதும் காரணமாக இருக்கலாம். உடுவில், மானிப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் வி. தர்மலிங்கமும் இடதுசாரிய தமிழரசு உறுப்பினர். அவர் யாழ் சோவியத் நட்புறவுச் சங்கத் தலைவராக இருந்த ஞாபகம்.

ஆனால் சீனச்சஞ்சிகைகள் வாங்க, ஆரியகுளத்திற்குக் கிழக்கால் உள்ள யாழ் புத்தகநிலையத்திற்குத் தான் செல்ல வேண்டும். அங்கு தோழர் மாவோ குழந்தைகளோடு விளையாடும், குழந்தைகள் அவர் மேல் அன்பு பொழியும் கதைப்புத்தகங்கள் கூடக் கிடைக்கும். அந்தப் பக்கமாகப் போனால், அங்கே மலிவாகக் கிடைக்கும் விலை போகாத பழைய சஞ்சிகைகளை மலிவாக வாங்குவது என் வேலை. அதில் China Sports மாத சஞ்சிகை முக்கியமானது. அதில் குங் பூவை Wushu என்று அழைத்து, அதற்கான பாடங்களையும் படங்களையும் வெளியிட்டிருந்தார்கள். அதற்காகத் தான் அவற்றை வாங்குவேன். பின்னர் அதற்கும் சந்தா கட்சியிருந்தேன்.

இப்படித் தபால் மூலம் குங் பூ கற்றுக் கொண்ட விண்ணன் நான். பிறகு, முயற்சியில் சற்றும் மனம் தளராமல் கனடாவில் ஜப்பானிய Aikido, கொரிய Tae Kwon Do எல்லாம் கற்ற அனுபவங்கள் தனிக்கதை.

இப்படி வெளிவந்து கொண்டிருந்த China Reconstructs இல் ஒரு முறை ஒரு வாசகர் கடிதம் வந்தது. ஜெயமோகனின் வாசகர் கடிதம் மாதிரி இருக்கக் கூடிய அதில், ‘சீனா சுதந்திரம் பெற்று




இத்தனை ஆண்டுகள் ஆகி விட்டது. அது தன்னைக் கட்டியெழுப்பியும் விட்டது. பிறகெதற்கு மீளக்கட்டுதல் என்ற தலைப்பு?’ என்று வாசகர் ஒருவர் வினவியிருந்தார். எத்தனையே ஆண்டுகளாக வெளிவந்த சஞ்சிகை ஒரு வாசகர் கடிதத்துடன் பெயரை மாற்றிக் கொண்டது. China Today என்று.

எனக்கு ஞாபகம் இருக்கிறது, இது நடந்தது எண்பதுகளின் நடுப்பகுதியில் நான் ஊரில் இருந்த காலத்தில். ஆனால் இணையத்தில் இந்தப் பெயர் மாற்றம் 90இல் நடந்தததாகத் தான் குறிப்பிடப்படுகிறது.

இதெல்லாம் நாற்பது வருடங்களுக்கு முந்திய கதைகள்.

இங்கே வந்து மரக்கறி, இறைச்சி வாங்குவதற்காக சீனக் கடைகளுக்குப் போகும் போது, அங்கே இலவச சீனப் பத்திரிகைகள் வைக்கும் இடத்தில் நானும் போய் பத்திரிகைகளை அள்ளி வருவதுண்டு. வீட்டுக்காரியின் உத்தரவுக்கு இணங்க! பல்வேறு பயன்பாடுகள் இருந்தாலும், அதுவே கடைசியில் பெரும் குப்பையாகி விடும். ரொறன்ரோ தமிழ்ப் பத்திரிகைகள் பளபள காகிதத்தில் வருவதால், சமையலறையில் சிந்தும் நீரை உறுஞ்சுவதில்லை. குப்பையாகக் கூடப் பயன்படுத்த முடியாத குப்பைகள் அவை.

சீனப் பத்திரிகைகள் மொழி புரியாவிட்டாலும், பயன்பாடு மிக்கவை.

இப்படி ஒருநாள், திடீரென்று அந்த இடத்தில் பத்திரிகைகளுக்கு நடுவில் China Pictorial ஐயும் China Today ஐயும் கண்டேன். மூன்று நான்கு இதழ்கள் கவனிப்பாரற்று சிந்திக் கிடந்தன. அவற்றின் உருவமும் மாறி லெட்டர் சைஸில் குறுகி, மாவோ மறைக்கப்பட்டு, பார்த்த இடத்திலெல்லாம் தோழர் Xi Jinping யின் பார்வை தெரிந்தபடி!

மாவோவின் மறைவின் பின்னால் வந்த தலைவர்கள் தங்கள் இரண்டு பதவிக்காலம் முடிந்து விலகிப் போக, தோழர் Xi Jinping வாழ்நாள் தலைவராக உருவெடுத்திருக்கிறார். இருந்தாலும், மாவோவின் சிந்தனைகள், மாவோ குழந்தைகளோடு சிரித்துக் கொண்டிருக்கும் சிறுவர் கதைப்புத்தகங்கள் மாதிரி, தோழர் Xi Jinping புத்தகங்கள் விடாவிட்டாலும், சீன அரசியலமைப்பு, கட்சி யாப்பு இரண்டிலும் தன்னுடைய தத்துவங்களை இணைத்து தன்னை தேசியத் தலைவராக்கி விட்டிருக்கிறார்.

இவரது தந்தை மாவோவுடன் ஒன்றாகத் தோள் கொடுத்துப் போராட்டங்களில் நின்றவர். உதவிப் பிரதமராகப் பணி புரிந்தவர். பின்னர் கலாசாரப்புரட்சிக் காலத்தில் பதவி பறிக்கப்பட்டு, கிராமம் ஒன்றில் தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்யத் தண்டனை வழங்கப்பட்ட தன் தந்தையோடு கிராமத்தில் வாழ்ந்தவர் இவர். இவருடைய தந்தையை புரட்சியின் துரோகி என்று குற்றம் சாட்டி ஊர்வலமாகக் கொண்டு போன போது, அவரது தாயார் தந்தையாரை மறுதலித்துக் கண்டனம் செய்ய கட்டாயப்படுத்தப்பட்டிருந்தார். பின்னர் இவருடைய தந்தை சிறை வைக்கப்பட்டிருந்தார். பின்னர் சீனப் பிரதமர் சூ என் லாயின் ஆணைப்படி இவரது தந்தை விடுவிக்கப்பட்டு, மகன் தந்தையைச் சந்தித்திருந்தார்.

இவரது தந்தை கலாசாரப் புரட்சிக்கு எதிரானவராக



இருந்தது மட்டுமன்றி, பின்னர் நடந்த தியான்மன் சதுக்கப் போராட்டங்களுக்கும் ஆதரவு தெரிவித்தவர்.

இதையெல்லாம் கடந்து, கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்வதற்குப் பல தடவைகள் முயன்று இவர் நிராகரிக்கப்பட்டிருந்தார். கடைசியில் கட்சிப் பிரமுகர் ஒருவருடன் நட்பாகி, கட்சியில் சேர்ந்து இன்று உச்சநிலைக்கு வந்திருக்கிறார். இன்றைக்கு மாவோவின் படங்களைத் தாங்கி வந்த அதே பிக்ரோறியல் அவருடைய படங்களைத் தாங்கி வந்து கொண்டிருக்கிறது. ஆனால், புத்தகங்களுக்கு உறை போட முடியாத சைஸில்.

சீனாவில் ஒரு ஆன்மீக இயக்கம் போன்றதாக ஆரம்பித்தது தான் Falun Da அல்லது Falun Gong என்ற இயக்கம். தொண்ணூறுகளில் புத்த, தாவோயிச கருத்துக்களை உள்ளடக்கி ஆன்மீக எழுச்சியாக ஆரம்பித்த இந்த இயக்கம் Li Hongzhi என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. அது ஒரு அமைப்பு முறைக்குள்ளான மதமாக (Organized religion) இல்லாமல், சீனர்கள் இங்கே பூங்காக்களில் மெதுநிலையில் பயிற்சி செய்யும் Tai Chi பயிற்சிமுறையோடு, ஒரு ஆன்மீகத் தேடல் மாதிரியான சிந்தனைகளை முன்னெடுத்த அமைப்பு அது. அதன் ஸ்தாபகர் தனது சிந்தனைகள் குறித்த பல்வேறு உரைகளை நிகழ்த்தி தனது அமைப்பைப் பரவலாக்கிக் கொண்டிருந்தார். அது சீனமாவில் மட்டுமன்றி, உலகெங்கும் பெரும் வரவேற்புப் பெற்றிருந்தது.

ஆரம்பத்தில் சீன அரசு இதை வரவேற்றது. ஆனால் அதன் பரவல் அதிகமாகி, அதன் ஸ்தாபகர் ஒரு கடவுள் நிலைக்கு வரத் தொடங்கியவுடன் சீன அரசு அலேர்ட் ஆகி விட்டது. இயக்கம் தடை செய்யப்பட்டு, அதன் ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டு மரண தண்டனையும் விதிக்கப்பட்டதாக தகவல்கள் உண்டு. அதன் தலைவர் இப்போது அமெரிக்காவில் வசித்து வருகிறார்.

ஆன்மீக இயக்கமாக இருந்தாலும் அது மிகவும் பிற்போக்கான கருத்துக்களைக் கொண்டதாக இருந்தது. பெண்களுக்கான இடம், ஒரு பாலுறவு பற்றி தற்போதைய நவீன சமூகத்திற்கு முரண்பாடான பிற்போக்குச் சிந்தனைகளை அது கொண்டிருந்தது. தியானம், உடற்பயிற்சி என்பவற்றை மையமாகக் கொண்டிருந்தாலும், அதன் பிரபஞ்சத்திலிருந்து சக்தியைப் பெறுகிற கதை எல்லாம் நம் வை.ஜி. மகேந்திரன் மகள் மதுவந்தியின் எனர்ஜி கதை மாதிரித் தான். அந்தப் பயிற்சிகளால் உடல் நிலை

சீராகும் என்கிற கதை கூட ஒரு கட்டத்தில் சீன அரச தரப்பினரால் புகழப்பட்டிருந்தது.

இதன் எண்ணிக்கை அதிகரித்து செல்வாக்குப் பெருகி, தங்களை மதமாக அரசு அங்கீகரிக்க வேண்டும் என்று கோரி, சீனத் தலைவர்கள் வாழும் பகுதியில் அமைதி முறையில் ஆர்ப்பாட்டம் நடத்திய போது தான் இந்த அமைப்பு மேற்குலக ஊடகங்களின் கவனத்தைப் பெற்றது.

இப்படி இது செல்வாக்குப் பெறுவது குறித்து சீனத் தலைமைப்பீடத்தின் அச்சம் காரணமாகத் தான் தடை அமுலாக்கப்பட்டது.

அரசுகளும் மதங்களும் ஒன்றோடு ஒன்று பிணைந்தபடி தான் நீண்ட காலங்களாக இருந்திருக்கின்றன. ஐரோப்பாவில் அரச வம்சங்களோடு கிறிஸ்தவ மதத்திற்கான தொடர்பு, அதிகாரம் சம்பந்தப்பட்டது. அரச அதிகாரங்களுடன் மதத்தலைவர்கள் நெருக்கமாக இருப்பது இரு தரப்பினருக்கும் பயன் அளிப்பது. ஒரு புறத்தில் மன்னர்களுக்கு மக்கள் தொகையை மதம் மூலமாக கீழ்ப்படிய வைப்பது. மதத் தலைவர்களுக்கு அரச அதிகாரத்துடனான தொடர்பு மூலமாகக் கிடைக்கும் சொகுசுகள். இந்தப் பரஸ்பர பயன்பாடு நீண்ட காலமாக இரு தரப்பினருக்குமான நெருக்கத்தைப் பேணிக் கொண்டது. எட்டாம் ஹென்றியின் திருமணங்களுக்கான எதிர்ப்பு கத்தோலிக்க மதத்தைத் தடை செய்வதை விட, இன்னொரு சுயாதீனமான மதத்தை உருவாக்கத் தான் வழிவகுத்தது. மன்னன் தன்னை மதத்தின் தலைவனாக்கிக் கொள்கிறான்.

பார்ப்பனர்கள் இந்திய அரசர்களை தங்கள் கைக்குள் வைத்து அதிகாரத்தை கையகப்படுத்தியதும் மதம் மூலமாகத் தான்.

இன்றைக்கு இஸ்லாமிய, பௌத்த, இந்து சிந்தனைகள் எத்தனை நாடுகளின் அரசியலில் பெரும் பங்கு வகிக்கின்றன? இது கூட மக்கள் கூட்டத்தைக் கட்டுக்குள் வைக்க அவர்களின் உணர்வுகளைப் பயன்படுத்துகிற விடயம் தான். அரசின் சகல தவறுகளையும் குறைபாடுகளையும் இயலாத் தனங்களையும் ஊழல்களையும் பற்றி மக்கள் அறிந்து கிளர்ந்தெழாமல் மத உணர்வுகளுக்குள் வைத்திருப்பது அரசுகளுக்கு வசதியாக இருக்கிறது.

ஆனால், கம்யூனிச அரசுகள் மதங்களை நிராகரிக்கின்றன. அவற்றின் நோக்கம் கடவுள் இல்லை, அந்தப் பொய்யை மக்கள் நம்பத் தேவையில்லை என்பதை விட வேறு நோக்கம் கொண்டது.

உண்மையில் அரசு மக்களின் மத நம்பிக்கையில் தலையிடவே தேவையில்லை. அரசு மதங்களை அங்கீகரிப்பதால் வரும் தவறுகளைத் தெரிந்து கொண்டதால் தான் Separation of the church and state என்ற அரசுக்கும் மதத்திற்கும் இருக்க வேண்டிய பிரிதல் என்பது மேற்குலகில் அமுலாக்கப்பட்டிருக்கிறது. தான் விரும்பிய மதத்தைப் பின்பற்றக் கூடிய மதச் சுதந்திரம் (Religious freedom) வழங்கப்பட்ட, மதச்சார்பற்ற அரசுகளாகத் (Secular state) தான் அவை இருக்கின்றன. ஆயினும் மேற்குலகில் பெரும்பாலானவை கிறிஸ்தவ படிப்பினைகள் சார்ந்தனவே என்பதும் பெரும் உண்மை.

ஆனால், கம்யூனிஸ அரசுகளின் மதத் தடை என்பது சர்வாதிகார அரச அதிகாரம் பற்றியது. அந்தச் சர்வாதிகாரத்தால் மதத்தை அழிக்க முடியாதபடிக்கு மனித மனங்களில் மதம் பற்றிய உணர்வு இருக்கிறது என்பதற்கு, ரஷ்யா சிதறலின் பின்னால் அங்கு பழமைவாதக் கிறிஸ்தவம் அரசுடன் சேர்ந்து பயணிக்கத் தொடங்கியிருப்பதும், சீனாவில் லட்சக்கணக்கானோர் சேர்ந்து கொண்ட பௌத்த சிந்தனையிலான இந்த அமைப்பு எழுச்சி பெற்றதும் உதாரணங்கள்.

கம்யூனிஸ சர்வாதிகார அரசு அமைப்புகள் அமைப்பாக்கப்பட்ட மதங்கள் குறித்து அச்சம் கொண்டிருப்பது அவற்றுக்கு மக்கள் மேல் செலுத்தக் கூடிய செல்வாக்கு குறித்தே. பிலிப்பைன்ஸில் மார்க்கோஸ்க்கு எதிராக எழுந்த எழுச்சிக்குப் பின்னால் கத்தோலிக்க மதத்தலைவர்கள் இருக்கிறார்கள். எல் சல்வடோரில் வலதுசாரி அரசு கத்தோலிக்க ஆயரைக் கொன்றது அவர்கள் அந்தச் சமூகத்தில் கொண்டிருக்கக் கூடிய பாதிப்பு குறித்துத் தான்.

சர்வாதிகாரங்கள் தங்களுக்கு அச்சுறுத்தல் தரும் எதையும் வளர அனுமதிப்பதில்லை. அதனால் தான் மத தலைமைப்பீடங்களை வளர விடுவதில்லை. சீனா கூட கத்தோலிக்க ஆயர்களை வத்திக்கான் நியமிக்க விடுவதில்லை. கம்யூனிஸ்ட் கட்சி தான் நியமிக்கிறது.

கடவுள் நிலையில் நினைக்கப்படும் ஒருவரை பெருமளவில் மக்கள் தொடர்வது அரசுக்கான அச்சுறுத்தல். அரசுக்கு எதிரான மக்கள் உணர்வு கிளர்ந்தெழும்போது, அந்த கடவுள் போன்ற மதத் தலைவரும் மக்களை



கிளர்ந்தெழுங்கள் என்றால் நிலைமை என்னவாகும் என்பதற்கு ஈரானின் ஷாவுக்கு எதிரான புரட்சியில் அயத்துல்லா கொமேய்னி பிரான்சில் இருந்தவாறே வகித்த பங்கு உதாரணமாக இருக்கும்.

அதிகாரம் எப்போதுமே ஒன்று தான். தத்துவங்கள் எல்லாம் வாய்ப்பேச்சளவில் தான். அதிகாரம் தன் நலன்களை தொடரவும் நிலைநாட்டவும் சகல வழிகளையும் பயன்படுத்தும்.

இந்த Falun Dafa இயக்கம் சாதாரணமானதல்ல. இன்றைக்கு சீன அரசுக்கு அச்சுறுத்தலாக பல நடவடிக்கைகளில் ஈடுபடும் அளவுக்கு பலம் வாய்ந்ததாக இருக்கிறது. இங்கே பல இடங்களில் நான் கண்டு, எடுத்து வந்து வாசிக்கிற, இலவசப் பத்திரிகையான Epoch Times அவர்கள் வெளியிடுவது தான். அது முழுக்க முழுக்க சீன அரசுக்கு எதிரானது. இங்குள்ள கன்சர்வேட்டிவ் சிந்தனைக்கு ஆதரவான கருத்துக்களைக் கொண்டது. கோவிட் மருந்துக்கு எதிரானது உட்பட்ட பல்வேறு சதித் தத்துவங்களை (Conspiracy theories) களை ஆதரித்து எழுதுகிறது. டொனால்ட் ட்ரம்புக்காக தேர்தல் நேரத்தில் ஆதரவான கட்டுரைகளையும், ஐரோப்பாவில் தீவிர வலதுசாரிகளை ஆதரித்த கட்டுரைகளையும் வெளியிட்டது.

இந்த இலவசப் பத்திரிகையை கனடாவில் பணக்காரர்கள் இருக்கும், அரசியல் செல்வாக்கு இருப்போர் வசிக்கும் பகுதியில் இலவசமாக தபால் மூலமாக வினியோகித்துக் கொண்டிருந்தார்கள். இதன் மூலமாக அரசியல் மட்டங்களில் சீன எதிர்ப்புச் சிந்தனைய உருவாக்குவதே இவர்களின் நோக்கம். இந்தப் பத்திரிகை சாதாரண மக்கள் உலவும் இடங்களில் பெரும்பாலும் கிடைப்பதில்லை.

அதில் பல்வேறுபட்ட பயனுள்ள, சுவாரஷ்யமுள்ள விடயங்கள் வெளிவந்தாலும், எப்போதுமே ஒரு மதப் பிரசாரத் தன்மை இருக்கும். எங்களைச் சிந்திக்கத் தூண்டாமல், தங்கள் முடிவுகளைத் திணிக்கும் முயற்சியாகவே அவை இருக்கும்.

அவர்களுக்கு என தொலைக்காட்சிச் சேவை, வானொலி கூட உண்டு.

இந்த பலூரன் டபா உறுப்பினர்கள் இங்கே பெரும் சந்திகளில் பெரும் பதாகைகளுடன் அடிக்கடி ஆர்ப்பாட்டப் பாணியில் சீனாவுக்கு எதிரான ஒன்றுகூடல்களில் ஈடுபட்டிருப்பார்கள்.

இந்த அமைப்பு சீனாவின் கம்யூனிச, இராணுவக் கட்டமைப்புக்கு எதிராக, சீனாவின் ஐயாயிரமாண்டு காலப் பாரம்பரியங்களை மீளவும் புத்துயிர் பெற வைக்கும் எண்ணத்தோடு கலை நிகழ்வுகளை நடத்துகிறது. Shen Yun எனப்படும் இந்தக் கலைநிகழ்வுகள் உலகெங்கும் பெரும் அளவில் நடத்தப்படுகின்றன. இங்கே ரொறன்ரோவில் நடக்கும் நிகழ்ச்சிக்கு ரொறன்ரோ ஸ்டார் பத்திரிகை ஸ்பொன்சராக இருக்கிறது. இது பற்றி ஊடகங்களில் பெரும் எடுப்பில் விளம்பரங்களும் விமர்சனங்களும் வெளியாகின்றன.

இவ்வாறான நிகழ்வுகளுக்கும் ஊடக முயற்சிகளுக்கும் ஏதோ வகையில் அமெரிக்க உதவிகள் கிடைத்திருக்கின்றன.

இந்த முயற்சிகளை விடவும், தற்போதைய இணைய யுகத்தில் சீனாவில் கருத்துச் சுதந்திரத்திற்கான தடைகளை மீறுவதற்கான வழிகளை இந்த அமைப்பு உருவாக்கிப் பரவ விட்டுக் கொண்டிருக்கிறது. விக்கிபீடியாவில் தங்களுக்கு எதிரான கருத்துக்களை மாற்றுவதில் அதன் ஆதரவாளர்கள் கடுமையான முயற்சிகளில் உள்ளனர்.

அதை விட, சீனாவில் கருத்துச் சுதந்திரத் தடை, தணிக்கை ஆகியவற்றைமீறி, சீனமக்களும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் ஊடகவியலாளர்களும் சீன அரசின் கண்காணிப்பின்றி கருத்துப் பரிமாற, Ultrasurf, Freegate என்ற இரண்டு செயலிகளை இந்த அமைப்பு உருவாக்கியிருக்கிறது. இந்த செயலிகளை உருவாக்க ஒபாமா ஆட்சியின் போதும், ட்ரம்ப் ஆட்சியின் போதும் இந்த அமைப்புக்கு பெருமளவு பணம் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்தச் செயலிகள் மூலம் அரசுக்கு எதிரான கருத்துக்களை அரசுக்கு பயமின்றி இரகசியமாகப் பரிமாறிக் கொள்ளலாம் என்பதால் இது சீனாவில் மட்டுமன்றி, ஈரானில் கூட ஆர்ப்பாட்டக்காரர்களால் பயன்படுத்தப்படுகிறது.

ஆனால், இந்த செயலியின் பாதுகாப்புக் குறித்து, இதற்குள் பின் கதவால் புகுந்து தகவல்களை திருட முடியுமா? அவ்வாறு திருட நேர்ந்தால் அதில் கருத்துப் பரிமாற்றம் செய்வோரின் பாதுகாப்பு என்ன? என்பது குறித்து, அறிய முடியாதபடிக்கு இது தனிப்பட்ட நிறுவனத்திற்கு சொந்தமானதாக இருப்பதால், கணினி நிபுணர்கள் இது பற்றி கண்டனங்கள் தெரிவித்திருக்கிறார்கள். சில நேரம் சீன அரசு இவர்களுக்குள் ஊடுருவி, இதன் பயன்பாட்டாளர்கள் பற்றி



அறிந்து கொண்டால், அவர்களின் உயிருக்குக் கூட ஆபத்து நேரலாம்.

சீனா மாவோவின் மறைவுக்குப் பின்னர் பல்வேறு மாற்றங்களைக் கண்டிருக்கிறது. அதில் சீன அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக தியன்மன் சதுக்கத்தில் நடந்த மாணவர் எழுச்சி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

தியன்மென் சதுக்கப் போராட்டம் நடந்து, அந்த மாணவர்களோடு போய் கதைத்து, அரசு தவறிழைத்ததாகக் கூறிய சீன முதல்வர் Zhao Ziyang அந்த ஆதரவுக்காகவே பதவி நீக்கம் செய்யப்பட்டது இன்னொரு உபகதை. ஸாவோ ஸியாங் மாவோவின் பொருளாதாரக் கொள்கைகள் மீது விமர்சனம் கொண்டிருந்தவர். மாவோவின் பின்னால் ஆட்சியில் அமர்ந்த டெங் சியாவோபிங் அரச கட்டுப்பாட்டில் உள்ள பொருளாதாரத்தில் இருந்து சந்தைப் பொருளாதாரத்திற்கு சீனாவை மாற்றிய போது, ஸாவோ ஸியாங்கிற்கு டெங் சியாவோ பிங்கின் ஆதரவு இருந்தது.

ஆனால், தியன்மென் சதுக்க போராட்டக்கார மாணவர்களுக்குத் தனது ஆதரவைத் தெரிவித்ததால், டெங்கின் கோபத்திற்கு ஆளாகி பதவி நீக்கம் செய்யப்பட்டார். அதன்பின்னால், வீட்டுக்காவலில் வைக்கப்பட்டு, மரணத்தின் போது ராஜாங்க மரியாதைகள் கிடைக்காமல் தான் அடக்கம் செய்யப்பட்டார்.

ஸாவோ ஸியாங் பதவி நீக்கம் செய்யப்பட்ட பின்னர் தான் டெங்கின் ஆதரவு பெற்ற பிரதமர் லி பெங் தியன்மென் சதுக்க ‘அரகலய’ போராட்டத்தை வன்முறை மூலம் முடிவுக்குக் கொண்டு வந்தார். அதில் பலர் கொல்லப்பட்டு, மேலும் பலர் சிறையிலிடப்பட்டனர். அதற்காகவே இன்றைக்கும் சீன மக்கள் மத்தியில் லி பெங் பெரும் வெறுப்புக்குள்ளாகி இருக்கிறார்.

லி பெங் சீனாவின் பொருளாதார சீர்திருத்தங்களை எதிர்த்து வந்தவர். அவர் சீன சக்தி உருவாக்க நிறுவனத்தை தனது குடும்பச் சொத்துப் போலவே நடத்தி



வந்தவர். அவர் பதவியிலிருந்து விலகிய பின்னர் அந்த நிறுவனம் சீன அரசினாலேயே ஐந்து நிறுவனங்களாக உடைக்கப்பட்டிருந்தது.

சீன அரசு கம்யூனிஸ அரசாக இருந்தாலும், அதில் உள்ள அதிகார வர்க்கத்தினரின் ஊழல் பிரபலமானது. ஜோர்ஜ் ஓர்வெல்லின் மிருகப்பண்ணை கதை போல, எல்லா மிருகங்களையும் விட சில மிருகங்கள் மேலானவை. எல்லாத் தோழர்களையும் விட, சில தோழர்கள் மேலானவர்கள்.

தற்போதைய ஜனாதிபதி கூட, பத்தாண்டுகளின் பின்னான தனது கொள்கைத் திட்டத்தில் கூட ஊழல் ஒழிப்பு என்பதைப் பகிரங்கமாகச் சொல்கிறார் என்றால், ஊழல் அங்கே பெரிய அளவில் புரையோடிக் கிடக்கிறது என்பது தானே உண்மை?

ஸி ஜின்பிங் தனது அரசியல் எதிரிகளை மடக்கி சிறையில் இட்டதன் மூலம் தான் தனது போட்டியாளர்களை இல்லாமல் செய்து பதவிக்கு வந்தவர். இவரது தலைமைப்பதவிக்குப் போட்டியாக வரக் கூடியவர் என்று இருந்த Bo Xilai என்று மிகப்பெரும் முக்கியஸ்தரும், தனது ஊழல், அது சம்பந்தமாக நடந்த ஒரு பிரிட்டிஷ்காரரின் கொலையுடன் சம்பந்தப்பட்டதாகக் கூறி பதவி பறிக்கப்பட்டு சிறையில் இருக்கிறார்.

இந்த போ ஸிலாயின் தந்தை கூட மாவோவுடன் இருந்து, அவரது திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக முரண்பட்டு, கலாசாரப்புரட்சி காலத்தில் சிறையிலிடப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டார். தாயார் செம்படையினரால் கடத்தப்பட்டு சித்திரவதை செய்து கொல்லப்பட்டார். போ ஸிலாய் கூட சிறையில் இடப்பட்டிருந்தார். மாவோ இறந்த பின்னர், கலாசாரப் புரட்சி நால்வர் குழு தலைமையில் நடந்தது என்று முடிவாகி அரசியல் சூழ்நிலை மாறியதும் இவர்கள் விடுதலையாகி, போ ஸிலாயின் தந்தை பின்னர் உதவிப் பிரதமராகப் பதவி வகித்தார்.

எல்லாத் தலைவர்களும் பத்தாண்டு காலம் மட்டுமே பணிபுரிய வேண்டும் என்ற கட்சி விதிமுறைகளை மாற்றி, ஸி அரசியல் அமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கிறார். இரண்டு வருடங்களுக்கு முன்னர் வருடாந்த கட்சி மாநாட்டில், ஸிக்கு அருகில் உட்கார்ந்திருந்த, அவருக்கு முன்னைய ஜனாதிபதியான ஹூ ஜின்ராவோ மாநாட்டின் முடிவு நாளன்று வெளியேற்றப்பட்டது பெரும் பரபரப்பான செய்தியாக இருந்தது. மாநாட்டில் ஸி ஆட்சியில் தொடர்வது குறித்து எடுக்கப்பட்ட முடிவுக்கு அவர் எதிர்ப்புத் தெரிவித்ததாகவே வெளிவந்த

செய்திகள் அமைந்திருந்தன. ஸி ஆட்சிக்கு வருவது கூட ஹூவின் ஆசீர்வாதத்துடனாகத் தான் நடந்தது. ஆனால் தொடர்ந்தும் ஸி பதவியில் நீடிப்பதை ஹூ விரும்பாதததாகவே தகவல்கள் தெரிவித்திருந்தன.

ஆனாலும், இன்னொரு பழைய தலைவரான ஜியாங் ஸெமினின் இறுதிநிகழ்வில் ஸியுடன் ஹூ ஜின்ராவோவும் கலந்து கொண்டிருந்தார்.

இன்றைய சீனத் தலைவர்கள் எல்லாருமே மாவோவின் புரட்சி நடந்த காலத்திற்குப் பின்னால் பிறந்தவர்கள். இவர்களில் பலர் பழைய தலைவர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். மாவோவின் இறுதிக்காலத்தில் அவரது நான்காவது மனைவியும் வேறு சிலரும் சேர்ந்து கலாசாரப்புரட்சி காலத்தில் நடைபெற்ற அத்துமீறல்கள் மாவோவின் வழிநடத்தலில் நடந்தனவா? அவர் இயலாதநிலையில் அதிகாரத்தை கையில் வைத்திருந்த இந்த நால்வரின் கையில் இருந்ததா? என்பது பெரும் கேள்வி. அந்த நேரத்தில் டெங் சியாவோபிங்கின் பொருளாதாரக் கொள்கைகள் சந்தைப்பொருளாதாரமாக மாறி தனது புரட்சியை மழுங்கடிக்கக் கூடும் என்ற அச்சம் மாவோவுக்கு இருந்ததால் அவர் தான் அதிகாரத்தில் உள்ளோருக்கு எதிராக கலாசாரப் புரட்சியைத் தூண்டினார் என்றும் கூறப்படுகிறது.

இன்றைய சீன ஆட்சியாளர்கள் எல்லாம் கலாசாரப் புரட்சியின் போது எதிர்ப்புரட்சி வாதிகளாக அடையாளம் காணப்பட்டு, பதவி நீக்கப்பட்டவர்களும் சிறை சென்றவர்களும் தான். அல்லது அவ்வாறு சிறை சென்றவர்கள், பின்னர் புனர்வாழ்வு அழிக்கப்பட்டவர்களின் பிள்ளைகளே.


கலாசாரப் புரட்சியில் ஈடுபட்டவர்கள் நீக்கப்பட்டு சிறை வைக்கப்பட்ட பின்னால், டெங் பதவிக்கு வந்து சந்தைப்பொருளாதாரக் கொள்கைக்கு முழுமையாக சீனா மாறி விட்டது. அந்தக் காலத்தில் சீனப் பொருட்கள் என்றால், தரம் குறைந்த, விலை குறைவான றப்பர் பொம்மைகளாகத் தான் இருந்தன. இன்றைக்கு நான் பாவிக்கும் அப்பிள் கம்பியூட்டர்கள் தயாரிப்பு முதல் விண்வெளி ஆய்வுகூடம் வரைக்கும் சீனாவில் உற்பத்தியும் வளர்ச்சியும் உண்டு. உலகில் பெரும் பொருள் உற்பத்தி மையமாகச் சீனா இன்றைக்கு வளர்ச்சி அடைந்திருக்கிறது. அமெரிக்காவுக்கு பொருளாதார ரீதியாக மட்டுமன்றி, தொழில்நுட்ப ரீதியாகவும் சவால் விடக் கூடிய அளவுக்கு வளர்ச்சி கண்டிருக்கிறது.

நான் சீன சஞ்சிகைகள் வாசித்த காலத்தில் இருந்த சீனா இன்றைய சீனா இல்லை. அது பல்வேறு மாற்றங்களைக் கண்டு அதன் கம்யூனிச சித்தாந்தங்களுக்கு முற்றிலும் முரணான, ஆனால் ஆட்சி முழுமையாக கட்சிக் கட்டுப்பாட்டில் உள்ள, அரச கட்டுப்பாட்டில் உள்ள பொருளாதாரக் கொள்கையைக் கொண்ட ஒரு அரசமைப்பாகத் தான் இருக்கிறது.

இன்றைக்கு சீனா கம்யூனிசத்தை பெரும் கொள்கையாகப் பரப்புவதில்லை. அன்றைக்கு அந்தச் சஞ்சிகைகளில் கண்ட அதே கொள்கையும் வாழ்க்கை முறையும் இன்றைக்கு இல்லை. சீனா இப்போது பல பில்லியனர்களைக் கொண்டிருக்கிறது. தனியாருடன் சேர்ந்து சீனக் கம்யூனிசக் கட்சியும் இராணுவமும் முதலீடுகளைச் செய்கின்றன. அதில் முக்கியஸ்தர்கள் பெயரில் பெரும் ஊழல்கள் நடக்கின்றன. அடிக்கடி விசாரணை செய்யப்பட்டு பெரும்புள்ளிகள் தூக்கில் இடப்படுவதாக சீனச் செய்தி நிறுவனங்களே செய்தி வெளியிடுகின்றன.

வெளிநாட்டு முதலீடு களுக்காக தொழிலாளர் உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன. அப்பிள் நிறுவனம் போன்றன உற்பத்தி செய்யப்படும் இடங்களில் தொழிலாளர்களின் நிலை மோசமாக இருப்பதாக குற்றச்சாட்டுக்கள் வந்தபடியே இருக்கின்றன.

அமெரிக்கா போலவே, தன் பண பலத்தால் ஆசிய,




ஆபிரிக்க நாடுகளைக் கடனாளி யாக்கியிருக்கிறது. குடியேற்றவாதம், சுரண்டல் என்பவற்றை சீனா திட்டமிட்டபடி செய்து கொண்டிருக்கிறது. அதன் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கும் வித்தியாசங்கள் இல்லை. இரண்டுமே தங்கள் நாட்டிற்கான சுயநலன்கள் சார்ந்தவை. சீனா இந்த வறிய நாடுகளில் இன்றைக்கு செய்யும் முதலீடுகள் எல்லாம் அந்த நாடுகளின் வளர்ச்சிக்காகவோ, மனித இனத்தின் மேம்பாட்டுக்காகவோ செய்யப்படுகின்றவையும் இல்லை.

சீனா புனித அரசாகக் கட்டமைக்கப்பட முடியாதபடிக்கு, அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவது குறித்து எப்போதுமே செய்திகள் வந்தபடி தான் இருக்கின்றன.

இன்றைக்கு தன்னை மாவோ அளவுக்கு நிலைநிறுத்திக் கொண்டிருக்கும் ஸி, தற்போது சர்வாதிகாரம் மிக்க ஆயுட்காலத் தலைவராக வந்திருக்கிறார்.

இம்முறை கம்யூனிஸ்ட் கட்சியின் வருடாந்த மாநாட்டில், முப்பதாண்டு நடைமுறையான சீனப்பிரதமரின் பத்திரிகையாளர் சந்திப்புரத்துச்செய்யப்பட்டிருக்கிறது. சீனாவின் கொள்கைகள் பற்றி ஸி சொல்லும் கருத்துக்களை விட வேறு கருத்துக்கள் இல்லை என்பது போல

இந்த நிகழ்ச்சி அமைந்திருக்கிறது.

அந்த அதிகாரம் தனது இமேஜை வளர்ப்பதற்கு பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டியது கட்டாயம். பிரசாரம் என்பதே பொய்களில் கட்டமைக்கப்படும் ஒன்று தான்.

சீன அரசுக்கு எதிராக பலுன் டபா இயக்கம் வெளியிடுகிற Epoch Times பத்திரிகைக்கு எதிராகவே இந்த இலவச சைனா ருடே சஞ்சிகைகள் கனடாவில் வினியோகிக்கும் முயற்சிகள் ஆரம்பித்திருக்க வேண்டும். ஆனால், அந்த முயற்சி தொடரவில்லை. கொஞ்சக் காலங்களின் பின்னால் இந்த சஞ்சிகைகளை நான் காணவேயில்லை.
அதற்கான தேவை இல்லாதபடிக்கு சர்வதேச ஊடகங்களில் சீனா பெரும் செல்வாக்குச் செலுத்துகிறது. சர்வதேச அமைப்புகளில் சீனா பலம் வாய்ந்ததாக, அதன் முடிவுகளை மாற்றி அமைப்பதற்கான வல்லமையுடன் இருக்கிறது. கொரோனா வைரஸின் தலைமுறை மாற்றுப் பெயரீட்டை, கிரேக்க அரிவரி எழுத்துக்கள் மூலம் குறிப்பிட்ட உலக சுகாதார நிறுவனம், Xi என்பதைப் பயன்படுத்தாததற்குக் காரணம், அந்த வைரஸ் சீனாவில் உருவானது என்பதும், அந்தப் பெயரைப் பயன்படுத்துவது ஜனாதிபதியை அதனுடன் சம்பந்தப்படுத்தும் என்பதாலேயே. சீனாவின் ஆட்சேபனையோ, சீனாவைக் கோபத்திற்குள்ளாக்காமல் இருப்தோ தான் இதன் நோக்கமாக இருந்தது.

அதிகாரம் என்பது எப்போதுமே தனது நலன்களை வளர்ப்பதும், பாதுகாப்பதும், நீடிப்பதும் பற்றியது தான். ஆனால், அதன் ஆதரவாளர்கள் பிரச்சாரங்களை நம்புவதும் அதைப் பரப்புவதும் அறியாமையில். இந்தியாவில் இந்துத்துவப் பிரசாரங்கள் எவ்வளவு கோமாளித்தனமாக நடக்கின்றன என்பது, இன்றைக்கு கோமியம் குறித்து கொரோனா வைரஸை அழிக்கலாம் என்ற நம்பிக்கையைக் கூட கொண்டு வந்ததன் மூலம் அறியலாம்.

எழுபதுகளில் இந்தச் சீன சஞ்சிகைகளில் மாவோவின் படம் அட்டைப்படமாகவும், உள்ளே நடக்கும் நிகழ்வுகளில் எங்காவது சுவர்களில் எல்லாரையும் கண்காணித்துக் கொண்டிருக்கும் அவரது பெரிய படங்களும் பதாகைகளும் என எங்கும் மாவோ மயம் தான். எழுபதுகளின் பிற்பகுதியில் நான் உயர்வகுப்புப் படித்துக் கொண்டிருந்த காலத்தில் என் நண்பன் அன்ரன் ஜோனாஸ் தனது கொப்பி ஒன்றிற்கு மாவோவின் படம் இருந்த உறை ஒன்று போட்டு, அவரின் கண்களை எங்கள் கொம்பாஸ் வட்டாரையால் குத்திக் கிழித்து அதில் நீல மையினால் கறுப்புக் கண் கீறியதை இன்னொரு நண்பன் ராஜகுலேந்திரன் காட்டிச் சிரித்தது இன்றைக்கும் என் மனதில் நினைவாக உண்டு. அதன் பின்னால், படிப்படியாக மாவோ நீக்கம் பெற, ஒரு பச்சை நிற சோபாவில் உட்கார்ந்திருக்கும் உயரம் குறைந்த டெங் சியாவோ பிங் தான் அந்தச் சஞ்சிகைகளில் நீக்கமற நிறைந்து நின்றார். இன்றைக்கு இந்தச் சீன சஞ்சிகைகளில் மாவோவைக் காணவே முடியாது. மார்க்ஸிற்கு இருக்கும் மரியாதை கூட மாவோவிற்கு இல்லை என்ற நிலையில் தான் சீனக் கம்யூனிஸம் இன்றைக்கு இருக்கிறது.

அன்றைக்கு சீனச் சஞ்சிகைகள் மாவோவை தங்கள் பெருந்தலைவர் என்று சொன்னது போலத் தான், இன்றைக்கு அவருடைய கொள்கைக்கு சம்பந்தமில்லாத தலைவர் ஸி யையும் பெருந்தலைவர் என்று சொல்வதும் மாறவில்லை.

சீனாவை கம்யூனிச நாடு என்றும், அந்தப் பிரசாரங்களை உண்மை என்றும் நம்பும் ஆதரவாளர்களும் அன்றைக்கும் போல இன்றைக்கும் மாறவில்லை.

மீளமைக்கப்பட்ட சீனாவின் (China Reconstructs) இன்றைய நிலை (China Today) இப்படித்தான் வந்து முடிந்திருக்கிறது.







# சொல்ல மறந்த கதை:02

ஷெல்லுகள் விழுந்து வெடித்து ஓய்ந்த நேரமதில், அவர்கள் தங்கள் பயணத்தைத் தொடங்கியிருந்தார்கள். ஏ 9 வீதியில் பரந்தனை அண்டிய பகுதிகளெங்கும் ஒரே புகைமண்டலமாகக் காட்சியளிப்பதைப் பரந்த வான்வெளியூடாக பார்த்த மக்களுக்கு, மேலும் தொற்றிக் கொண்டது அச்சம். இப்போது இங்கு இருப்பதும் பாதுகாப்பில்லை... என்ற எண்ணம், பெரும்பாலான குடும்பத்தவர்களிடம் வேரூன்றி இருந்தது. வேறுசிலர் 'பொடியள் விடமாட்டாங்கள்... அவங்கள் உப்பிடித்தான் உள்ளுக்கை வரவிட்டுத்தான் அடிப்பாங்கள்...' என்ற சிந்தனை மேலிட நகராது இருந்தார்கள்.

பரந்தனுக்கும் முல்லைத்தீவுக்கும் இடைப்பட்ட அந்தப்பிரதான வீதியில் விசுவமடு என்ற இடத்தில் அவன் இருந்தான். அவனோடு அவனது மனைவி, இரண்டு சிறுபிள்ளைகள், தாய் தந்தை மட்டுமே இருந்தார்கள். ஒரு வேப்பமர நிழலின்கீழ் தரப்பாள் அடித்து ஒரு மறைவிடத்தை அமைத்திருந்தான் அவன். ஆயினும், அது எதுவித பாதுகாப்புமற்றது என்பது அவனுக்குத் தெரியாததொன்றல்ல.

'கடவுளே! பிரச்சினை படிப்படியாகக் குறைஞ்சிட வேணும். பழையபடி எங்கட வீட்டுமுற்றத்தில போய் நிற்க வேணும்... '

அவனது மன எண்ணம்போலவே அங்கு அந்த நிலப்பரப்பில் உள்ள மரங்களின்கீழ் தரப்பாள் கொட்டிலுள் வாழ்ந்து கொண்டிருந்த மக்களுக்கும் இருந்தது. ஆனால், அவர்களது எண்ணங்களுக்கு எதிர்மாறாக களநிகழ்வுகள் அமைந்தவண்ணம் இருந்தன.

நாள்கள் நகர... நகர பரந்தனில் இருந்து முரசுமோட்டை, கண்டாவளைப் பகுதிகளின் மேற்குப்பக்கமாக பரவலாக ஷெல்லுகள் விழுந்து வெடிக்கத் தொடங்கின. இப்போது முல்லைத்தீவு - பரந்தன் வீதியில் பெருமளவான மக்கள் ஏதிலிகளாக இடம்பெயர்ந்து சென்று கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவராக அவனும் அவனது குடும்பத்தினரும் இருந்தனர். அவனது பெற்றோர் தங்கள் பேரப்பிள்ளைகள் இருவரையும் சுமந்துகொண்டு சென்றனர். அவனும் அவளும் ஆளுக்கொரு மிதிவண்டியில் தங்களது பொருள்களோடு, வண்டிகளை உருட்டிக்கொண்டு நடந்தனர்.

புதுக்குடியிருப்பு - கைவேலிக்கு அப்பால் வடக்கே செல்லும் குறுக்குப் பாதைகளூடாக நகர்ந்து, மாத்தளனுக்குச் செல்லும் இரணைப்பாலை வீதியில் ஏறினார்கள். அந்தப்பகுதிகளில் ஷெல்வீச்சுகளின் தாக்கம் குறைவாக இருப்பதை அவதானித்துக் கொண்டான் அவன். மிதிவண்டிகளில் பாரச்சுமைகளோடு நடந்ததால், அவனும் அவளும் மட்டுமன்றி, பேரப்பிள்ளைகளைச் சுமந்து வந்ததில் அவனது பெற்றோரும் மிகவும் களைத்துப் போயிருந்தார்கள்.

இனி நகர முடியாது... எனும் மனநிலைக்கு அவன் வந்தான். முழங்கால் இரண்டும் சுள்ளென வலித்துக்கொண்டிருந்தன. கைகள்

அலெக்ஸ் பரந்தாமன்

இரண்டும் விறைத்தனவாய் உணர்ச்சியற்று இருந்தன. பசி வேறு வயிற்றில் புகைந்து கொண்டிருந்தது. அருகில் உள்ள பாலைமரத்தோடு மிதிவண்டிகளைச் சாத்திவிட்டு, அருகில் அமர்ந்து கொண்டார்கள். பாய்க்குள் இருந்த லெமன்கிறீம் பிஸ்கட்டை அவள் எடுத்து, பிள்ளைகளுக்கும் அவனது பெற்றோர்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்தாள். அவனும் அவளும் வெறும் நீரை மட்டும் பருகிக் கொண்டார்கள். பெற்றோர்களுக்குக் கண்கலங்கி விட்டன. தமக்குத் தரப்பட்ட பிஸ்கெட்டில் ஒவ்வொன்றை அவர்கள் அவனுக்கும் அவளுக்கும் கொடுக்க முற்பட்டபோது, அதை வாங்க மறுத்து விட்டார்கள்.

வெயில் மெல்லத் தணிந்து கொண்டிருந்தது. பரந்தனில் இருந்து வெளியேறிய மக்கள் முரசுமோட்டை, கண்டாவளை, தருமபுரம் வாழ் மக்களோடு இணைந்து மாத்தளன் பக்கம் சென்று கொண்டிருந்தார்கள். வேறுசிலர், வழியில் உள்ள ஆள்களற்ற வெறுமையான காணிகளிலும் தென்னந்தோட்டங்களுக்குள்ளும் புகுந்து தரப்பாள் அடித்துத் தங்கிக் கொண்டார்கள்.

இதைக்கண்ட அவள், அவனிடம் கூறினாள்.

'இஞ்சரப்பா... நாங்களும் உள்ளுக்கை போய்ப்பார்த்து, ஆற்றையேனும் காணிகளுக்குள்ள இருப்பமே?'

'கொஞ்சம் பொறு. காலெல்லாம் உளையுது. எப்பனுக்கு இதில ஆறியிட்டுப் போவம்...'

அவனுக்கும் அந்த இடம் பாதுகாப்பற்றதாகவே தெரிந்தது. கிறவல் வீதிக்குப் பக்கத்தில் இருப்பதால், உழவு இயந்தியங்களின் இரைச்சல் அதிகமாக இருந்தது. கிறவலில் இருந்து எழும் செம்புழுதி சுவாத்தியத்துக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தியது. சுற்றிவர நாயுண்ணிச் செடிகள், கள்ளிமரங்கள் நன்கு வளர்ந்து நின்றன. எதுவித ஒளியற்ற இரவுநேரத்தில் ஏதாவது விசஜந்துக்கள் தீண்டக்கூடும்... என அவன் அஞ்சினான். ஏற்கனவே இடம்பெயர்ந்து வந்து, விசுவமடுவில் தங்கியிருந்த ஒரு குடும்பத்தவரை 'கண்டன் கருவேலன்' எனும் கொடிய விசப்பாம்பு படுக்கையில் வைத்துத் தீண்டியதால், மருத்துவ வசதியின்றி அவர் இறந்துபோனது அவனது ஞாபகத்துக்கு வந்தது.

பொழுது மெல்லச் சரிந்து கொள்ளத் தொடங்கியதும்... அவன் மீண்டும் தன் குடும்பத்தோடு புறப்பட்டான். மக்களோடு மக்களாக அவன் பயணத்துக் கொண்டிருக்கையில், ஒரு குறுக்கு ஒழுங்கையூடாக பலர் உள்நுழைவதைக் கண்டான். அந்தப்பாதை எங்கே செல்கிறது? என்பது அதில் பயணப்பட்ட பலருக்குத் தெரியவில்லை. 'எல்லோரும் போகிறார்கள். நாமும் போகிறோம்...' என்ற எண்ணப்பாங்கே அவர்களிடத்தில் மேலோங்கி நின்றது.

'இஞ்சரப்பா... உந்தக் காணிக்குள்ள போய் இருப்பமே? அங்கால மண்டுப்பத்தைகள் இருக்கு. பாத்ரூம், ரொய்லெட்டுக்கும் போகலாம்...' அவள் காட்டிய பக்கம் அவன் பார்த்தான். அந்த வளவினுள் மாமரங்கள், பலாமரங்கள், தென்னைமரங்கள், வேம்புகள்... என நிறைந்து நின்றன. சூரிய ஒளி நிலத்தில் படாதபடிக்கு ஒன்றுக்குள் ஒன்றாக நெருக்கமாக அமைந்திருந்தன. தென்னைமரங்கள் தம் ஓலைகளை விரித்து குளிர்மையைக் கொடுத்தன.

அவன் அந்தக்காணியின் வேலியோரப் படலைத்தட்டியைத் திறந்துகொண்டு, உள்ளே நுழைந்தான். நான்கு ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட நிலப்பரப்பு அது. நல்ல குடிநீர்க்கிணறும் இருந்தது. கிணற்றைச் சுற்றி வாழை, கமுகுகள் வளர்ந்து நின்றன. அதுமட்டுமன்றி, அந்தக்காணிக்குள் மூன்று குடும்பங்கள் வந்து தங்கி இருப்பதை அவன் கண்டான். அவன் தன் குடும்பத்தோடு, காணியுள் உள்நுழைவதைக்கண்ட ஓர் இளைஞனும் யுவதியும் அவர்கள் அருகில் வந்தார்கள்.

'என்ன இதுக்குள்ள இருக்கப் போறியளோ...?' அந்த இளைஞன் கேட்டான்.

ஓமோம்.. '

'தாராளமாய் இருங்கோ. ஆற்ற காணியெண்டு தெரியேல்லை. நல்ல குளிர்மையாக் கிடந்தது. அதுதான் நாங்கள் இதுக்குள்ள வந்தனாங்கள்...' என்று கூறிய அந்த இளைஞன், அவர்களது மிதிவண்டியிலிருந்த பொருள்களை இறக்குவதற்கு உதவி செய்தான். அதுமட்டுமன்றி, தனக்குப் பக்கத்தில் நின்ற யுவதியைப் பார்த்து - ' பாவம்! களைச்சுப்போய் வந்திருக்கினம். எப்பன் தேத்தண்ணி போட்டுக்கொண்டு வந்து குடன்...' யுவதி எதுவித மறுப்பும் கூறாது, முகத்தில் புன்முறுவலை வெளிப்படுத்தியபடி... தனது தரப்பாள் கொட்டிலுக்குள் நுழைந்தாள்

'எங்கயிருந்து வெளிக்கிட்டனிங்கள்.. ?' அந்த இளைஞன் கேட்டான்.

'கிளிநொச்சியில இருந்து...'

'நீங்கள்...?' அந்த இளைஞனை அவன் கேட்டான்.

' நாங்கள் மன்னார்...!' கூறிவிட்டுச் சிரித்தான் இளைஞன்.

'மன்னாரா?' அவன் அந்த இளைஞனின் சிரிப்பை ரசிக்கும் மனநிலையில் இருக்கவில்லை.

இதற்கிடையில் அந்த யுவதி தேநீரோடு வந்தாள். எல்லோரும் ஒன்றாகக் கூடியிருந்து தேநீர் குடித்துக் கொண்டிருந்தார்கள். மிதிவண்டியை உருட்டிக்கொண்டு வந்ததில் உண்டாகிய களைப்பும், பேரப் பிள்ளைகளைச் சுமந்துகொண்டு வந்ததில், ஏற்பட்ட தோள்களின் வலியும் அந்த ஒருமிடறு தேநீரோடும் அவர்களது அன்பான உபசரிப்போடும் காணாமல் போய்விட்டன.

'இப்ப நாங்கள் நிற்கிற இடம் எந்த இடம்?' அவன் அந்த இளைஞனைக் கேட்டான்.

'இது புதுக்குடியிருப்பு -இரணைப் பாலை...'

'நான் பெரிசா இஞ்சாலிப்பக்கம் வந்ததில்லை... '

அவனோடு சேர்ந்து அந்த இளைஞனும் யுவதியும் தரப்பாள் கொட்டில் அமைப்பதற்கு உதவி

செய்துகொடுத்தார்கள்.

'நீங்கள் இதுவரையிலும் ஆரெண்டு எனக்குத் தெரியாது. கூடப்பிறந்த சகோதரன்மாதிரி உதவி செய்து தாறியள். ஏதோ பூர்வீக ஜென்மத்தின் தொடர்பாடலோ தெரியவில்லை...' அவன் கூறியதைக் கேட்டு, அந்த இளைஞனும் யுவதியும் மென்மையாகச் சிரித்துக் கொண்டார்கள்.

'அது சரி... இரவுக்கு என்ன சாப்பாடு...?'

இப்ப இருக்கிற மனநிலையில், வயிறு பசித்தாலும், ஆருக்குச் சாப்பிட மனம் வரும்?' அவன் கூறினான்.

'அதுக்காக... அந்த இரண்டு சின்னனுகளையும் பட்டினிபோட ஏலுமே?'

யுவதி கூறிய அந்தக்கருத்தை அவன் ஏற்றுக்கொண்டான்.

'நீங்கள் ஏதாவது சாமான் சக்கட்டு வாங்கறதெண்டால், பக்கத்தில ஒரு சந்தி இருக்கு. அதில ஒரு பெட்டிக்கடை. அதில எல்லாம் வாங்கலாம். என்ன ! கொஞ்சம்விலை. அவ்வளவுதான்.'

தரப்பாள் கொட்டில் அமைத்தாகி விட்டது. அவன், அவள், பெற்றோர், பிள்ளைகள் அனைவரும் கிணற்றடிக்குச் சென்று நல்லா ஆரச்சோர அள்ளிக் குளித்தார்கள். மூன்றுநாள்களாக தண்ணீரைக் காணாத அவர்களது உடல்கள், இப்போது புத்துணர்ச்சி பெற்று நின்றன. குளிப்பு முடிந்ததும், கடைக்குச் சென்று கோதுமைமாவு, தேயிலை, சீனி... என்பனவற்றை அவன் வாங்கி வந்தான்.

இரவாகி விட்டிருந்தது. அவளும் அவனது தாயாரும் தரப்பாள் கொட்டிலின் வெளிப்புறத்தில், ரொட்டி சுட்டுக் கொண்டிருந்தார்கள். உடலசதியின் நிமித்தம் நேரத்தோடு சாப்பிட்டுவிட்டு, படுக்கைக்குச் சென்றவர்கள் நீண்டநாள்களின்பின், நல்ல உறக்கம் கொண்டார்கள்.

மறுநாள் பொழுது விடிந்தபோது ...

தரப்பாள் கொட்டி லுக்கு வெளியே ஓர் ஆணின் குரல்... கரகரப்பாக ஒலித்துக்கொண்டிருந்தது. அவன் தன் தரப்பாள் கொட்டினுள்ளிருந்து வெளியே வந்தான். எண்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் அங்கு நின்றிருந்தார். நெற்றியிலே திரிபுண்டரங்கள் துலங்கின. கழுத்திலே இரண்டு உருத்திராட்சக் கொட்டைகள் தொங்கின. தலையின் பின்பகுதியில் குரும்பட்டி அளவில் ஒரு நரைத்த குடுமி. அவருக்கு முன்பாக அந்தக் காணிக்குள் தற்காலிகமாவந்து இருந்தவர்கள் அனைவரும் நின்றிருந்தனர்.

'இஞ்சை பாருங்கோ! நீங்கள் இந்தக்காணிக்கை இருக்கிறது பிரச்சினையில்லை. ஆனா, இதுக்குள்ள நிற்கிற மரங்களிலையிருந்து ஒண்டும் எடுக்கப்படாது சரியோ. சொல்லிப்போட்டன். இது எங்கட பரம்பரைச் சொத்து. காணிக்குரியவன் என்ர கடைப்பொடியன். அவன் இப்ப வெளிநாட்டில குடும்பத்தோட இருக்கிறதால, நான்தான் இப்ப இதை மேற்பார்வை செய்ய வேண்டியிருக்கு. நீங்கள் இருக்கிறது சரி... பிறகு நாங்களும் இருந்தனாங்கள் எங்களுக்கும் பங்கிருக்கெண்டு வந்திடப்படாது. பொடியள் விடமாட்டங்கள் எப்படியும் ஆமியளை அடிச்சுக் கலைச்சுப் போடுவாங்கள். பிறகு நீங்கள் உங்கட இருப்பிடங்களுக்குப் போயிடலாம். சரியோ...' கூறிவிட்டு, அவர் அந்தக் காணியை விட்டு வெளியேறினார்.

அங்கு நின்றவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தார்கள்.

'இப்ப உதெல்லாவற்றையும் ஆர் கேட்டது?' கூட்டத்தில் நின்ற ஒருவர் கேட்டார்.

சுமார் நான்குமாதங்களின் பின்பு -

இராணுவம் மாங்குளத்திலிருந்து ஒட்டுசுட்டான் பாதையூடாகவும், ஆனையிறவில் நிலைகொண்டிருந்த இராணுவம் பரந்தனை வந்தடைந்து, முல்லைத்தீவு நோக்கிய பரந்தன் வீதியூடாகவும் புதுக்குடியிருப்பை வந்தடைந்தது. ஒட்டு மொத்தமக்களும் மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞன்மடம் ஆகியபகுதிகளுக்கு நகர்ந்தனர். பின் அப்பால் நகரமுடியாதபடிக்கு முல்லைத்தீவு பெருங்கடல் தடுத்து நின்றதால், கடற்கரையிலேயே தங்கிக் கொண்டனர்.

ஒருநாள் அவனும் அந்த இளைஞனும் எதிர்பாராத விதமாக வலையன்மடம் எனும் இடத்தில் சந்திக்க வேண்டி வந்தது. அப்போது, அந்த இளைஞன் சொன்ன ஒரு தகவல் அவனை ஆச்சரியப்பட வைத்தது.

'இரணைப்பாலையில நாங்கள் இருக்கேக்கை ஒரு குடுமிகட்டின ஐயாவந்து, இது என்ர காணி. இதுக்குள்ள இருக்கிற வரும்படியள் ஒண்டும் எடுக்கப்படாது. பொடியள் விடமாட்டாங்கள் ஆமியளை அடிச்சுக் கலைச்சுப்போடுவாங்கள்... எண்டு வீரவசனம் பேசினாரல்லோ! இப்ப அவர் எல்லைத்தையும் விட்டிட்டு ஓடிவந்து எனக்குப்பக்கத்திலதான் தறப்பாள் கொட்டிலுக்கை இருக்கிறார்...'

**'இரணைப்பாலையில நாங்கள் இருக்கேக்கை ஒரு குடுமிகட்டின ஐயாவந்து, இது என்ர காணி. இதுக்குள்ள இருக்கிற வரும்படியள் ஒண்டும் எடுக்கப்படாது. பொடியள் விடமாட்டாங்கள் ஆமியளை அடிச்சுக் கலைச்சுப்போடுவாங்கள்... எண்டு வீரவசனம் பேசினாரல்லோ! இப்ப அவர் எல்லைத்தையும் விட்டிட்டு ஓடிவந்து எனக்குப்பக்கத்திலதான் தறப்பாள் கொட்டிலுக்கை இருக்கிறார்...'**

'காலத்தின் கணக்கு ஒருபோதும் பிசகுவதில்லை...' அவனையறியாமலே முணுமுணுத்தது அவனது வாய். அ




தகவமைக்கப்பட்ட எழுத்துமுறை என்பதனைக் கொண்டு எழுதப்படும் ஆற்றல், எழுத்தின் சுயத்தை ஒருபொழுதும் நிர்ணயிப்பதில்லை.

‘எழுத்தென்பது மலையிலிருந்து வழிந்தோடும் நீரைப் போன்றது’

என்று சொல்லும் பொழுது கூட,

அது தனது உயிர்ப்பினையும் இழந்து விடுகிறது.

அதற்கும் அப்பால், எழுத்திற்கு உயிரும் சதையும் இருக்கிறது என்ற கட்டுக்கதையை நான் ஒருபொழுதிலும் நம்புவதும் இல்லை.

அது

வெறுமனே பிணங்கள் எழுதும் எழுத்துக்களாலேயே

அதிகம் சூழப்பட்டிருப்பதனால்,

இழந்த நம்பிக்கைதானோ தெரியாது.

**எக்ஸ்ட்ரா றிப்போட்**

**கற்சுறா**

# காலம் அறுபது

எமக்கு எழுத்து என்பது எதற்கு? என்னுடைய அடையாளத்தை நிலைகொள்ள வைக்க வேண்டும் என்பதற்காக நான் எழுதுவதில்லை. அவ்வாறே தன்னுடைய அடையாளத்தை நிலைகொள்ள வைக்கவேண்டும் என முனையும் எழுத்துக்களையும் என்னருகில் நான் கொண்டு வருவதில்லை. அவற்றை உள்ளறிந்து புறமொதுக்கிவிட நான் தயங்குவதும் இல்லை.

ஒரு தற்குறியாளன் ஒருவன் ஒரு புரட்சியாளன் போன்றும், ஒரு போர் வீரன் போன்றும் உலாவரமுடிந்த இந்த சமூகத்தில் ஒரு இலக்கியக்காரனும் தன்னை அதே போன்று வடிவமைப்பதில் என்ன சிக்கல் இருந்து விடும்? அந்த உலாவரும் முறை இந்தச் சூழலில் பழக்கப்பட்ட ஒன்றேதான். அதற்காக எந்தச் சிரமமும் அவன் படத்தேவையற்றுப் பொய்விடுகிறது. அதனால் ஒரு இலக்கியக் காரனுக்கும் அது தோதாகிப் போய்விடுகிறது.

ஒரு போர் வீரன், தன்னுடைய அடையாளத்தைக் கொண்டும் தன்னுடைய அதிகாரத்தைக் கொண்டும் நமது சமூகத்தில் எந்த அநீதியையும் செய்து விடமுடியும் என்ற தர்மத்தின்படி, அவை ‘அநீதியேதான்’ என்ற தகமையை இழந்து விடவேண்டியிருந்ததும், அதற்கு ஒரு நீதியைக் கட்டமைக்க முயன்றதும் நாம் பார்த்துக் கடந்த சம்பவங்கள்தான். நம் கண்முன்னே ஒரு புரட்சியாளன் என்பவன் அடையாளப்படுத்தி இருந்த அவனுடைய நீண்டு வளர்ந்த தாடி அவன் கொண்டிருந்த சமூக அநீதிக்கு ஒரு நீதியைக் கொடுத்தபடியே தானிருந்தது. நமது புரட்சியாளர்களும் போர் வீரர்களும் தவறிழைப்பதில்லை என்ற மாயக் கோளை இன்று, நம் இலக்கியப் புதல்வர்களும் அதே தாடி அடையாளத்துடன் நிலை கொள்ளவைக்க முனைகிறார்கள்.

பொய்யையும் பித்தலாட்டத்தையும் எவ்வித கூச்சமுமின்றிச் செய்து கொண்டிருக்கும் ஒரு இலக்கியக்காரன் தன்குறித்த எந்த எதிர்க் கருத்துக்களுக்கும் அவன் பதில் சொல்லத் தேவையேயில்லை என்று தைரியம் கொண்டு திரிவது ஏன் என்றால், புரட்சியாளனாகவும் ஒரு போர்வீரானாகவும் தனக்குள் தன்னை உருவகப்படுத்திக் கொண்டிருக்கும் நிலையன்றி வேறெதுவுமில்லை. பொய்யையும் பித்தலாட்டத்தையும், தொடர்ந்தும் செய்து கொண்டிருப்பதற்கான சிறந்த அடையாளமாக அவன் தன்னுடைய

இலக்கியச்செயற்பாட்டை நினைத்துக் கொள்வதால் மட்டுமே அது தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது.

நமக்கு வாய்த்த கவிஞர்கள் குறித்து நான் பல்வேறு இடங்களில் பேசியிருந்தாலும் அதன் அருவருப்பின் தொடர்ச்சியை இன்னும் பார்த்துக் கொண்டிருக்கத்தான் வேண்டி இருக்கிறது. அண்மையில் தமிழ்நாட்டிலிருந்து வந்த ஒரு இலக்கியவாதியைச் சந்தித்தபொழுது புலம்பெயர்ந்த சூழலிலிருந்து சென்ற ஒரு 'பெருங் கவிஞர்' அங்கே (தமிழ்நாட்டில்) பெண்கவிஞர்களைச் சுற்றிவர வைத்தபடி, பாலியல் கதைகள் குறித்துச் சொல்லிக் கொண்டிருந்த கதையினை அறிய முடிந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில், அதனைச் சகிக்க முடியாது வெளியே வந்து நின்ற பெண் கவிஞரால் கூட அதனை வெளிப்படையாக எங்கும் எழுத முடியாதிருப்பதன் காரணம், நமது கவிஞர்கள், போர் வீரர்களாகவும் புரட்சியாளர்களாகவும் சமூகத்தில் அடையாளம் காட்டியிருப்பது இன்றி வேறு எதுவும் இல்லை. இவர்களிடம் இருக்கும் அதிகாரம் என்பது அச்சப்படவைப்பதாக மற்றவர்கள் எண்ணுவதால் அதனை அவர்கள் சாத்தியமாக்குகிறார்கள். ஒரு பெண்ணுடன் உறவு வைத்து விட்டு, அந்த உறவு எப்படியானது? அதன்போது என்னவெல்லாம் நடந்தது என்று இங்கே கனடா வந்து மது விருந்துகளில் வெளிப்படையாக கூறும் அளவுக்கு அவர்கள் போர் வீரர்களாகவும் புரட்சியாளர்கள் ஆகவும் தம்மை நினைத்தபடி அதிகாரத்துடன் பேசிவிட முடிகிறது. அதனைக் கீழேயிருந்து ஒரு கூட்டம் 'நம் தலைவனைப் பார்' என்ற தோரணையில் ரசித்துவிடவும் முடிகிறது. இதுதான் இன்றைய இலக்கியக் கூட்டம் எட்டியிருக்கும் வளர்ச்சி.

எந்த எதிர்க்கதையாடலுக்கும் விமர்சனங்களுக்கும் நாங்கள் செவிமடுக்கப் போவதில்லை என்ற நிலை தோன்றுவதன் பின்னணியில் இருக்கும் மனநிலை என்பதும் இதுதான்.

சமூகத்தின் இயங்குதிசையை




அடையாளம் காட்ட முனையும் எழுத்துக்களையும் அதன் மீதான விமர்சனங்களோடு எழுதும் எழுத்துக்களையும் எத்தனையோ எழுத்தாளர்கள் எழுதிவந்தாலும் தம்மீதான கருத்து முரண் தோன்றும் போதிலெல்லாம் அதற்கான பதிலை அவர்கள் முன்வைக்கப் பின்தங்கியதில்லை. அரசியற்தளத்திலும் சரி இலக்கியத் தளத்திலும் சரி பல உதாரணங்களைக் காட்டி விட முடியும்.

ஆனால் இன்றுள்ள நமது சாபக்கேடு என்னவென்றால், எழுத்தாளர்கள் என்று தம்மைத் தாமே அடையாளம் காட்ட முனையும் நமது தற்குறி எழுத்தாளர்களுக்கு அது ஒருபொழுதும் வாய்க்கவில்லை. தம் மீதான கேள்விகளுக்குப் பதில் சொல்ல முனைந்தால் தமக்கான இருப்பினைத் தாமே குலைத்துவிடுவோம் என்ற அச்சம் அவர்களுக்கு மேலிட்டு முன்வந்து விடுகிறது. தாம் எழுதும் எழுத்தின் மீது அவர்களுக்கே இருக்கும் நம்பிக்கையற்ற தன்மையை அவர்களால் நன்கு விளங்கிக் கொள்ள முடிந்ததின் விளைவே அது. சமூகத்தில் அடையாளம் காட்ட முனையும் இவர்களது எழுத்துக்களைப் போல் சமூகத்தின் இயங்கு திசை இருப்பதேயில்லை. இருக்கும் வரை தமது பிழைப்புக் கெடாது பார்க்க

வேண்டிய கவனம் மட்டுந்தான் அவர்களுடைய அதிகூடிய செயற்பாடாக இருக்கிறது. இங்கே 'எழுத்தென்பது மலையிலிருந்து வழிந்தோடும் நீரைப் போன்றது' என்ற அந்தப் பெரும் பொய்யிற்குக் கூட அவர்கள் பெறுமதியற்றதாகி நிற்க வேண்டியிருக்கிறது.

இலக்கியம் என்பதும் அதற்கூடான எழுத்து என்பதும் எதற்காக என்று நாம் உணரும் பட்சத்தில் மிகத் திறந்த மனதோடு வெளிப்படையாக உரையாடலைத் தொடங்குவோம். ஆனால் உரையாடல் என்பது கூட இங்கே 'ஒரு வழிப்பாதை' தான். தன்னைப்பற்றி எழுதப்படும் எந்த முரண் கருத்துக்களுக்கும் பதிலேயற்று மற்றவர்களுக்குக் கருத்துச் சொல்லும் 'பயில்வான்கள்' நிறை உலகு இது. இது தன்மீதான விமர்சனங்களைப் பதிலேதுமற்றுக் கடந்து நின்று வேறு விடயங்களின் மீது உரையாடலைக் கோரி நிற்கும். சமூகத்தில் நிலவும் அத்தனை விடயங்களுக்கும் கட்டாயம் தான் கருத்துச் சொல்லவேண்டும் என்று கட்டியம் கட்டி நிற்கும் இந்தத் தற்குறிகள், தங்கள் மீதான கருத்துக்களுக்கு ஒருபொழுதிலும் பதில் சொல்லத் துணிவதேயில்லை. தங்களுடைய பொய்மையான சமூக இருப்பினைக் கட்டாயம் குலைத்து விடும் என்று நன்றாக அவர்களுக்குத் தெரிவதால் மட்டுமே அந்தத் துணிவு அவர்களுக்கு வருவதில்லை.

சரி நான் இனி நேரடியாக விடயத்திற்கு வருகிறேன். மேலே சொன்னவற்றின் அடிப்படையில் கனடாவிலிருந்து வெளிவரும் 'காலம்' இதழின் வெளியீடு குறித்த அறிவிப்பினைக் கவனித்த பொழுது, எனக்குத் தோன்றியதெல்லாம், அந்த நிகழ்விலாவது இதுவரையான தன்மீதான விமர்சனத்திற்கு 'காலம்' இதழ்சார்ந்து பதில் கிடைக்குமா என்பதுதான். 50ஆவது காலம் இதழ் வெளியீட்டு நிகழ்விற்குச் சென்ற போதும் இதனைத்தான் நான் எதிர்பார்த்துச் சென்றேன். அங்கே 50 இதழ்கள் குறித்த ஒரு பரவலான தேடல் இருக்கும் என்பது எனது எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால் அங்கே பேசியதெல்லாம்

எனது மனைவி இல்லாவிட்டால் நூறு புத்தகங்களைக் கொண்டு வந்திருப்பேன் என்றும் வீட்டுக்கு வீடு ராஜலச்சுமிக்கள்தான் என்றவாறாகவும் பேசிய விடயங்கள் அருவருப்பினை உண்டாக்கியவை.

அதுபோன்று இந்த 60வது வெளியீட்டையும் நடத்திப்போக முனையாது, குறைந்த பட்சம் அருண்மொழிவர்மன் அவர்களது எழுத்தைப் போன்ற ஒரு தரவு உரையாடல்களையாவது முன்வையுங்கள். இதுவரையான காலம் இதழில் வெளிவந்த கட்டுரைகள் கதைகள் கவிதைகளின் போக்கு என்பது எதுவாக இருந்தன என்று பேசும் ஒரு வெளி இன்னும் இடைவெளியாகவே இருக்கின்றது. அதற்கான ஒரு இடமாகவாவது அதனை உருவாக்கிவிடுங்களேன். காலம் இதழினை நான் ஒருபொழுதிலும் தேவையற்றது என்று சொல்லவில்லை. அதன் கரிசனை எது என்பதுதான் எனது கேள்வி.

## புதிய சொல்

மிக நிதானமாக நீங்கள் கவனித்தீர்களென்றால், காலம் இதழ் குறித்த அருண்மொழிவர்மனது கட்டுரையோ அல்லது தற்பொழுது எழுதிய மா.சின்னத்தம்பினது கட்டுரையோ 30 ஆண்டு கால காலம் இதழினது இயங்கு திசையை விமர்சனமாகப் பார்த்தவையல்ல. அருண்மொழிவர்மன் அவர்கள் ஒரு விக்கிபீடியா போன்று தகவல்களை அட்டவணைப்படுத்தக் கூடியவர் என்பதற்கு அப்பால் ஒரு கருத்து நிலையைக் கோரிநின்று பேசிவிடத் தயங்குபவரே. எல்லோருக்கும் ஒரு நல்லபிள்ளையாக இலக்கியத்தை அணுக விரும்புபவர். இயல்பிலேயே நல்லமனதுடையவர். அன்பானவர் என்பதற்கு இணைய நமது இலக்கியத்தை அணுகுபவர். அவருடைய எழுத்துக்கள் அதிகம் தரவுகள் சார்ந்தவையே. நாம் கடந்து வந்த சமூக இயங்கு திசையினை கேள்விகளால் அணுகமுடியாதவர் அவர்.





உண்மையில் இன்று 'புதிய சொல்' செயற்பாட்டாளர்கள் குறித்து சமூகத்தில் முன்வைக்கப்படும் கேள்விகளுக்கு ஒரு இடத்திலாவது அருண்மொழிவர்மன் அவர்களுக்கு பதில் சொல்லத் தோன்றியிருக்க வேண்டும். புதியசொல் இதழின் முக்கிய செயற்பாட்டாளர் அவர். அது குறித்த பொறுப்புக் கூறலின் கவனம் ஏன் அவரிடம் மவுனமாக இருக்கிறது? தான் சேர்ந்திருந்து இயங்கிய ஒரு செயற்பாடு குறித்துக் கேள்வியெழும் போது அவர் வெளிப்படையாகத்தனதுகருத்தினை முன்வைத்திருக்க வேண்டும். அதுதான் அவர் சேர்ந்தியங்கிய அந்தச் செயற்பாட்டின் மீதான உண்மை வடிவம். ஆனால் அது குறித்து அவர் மவுனம் காப்பது அவருக்கும் நல்லதல்ல. அவர் செயற்பட்ட விதைக்குழுமம், புதியசொல் மற்றும் தொன்ம யாத்திரைச் செயற்பாட்டுக் காலத்திற்கும் நல்லதல்ல.

> அந்த நேரமெல்லாம் 'இவர்கள் எந்தப் பிரியோசனமும் அற்றவர்கள். தற்குறிகள். கிரிசாந் போன்ற அரைகுறைகளை நாங்களே வளர்த்து விடுகிறோம். என்று இவர்களை அறிந்த பலர் யாழ்பகுதியிலிருந்து என்னுடன் முரண்பட்டார்கள். கோபமுற்றார்கள். அந்த முரண் பாடுகளும் கோபங்களும் உண்மையாகிப் போயிருக்கின்றன இப்போது. இன்று கூட இதனை உரையாடலாக நகர்த்திச் சென்று சரி தவறு பேசமுடியாதபடிதான் இருக்கிறது. இங்கே உரையாடலுக்கு வழியில்லை.

புதியசொல் இதழ் வெளிவந்த காலத்தில் கிட்டத்தட்ட ஏழு இதழ்களில் நான் எழுதியிருக்கிறேன். யுத்தம் முடிவடைந்த பின்னால் ஈழத்திலிருந்து வெளிவரத்தொடங்கிய இளைய தலைமுறையினரின் ஒரு இலக்கியச்செயற்பாடு என்ற நோக்கும் அதன்மீதான கரிகசனையுமே எனக்கிருந்தது. பாரீசில் சபாலிங்கம் கொலையுடன் அச்சத்தில் மூழ்கியிருந்த இலக்கியச் சூழல் மெல்லத் துளிர்த்து மேலெழுந்த போது எவ்வாறு சேர்ந்து செயற்படமுனைந்தோமோ அவ்வாறான ஒரு எண்ணத்துடன் ஈழத்தில் யுத்தம் முடிந்த பின்னால் எழுந்த இளைய தலை முறையினருடன் இணைந்த இணைவே அது.

அந்த நேரமெல்லாம் ' இவர்கள் எந்தப் பிரியோசனமும் அற்றவர்கள். தற்குறிகள். கிரிசாந் போன்ற அரைகுறைகளை நாங்களே வளர்த்து விடுகிறோம். என்று இவர்களை அறிந்த பலர் யாழ்பகுதியிலிருந்து என்னுடன் முரண்பட்டார்கள். கோபமுற்றார்கள். அந்த முரண் பாடுகளும் கோபங்களும் உண்மையாகிப் போயிருக்கின்றன இப்போது.

இன்று கூட இதனை உரையாடலாக நகர்த்திச் சென்று சரி தவறு பேசமுடியாதபடிதான் இருக்கிறது. இங்கே உரையாடலுக்கு வழியில்லை. அருண்மொழிவர்மனால் இதுபோன்று உரையாடலுக்குள் நுழையவே முடியாது. வெறுமனே ஒரு 'விக்கி' பீடியாத் தகவலுடன் நகர்ந்து செல்ல முற்படுபவர் அவர். அவர் நல்லதொரு மனிதர் . ஆனால் பாவம். தன் பற்றிய முரண்பாடுகளை வெளிப்படையாகவே மறந்து போகக்

> இலக்கியவாதிகள் என்று தம்மை அடையாளம் காட்டுபவர்கள் ஏன் இவ்வாறெல்லாம் நடந்து கொள்கிறார்கள். இந்தமாதிரியான பொய் அடையாளங்களுடன் ஏன் அவர்கள் வாழ முற்பட முனைகிறார்கள்? இலக்கியச் செயற்பாட்டில் அவர்களது கனவு ஒன்று என்னவாக இருக்கிறது? என்று கணக்கிட முற்பட்டால், அதற்குமுன் அந்தக் கனவை அடைய நாடும் குறுக்குவழிகளே இவ்வகையான செயற்பாடுகளாக இருந்து விடுகிறது என்பது தெளிவாகத் தெரியும்.
>
> தங்களது எழுத்து மீதான நம்பிக்கையற்ற; தங்களது கருத்துநிலை மீது நம்பிக்கையற்ற தன்மையில் அந்தக் கனவை அடைய அவர்கள் தேர்ந்தெடுக்கும் வழிமுறையில் பல்வேறு பித்தலாட்டங்கள் நடந்தேறிவிடுகிறது. இதற்கு சலாம் போட அதே போன்ற தற்குறிகளும் அவர்களுக்கு இலகுவாகக் கிடைத்துவிடுகிறார்கள்.

கூடிய மனநிலை கொண்டவர்.

அதனால்தான் அவருடைய காலம் பத்திரிகை மீதான கவனம் வெறுமனே அவர் 'விக்கி' பீடியாவைப் பார்ப்பது போன்ற தகவல் அறிக்கை மாதிரி வந்து நிற்கிறது. அதனால் இந்த சமூகத்திற்குப் புதிதாக எதையும் கற்றுக் கொள்ள முடியாது போகிறது. காலம் இதழினை வரிசையாக வாசித்துப் பார்ப்பவர் புரிந்து கொள்ளக் கூடிய விடயத்தை ஒரு கட்டுரையாக எழுத அருண்மொழிவர்மன் என்ற எழுத்தாளர் எதற்கு? எந்தத் தேவையுமில்லை.

ஆனால் காலம் பற்றி எழுதியிருந்த மா. சின்னத்தம்பியினது கட்டுரை அப்படியானதல்ல. அது ஒரு இலக்கிய அசிங்கம். கரகாட்டக்காரன் திரைப்படத்தின் கவுண்டமணி செந்தில் நகைச்சுவையை நினைவுக்குக் கொண்டுவரும் எழுத்துமுறை அது. ஒரு முட்டாள் பேராசிரியரின் அறிவு கெட்ட தனத்தை அடையாளம் கண்டு திட்டமிட்டு எழுத வைக்கப்பட்ட கட்டுரை. காலம் செல்வம் அவர்கள் தனக்குத்தானே வைத்த சூனியம் அது. இதே போன்ற இன்னொன்றுதான் கலாநிதிப் பட்டத்தின் மீது ஆசை வைத்திருந்த 'வெட்டிவேலு' என்ற ஒருவரை அடையாளம் கண்டு அவருக்குக் கலாநிதிபட்டம் பெற்றுக் கொடுப்பதற்காக, காலம் இதழ் குறித்து ஆய்வு செய்ய வழிகோலிய கதை ஒன்று இருக்கிறது. அதற்கு ஒழுங்கு செய்தவர்கள் சேரனும் காலம் செல்வம் அவர்களுமாகத்தான் இருக்கிறார்கள். அந்தக் கலாநிதி ஆய்வுக் கட்டுரையைப் பார்ப்பதற்காக நீண்ட நாட்களாகக் காத்திருக்கிறேன். அது இன்னமும் என்கையில் கிடைக்கவில்லை. அதனை வாசித்தபின்புதான் அதுபற்றி மேலும் எழுத முடியும்.

இலக்கியவாதிகள் என்று தம்மை அடையாளம் காட்டுபவர்கள் ஏன் இவ்வாறெல்லாம் நடந்து கொள்கிறார்கள். இந்தமாதிரியான பொய் அடையாளங்களுடன் ஏன் அவர்கள் வாழ முற்பட முனைகிறார்கள்? இலக்கியச் செயற்பாட்டில் அவர்களது கனவு ஒன்று என்னவாக இருக்கிறது? என்று கணக்கிட முற்பட்டால், அதற்குமுன் அந்தக் கனவை அடைய நாடும் குறுக்குவழிகளே இவ்வகையான செயற்பாடுகளாக இருந்து விடுகிறது என்பது தெளிவாகத் தெரியும்.

தங்களது எழுத்து மீதான நம்பிக்கையற்ற- தங்களது கருத்துநிலை மீது நம்பிக்கையற்ற தன்மையில் அந்தக் கனவை அடைய அவர்கள் தேர்ந்தெடுக்கும் வழிமுறையில் பல்வேறு பித்தலாட்டங்கள் நடந்தேறிவிடுகிறது. இதற்கு சலாம் போட அதே போன்ற தற்குறிகளும் அவர்களுக்கு இலகுவாகக் கிடைத்துவிடுகிறார்கள். இதுகுறித்துத்தான் நாம் தொடர்ந்தும் விபரமாகப் பேசவேண்டும். இன்று தனியே பணத்தின் மீதான குறியோடு மட்டும் செயற்படும் பதிப்பகங்களுக்கு தற்குறி எழுத்தாளர்கள் தேவைப்பட்டபடியே இருக்கிறார்கள். இவர்கள் எழுதும் எழுத்துக்கள் மீது ஒரு விக்கிபீடியாத் தரவுகளைப் போல் யாராவது ஒருவர் அடையாளம் காட்டி எழுதுவதைத் தவிர, தீர்க்கமான எந்த உரையாடலையும் யாரும் முன்வைப்பதில்லை. அவ்வாறு எங்கேனும் சிலர் உரையாடத் தொடங்கினால் அதற்குரிய பதிலை முன்வைத்து எந்த எழுத்தாளர்களும் உரையாடலைத் தொடர விரும்புவதுமில்லை. அவர்களைப் பொறுத்தளவில் ஆசிரியன் செத்துவிட்டான் நினைப்புத்தான். மாறாக மா.சின்னத்தம்பி அவர்கள் எழுதிய முட்டாள் கட்டுரைகளைக் கண்டவுடன் எப்படியோ அந்த ஆசிரியன் விழிப்பில் இருந்து விடுகிறான். இந்த மயக்க நிலையைத்தான் நான் தகர்த்தெறிய நினைக்கிறேன். இந்த மாய நிலையைத்தான் இங்கிருந்து அகற்ற வேண்டும் என்கிறேன். அதற்காக அபத்தம் இன்னும் சொற்ப காலம் தொடர்ந்தும் வரவேண்டும் என்று விருப்புக் கொள்கிறேன்.

# 52 வது இலக்கியச் சந்திப்பு.

51வது புகலிட இலக்கியச் சந்திப்பு பாரிசில் நடைபெற இருக்கிறது. இந்த இலக்கியச் சந்திப்புக்குழுவிற்கு ஒரு முக்கிய பொறுப்பு ஒன்று இருப்பதாகவே நான் எண்ணுகிறேன். இந்த இலக்கியச் சந்திப்பினை நடத்துபவர்களில், அதில் பங்கேற்று உரையாற்ற இருப்பவர்களில் முக்கியமானவர்கள் பல்வேறு சமூகச் செயற்பாட்டு முறைமைகளில் தொடர்ந்தும் செயற்பட்டுக் கொண்டிருப்பவர்கள். தனியே கதை எழுதுபவர்கள் கவிதை எழுதுபவர்கள் என்ற அடையாளங்களை விடவும் சமூக மாற்றத்திற்கான செயற்திறன் கொண்டு செயற்படுவதாக இருப்பவர்கள். இவர்களை நோக்கியே எனது கேள்வியை நான் முன்வைக்கிறேன்.

கடந்தகால இலக்கியச்

சந்திப்பின் நடைமுறையில் அல்லது அதன் செயற்பாட்டு வடிவத்தில் எங்களுக்கான பொறுப்புக் கூறல் என்பது என்ன? நாங்கள் எல்லோரும் பங்குபற்றிய இலக்கியச் சந்திப்பின் அனுபவங்கள் இன்றைய 51வது இலக்கியச் சந்திப்பின் மண்டபத்திற்குள் என்னவாக இருக்கின்றது? கடந்த யுத்தகாலத்தில் இலக்கியச் சந்திப்பின் முக்கியத்துவம், யுத்த முடிவுக்காலத்தில் அதன் முக்கியத்துவம், இன்று அதன் நிலை இவை குறித்தெல்லாம் நாம் ஒரு உரையாடலாகத்தன்னும் பேச வேண்டாமா?

இலக்கியச் சந்திப்பினைத் தொடங்கியவர்கள் யார்? அதனோடு பின்னர் இணைந்தவர்கள் யார்? அதனுடன் முரண்பட்டவர்கள் யார்? இணைந்தவர்கள் ஏன் இடை நின்றார்கள்? ஏன் மவுனமானார்கள்? தொடங்கியவர்களே இந்த இலக்கியச் சந்திப்பு என்ற அடையாளத்தை ஏன் தங்களோடு இன்று இணைப்பதில்லை? இடையிடையே பிரிந்து போனவர்கள் யார்? எதற்காக அது நடந்தது? யுத்த முடிவின் பின் இலங்கைக்கு எடுத்துப் போன சிக்கல் என்ன? அதன்போது என்ன உரையாடல் நடந்தது? யார் யார் விலகினார்கள் எதற்காக விலகினார்கள்? இதுவரையான இலக்கியச் சந்திப்பின் பலம் என்ன பலவீனம் என்ன? என்றெல்லாம் 50வது இலக்கியச் சந்திப்பு கவனம் குவித்திருக்க வேண்டும்.

50வது இலக்கியச் சந்திப்பு பல்வேறு தரப்பினரின் ஒரு கூட்டு வேலைத் திட்டமாக நடந்திருக்க வேண்டும். அதற்கான முயற்சியோடுதான் நான் அதனை நான் ஆதரித்து நின்றேன். உண்மையில் நோர்வேயில் நடத்துவதற்காக கிளிநொச்சி இலக்கியச் சந்திப்புக் குழுவுடன் அதிகம் சண்டை செய்தவன் நான். கிளிநொச்சியிலும் அவ்வப்போது வழமையாக நடைபெறும் ஒரு உள்ளக ஒழுங்கு நடைபெற்றதாகவே நான் உணர்ந்தேன். அதனால் 50வது இலக்கியச் சந்திப்பினை நோர்வேயிற்கு எடுக்க வேண்டும் என்பதில் அக்கறை செய்தேன்.

அதன்பின்னர் நோர்வேயில் ஒரு குழு அமைக்க வேண்டும் என்றும் நோர்வேயில் செயற்படும் தமயந்தி பானுபாரதி போன்றோருடன் அதிகம் பேசியிருக்கிறேன். கிட்டத்தட்ட இலக்கியச் சந்திப்பிற்கான மண்டபம் ஒழுங்கு செய்வது வரை அது வந்தது. அவர்களுடன் மேலே சொன்ன அத்தனை விடயங்களையும் பேசியிருக்கிறேன். 50வது இலக்கியச் சந்திப்பில் இலக்கியச் சந்திப்பிலிருந்து விலகியிருக்கும் பலரை உள்வாங்க வேண்டும். உரையாடலைத் தொடரவேண்டும் என்பது ஒரு கட்டாயமாக இருந்தது. அது இன்றுங்கூடத் தேவையானது. ஆனால் 50வது இலக்கியச் சந்திப்பு நடைபெற்ற விதம் இலக்கியச் சந்திப்பின் இயங்கு திசைக்கு முற்றிலும் முரணானது. தற்குறித்தனமானது. இதனை 51வது இலக்கியச்சந்திப்புக் குழுவான நீங்களும் ஏற்கனவே உணர்ந்த விடயந்தான்.

50வது இலக்கியச் சந்திப்பு நடத்தப்பட்ட விடயம் சார்ந்து ஒரு பொறுப்புக் கூறல் அதில் சம்பந்தப்பட்ட- மற்றும் சம்பந்தப்படாத பல்வேறு தரப்பினருக்கு உண்டு என்றே நினைக்கிறேன். அதன்படி அந்தப் பொறுப்புக் கூறலின் முழுக் கைப்படிவமும் 51வது இலக்கியச் சந்திப்புக் குழுவினருக்கே சேரும். தங்களது தற்குறி மனநிலை தாண்டிக் கடந்த கால இலக்கியச் சந்திப்புக்களது உள்ளும் புறமுமானஅசைவியக்கம் சார்ந்து ஒரு நீண்ட - வெளிப்படையான உரையாடலை அது நிகழ்த்த முன்வரவேண்டும். இதற்காக நீங்கள் பாதி நாளினை ஒதுக்கினாற் கூடப் பரவாயில்லை.

பேர்லின் இலக்கியச் சந்திப்பு இரண்டு நாளாக 'எக்ஸில் பிளவு' பிரச்சனையில் கிடந்து உழன்றதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆக, நீங்கள் தற்குறி மனநிலையிலிருந்து முதலில் வெளிவரவேண்யவர்கள் ஆக இருக்கிறீர்கள். இதனைக் கொஞ்சம் கரிசனையோடு கவனியுங்கள். இல்லையேல் 50வது இலக்கியச் சந்திப்பு நடத்தப்பட்ட விதத்திலிருந்து இன்னும் ஒருபடிமேல் போய் இதுவரையான அத்தனை செயற்பாடுகளையும் அழித்துவிட சண்டித்தனத்துடன் இன்னொருவர் வரக்கூடும். அதற்கு நீங்களே வழிசெய்வதாக அமையும்.

இதுவரை எத்தனை இலக்கியச்சந்திப்புக்களில் 'பாரீஸ் குறூப்' என்று பலர் அடையாளம் காட்டுவதுபோல் முரண்பாடுகளை நாங்கள் முன்நிறுத்திப் பேசியிருப்போம். மறந்திருக்க மாட்டீர்கள் என்றே நினைக்கிறேன். ஆனால் இன்று நீங்கள் அனைத்தையும் மறந்ததுபோல் நடித்து மறக்க முனைகிறீர்கள். அதனையும் ஒரு தற்குறியாளனுக்கு இருக்கும் மனநிலையாகவே பார்க்க வேண்டியிருக்கிறது. இருந்தாலும் 51வது இலக்கியச் சந்திப்பில் நீங்கள் இதுகுறித்து உரையாடவே போவதில்லை என்றுமட்டும் உணர்ந்து கொள்ள முடிகிறது. உங்கள் நிகழ்ச்சி நிரலைப் பார்க்கும் போது அதனை நான் உணருகிறேன். அதனால்த்தான் 52வது இலக்கியச் சந்திப்பினை எடுப்பவர்களை நோக்கிக் கேட்கிறேன் நீங்களாவது மானத்துடன் உரையாடுங்கள்.

கடந்தகால இலக்கியச் சந்திப்பின் வரைபு ஒரு வரலாறு. அது தற்குறிகளின் கைகளில் இருக்க முடியாது. 51வது இலக்கியச் சந்திப்பின் நிகழ்ச்சி நிரலினைக் கவனிக்கும் போது அதன்நிலை வெளிப்படையாகத் தெரிகிறது.

52 வது இலக்கியச் சந்திப்பினைக் கோரி அதனை நடத்துபவர்களிடம் நான் வெளிப்படையாகக் கேட்கிறேன். இலக்கியச்சந்திப்பு என்பதற்கு ஒரு பொறுப்புக்கூறல் வேண்டியிருக்கிறது. அதனை நீங்களாவது முன்வைக்கத் தொடங்குங்கள். அ

பேர்லின் இலக்கியச் சந்திப்பு இரண்டு நாளாக 'எக்ஸில் பிளவு' பிரச்சனையில் கிடந்து உழன்றதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆக, நீங்கள் தற்குறி மனநிலையிலிருந்து முதலில் வெளிவரவேண்யவர்கள் ஆக இருக்கிறீர்கள். இதனைக் கொஞ்சம் கரிசனையோடு கவனியுங்கள்.



**மட்டக்களப்புத் தமிழகம் என்னும் நாமம்:**
**வரலாற்று தேடல்கள் 14**

# கிழக்குப் பிளவின் இருபதாண்டு நினைவுகள்

## *2004-2024*

**எம்.ஆர்.ஸ்டாலின் ஞானம்**

அன்றொருகாலம் தமிழீழ விடுதலைப் புலிகள் யாராலும் 'அசைக்க முடியாத' சக்திகளாய் இருந்தனர். 1976ம் ஆண்டு மே மாதம் 5 ஆம் திகதி உருவாக்கப்பட்ட புலிகள் அமைப்பின் தலைவரான 'திருவேங்கடம் வேலுப்பிள்ளை பிரபாகரன்' எவராலும் வெல்லப்பட முடியாத 'அமானுஷ' சக்தி படைத்தவர் என்கின்ற ஒளிவட்டங்களின் சொந்தக்காரராய் இருந்தார். இந்தப் புலிகள் அமைப்பு உருவாகியதிலிருந்து 2004ஆம் ஆண்டு வரையான 27 வருடகால வரலாற்றில் அது கடந்து வந்த சவால்களும், நெருக்கடிகளும் எண்ணற்றவை. ஆனாலும் அவையனைத்தையும்

*தமது மூர்க்கத்தனமான இராணுவ பலத்தின் மூலம் வெற்றிகொண்டு நின்றவர்கள்தான் புலிகள். ஆனால் 2004ம் ஆண்டில் புலிகள் அமைப்பும் அதன் தலைவர் பிரபாகரனும் எதிர்கொள்ள நேர்ந்த ‘கிழக்கு பிளவு’ அவர்களுக்கு வரலாறு காணாத சவாலொன்றை விடுத்தது. அதனை அவர்கள் வெற்றிகொண்டு தாண்டிச் செல்ல முடியவில்லை. காரணம் அது இராணுவ ரீதியாக மட்டுமன்றி அரசியல் கோட்பாட்டு ரீதியான சவாலாகவும் எழுந்து நின்றது.*

*புலிகள் அமைப்பில் 20 வருடகால அனுபவம் மிக்க மூத்த தளபதிகளில் ஒருவராகவும் மட். அம்பாறை மாவட்டங்களுக்கான விசேட தளபதியாகவும் இருந்தவர் கேர்ணல் கருணா என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளீதரன் ஆகும். அவர் தலைமையில் 2004ஆம் ஆண்டில் புலிகளுக்குள் இருந்து வெளிக்கிளம்பிய நெருக்கடியேஅந்தக் கிழக்குப் பிளவுக்கு காரணமாயிற்று. வரலாற்றையே புரட்டிபோடும் வல்லமை கொண்டிருந்த அப்பிளவின் பின்னால் பல்வேறுவிதமான அரசியல்,சமூக,வரலாற்று மற்றும் பொருளாதார காரணிகள் இருந்தன.*

*குறிப்பாக ஈழத்தமிழரிடையே அதாவது வடக்கு, கிழக்கு அரசியல் வரலாற்றில் நீண்ட காலமாக கோலோச்சி வந்த யாழ்-மேலாதிக்க கருத்து நிலையே அதன் அடிப்படையாகும். இத்தகைய யாழ் மேலாதிக்க மனநிலையில் இருந்து புலிகள் அமைப்பாலும் வெளிவர முடியவில்லை. இம்மேலாதிக்க கருத்தியலானது புலிகள் அமைப்புக்குள்ளும் மெல்ல மெல்ல வியாபிக்கத் தொடங்கியது. அப்போதிருந்தேபுலிகளுக்குள் இந்தக் கிழக்கு பிளவுக்கான ‘கரு’ கட்டத் தொடங்கி விட்டிருந்தது எனலாம்.*

*இறுதியாக 2002ம் ஆண்டு உருவாக்கப்பட்ட சமாதான ஒப்பந்தத்தைத் தொடர்ந்து புலிகள் உருவாக்கிய நிர்வாக கட்டமைப்பினுடைய 32 துறைசார் செயலாளர்களாகவும் வடக்கு மாகாணத்தையே சேர்ந்தவர்களே நியமிக்கப்பட்டனர். இத்தகைய எதேச்சயதிகார முடிவுகள் யாழ்-மேலாதிக்க கருத்தியலின் பிரதிநிதிகளாகவே தமிழீழ விடுதலைப் புலிகளும் இருப்பதை பட்டவர்த்தனமாக வெளிக்காட்டியது.*

## வடக்குப் போர் முனைகள்

*நீண்டகாலமாக இடம்பெற்றுவந்த தொடர்ச்சியான யுத்தம் காரணமாக வடக்கு மாகாணத்திலிருந்த பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் ஐரோப்பிய நாடுகளை நோக்கி புலம் பெயர்ந்தமை காரணமாக புலிகளின் ‘ஆட்சேர்ப்பு’ என்பது 1990ஆம் ஆண்டின் பின்னர் கிழக்கு மாகாணப் போராளிகளையே நம்பியிருக்க வேண்டிய நிலைக்கு உள்ளானது.*

*இவ்வாறாக ‘தமிழ்’ மண்ணைக்காக்க கிழக்கிலிருந்து சென்று வடக்கு போர் நிலைகளில் களமாடிய 4000 போராளிகளின் உடலங்கள் வடக்கு மண்ணிலேயே புதைக்கப்பட்டன. ஆனால் போராட்டக்களத்திலும் பொது இடங்களிலும் வடக்கு மண்ணின் சாதிய மனோநிலை காரணமாக கிழக்குப் போராளிகள் பராபட்சத்துக்கு உள்ளாக்கப்பட்டு வந்தமை தொடர்ந்தது. யுத்த முன்னரங்குகளில் பலியிடப்படுவதற்காக கிழக்கு போராளிகளே அதிகளவில் நிறுத்தப்பட்டார்கள். மறுபுறம் ஜெயந்தன் படையணி போன்ற கிழக்கு வீரர்களின் யுத்த வெற்றிகளுக்கு உரிய கௌரவத்தை வழங்குவதில் வடக்குத்தளபதிகளும் ஒரவஞ்சனை காட்டிவந்தனர்.*

**போராட்டக்களத்திலும் பொது இடங்களிலும் வடக்கு மண்ணின் சாதிய மனோநிலை காரணமாக கிழக்குப் போராளிகள் பராபட்சத்துக்கு உள்ளாக்கப்பட்டு வந்தமை தொடர்ந்தது. யுத்த முன்னரங்குகளில் பலியிடப்படுவதற்காக கிழக்கு போராளிகளே அதிகளவில் நிறுத்தப்பட்டார்கள். மறுபுறம் ஜெயந்தன் படையணி போன்ற கிழக்கு வீரர்களின் யுத்த வெற்றிகளுக்கு உரிய கௌரவத்தை வழங்குவதில் வடக்குத்தளபதிகளும் ஒரவஞ்சனை காட்டிவந்தனர்.**

*1997 ஆம் ஆண்டில் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் குறிவைத்து மிகப்பெரிய தாக்குதலொன்றை ஜெயசிக்குறு என்னும் பெயரில் இலங்கை இராணுவம் முன்னெடுத்தது. அத்தாக்குதலை முறியடிப்பதில் புலிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள நேர்ந்தது. அந்த யுத்தமானது மாதக்கணக்காக தொடர்ந்தது. அப்போதுதான் கிழக்கிலிருந்து ஆயிரக்கணக்கான போராளிகளுடன் வந்த கருணாம்மான் அந்த யுத்தத்தின் புதிய கட்டளைத்தளபதியாக பொறுப்பேற்கின்றார். உக்கிரமான அந்த யுத்தம் கிழக்குப் போராளிகளின் அபரீதமான இழப்புகளின் பலனாக வெற்றி கொள்ளப்படுகின்றது. அது மட்டுமன்றி கெரில்லா யுத்த பாணியிலிருந்து விலகி மரபார்ந்த நேரடிச்சமர் புரியவல்லமை கொண்டவர்கள் புலிகள் என்னும் செய்தியை உலகுக்குச் சொல்லியது அவ்வெற்றியேயாகும். அன்றிலிருந்து கருணாம்மான் மீதான காழ்ப்புகளும் அவருக்கெதிராக குழிபறிப்புகளும் புலிகளின் வடக்கைச்சேர்ந்த மூத்த தளபதிகளுக்குள் உருவாகத் தொடங்கின.*

*அதனைத் தொடர்ந்து வந்த காலங்களில் இடம்பெற்ற ஆனையிறவு மீட்பு யுத்தத்திலும் வெற்றியின் நாயகர்களாக இருந்தவர்கள் கருணாம்மான் தலைமையிலான ஜெயந்தன் படையணியினரேயாகும். ஜெயந்தன் படையணியின் தளபதிகளில் ஒருவரான றோபட் தலைமையிலான போராளிகளே ஆனையிறவு முகாமின் இறுதி வெற்றியை அறிவித்தனர். ஆனால் அவர்கள் சார்பாக ஆனையிறவு முகாமில் வெற்றிக்கொடியை ஏற்றும் ‘கௌரவம்’ கருணாம்மானுக்கு வழங்கப்படவில்லை. இது கிழக்குப்*

போராளிகளிடையே பாரிய விரக்தியையும் கோபக்கனலையும் உருவாக்கிய வரலாற்றுச் சம்பவமாகும். புலிகளின் பிரச்சர வெளியீடான நிதர்சனம் போன்ற வீடியோக்களில் கிழக்குப் போராளிகளின் வெற்றிச்சமர்கள் குறுக்கப்பட்டும் தணிக்கைக்கு உள்ளாகியும் வெளியிடப்பட்டன. களமுனையில் முக்கிய பாத்திரம் வகிக்கும் கிழக்குத் தளபதிகளின் குரல்களுக்கு மாற்றாக வடக்குத்தளபதிகளின் வீர பிரதாபங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டன. இவற்றை எல்லாம் பெரிதுபடுத்த வேண்டாம் என்று கிழக்குப் போராளிகளுக்கு கருணாம்மான் போன்றவர்கள் வருடக்கணக்காக சமாதானம் சொல்லிக்கொண்டே வந்தனர்.

ஆரம்ப காலங்களில் தங்கள் மீது காட்டப்பட்டுவந்த இத்தகைய மாற்றான்தாய் மனப்பான்மைகளை கிழக்குப் போராளிகள் மௌனமாகவே கடந்து வந்துகொண்டிருந்தனர். ஆனால் மெல்ல மெல்ல புலிகள் அமைப்புக்குள் கிழக்குப் போராளிகளின் எண்ணிக்கையும் அவர்களின் முக்கியத்துவமும் பெரும்பான்மை அடையத் தொடங்கியது. அவ்வேளையில் தமது பலமே புலிகளின் முதுகெலும்பாக இருப்பதனை அவர்கள் உணரத் தொடங்கியபோது மேற்படி பாரபட்ச அணுகுமுறைகளுக்கெதிராக சிறு சிறு எதிர்ப்புணர்வுகளை அவர்கள் வெளிக்காட்டத் தொடங்கினர்.

இதன் காரணமாக யாழ் குடா நோக்கிய நகர்வுக்கான தாக்குதல்களில் கிழக்குப் போராளிகளின் படையணிகளுக்கும் வடக்கு படையணிகளுக்கும் இடையே சிறு சிறு உரசல்கள் தொடங்கி விட்டிருந்தன. யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவதில் கிழக்குப் போராளிகள் முன்னணி பாத்திரம் வகித்துவிடக்கூடாது என்பதில் வடக்குத்தளபதிகள் கவனமான காய்களை நகர்த்தினார். அவ்வாறு நடத்து விட்டால் யாழ்ப்பாண நகரில் கருணாம்மானால் புலிக்கொடி ஏற்றப்படும் நிகழ்வை யாராலும் தடுக்க முடியாது போகும் என்பதனால் ஜெயந்தன் படையணிகளுக்குரிய களமுனை ஆயுத, மற்றும் உணவு வளங்கல்களில் திட்டமிட்ட தடங்கல்கள் ஏற்படுத்தப்பட்டன. ஜெயந்தன் படையினர் நிலைகொண்டிருந்த ஒரு காவலரனில் கட்டளையை மீறி தடை தாண்டிச் செல்ல முற்பட்ட பொட்டம்மானுடைய ஜீப் வண்டிக்கு துப்பாக்கிச் சூடு நடத்துமளவுக்கு நிலைமை மோசமடைந்திருந்தது.

இதுபோன்ற பல காரணங்களால் யாழ் குடாவை கைப்பற்றும் நகர்வுகளிலிருந்து மெது மெதுவாக ஜெயந்தன் படையணியினர் பின்வாங்கத் தொடங்கினர். இறுதியாக யாழ் குடாவைக் கைப்பற்றும் அத்திட்டம் புலிகளால் கைவிடப்பட்டது. சுருங்கச் சொன்னால் ஜெயசிக்குறு வெற்றி, ஆனையிறவு வெற்றி போன்று யாழ்ப்பாணத்தை கைப்பற்றியதில் முன்னணிப் பாத்திரம் வகித்தவர்கள் மட்டக்களப்பு போராளிகள்தான் என்கின்ற வரலாறு எழுதப்படக்கூடாது என்பதற்காகவே அம்முயற்சி கைவிடப்பட்டது.

## கருணம்மானின் கிழக்கு நோக்கிய நெடுந்தூர நடை

இந்நிலையில்தான் 2001ஆம் ஆண்டு வரை வடக்கில் பல்வேறு யுத்தங்களை வெற்றி கொண்ட கருணாம்மான் மீண்டும் கிழக்குமாகாணத்துக்கு திரும்புகின்றார். சுமார் 4500 கிழக்குப் போராளிகளில் 4000 பேரை பலிகொடுத்தநிலையில் அவருடன் திரும்பியவர்கள் வெறும் 600 பேரேயாகும். மணலாற்றில் இருந்த ஜெயந்தன் படையணியின் முகாமிலிருந்து கிழக்கு நோக்கிய அப்பயணம் தொடங்குகின்றது. பிரபாகரனின் உரிய அனுமதி பெறப்படாமலேயே கருணாம்மான் இம்முடிவினை எடுத்திருந்தார். பல நாட்களைக் கடந்த நெடுந்தூர நடை பயணத்தின்போது போராளிகளது யுத்த அனுபவங்களைக் காவியமாக்கும் நோக்கில் புலிகளின் ஆஸ்தான எழுத்தாளர் மணலாறு விஜயன் அவர்களுடனேயே பயணிக்கின்றார்.

**ஜெயந்தன் படையினர் நிலைகொண்டிருந்த ஒரு காவலரனில் கட்டளையை மீறி தடை தாண்டிச் செல்ல முற்பட்ட பொட்டம்மானுடைய ஜீப் வண்டிக்கு துப்பாக்கிச் சூடு நடத்துமளவுக்கு நிலைமை மோசமடைந்திருந்தது. இதுபோன்ற பல காரணங்களால் யாழ் குடாவை கைப்பற்றும் நகர்வுகளிலிருந்து மெது மெதுவாக ஜெயந்தன் படையணியினர் பின்வாங்கத் தொடங்கினர். இறுதியாக யாழ் குடாவைக் கைப்பற்றும் அத்திட்டம் புலிகளால் கைவிடப்பட்டது.**

ஜெயசிக்குறு, ஆனையிறவு மீட்புச் சமர், யாழ்குடா நோக்கிய நகர்வு போன்ற ஓயாத அலைகள் ஒன்று, இரண்டு, மூன்று ஆகிய பல்வேறுபட்ட களமுனைகளைக் கடந்துவந்த அந்தப் போராளிகளின் அனுபவங்கள், சாகஸங்கள், அவர்கள் எதிர்கொண்ட சவால்கள், திகில்கள், இழப்புகள், சிரமங்கள், படிப்பினைகள் என்று அனைத்தையும் ஆவணப்படுத்துவதே அவரது நோக்கம். ஆனால் பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காகிய கதைபோல அவர் எதிர்பார்த்த விடயங்களை விட வடக்கு போர்முனைகளில் 'மட்டக்களப்பார்' என்பதற்காக சக போராளிகளிடமும் தளபதிகளிடமும் தாம் எதிர்கொள்ள நேர்ந்த பாகுபாடுகளும், ஒதுக்கல்களும், ஒரவஞ்சனைகளும், அவமானங்களும் ஏளனங்களும் பற்றியே போராளிகள் தமது மனக்குமுறல்களை கொட்டித் தீர்த்தனர். அவற்றையெல்லாம் ஒரு எழுத்தாளனாக அவர் தொகுத்துக்கொண்டாலும் அவை நூலாகத் தொகுக்கப்பட்டபோது 'திறீலும் திகிலும்' என்னும் அந்நூலை வெளியிடுவதற்கு

புலிகளின் அரசியல்துறை தடைவிதித்து பறிமுதல் செய்தது.

கருணாம்மான் கிழக்குக்கு சென்றபின்னர் எதிர்காலத்தில் புலிகளின் பிரதான கட்டளைத் தலைமையகத்தை மட்டக்களப்பு நோக்கி நகர்த்த வேண்டிய அவசியம் உள்ளமையால் முழு கிழக்கு மாகாணத்தையும் புலிகளின் கட்டுப்பாடில் கொண்டு வருவதற்கான படைத்துறை கட்டுமானங்களை தயார் செய்யுமாறும் பிரபாகரன் கருணாம்மானுக்கு கட்டளையிட்டார். அதன்படி 1995-2000 வரையான காலப்பகுதியில் வடக்கு போர்முனைகளில் இழக்கநேர்ந்த படைபலத்தை மீளக் கட்டியெழுப்புமாறும் கேட்டுக் கொண்டார்.

அதன்பொருட்டு கிழக்கில் ஆயுதமுனையில் ‘ஆள்பிடி படலம்‘ தொடங்கியது. பின்னர் அது ‘வீட்டுக்கொரு போராளி’ என்னும் கட்டாய ‘ஆட்சேர்ப்பு திட்டம்‘ என அறிமுகப்படுத்தப்பட்டது. புலிகளது கட்டுப்பாட்டில் இருந்த கிழக்கு மாகாணத்தின் மூன்றின் இரு பகுதி நிலப்பரப்பு முழுவதும் இத்திட்டம் அமுலாக்கப்பட்டது. அத்திட்டத்துக்கு ‘ஒப்படைப்பு’ பெயரிடப்பட்டது. அதாவது ஒவ்வொரு குடும்பமும் தம் சார்பில் ஒருவரை நாட்டுக்காக போராடுவதற்காக தியாகம் செய்து ஒப்படைக்க வேண்டும் என்னும் நிலை உருவாக்கப்பட்டது. இவ்வாறாக ஆயிரமாயிரமாய் சிறுவர்களும் இளைஞர்களும் பாலின வேறுபாடின்றி புலிகளுடன் இணைக்கப்பட்டனர். படுவான்கரைப் பெருநிலப்பரப்பின் ஒவ்வொரு குக்கிராமங்களிலும் தினமொரு இடங்களை குறித்து ஒப்படைப்பு நிகழ்வுகள் அறிவிப்புச் செய்யப்பட்டன. பெற்றோர்களே தங்கள் குழந்தைகளை அங்கு கூட்டிச்சென்று புலித் தளபதிகளின் கரங்களில் அவர்களை ஒப்படைத்தனர். வெருகல், கோராவெளி, தாந்தாமலை போன்ற கோவில் திருவிழாக்களில் பங்குபெறும் இளைஞர்களைக் குறிவைத்து தினம் தினம் ஆட்சேர்ப்புகள் இடம்பெற்றன. இவ்வாறாக பருவமடையாத பெண்குழந்தைகள் கூட நூற்றுக்கணக்கில் பயிற்சி பாசறைகளுக்கு கவர்ந்து கொண்டு செல்லப்பட்டனர். மட்டு-அம்பாறை படையணிகள் தொகை சுமார் ஏழாயிரத்தைத் தாண்டுகின்றது. ஜெயந்தன் படையணி, விநோதன் படையணி, விசாலகன் படையணி, அன்பரசிப் படையணி, மதனா படையணி,ே ஜான்சன் மோட்டார் படையணி என்று பாசறைகள் பெருகுகின்றன. ஆயிரக்கணக்கான படையணிகளை ஒரே வேளையில் வைத்து பராமரிக்கக் கூடியளவு வசதி வாய்ப்புக்களைக்கொண்ட நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டு செயற்படுத்தப் படுகின்றன.

இத்தகைய கட்டாய ஆட்சேர்ப்பு குறித்த செய்திகளை கிழக்கில் அன்றிருந்த ஊடகவியலாளர்கள் எவரும் வெளிக்கொணரவில்லை. அதற்கும் மேலாக ‘தராக்கி சிவராம்‘ போன்ற கிழக்கின் பிரபல ஊடகவியலாளர்கள் பொது மக்களே தமது குழந்தைகளை தாமாக விரும்பி முன்வந்து ‘மகிழ்ச்சியுடன் புலிகளிடம் ஒப்படைக்கின்றார்கள்‘ என்று செய்திகளை வெளியிட்டனர். ‘குழந்தைப்போராளிகள்‘ என்கின்ற வார்த்தையைக்கூட மனித உரிமை அமைப்புகள் மறந்தேனும் உச்சரிக்க முன்வரவில்லை.

**கட்டாய ஆட்சேர்ப்பு குறித்த செய்திகளை கிழக்கில் அன்றிருந்த ஊடகவியலாளர்கள் எவரும் வெளிக்கொணரவில்லை. அதற்கும் மேலாக ‘தராக்கி சிவராம்‘ போன்ற கிழக்கின் பிரபல ஊடகவியலாளர்கள் பொது மக்களே தமது குழந்தைகளை தாமாக விரும்பி முன்வந்து ‘மகிழ்ச்சியுடன் புலிகளிடம் ஒப்படைக்கின்றார்கள்‘ என்று செய்திகளை வெளியிட்டனர். ‘குழந்தைப்போராளிகள்‘ என்கின்ற வார்த்தையைக்கூட மனித உரிமை அமைப்புகள் மறந்தேனும் உச்சரிக்க முன்வரவில்லை.**

ஆனால் யாழ்-பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், ஜனநாயகத்துக்கான கிழக்கிலங்கை முன்னணி போன்ற ஒரு சில அமைப்புகளே இவை பற்றிய செய்திகளை வெளிக்கொணர்ந்தன. புலிகளின் ஆட்சேர்ப்பு, மற்றும் அதன் காரணமாக படுவான்கரை பகுதியில் பெரும்பான்மையான பாடசாலைகள் (மாணவர்களின் போதிய வரவின்மை காரணமாக) செயலிழந்து காணப்பட்டமை என்பவற்றையிட்டு ஜனநாயகத்துக்கான கிழக்கிலங்கை முன்னணி வெளியிட்ட அறிக்கை தினகரன் பத்திரிகையில் 18.11.2001 அன்று வெளிவந்திருந்தது. அவ்வறிக்கையில் கிழக்கில் இடப்பெற்ற கட்டாய ஆட்சேர்ப்பு குறித்த விடயங்களை பகிரங்கம் செய்ததோடு இந்நிலை தொடருமானால் கிழக்குவாழ் மக்கள் தமிழீழ கோரிக்கையிலிருந்து விலகி ‘சுதந்திர கிழக்கு‘ ஒன்றுக்கான கோரிக்கை ஒன்றை முன்வைக்கவேண்டி வரும் என்றும் முன்னெச்சரிக்கை செய்திருந்தமையும் குறிப்பிடத் தக்கது.

## பிளவுபட்ட பொட்டம்மானின் புலனாய்வுப்பிரிவு

புலிகளின் புலனாய்வுத்துறையைப் பொறுத்தவரையில் அது இரண்டு வகையாகச் செயற்பட்டது. தேசியப் புலனாய்வுத்துறை, இராணுவப் புலனாய்வுத்துறை என அவை அழைக்கப்பட்டன. கிழக்கில் இயங்கிய தேசிய புலனாய்வுத்துறை பொட்டம்மானின் வழிகாட்டலில் தளபதி றெஜினோல்ட் தலைமையிலும் இராணுவப் புலனாய்வுத் துறையானது கருணாம்மானின் வழிகாட்டலில் தளபதி ரமணன் தலைமையிலும் இயங்கிவந்தன.

அதே வேளை வடக்கு களமுனைகளில் பொட்டம்மான் தலைமையிலான புலனாய்வுத் துறையினருக்கும் ஜெயந்தன் படையினருக்கும் இடம்பெற்ற முறுகல் நிலை கிழக்கு மாகாணத்திலும் தொடர ஆரம்பித்தது. முதலில் கிழக்கில் இயங்கிய இருவகையான புலனாய்வுத் துறைகளுக்கும் இடையே முறுகல் நிலை உருவானது. பொட்டம்மான் மற்றும் கருணாம்மான் போன்றோரிடையேயான அதிகாரப் போட்டிகளே அதன் பின்னணியில் இருந்தன. இப்பூசல்கள் தேசிய புலனாய்வுத்துறை வடக்கு .கிழக்கு என இரண்டாகப் பிளவுபடும் நிலைக்கு இட்டுச்சென்றது. அதன் விளைவாக கிழக்கில் தேசிய புலனாய்வுத்துறை பொறுப்பாளரான ரெஜினோல்ட் உட்பட்ட சுமார் 30 வரையான போராளிகள் பொட்டம்மானின் தலைமையின் கீழ் செயற்பட முடியாதென கருணம்மானிடம் சரணடைந்தனர்.

2001ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கிழக்கில் மாவீரர் தினம் மிக பிரமாண்டமான முறையில் நடைபெறுகின்றது. நீண்ட காலத்துக்குப் பின்னர் கருணாம்மானின் பங்குபெற்றுதலோடு நடைபெறும் மாவீரர்தினம் என்பதால் வெகு விமர்சையாக ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தது. அன்றைய தினம் மாலைப் பொழுதில் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியான அம்பிளாந்துறை கிராமத்தில் வைத்து புலனாய்வுத்துறையைச் சேர்ந்த முக்கியஸ்தரான யாழ்-நெல்லியடியைச் சேர்ந்த அற்புதம் மாஸ்டர் பயணித்த வாகனம் மீது கிளைமோர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலில் அவர் உயிர் பிழைத்தபோதும் தனது காலை இழக்க வேண்டிவந்தது. இச்சம்பவமானது கிழக்கு மாகாணத்திலுள்ள புலிகளின் கட்டமைப்புகளை வடக்குப் பொறுப்பாளர்கள் வழி நடாத்துவதிலிருந்து விடுபடுவதற்கான முயற்சிகள் கிழக்கில் தொடங்கி விட்டமையை உணர்த்தியது.

அதேபோன்று 2001 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் இருந்து வெளிவந்த தினக்கதிர் பத்திரிகைக் காரியாலயம் மீதான இனந்தெரியாதோரின் தாக்குதலும் கூட இத்தகைய புலிகளின் உள்ளக முரண்பாட்டு பின்னணியில் இடம்பெற்றதாகவே அறியப்பட்டது. அதன்காரணமாக அதனைத் தொடர்ந்து வந்த காலங்களில் அப்பத்திரிகை நின்று போக நேர்ந்தது.

இவ்வித சம்பவங்களை விசாரிப்பதற்கோ ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ வன்னியிலிருந்த பிரபாகரனாலோ பொட்டம்மானாலோ முடியவில்லை.

**மட்டக்களப்பில் இருந்து வெளிவந்த தினக்கதிர் பத்திரிகைக் காரியாலயம் மீதான இனந்தெரியாதோரின் தாக்குதலும் கூட இத்தகைய புலிகளின் உள்ளக முரண்பாட்டு பின்னணியில் இடம்பெற்றதாகவே அறியப்பட்டது. அதன்காரணமாக அதனைத் தொடர்ந்து வந்த காலங்களில் அப்பத்திரிகை நின்று போக நேர்ந்தது.**

## ரணில்:பிரபா போர் நிறுத்த ஒப்பந்தம்

2002ஆம் ஆண்டு நோர்வே நாட்டின் மத்தியஸ்தம் ஊடாக ஏற்பட்ட புலிகள்-இலங்கையரசு சமாதான ஒப்பந்தம் சம்பந்தமான பேச்சு வார்த்தைகளுக்காக புலிகளின் பிரதிநிதிகளாக அரசியல் ஆலோசகர் பாலசிங்கம்,அரசியற் துறை பொறுப்பாளராகிய தமிழ் செல்வன் மற்றும் கருணாம்மான் போன்றவர்கள் நியமிக்கப்பட்டனர். அதன்காரணமாக அவர்கள் அடிக்கடி வெளிநாடுகளுக்கு சென்று வரத்தொடங்கினர்.

அது மட்டுமன்றி சமாதான பேச்சுகளுக்காக வெளிநாடுகளுக்கு சென்று வந்த கருணாம்மான் ஐரோப்பாவில் வாழும் தமிழர்களின் அமைதியான வாழ்வையும் அவர்களின் வாரிசுகள் தேவையான உலகத்தரம் மிக்க கல்வியையும் பெரும் வாய்ப்பை பெற்றிருக்கும் நிலையில் தாங்கள் ஆயிரமாயிரமாய் ஏழை எளிய மக்களின் குழந்தைகளை யுத்தத்தில் பலியிட்டுக் கொண்டிருப்பதனை எண்ணிப் பார்க்கின்றார். புலிகளின் பொறுப்பாளர்களாகவும் பிரச்சாரகர்களாகவும் வெளிநாடுகளில் வாழ்பவர்கள் போராட்டத்தின் பெயரால் கோடீஸ்வரர்களாக மாறிவருவதையும் அவதானிக்கும் சந்தர்ப்பம் அவருக்கு கிடைக்கின்றது.

2002ஆம் ஆண்டில் முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட பேச்சு வார்த்தைகள் தாய்லாந்திலும் மூன்றாம் கட்ட பேச்சுவார்த்தை நோர்வேயிலும் இடம்பெறுகின்றது. இந்த மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தையின் போது அரசியல் தீர்வு ஒன்றுக்குரிய முன்வரைபுகளில் கையெழுத்துடுவது குறித்த இழுபறி நிலை ஏற்படுகின்றது. இறுதியாக கையெழுத்திட்டு விட்டு இலங்கைக்கு திரும்புகின்றனர் தமிழ்ச்செல்வனும் கருணாம்மானும். அந்த கையெழுத்திட்ட வரைபுகளை தலைவரிடம் காட்டுகின்றனர். உங்களை கையெழுத்திடவா அனுப்பினேன்? என்று குமுறிய பிரபாகரன் அப்பிரதிகளை கிழித்து கருணாம்மானின் முகத்திலே வீசுகின்றார். இச்சம்பவமானது 2002ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இடம்பெறுகின்றது.

ஒவ்வொரு தடவையும் வெளிநாடுகளுக்கு சென்று பேச்சு வார்த்தைகளில் பங்கெடுத்துவிட்டு கொழும்பு வந்திறங்கும் கருணாம்மானும் தமிழ்ச்செல்லவனும் கட்டுநாயக்கா விலிருந்து இலங்கை விமானப்படையினரின் ஹெலிக்கொப்டர்களில் நேரடியாக வன்னிக்கு பயணமாவார்கள். அங்கு பிரபாகரனிடம் பேச்சுவார்த்தை விபரங்களை முழுமையாக ஒப்புவித்த பின்னரே கருணாம்மான் வன்னியிலிருந்து மட்டக்களப்புக்கு வந்து சேருவது

வழக்கமாயிருந்தது. ஆனால் மேற்படி சம்பவத்தின் பின்னர் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டு விட்டு வெளிநாடுகளில் இருந்து கொழும்பு வந்து சேர்ந்தவுடன் தமிழ்ச்செல்வனை வன்னிக்கு தனியாக அனுப்பிவிட்டு கட்டுநாயக்காவிலிருந்து ஹெலிக் கொப்டர் மூலம் நேரடியாக மட்டக்களப்புக்கு வரத்தொடங்கினர் கருணாம்மான். இது பிரபாகரனுக்கு பெரும் விசனத்தை ஏற்படுத்தியது.

அதன்காரணமாக இறுதியாக 2003ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் யப்பானில் இடம்பெற்ற ஆறாம் கட்டப் பேச்சு வார்த்தைக்குரிய குழுவிலிருந்து கருணாம்மானின் பெயர் நீக்கப்பட்டது. அந்தப் பேச்சு வார்த்தையோடு புலிகளுக்கும் இலங்கையரசுக்குமான உறவு கிட்டத்தட்ட முறிவடையும் நிலைக்கு வந்துவிட்டது எனலாம். அடுத்த யுத்தத்தை ஆரம்பிக்கும் திட்டத்தில் பிரபாகரன் மூழ்கின்றார்.

இதற்கிடையே சமாதான காலத்தை தொடர்ந்து நிதி,நீதி, நிர்வாகம், அரசியல், காவல், கல்வி என்று சகல துறைகள் சார்ந்தும் புதிய கட்டமைப்புக்களை புலிகள் உருவாக்குகின்றனர். அத்தோடு அவற்றுக்கான தனித்தனி துறைச் செயலாளர்கள் 32 பேர் நியமிக்கப்படுகின்றனர். அவர்கள் அனைவரும் வடக்கு மாகாணத்தை சேர்ந்தவர்களாய் இருந்தனர். இந்நிலையானது கிழக்குப் போராளிகளிடையே மிகப்பெரிய அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் உருவாக்குகின்றது. ஏற்கனவே பொட்டம்மானின் கட்டுப்பாட்டில் இயங்கிய புலனாய்வுத்துறை கருணம்மானின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்றது. அதனைத் தவிர ஏனைய துறைசார் பணியாளர்கள் வடக்கில் இருந்து கிழக்கில் பணியாற்றுவதற்காக வந்திறங்குகின்றனர். குறிப்பாக தமிழீழக் காவல்துறையினரின் செயற்பாடுகள் கிழக்கில் முடுக்கிவிடப்படுகின்றன. சட்டம் ஒழுங்கு என்னும் பெயரில் கிழக்கிலிருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வடக்கு மாகாண காவல்துறைப்

**பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டு விட்டு வெளிநாடுகளில் இருந்து கொழும்பு வந்து சேர்ந்தவுடன் தமிழ்ச்செல்வனை வன்னிக்கு தனியாக அனுப்பிவிட்டு கட்டுநாயக்காவிலிருந்து ஹெலிக் கொப்டர் மூலம் நேரடியாக மட்டக்களப்புக்கு வரத்தொடங்கினர் கருணாம்மான். இது பிரபாகரனுக்கு பெரும் விசனத்தை ஏற்படுத்தியது. அதன்காரணமாக இறுதியாக 2003ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் யப்பானில் இடம்பெற்ற ஆறாம் கட்டப் பேச்சு வார்த்தைக்குரிய குழுவிலிருந்து கருணாம்மானின் பெயர் நீக்கப்பட்டது.**

பொறுப்பாளர்கள் மேலாண்மை செலுத்தத் தொடங்கினர். இது கிழக்குப் போராளிகளிடையே பலத்த விமர்சனங்களுக்கு உள்ளானது.

'வடக்கு வாழ்வதற்காக நாம் அங்கு சென்று மடிந்தோம். அவர்களோ கிழக்கை ஆள்வதற்காக இங்கு வந்திருக்கின்றார்கள்.' என்கின்ற கோபக்கணைகள் கிழக்குப் போராளிகளிடத்தில் அனல் கொண்டு வீசத்தொடங்கின. வடக்கில் இருந்து வரும் துறைசார்ந்த பொறுப்பாளர்களுக்கு கட்டுப்பட முடியாதென பல போராளிகள் குரலெழுப்பத் தொடங்கினர். மட்.பழுகாமத்தில் தமிழீழ காவற்துறையினருடன் முரண்பட்டு கைகலப்பில் ஈடுபட்ட மூன்று போராளிகள் களுவாஞ்சிக்குடி இராணுவ முகாமில் சரணடையுமளவுக்கு நிலைமைகள் மோசமடையத் தொடங்கின. கிழக்கில் புலிகளின் நிர்வாகம் எதிர்கொள்ளும் குழப்ப நிலைமைகளை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவர வேண்டுமானால் வன்னியிலிருந்து தலைமைப்பீட உறுப்பினர்கள் கிழக்குமாகாணத்துக்கு நேரடியாக களமிறங்கவேண்டிய அவசியம் உணரப்படுகின்றது.

## மட்டக்களப்புக்கு வந்த பொட்டம்மான்

ஏறக்குறைய 2003ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் யப்பானில் இடம்பெற்ற பேச்சுக்கள் முறிவடைந்ததிலிருந்து சமாதானத்துக்கான வாய்ப்புகள் அருகத் தொடங்கி விட்டன. புலிகளைப் பொறுத்தவரையில் கிழக்கில் ஏற்பட்டுள்ள இந்த குழப்பநிலைமைகளை விரைவாகத் தீர்க்காவிடின் அடுத்த யுத்தத் தயாரிப்புக்கள் பற்றி எண்ணிப்பார்க்க முடியாது.

எனவேபிரபாகரன் பொட்டம்மானை மட்டக்களப்புக்கு அனுப்ப முடிவெடுக்கின்றார். அதன்படி அங்குள்ள குழப்பநிலைகளை தீர்க்க முயலுமாறும் படையணிகளைப் பார்வையிட்டு தேசிய புலனாய்வுத் துறையை மீளக் கட்டியெழுப்புமாறு அறிவுறுத்தியும் பொட்டம்மானை 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மட்டக்களப்புக்கு அனுப்பி வைத்தார் பிரபாகரன்.

மட்டக்களப்புக்கு வந்த பொட்டம்மான் கிழக்கின் நிலைமைகள் குறித்து கருணாம்மானுடன் கலந்துரையாடல் ஒன்றை நடாத்துகின்றார். பிரச்சனைகளின் அடிப்படையை விளக்கிய கருணாம்மான் யுத்த நிறுத்த காலத்தில் சமாதானச் செயலகம் ஊடாக வழங்கப்பட்ட நிதியொதுக்கீடுகள் பெரும்பான்மையாக வடக்குக்கே செலவு செய்யப்படுவது பற்றியும் அங்குள்ள தளபதிகள் அனைவரும் கொக்ககோலா, பால்மா, மற்றும் இரும்பு, சீமெந்து, போன்ற வியாபாரங்களில் ஈடுபடும் சர்வதேச கம்பெனிகளின் தொழில்சார் முகவர்களாக மாறிவருவது பற்றியும் தனது விசனத்தைத் தெரிவித்தார். சர்வதேச தரத்திலான சொகுசு வாகனங்கள் கொழும்பின் அரசியல் தலைவர்களுக்கு கிடைக்க முன்பே வன்னியிலுள்ள புலிகளின் தளபதிகளுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் கிடைத்து விடுகின்றது. மீள் கட்டுமானப்பணிகள் வடக்கில் மிக அசுர வேகத்தில் முடுக்கி

விடப்பட்டுள்ளன ஆனால் கிழக்கில் யுத்த இடிபாடுகளுக்குள்ளே தான் மக்கள் இன்னும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர்.

இந்நிலையில் வடக்கிலிருந்து வந்த காவல்துறையினரும் ஏனைய பொறுப்பாளர்களும் நடந்து கொள்ளுகின்ற விதங்கள் போராளிகளிடையே பெரும் அதிருப்தி அலையொன்றை தோற்றுவித் துள்ளது என்பதை இலாவகமாக எடுத்துச் சொல்லுகின்றார்

அனைத்தையும் கேட்டுக் கொண்ட பொட்டம்மான் செவிடன் காதில் ஊதிய சங்குபோல தான் வந்த வேலையை கச்சிதமாக செய்து முடித்துக்கொண்டு வடக்கு நோக்கி புறப்பட்டார். அதாவது கீர்த்தி தலைமையில் நீலன் இளங்கோ போன்றவர்களை இணைத்து புதிய புலனாய்வுத்துறையை உருவாக்கி விட்டு வன்னிக்கு புறப்படுகின்றார். அது கருணாம்மானுக்கு பலத்த கோபத்தினை உருவாக்குகின்றது.

மட்டக்களப்பிலிருந்து திரும்பிய பொட்டம்மானால் பிரபாகரனுக்கு வழங்கப்பட்ட அறிக்கையில் மட்டு-அம்பாறை படைக் கட்டுமானங்களினதும் அவற்றின் நிர்வாகம், கட்டமைப்பு, வழங்கல்கள் பற்றிய சிறப்புகளை எடுத்துச் சொல்லியிருந்ததோடு அத்தகைய படைத்துறைக் கட்டுமானம் ஒன்று கருணம்மானின் முழுக்கட்டுப்பாடில் இருப்பதன் ஆபத்தையும் சுட்டிக்காட்டியிருந்தது. இதன்காரணமாக அதன் பெரும்பகுதியை உடனடியாக வன்னிப் பெருநிலப்பரப்புக்கு இடமாற்றம் செய்யுமாறும் பரிந்துரைத்திருந்தது.

## பிரபாகரனிடம் வந்த அவசரச்செய்தி

இந்நிலையில்தான் 2004ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி பிரபாகரனிடமிருந்து அவசரத் செய்தியொன்று கருணாம்மானுக்கு வருகின்றது. அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்செல்வனுடைய ‘செட்‘ மூலமாக கருணாம்மானுடைய ‘செட்‘ க்கு அச்செய்தி வருகின்றது. அம்மானின் ‘செட்‘ பொறுப்பாளர் மாதங்கன் அச்செய்தியை வாசித்து அம்மானின் பிரதான மெய்ப்பாதுகாவலரான காஸ்ரோவிடம் ஒப்புவிக்கிறார். அதனை காஸ்ட்ரோ அம்மானின் உதவியாளர் லத்திப்பிடம் சொல்லுகின்றார். ‘கருணாம்மானை வன்னிக்கு வருமாறும் வரும்போது 2000 படையணிகளை நகர்த்திக்கொண்டு வருமாறும் தலைவர் சொல்லியிருக்கிறார்‘. அதற்கான பதிலாக ‘இப்போது வரமுடியாது‘ என பதிலிறுக்கப்படுகின்றது.

மீண்டும் அரை மணி நேரத்தில் ஒரு செய்தி வருகின்றது. அதுவும் மாதங்கன் - காஸ்ட்ரோ-லத்திப் என்று அம்மானுக்கு செய்தி சொல்லப்படுகின்றது. ‘ஹெலிக்கொப்டர் அனுப்புகின்றேன் உடனே கருணாம்மான் வன்னிக்கு வரவும்.‘ என தலைவர் அழைத்துள்ளார்.

அதற்கு பதில் இவ்வாறு சொல்லப் படுகின்றது. ‘ஹெலிக்கொப்டர் அல்ல. ஃ பிளைட் அனுப்பினாலும் வரமாட்டேன்.‘ ஆனால் லத்திப் அந்த பதிலை செய்தித்தொடர்பாளர் மாதங்கனுக்கு சொல்லவில்லை.

மீண்டும் நான்கு நாட்கள் கடந்த பின்னர் அதாவது பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி வன்னியிலிருந்து அழைப்புவருகின்றது. ‘தலைவர் அவசரமாகப் கருணாம்மானுடன் பேசவேண்டும் உடனடியாக வன்னிக்கு வரவும்‘

இச்செய்தி வந்தவுடன் கருணாம்மான் வன்னிக்கு செல்லவில்லை. சென்றால் அவர் திரும்பி வரப்போவதுமில்லை. பிரபாகரனுக்கு பக்கத்தில் இருபது வருடங்கள் இருந்த கருணாம்மான் இது புரியாதா? எனவே அதற்கு பதிலும் அளிக்கவில்லை. ஆனால் அன்றைய தினமே கருணாம்மானின் மனைவியும் குழந்தைகளும் அவரது உதவியாளரான லத்தீப் என்னும் சிறுவனும் குகனேசனின் உதவியுடன் இந்தியாவுக்கு செல்வதற்காக கொழும்பு நோக்கிப் அனுப்பி வைக்கப்பட்டனர்.

உடனடியாக மட்டக்களப்பு-அம்பாறை பிரதேசங்களில் இருந்த முக்கிய தளபதிகள் கருணாம்மானால் அழைக்கப்படுகின்றனர். பெப்ரவரி 29ஆம் திகதி நிலைமைகளை சக தளபதிகளுக்கு விளக்குகின்றார் கருணாம்மான். மீண்டும் யுத்தத்துக்கு 2000 போராளிகளை வன்னிக் களமுனைக்கு அழைத்துச்செல்வது குறித்து அனைவருமே அதிருப்தி தெரிவிக்கின்றனர். கரிகாலன், பிரபா, ரமேஷ்,

என்று மூத்த தளபதிகள் அனைவரும் இதில் பங்கெடுக்கின்றனர்.

இறுதியாக ‘தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து கிழக்குப் போராளிகள் 6000 பேரும் கருணாம்மான் தலைமையில் பிளவுபட்டு நிற்கின்றோம்‘ என்னும் செய்தி மட்டு-அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன் அவர்களின் கையெழுத்துடன் 2004 ஆம் ஆண்டு மார்ச் 03நாள் பகிரங்கப்படுத்தப்பட்டது.

**பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி வன்னியிலிருந்து அழைப்புவருகின்றது. ‘தலைவர் அவசரமாகப் கருணாம்மானுடன் பேசவேண்டும் உடனடியாக வன்னிக்கு வரவும்‘ இச்செய்தி வந்தவுடன் கருணாம்மான் வன்னிக்கு செல்லவில்லை. சென்றால் அவர் திரும்பி வரப்போவதுமில்லை. பிரபாகரனுக்கு பக்கத்தில் இருபது வருடங்கள் இருந்த கருணாம்மான் இது புரியாதா? எனவே அதற்கு பதிலும் அளிக்கவில்லை. ஆனால் அன்றைய தினமே கருணாம்மானின் மனைவியும் குழந்தைகளும் அவரது உதவியாளரான லத்தீப் என்னும் சிறுவனும் குகனேசனின் உதவியுடன் இந்தியாவுக்கு செல்வதற்காக கொழும்பு நோக்கிப் அனுப்பி வைக்கப்பட்டனர்.**

# ‘பன்னிரண்டு 12’

# Twelve 12

•1. அந்த உலகப்பானைக்குள் ஏராளம் உயிர் புழு-பூச்சிகள் இருந்தன. இரு கட்சிகளாக.

•2. கன்னைக்குக் கன்னை குரோதமே பானை முழுவதும்.

•3. வஞ்சம் கொண்டு ஆளையாள் அழிப்பதே ‘பானை விதி’.

•4. ஈட்டி, அம்பு, கட்டாரி, அணுகுண்டு..எல்லாம் உபயோகிக்கப்பட்டன, எதிரிகளுக்கு எதிராய்.

•5. இரு புறமும் கோரமாய் இரத்தம் ஓடினும் ஆயுதங்கள் ‘மௌனிக்கப்படவில்லை‘.

•6. அண்ணன் புழு-பூச்சிகள் தம்பிகளைக் கொன்றன.

•7. தம்பி புழு-பூச்சிகள் அக்கை-தங்கைகளைக் கொன்றன.

•8. பானையின் இரத்த மட்டம் ஏறியதால் புழு-பூச்சிகள் பல மிதந்தன் பல மூழ்கின.

•9. இரு கட்சி புழு-பூச்சிகளும் இடைக்கிடை சமாதானமும் பேசின.

•10. பிறகு, சண்டையைத் துவங்கின.

•11. இரத்தம் பானை விளிம்பை அடைந்தது.

•12. உரமான கால் கொண்டு அந்த இராட்சத உருவம் அந்தப்பானையை நசுக்கியபோது, புழு-பூச்சிகளுக்கு என்ன நடந்தது, என்று தெரியாது;.!!!

● 1] In that #pot of the world.
There were a lot of live worm-insects in two parties.

● 2] All in (over) the pot.- Party to party.
It was jealousy.

● 3] The pot-law is to destroy each other with revenge.

● 4] Against the enemies.-
Spear. Arrow. Dagger. Atomic bomb…all were used.

● 5] Even though. Blood spilled horrendously.
The weapons were not silenced.

● 6] Elder-brother worm-insects killed their younger brothers.

● 7] Younger brother worm-insects killed their older sisters-younger sisters.

● 8] Since the blood level of the pot rose.
Many worm-insects floated many drowned.

● 9] Occasionally. Worm-insects of both parties talked peace.

●10] Then. They started to fight.

● 11] Blood reached the pot edge.

● 12] It is not known what happened to the worm-insects when that giant figure squashed that pot!

**சிறினோ சிறி சிறிசு**

# ஜோர்ஜ் இ

வகைப்படுத்தலும்
பொதுமைப்படுத்தலும்
வாழ்க்கையை எவ்வளவு
இலகுவானதாக்கி விடுகின்றன!?

வர்ணங்கள் முதல்
வர்க்கங்கள் வரைக்கும்!

முன்னோர்கள்
முட்டாள்கள் இல்லையே!?

தனிமனித இயல்புகளை
தெரியாமலா பொதுமைப்படுத்தி
இருப்பார்கள்!?

வகைப்படுத்தல்கள்
முத்திரை குத்தி
மூலையில் போட்டு
மறுவேலை பார்க்க
வழிவிடுகிறது.

வாழ்க்கை
சலனங்களும் சமரசங்களும்
சிக்கல்களும் சிரமங்களும்
இல்லாமல்...

சிந்திக்கக் கூடத்
தேவையில்லாதபடிக்கு...

எல்லாமே
மூளைக்குள் திணிக்கப்பட்டிருக்கிறது.

மனிதர்களை சமூகமாக நினைக்காமல்...

என்னுடைய கூட்டத்தானோடேயே
ஒட்டியுறவாடவும்...

அவன் செய்வதோ,
எவன் செய்வதோ...

அநீதியாக இருந்தாலும்
அப்பால் நகரவும்
கடக்கவுமாக...

எல்லாமே எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன...

கேள்விக்கு உள்ளாக்க
முடியாதபடிக்கு!

,,,

உனக்கும் எனக்குமான காதலும்
அவ்வாறு வகைப்படுத்தப்பட
முடிந்திருந்தால்...

வாழ்க்கை எவ்வளவு
இலகுவானதாக இருந்திருக்கும்?

படுக்கும் போது கழற்றி வைத்த
செருப்புகள்
காலையில் காணாமல் போகின்றன.

,,,

வேறு எதையோ பற்றி
நினைத்து கொண்டு இருக்கும் போது...
காரண காரியம் இல்லாமல்
சம்பந்தம் எதுவும் இல்லாமல்...
முன்பு சென்ற சில இடங்கள்
மனதில் தோன்றுகின்றன.

,,,

கனவுகள் கூட
தொடர்ச்சியானதாகத் தான்
இருக்கிறது...

சம்பவங்களும்
நடக்கும் இடங்களும்
சம்பந்தம் இல்லாததாக
இருந்தாலும்.

இரவில் கண்ட
கனவுகள்
காலையில் மறந்து போகின்றன.

பல வருடங்களின் பின்னால்
அதே கனவுகள்
எங்கிருந்தோ திடீரென்று
காரண காரியம் இல்லாமல்
மனதுக்குள் விரிகின்றன.

,,,

தோற்றமும் மறைவும்
எனக்கு எப்போதும்
மர்மங்களாகவே இருக்கின்றன.

,,,

வாசலில் கிடந்த செருப்பை
நாய் தூக்கி கொண்டு போன
பின்னால்...
கிடக்கும் ஒற்றைச் செருப்பை
வைத்துக் கொண்டு
என்ன செய்ய முடியும்?
புதிதாக இருந்தாலும்
பாதிச் செருப்புக்கு
என்ன தான் பெறுமதி?

நாய் திரும்பி கொண்டு வந்து
வைக்கும் என்ற
நம்பிக்கையை
எத்தனை நாளைக்குத்தான்
வைத்திருப்பது?

கனவுகளைப் போல
அவையும்
பல வருடங்களின் பின்னால்
எதிர்பாராத நேரம் ஒன்றில்
திரும்பி வரக் கூடும் என்ற
எண்ணம் கூட
இனிமையாகத் தான் இருக்கிறது.

அப்போது
மற்றச் செருப்பை
எங்கே நான் தேடுவது?

,,,

தோற்றமும் மறைதலும்
கிடைத்தலும் இழத்தலும்...

இருப்பும் வைத்திருப்பும்
நிரந்தரம் இல்லை என்றான
பின்னால்..

எங்கள் வாழ்வுக்கு
என்ன பெறுமதி இருக்கிறது?

,,,

மூலையில் திரும்புகிற காரின்
முன் வெளிச்சம்
முகத்தில் பட்டது போல..

என் வாழ்க்கையில்
தோன்றி மறைந்து.

சம்பந்தம் இல்லாத நேரங்களில்
நினைவில் தோன்றும்...

உன் முத்தங்களின்
நினைவை வைத்துக் கொண்டு
நான் என்ன செய்ய முடியும்?

உங்கள் சங்கேத சமிக்ஞைகள்
எனக்குப் புரியாமல் இருந்ததில்லை.

காண்கின்ற போதுகளில்
மலர்கின்ற முகத்தில் தோன்றும்
அந்த மென்சிரிப்பு.

காணாத போதுகளில்
தேடுகின்ற கண்கள்.

பதில் நாடி விடுகிற
புன்னகைத் தூது.

செல்லக் கோபம்.

தொலைவில் நின்று பார்த்தபடியே
காரணமில்லாமல் தடவுகின்ற
உதடுகள்.

பேசிக் கொண்டிருக்கும்போது
தலையைச் சாய்த்து
தலைமயிரை கோதி விடுகிற
விரல்கள்.

எல்லாமே எனக்குத் தெரிந்துதான்
இருந்தன.

அந்தச் சமிக்ஞைகளின்
குறிப்பறிந்து கொண்டாலும்...

பதில் புகைக் குறிகளை
அனுப்ப முடியாமல் போனதற்குக்
காரணங்கள் பல இருக்கலாம்.

கூச்சம்.
தயக்கம்.
வறுமை.
சுமைகள்.
முடிவாகத் தெரியாமல்
மூக்குடையக் கூடாது என்ற பயம்.

என் பதின்ம வயதுகளிலும்
பாதிவாழ்வு முடிந்த வயதுகளிலும்...

அறுந்து போன படச்சுருள்களால்
திரையில் தோன்றுகிற முகங்கள்
போல...

அடையாளம் காண முன்னால்
வேகமாய் மறைந்து போகிற
பிம்பங்களாய்

என் வாழ்க்கையில் வந்து போன
உங்கள் நினைவுகள்
எனக்குள் இன்றைக்கும்
இருக்கின்றன.

எப்போதும் நினைவுக்கு வந்து
தொல்லை தராதபடிக்கு
ஆழமாய் புதைக்கப்பட்டிருந்தாலும்...

அந்த நினைவுகள்
அவ்வப்போது வந்து
ஏதோ ஒரு பரவசத்தைத்
தந்தபடிதான் இருக்கின்றன.

உங்களோடு என் வாழ்க்கை
இருந்திருந்தால்,
எப்படி இருந்திருக்கும் என்ற எண்ணம்
அன்றைய கற்பனைகளோடே தான்
இன்றைக்கும் இருக்கின்றன.

யாருக்குத் தெரியும்?
வாழ்க்கை என்றைக்குமே
எங்கள் கற்பனைப்படி
அமைந்ததில்லை.

எங்களுக்குள் அசைக்க முடியாத
அன்பு இருந்திருந்தாலும்...

எங்களைச் சுற்றியும்
எங்களுக்கு அப்பாலும்
இருந்தவர்களாலும்,
இருந்தவைகளாலும்
அந்த விதி
மாற்றி எழுதப்பட்டும் இருக்கலாம்.

உண்மையான அன்பு என்பதே,
மகிழ்ச்சியும் நிறைவும்
என்னோடு மட்டும் இல்லை,
எவனோடு வாழ்ந்தாலும்
இருக்க வேண்டும் என்று விரும்புவது
தானே!?

கிடைத்த வாழ்வு
நிறைவானதாகவே இருக்கட்டும்!

அந்த இனிமையான நினைவுகளை
என் மரணப் படுக்கையில்
அசை போட என்று
இன்னமும் பத்திரமாகத்தான்
வைத்திருக்கிறேன்.

14.2.2024
காதலர் தினம்
00.00 கனடிய நேரம்
ஜோர்ஜ் இ.

---

உன்னை மறக்க வேண்டும்,

உன் நினைவுகளை
என் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து
துடைத்தெறிய வேண்டும்,

சதா உன் நினைவோடு அலையாமல்...

என் வாழ்க்கையின் பாதையை
முடிவு செய்யும் உரிமையை
என் கைகளில் திரும்பவும்
எடுக்க வேண்டும்
என்றெல்லாம்...

ஒரு முடிவோடு
முயல்கின்ற போதெல்லாம்...

ஒரு சூடு, சுரணை,
மானம் , ரோஷம் கெட்டவனாக
தோற்றுப் போகிறேன்...

என் அன்பே!,

இன்றோடு பேஸ்புக்குக்கு
முழுக்கு போடுகிறேன் என்று
வீரசபதம் எடுத்தவர்கள் மாதிரி!




# உள்ளதும் கவர் கள்ளர்

இந்த உள்ளம் கவர் கள்வனின் திருட்டு முழியைப் பார்த்து, சந்தேகக் கண்ணோடு பார்த்த சீனப் பெண் பற்றி சென்ற அபத்தம் இதழில் எழுதியிருந்தேன். அந்தப் பெண் கடை வைத்திருந்த கடைத்தொகுதி என் வீட்டில் இருந்து மூன்று கல்லெறி தூ ரம். நடந்தே போகலாம். தமிழ் மகனுக்குச் சொந்தமானது. அந்தக் கடைத் தொகுதி தற்போது முழுமையாக தமிழ் மகன் நிர்வாகக் கடைகள் கொண்டதாகி விட்டது. தமிழ் பல்பொருள் அங்காடி, உணவகம், வெதுப்பகம் என்று அடிச்சு விலத்த முடியாதளவு தமிழர்கள் நடமாடும் இடமாகி விட்டது. அதற்குள் வெள்ளையர் ஒருவர் நீண்ட காலம் வைத்திருந்த சிகை அலங்கார நிலையம் போய், பெண்களுக்கான ‘மசிர் புடுங்ககமும்’ வந்து சேர்ந்திருக்கிறது. அது தான் புருவ மயிர்கள் பிடுங்கும் அழகுக் கலை நிலையம்!

முன்பு தமிழ்க்கடைகள் என்றால், தெருப்பக்கம் பார்த்த கண்ணாடிச் சுவரோரம் பங்கருக்கு வைத்த மண் மூட்டை மாதிரி, அரிசி மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருப்பதை வைத்து அடையாளம் காணலாம்.

இப்போது அதே கண்ணாடிகளில், சினிமா போஸ்டர் சைஸில் தேசிக்காய் தலையரும் திலீபனும் சிரித்துக் கொண்டிருப்பார்கள். தலைவரின் படத்தின் கீழ் ‘வீழ்ந்து விடாத வீரம்! மண்டியிடாத மானம்!’ என்று இருக்கும். வெள்ளைக்கொடிக் கதை எல்லாம் உண்டியலுக்கு ஆகாது.

துப்பாக்கியும் இராணுவ உடையும் சூடிய அகிம்சைத் தியாகி கேணல் திலீபனின் நினைவேந்தல் படம் இருக்கும். இன அழிப்பு நினைவு, சர்வதேச விசாரணை, மாவீரர் தினம், முள்ளிவாய்க்கால், தமிழ்ச்செல்வன், அன்னை பூபதி, கிட்டு, சங்கர் என மாதாந்தம் ஏதோ ஒரு நினைவேந்தல், அகவணக்கம் என்று ஏதோ இருக்கும். அதற்கான நோட்டீஸ்களுக்கு இடையில், ‘உடைத்த தேங்காய்களுக்கு பணம் திருப்பித் தரப்பட மாட்டாது’, ‘கள்ள நோட்டுக்களுடன் வந்தால் பொலிஸ்க்கு அறிவிக்கப்படும்’, ‘உங்கள் பைகளோடு உள்ளே வர வேண்டாம்’ ‘தயவு செய்து

தமிழ் பல்பொருள் அங்காடி, உணவகம், வெதுப்பகம் என்று அடிச்சு விலத்த முடியாதளவு தமிழர்கள் நடமாடும் இடமாகி விட்டது.
அதற்குள் வெள்ளையர் ஒருவர் நீண்ட காலம் வைத்திருந்த சிகை அலங்கார நிலையம் போய், பெண்களுக்கான ‘மசிர் புடுங்ககமும்’ வந்து சேர்ந்திருக்கிறது.

அது தான் புருவ மயிர்கள் பிடுங்கும் அழகுக் கலை நிலையம்!

பக்கட்டுக்களை பிய்க்க வேண்டாம்’ என்றெல்லாம் தமிழர்களின் நேர்மையை உறுதி செய்யும் நோட்டீஸ்களை கடைக்காரர் சிரமப்பட்டு ஒட்டி வைத்திருப்பார். சீனி இனிப்போ என்று பக்கட்டைப் பிய்த்து ருசி பார்த்து வாங்குவதாக முன்பு தாயகம் காலத்தில் ஒரு கடைக்காரர் முறைப்பட்டிருந்தார்.

இப்படி கண்ணாடியை மூடி, எல்லாருக்கும் அஞ்சலி, தலைவருக்கு மட்டும் பிறந்த நாள் விழா. வீர வணக்கம் கூடக் கிடையாது.

விளக்குக் கொளுத்தினால் பிழைப்புப் போச்சுது!

பேரறுஞர்
கல்லாநிதி
கியூறியஸ் ஜி

இதெல்லாம் பிற இனத்தவர்களுக்குப் புரியாது. வண்ண வண்ண போஸ்டர்களைப் பார்த்த விட்டு, ஏதோ இந்திய நடிகர்கள், பாடகர்கள் வருகிறார்கள் போல என்ற கடந்து போய் விடக் கூடும். கறுப்பு இனத்தவர்கள், இந்தியர்கள் ஆயின் அமெரிக்க இராணுவ வீரர்களை விட அதிகமான இயந்திரத் துப்பாக்கிகளுடன் நிற்கும் ஹிந்திப்பட ஹீரோக்களை ஏற்கனவே கண்டும் இருப்பார்கள்.

ஆண்டுகள் சென்றாலும், கடைக்காரர்கள் அவற்றில் கை வைப்பதில்லை. காலம் கடந்தாலும், கழற்றி எறிவதில்லை. யார் வந்து ஒட்டுகிறார்கள் என்பது கூட கடைக்காரர்களுக்குத் தெரியாது. கழற்றி எறிந்தால், ‘ஆரைக் கேட்டுக் கழட்டினனீ?’ என்ற கேள்விக்கு கடைக்காரரே பதில் சொல்ல முடியாது. அவரை என்ன சொல்ல முடியும்? ‘ஆரைக் கேட்டு ஒட்டிறாய்’ என்று அவரால் தனது கடையில் கூடக் கேட்க முடியாது.

‘நாங்களும் ஈழத்துக்குத் தான்’ என்று கட்டாயமாக அடையாளம் காட்ட வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால், கண்ணாடி உடைப்பாங்களோ, கார் டயர் கிழிப்பாங்களோ என்று திகிலோடு வாழ்க்கை நடத்துவதை விட, கண்டும் காணாமல் இருப்பது தலையிடி இல்லாத வாழ்வுக்கு உதவும்.

மாவீரர் தினம், முள்ளிவாய்க்கால் தினம் எல்லாவற்றுக்கும் தாங்களாகவே அச்சடித்து வந்த ‘மாவீரர் தினத்தன்று, முள்ளிவாய்க்கால் தினத்தன்று எங்கள் வியாபார நிலையம் மூடப்பட்டிருக்கும்’ என்று ஒட்டி விட்டுப் போவார்கள். கடைக்காரர்களிடம் கேட்பது கூட இல்லை. அவர் தெரியாதது போல பார்த்துக் கொண்டிருப்பார்.

முன்பு புலி இருந்த காலத்தில், கடைகளைப் பூட்டி, இந்த களியாட்ட விழாக்களுக்குத் தமிழர்களை வரச் செய்யலாம். இப்போது எதற்கு? என்று இந்தச் சமூகம் கேட்பதில்லை. இதனால், இன்றைக்கும் இந்தக் கூத்து நடக்கிறது.

**மாவீரர் தினம், முள்ளிவாய்க்கால் தினம் எல்லாவற்றுக்கும் தாங்களாகவே அச்சடித்து வந்த ‘மாவீரர் தினத்தன்று, முள்ளிவாய்க்கால் தினத்தன்று எங்கள் வியாபார நிலையம் மூடப்பட்டிருக்கும்’ என்று ஒட்டி விட்டுப் போவார்கள். கடைக்காரர்களிடம் கேட்பது கூட இல்லை. அவர் தெரியாதது போல பார்த்துக் கொண்டிருப்பார்.**

**முன்பு புலி இருந்த காலத்தில், கடைகளைப் பூட்டி, இந்த களியாட்ட விழாக்களுக்குத் தமிழர்களை வரச் செய்யலாம். இப்போது எதற்கு? என்று இந்தச் சமூகம் கேட்பதில்லை. இதனால், இன்றைக்கும் இந்தக் கூத்து நடக்கிறது. நட்டம் யாருக்கு? ஒரு நாள் பிழைப்பில் மண்!**

நட்டம் யாருக்கு? ஒரு நாள் பிழைப்பில் மண்! கேட்க யாருக்கும் துணிவில்லை. இப்போது தான் கடைக்காரர்கள் தடைகளையும் மிரட்டல்களையும் மீறி, ஆங்காங்கே திறக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

நாங்கள் இங்கே குடி வந்த காலத்திற்குள்ளேயே அங்கு பல வியாபார நிலையங்கள் திறந்து மூடிப் போயிருக்கின்றன. உணவகம் கூட, பல கைகள் மாறியிருக்கிறது.

அங்குள்ள உணவகத்துக்கு கொத்துரொட்டியும், இடியப்பமும் வாங்க முன்பு நான் அங்கே செல்வதுண்டு. இப்போது கொத்து ரொட்டி யானை விலை. ஆட்டிறைச்சி பேய் விலை. அந்தப் பக்கம் தலை வைத்தே படுப்பதில்லை.

இப்படித்தான் முன்னம் ஒரு காலத்தில், ஒரு தடவை அந்த உணவகத்தில் வரிசையில் கொத்துரொட்டி வாங்க நிற்கிறேன்.

எனக்கு முன்னால், எனக்கு நன்கு தெரிந்த, ஆனால் என்னை அவருக்குத் தெரியாத ஒருவர் கல்லாவில் நின்றவரோடு உரையாடிக் கொண்டிருந்தார். மாறுவேசத்தில் ஊருலா வருவது ஒரு வகையில் நல்லதுதான். என்னை யார் என்று சொல்லியிருந்தால் என்னை அடையாளம் கண்டு கொள்ளக் கூடியளவுக்கு அவருக்கு என்னைத் தெரியும். ஆனால் ஆளைத் தெரியாது.

ஆளைத் தெரிந்திருந்தால், பிடித்துத் தின்னக் கூடியளவு என் மீது கோபமும் இருக்கும்.

அவரும் ஒரு பத்திரிகை நடத்திக் கொண்டிருந்தார். ஆசிரியராக இல்லை. அதற்கான தேவை இல்லாதபடிக்கு புலிகளின் புகழ் பாடும் பத்திரிகை அது. வேறு யாரோ தொடங்கி அவர் கைக்கு வந்திருக்க வேண்டும்.

மொன்றியலில் புலிகளுக்குப் பணம் சேர்த்து புகழ் பெற்ற பிரமுகர் அவர். பின்னர் ரொறன்ரோ வந்து புலிகளின் முகவர்களான உலகத்தமிழர் அமைப்புடன் ஒட்டிக் கொண்டிருந்தார். உலகத்தமிழர் அமைப்பினர் தங்களுக்கென ஒரு இருவாரப் பத்திரிகை நடத்திக் கொண்டிருந்தார்கள். தலைவருக்குத் தகடு கொடுத்து, அடிக்கடி மாற்றப்பட்ட தலைமைகளால் அவர் ஓரம்

கட்டப்பட்டிருக்கக் கூடும்.

இவர் அவர்களோடு பிளவுபட்டோ, தனியே பிழைப்பு நடத்தவோ ஒரு பத்திரிகையை நடத்திக் கொண்டிருந்தார். அது கிரமமாக வரும் பத்திரிகையாகவும் இருந்ததில்லை. அவ்வப்போது வரும்.

ஊரில் எம்.ஜி.ஆர், சிவாஜி ரசிகர் மன்றங்கள் புதுப்படம் வரும்போது பத்திரிகை அடித்து, முதல் நாள் முதல் ஷோ பார்க்க முண்டியடிக்கும் ரசிகர்களுக்கு விற்பது போல, ஏதாவது முகாம் தாக்குதல் மாதிரியான நிகழ்வுகளை ஒட்டிய விசேட பதிப்பாகத் தான் அந்தப் பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தது.

செய்திகளோடு, புலிகளால் வன்னியில் குடிசைக் கைத் தொழிலாக நடத்தப்பட்ட 'அரசியல் ஆய்வுத் தொழிலில் பிழைப்பு நடத்திக் கொண்டிருந்த ஆய்வாளர்களின் கட்டுரைகளை பணம் கொடுத்தோ, புலிகளின் பாணியில் பணம் கொடுக்காமல் தேசியமயமாக்கிக் கபளீகரம் பண்ணியோ இடம் நிரப்பிக் கொண்டிருந்தார்கள். ஆனால் பத்திரிகை வெளியிடப்பட்டதன் நோக்கம் போராட்டப் பிரசாரம் இல்லை, விளம்பரம் வாங்கிப் பணம் சம்பாதிப்பது மட்டும் தான். ஏற்கனவே உலகத்தமிழர் பத்திரிகையாக வெளிவந்த போது, அதே கதையைச் சொல்ல இன்னொரு பத்திரிகை எதற்கு?

இப்படி விளம்பரங்களுக்கு இடையில், தேசியத் தலைவருக்கு விசுவாசப்பிரமாணமும் செய்தும், புலிகளின் சாகசங்களை உப்புப் புளி விட்டு சுவாரஷ்யமாக்கியும் இடம் நிரப்பிப் பிழைப்பு நடத்திக் கொண்டிருந்த பத்திரிகைகள் பல ரொறன்ரோவில் வெளிவந்து கொண்டிருந்தன.

இவையெல்லாமே யாருமே பணம் கொடுத்து வாங்கிப் படிக்கக் கூடிய அளவுக்கு எதையும் கொண்டிராததால், இலவசமாகவே வெளிவந்ததால், அதைப் பிழைப்பாக நடத்துவோருக்கு விளம்பரம் மிகவும் அத்தியாவசியமாகவும் இருந்தது.

ஒரு பத்திரிகையில் விளம்பரம் போட்டால் குறைந்தது பத்து தொலைபேசி அழைப்புகள் உடனடியாக வரும். பொருட்கள் வாங்கும் வாடிக்கையாளர்களின் அழைப்பாக அது இருக்காது.

தங்களின் பத்திரிகையிலும் விளம்பரம் போடும்படியும், 'அவேயை விட நாங்கள் குறைச்சுத் தாறம்' என்ற வாக்குறுதியோடும் வரும் மற்றப் பத்திரிகைகளின் அழைப்பாகத் தான் அவை இருக்கும்.

இப்படி மற்றப் பத்திரிகைகளை வாசிக்காவிட்டாலும், அதில் வரும் விளம்பரங்களை வாசிப்பது தான் மற்றப் பத்திரிகையாளர்களின் முழுநேரத் தொழில்.

அதற்காக என்றே, வெல்பெயர் எடுத்துக் கொண்டிருக்கும் பெண் பிள்ளைகளை முழுநேர கைக்காசு அடிமைச் சம்பளத்தில் வேலைக்கும் வந்திருந்தார்கள். அவர்களின் வேலை தான் இந்த போன் அடிப்பு.

ஆனால், தமிழ் மகன் நிர்வாக வியாபார நிறுவனத் தொழில் அதிபர்களும் இவர்கள் பிறந்த வளர்ந்த அதே யாழ்ப்பாண மண்ணில் பிறந்தவர்கள் தானே? நேர்மை என்பது அவர்களோடு பின்னிப் பிணைந்தத.

விளம்பரம் போட்டால் பணம் கொடுக்க மாட்டார்கள். சும்மா கிடக்கிற இடத்தில் போட்ட விளம்பரம் தானே, பிறகெதற்கு காசு? என்பது தான் அவர்களின் நியாயம்.

அவர்களையும் குறை சொல்ல முடியாது. ஒரு பத்திரிகையில் விளம்பரம் போட்டால் குறைந்தது பத்து தொலைபேசி அழைப்புகள் உடனடியாக வரும்.

பொருட்கள் வாங்கும் வாடிக்கையாளர்களின் அழைப்பாக அது இருக்காது. தங்களின் பத்திரிகையிலும் விளம்பரம் போடும்படியும், 'அவேயை விட நாங்கள் குறைச்சுத் தாறம்' என்ற வாக்குறுதியோடும் வரும் மற்றப் பத்திரிகைகளின் அழைப்பாகத் தான் அவை இருக்கும். இப்படி மற்றப் பத்திரிகைகளை வாசிக்காவிட்டாலும், அதில் வரும் விளம்பரங்களை வாசிப்பது தான் மற்றப் பத்திரிகையாளர்களின் முழுநேரத் தொழில். அதற்காக என்றே, வெல்பெயர் எடுத்துக்கொண்டிருக்கும் பெண் பிள்ளைகளை முழுநேர கைக்காசு அடிமைச் சம்பளத்தில் வேலைக்கும் வந்திருந்தார்கள். அவர்களின் வேலை தான் இந்த போன் அடிப்பு.

யாவாரிமாருக்கு பிறகென்ன பிரச்சனை? ஒரு ரவுண்ட் பணம் கொடுக்காமலேயே எல்லாப் பத்திரிகைகளிலும் விளம்பரம் போட்டு 'சுத்தி' வருவார்கள்.

பத்திரிகைக்காரர்களும் பணம் தராவிட்டாலும், தங்கள் பத்திரிகையில் விளம்பரங்கள் அதிகம் வருகின்றன என்று காட்டுவதற்காகவே இலவசமாகவே தொடருவார்கள்.

ஒரு தடவை ஈழநாடு பத்திரிகை, பணம் தராதவர்களின் பட்டியலை ஏதோ பனாமா பேப்பர்ஸ், பன்டோரா பேப்பர்ஸ் மாதிரி வெளியிடப் போவதாக மிரட்டிக் கொண்டிருந்தது.

அந்தளவுக்கு பத்திரிகைகளும் யாவாரிமாரின் நேர்மையும் கனடாவில் நாறிக் கொண்டிருந்தது.

எனக்கும் கொத்து ரொட்டி ஓடர் பண்ண முடியாதபடிக்கு, முன்னால் நின்ற புலி முகவர் நீண்ட நேரமாக கடைக்காரருடன் பேசிக் கொண்டிருந்தார்.

காதை எறிந்து விட்டுக் கேட்டால்...

புலி முகவர் பத்திரிகையாளர் விளம்பரம் கேட்டு வந்திருக்கிறார்.

'எங்கட பேப்பர் தான் கனடாவில அதிகம் விக்கிற பேப்பர்' என்று கனடாவுக்கு அனுப்புகிற ஏஜன்சிக்காரர் மாதிரி தன்னைப் புகழ்ந்து கொண்டிருந்தார்.

இந்தக் கதையை இந்த மாஜி பத்திரிகையாளன் கொடுப்புக்குள் சிரிப்போடும், கொத்துரொட்டி ஓடர் பண்ண முடியாத கடுப்போடும் கேட்டுக் கொண்டிருந்தான்.

கடைக்காரருக்கு இவர்கள் புலி என்ற விசயம் தெரியும் போல!

அவர் தான் முதலாளி, அவரே 'அண்ணை, முதலாளி இல்லை, நீங்கள் அவர் வந்தாப் பிறகு கதையுங்கோ' என்று கதை விட்டுக் கொண்டிருந்தார். புலி முகவரும் விளம்பரம் வாங்காமல் போவதில்லை என்ற முடிவோடு தான் வந்திருந்தார். கடன்காரர்களுக்கு எல்லாம் இப்படி கதை விடுகிற எத்தனை மூனாக்களை அவரும் கண்டிருப்பார்?

அவர் புலி முகவராக இருந்தாலும் உத்தியோகபூர்வ புலி முகவரும் இல்லை. 'ஊருக்கு வா, கவனிக்கிறம்' என்ற மிரட்டவும் முடியாது. இருந்தாலும், அவரது போராட்டப் பிரசாரமும் பிழைப்பும் அந்த விளம்பரப் பணத்தை நம்பியதாகத் தான் இருந்தது. அவரோடு சில தொண்டிரடிதடிப் பொடிகளும் வந்திருந்தனர். தனியே போனால் அடி வாங்க வேண்டி வரலாம். 'இயக்ககாரர் வந்தவே!' என்பதே எத்தனை பேருக்கு வயிற்றைக் கலக்கிய காலம் அது!

அவரோடு சில தொண்டிரடிதடிப் பொடிகளும் வந்திருந்தனர். தனியே போனால் அடி வாங்க வேண்டி வரலாம். 'இயக்ககாரர் வந்தவே!' என்பதே எத்தனை பேருக்கு வயிற்றைக் கலக்கிய காலம் அது!
எனக்குத் தெரிந்து கடந்த முப்பத்தைந்து வருட காலத்தில் எந்த வேலைக்கும் போகாமல், புலிகளுக்குப் பணம் சேர்ப்பதை முழுநேரத் தொழிலாகக் கொண்டிருந்தவர்கள் பலரை எனக்குத் தெரியும். சிலர் அண்ணை செத்தவுடன் காலியான திண்ணைகளுக்கு ஆட்டையைப் போட்டுத் தொழிலதிபர்களானதும் தெரியும்.

எனக்குத் தெரிந்து கடந்த முப்பத்தைந்து வருட காலத்தில் எந்த வேலைக்கும் போகாமல், புலிகளுக்குப் பணம் சேர்ப்பதை முழுநேரத் தொழிலாகக் கொண்டிருந்தவர்கள் பலரை எனக்குத் தெரியும். சிலர் அண்ணை செத்தவுடன் காலியான திண்ணைகளுக்கு ஆட்டையைப் போட்டுத் தொழிலதிபர்களானதும் தெரியும்.

ஆனால், இவர் பின்னாளில் எங்கோ பஸ் சாரதியாக வேலைக்குப் போனதாக அறிந்தேன்.

இப்படி இவர் அழுங்கு மாதிரி, விளம்பரம் வாங்க இழுபட்டுக் கொண்டிருந்து, கடைக்காரரும் சொன்ன அதே கதையைத் திருப்பித் திருப்பிச் சொல்ல, கடைசியில் 'உது சரிவராது' என்று, தனது அடிதடி எடுபிடிகளோடு கழன்று கொண்டார்.

நானும் இதைப் பற்றி எதையும் கண்டு, கேட்டுக் கொண்ட மாதிரிக் காட்டி முதலாளியாரைச் சங்கடத்துக்கு உள்ளாக்க விரும்பாமல், முகத்தில் எந்த சலனத்தையும் காட்டாமல், கொத்துரொட்டியை வாங்கிக் கொண்டு வீடு ஏகினேன்.

இது நடந்து ஒரு வாரம் இருக்கும். ஒரு நாள் இரவு, அந்தக் கடையின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டுப் பெரும் சேதம் விளைவிக்கப் பட்டிருந்தது.

மிகவும் சாதுவான மனிதரான அந்தக் கடைக்காரரும் கொஞ்ச நாளில் கடையை விற்று விட்டு, இன்னொரு பிட்சா கடை ஒன்றை வாங்கி விலகிப் போய் விட்டார். அதன் பின்னால் அந்தக் கடை பல கை மாறி, கொஞ்ச நாளைக்கு முன்னால் அந்தக் கடைக்குள் கார் ஒன்றும் உள்ளே புகுந்திருந்தது.

கொத்துரொட்டி வாங்கவோ, விலை கூட்டியதற்கு ஆட்சேபம் தெரிவித்தோ!

அதே கடைத் தொகுதியில் இன்னொரு கடை இருந்தது. அந்தக் கடையை எந்த வகைக்குள் சேர்ப்பது என்று தெரியாது. அதை டொலர் கடை என்றும் சொல்ல முடியாது. புடைவைக் கடை என்றும் சொல்ல முடியாது. எல்லா வகையான பொருட்களும் இருக்கும். பொம்மைகள், வாசனைத் திரவியங்கள். சிறுபிள்ளைகளின் உடைகள். சமையல் பாத்திரங்கள்.

இப்படி எல்லாப் பொருட்களும், சமையல் பொருட்கள் தவிர்ந்த! ஊரில் மணிக்கடை என்று பெயர் இருந்ததாக ஞாபகம்.

அந்தக் கடையில் ஒருவர் வியாபாரம் நடத்திக் கொண்டிருந்தார். அங்கு வியாபாரம் நடந்ததாக கண்டதாக நினைவில்லை. வீட்டுக்காரி அவ்வப்போது போய் எதையாவது வாங்கி வருவார். கொஞ்ச நாளில் அந்தப் பொருள் நிலக்கீழ் வீட்டில் எறியப்பட்டிருக்கும்.

அப்படி கண்டவுடன் ஆசைப்படும், எந்தப் பயனும் இல்லாத பொருட்கள்.

அவ்வாறான ஒரு கடையை வைத்துக் கொண்டு, வாடகை, செலவீனங்களையும் செலுத்த வேண்டுமாயின், வருமானம் இருக்க வேண்டும். அப்படி ஒகோ என்ற வியாபாரம் எதுவும் அங்கு நடப்பதில்லை. ஆனால், அந்தக் கடையில் அவர் இருந்த காலங்களில் நான் அவதானித்த சுவாரஷ்ய விசயங்கள் உண்டு. அதை நான் இங்கே சொல்லப் போவதில்லை. வீட்டுக்காரியிடம் அதைச் சொல்லிச் சிரிப்பதுண்டு.

இப்படி இருந்த ஒரு நாள், மற்றக் கடைகளுக்குப் போன வீட்டுக்காரி, ஒரு தடவை போய் ஏதாவது இருக்குமா என்று பார்க்க அந்தக் கடைக்குப் போன போது, 'அக்கா, எதையெண்டாலும் வாங்குங்கோ' என்றிருக்கிறார். பயனில்லாத பொருட்களை வாங்கி வந்தால், என்னுடன் பெரும் தகராறு இருக்கும் என்பது வீட்டுக்காரிக்குத் தெரியும்.

'இல்லை, ஒன்றும் வாங்கிற மாதிரி இல்லை' என்றிருக்கிறார்.

'பரவாயில்லை, அக்கா, எதையெண்டாலும் எடுத்துக் கொண்டு எவ்வளவு எண்டாலும் தந்திட்டுப் போங்கோ!' என்றிருக்கிறார் தொழில் அதிபர்.

காரில் காத்துக் கொண்டிருந்த எனக்கு வீட்டுக்காரி அதைச் சொன்ன போது, கொஞ்சம் சந்தேகம் தட்டியது.

அன்றிரவு அந்தக் கடை தீப்பிடித்து விட்டது.

சம்பந்தப்பட்டவர்களிடம் விபரம் கேட்டேன். அவர்கள் சொல்லத் தயங்கினார்கள்.

எனக்கென்னவோ, காப்புறுதி மோசடி ஒன்றுக்காக அரங்கேற்றப்பட்ட நிகழ்வாகவே எனக்கு அது தோன்றியது.

வழமையில் கடை எரிந்தால், கிடைத்த காப்புறுதிப் பணத்தில் அதைத் திருத்தி இன்னும் சிறப்பாகத் திறந்திருக்க வேண்டும். அப்படி இல்லாமல் அந்த தொழில் முனைவுத் தமிழ் மகன் காப்புறுதிப் பணத்துடனேயே காணாமலேயே போய் விட்டார்.

இது நடந்து முடிந்து கனகாலம்.

ஒரு நாள் பேஸ்புக்கில் ஒரு வீடியோ.

கனடாவில் 'தேசியச் சொத்துக் களைக்' கையகப்படுத்தியவர்கள் பற்றி ஒருவர் நீட்டி முழக்கிக் கொண்டிருந்தார். எங்கோ ஒரு மேடையில் வேட்டியோடு நின்று, புலிகளின் சொத்துக்களைப் பட்டியல் போட்டு, அவை எல்லாம் மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று முழங்கிக் கொண்டிருந்தார்.

அவர் சொன்னதன்படி, அவருக்கு இவ்வாறான சொத்துக் களை யார் வைத்திருக்கிறார்கள் என்ற சகல விபரமும் தெரிந்திருக்கிறது. ஆனால், அவர்களைப் பெயர் சொல்லத் தயாராக இல்லை. அதைவிட, மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றால், யார் அந்த மக்கள்?

ஒருவேளை தன்னைப் போன்றவர்களைத் தான் அந்த மக்கள் என்கிறாரோ என்று நினைத்தேன். அண்ணை மண்டையைப் போட்ட பின்னால், இவரது துரதிஷ்டம், இவர் கையில் எந்தச் சொத்தும் சிக்கவில்லைப் போலும்.

தெரிந்த முகமாக இருக்கிறதே என்று, வீடியோவை வீட்டுக்காரியிடம் காட்டினேன்.

'ஆர் தெரியுமோ?'

'அட, இவன் அந்தக் கடை வைச்சிருந்தவன். அந்தக் கடைசி நாள் அக்கா எவ்வளவு எண்டாலும் தந்திட்டு எடுத்திட்டுப் போங்கோ எண்டவன்' என்று அடையாளம் காட்டினார்.

பிறகும் அவரது முழக்க வீடியோவை அடிக்கடி பேஸ்புக்கில் கண்டிருக்கிறேன்.

இதை ஏன் இப்போது சொல்கிறேன்?


கனடியத் தமிழர் பேரவை அலுவலகம் எரிக்கப்பட்டதன் பின்னால், அதன் அலுவலகத்தின் முன்னால் பெரும் ஆர்ப்பாட்டம் நடந்தது எல்லாருக்கும் தெரியும். அதன் வீடியோ ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.


நம்ம பக்கத்துக் கடைத் தொகுதியில் கண்ணாடி உடைக்கப்பட்ட உணவகத்திற்கு விளம்பரம் வாங்க வந்த பத்திரிகை நடத்திய முன்னாள் புலி அங்கே பதாகைக்கு முட்டை அடித்துக் கொண்டிருந்தார்.


எரிந்த கடைத் தொழில் அதிபர் ஒலிபெருக்கியில் முழங்கிக் கோஷம் போட்டு உசுப்பேத்திக் கொண்டிருந்தார்.

இவர்கள் தான் எங்கள் விடுதலைப் போராட்டத்தின் பிரதிநிதிகளாக தேசிக்காய் தலையரால் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டிருந்தவர்கள். தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் என்று இன்றைக்கும் கனடியத் தமிழ்ச் சமூகத்தின் தலைவர்களாக களமாடிக் கொண்டிருக்கிறவர்கள்.

போராட்டம் தோற்றதற்கு 47 நாடுகளைக் குற்றம் சாட்டி விட்டு, தேசிக்காயர் பிறந்த தினத்தில் கேக் சாப்பிட்டு, மாவீரர் தினத்தில் காட்போட் கல்லறைக்கு விளக்குக் கொளுத்தி கொத்துரொட்டி வாங்கினால், இவர்களிடம் தேசியச் சொத்துக்கள் நிறையாமல் என்ன செய்யும்?




# உலகெங்கும் அமசோனில்....

| | |
|---|---|
| இந்தியாவில்... | www.amazon.in |
| அமெரிக்காவில்... | www.amazon.com |
| கனடாவில்... | www.amazon.ca |
| இங்கிலாந்தில்... | www.amazon.co.uk |
| ஜேர்மனியில்... | www.amazon.de |
| பிரான்சில்... | www.amazon.fr |
| நெதர்லாந்தில்... | www.amazon.nl |
| அவுஸ்திரேலியாவில்... | www.amazon.com.au |
| இத்தாலியில்... | www.amazon.it |

**ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்**
**என்ற வார்த்தையைத்**

## தேடுங்கள்...
## கண்டடைவீர்கள்!

# திசைமாறிய பட்டி மாடுகள்

ஜீவா

பட்டியில் கிடந்த மாடுகள் வெள்வேறு திசையில் பயணித்தன பட்டிக்கு விடுதலை வேண்டி - முட்டிக்கொள்ள.

வெய்யில் சாயும் வேளை நாங்கள் வீட்டு முற்றத்தில் ஒன்று சேர்ந்து, கன்னைபிரித்து விளையாடுவோம். பெரும்பாலும் ஒளிச்சுப் பிடிச்சுத்தான் விளையாடுவோம். அப்பொழு தெல்லாம் பூரணியக்கா என்னை கக்கூசுக்க தூக்கிக்கொண்டுபோவா.

எப்பவாவது இருந்திட்டு அண்ணையாக்களும் வருவினம் விளையாட. அவங்க விளையாடுறது ஒளிச்சுப்பிடிச்சு அல்ல தாச்சி. அப்பொழுதெல்லாம் அக்காமாற்ர தலைக்கறுப்பு தெரியாது.

தவம், அன்பு, ராசகிளி, அருள், சிறீ, குமார், தீபன், கண்ணன், தாஸ், உங்கட பெயரையும் சேர்த்துக் கொள்ளுங்கோ. எல்லோரும் சேர்ந்து கன்னைபிரித்து விளையாடுவோம். இருட்டி ஆளை ஆள் தெரியாத கட்டம்வரை விளையாட்டு நடக்கும். அது பெரும்பாலும் குறைவுதான். பெரும்பாலும் அளாப்புவதிலையே முடிவடையும்.

வடிவெண்டா அப்படி யொரு வடிவு பூரணியக்கா. காச்சிய பால்போல் வெள்ளை. செம்மஞ்சள் மல்கோவா மாம்பழம் அதை பறித்து விடவேண்டும் என்ற கொள்ளை விருப்பம் இளைஞர்களுக்கு. அதிஸ்டம் சிற யிண்ணைக்குத் தான்.

பூரணியக்கா இப்போழு தெல்லாம் என்னை தூ க்குவதே இல்லை. வீட்டின் கோடியிலிருக்கும் கக்கூசிலிருந்து பூரணியக்கா வாறத நிறையத்தரம் கண்டிருக்கிறன். சிறியண்ணையும் வாறத கண்டிருக்கிறன்.

இப்ப பூரணியக்கா என்ன தூக்குறதுமில்ல கொஞ்சுறதுமில்ல எனக்கெண்டா கோவம் என்டால் கோவம். அப்படியொரு கோவம். அப்படியென்றால் குமார் என்கிற கிருஸ்ணகுமாருக்கு சொல்லிமாளா வெறுப்பு, எரிச்சல், கோவம் எல்லாம். அதுவும் அய்யர் பெட்டையோட சிறி. அன்றைக்கே இவன அடிச்சே சாக்காட்டுறன் என்று சபதமெடுத்தான் குமார் என்கிற கிட்டு.

இதிலவிசேடமான வேடிக்கை என்னவென்றால் இந்த நண்பர்களின் பெற்றோர் ஒருவரை ஒருவர் முகம் கொடுத்து பார்ப்பதுகூட இல்லை.

அதன் பிரதிபலிப்பின்தான் இந்த கதையின் முடிவோ? யார் அறிவார்?

காலம் கால் நடையாக போகவில்லை, சக்கரம் கட்டிப் பறந்தது. இப்பொழுதெல்லாம் இவர்கள் எப்போவாவது விளையாட்டிடத்துக்கு வருகிறார்கள் கன்னை கன்னையா பிரிகிறார்கள் ஆனால் விளையாடுவதில்லை. கதை கதையென்று கதைக்கிறார்கள். யாரும் அருகில் சென்றால் கதை நின்றுபோகும். அவர் போனபிறகு கதை தொடரும். முகம் தெரியாத அறிமுகம் இல்லாத ஆக்களும் அந்தந்த கன்னையில் சேர்ந்திருந்தார்கள்.

விளையாடும் போது இரண்டு கன்னையாக இருந்த நிலைமை மாறி கன்னைக்குள்ள கன்னை பிரிந்து பேந்து அது பிரிந்து இப்படியே பிரிந்து பிரிந்து.

குட்டி, தங்கண்ணா கைது செய்யப்பட்டதால் இவர்கள் ஒடி ஒளித்துக்கொண்டார்கள்

அவர்களும் விளையாட வில்லை பின்னாளில் யாரும் விளையாடாத படியும் பார்த்துக் கொண்டார்கள்

சிறியண்ணையும் தாஸும் ஒரு கன்னையில் இருந்தாலும் தாஸின் வீரமும் தீரமும் ஊர் முழுக்கப் பேசப்பட்டது. அப்பவே கிட்டுவ முழங்காலில நிப்பாட்டி தலைல குட்டினவர் தாஸ். இதனால் சிறியண்ணை மனமகிழ்ந்தாலும் தாஸின் செல்வாக்கு கூடிக் கொண்டுபோவதை விரும்பவில்லை. எனவே தாஸை அவுட் செய்தார் சிறியண்ணை.

தாஸ் அவுட்டானதால் கிட்டுவுக்கு அதிஸ்டம் என்றால் அதிஸ்டம் அப்படியொரு அதிஸ்டம்.

சிறியண்ணைய பொயிலத் தோட்டத்துக்குள்ள வைச்சு சுத்திவளைச்சார் கிட்டு.

'பொறு கிட்டு நாங்கள் பேசுவோம்' என கெஞ்சிய சிறியண்ணாவின் குரல் பூரணியக்காவின் குழிவிழுந்த கன்னத்தில் மறைந்துபோனது.

முதலாவது வெடிவைக்கும்போது பூரணியக்காதான் கிட்டுவின் கண்முன்னே வந்தா. இரண்டாவது முன்றாவது என இருபத்தியாறு குண்டுகளை சிறியண்ணாவின் உடலில் தாட்டபோதுதான் கிட்டுவின் அடிநெஞ்சில் காலம்காலமாக அடங்கியிருந்த வெந்த மூச்சு வெளியேறியது. (கைக்கூலி, துரோகி என பல விளக்கங்கள் கொடுத்தாலும் எனக்கு கிட்டுவுக்கு சிறியண்ணைக்கு பூரணியக்காவுக்கு பூரணியக்காவ தெரிந்தவர்களுக்குத் தான் வெளிச்சம்)

அ